இறக்கை: 11 இறகு: 6

# காக்கைச் சிறகினிலே

இலக்கிய மாத இதழ்

காக்கை கரவா கரைந்துண்ணும்

ஜூன் 2022 | விலை ₹40



## பேரினவாத போதையால் அழிந்த தீவு
- என்.சரவணன்

## இலங்கையில் நடப்பது இரண்டாவது சுதந்திரப் போராட்டம்
- பி.ஏ.காதர்

## 'அற்புதம்' அம்மா!
- இரா.மோகன்ராஜன்








■ கருணாகரன் சிவராசா (இலங்கை)

# ஒன்றென்பது ஒன்றுக்குள் ஒன்றல்ல

அந்தக் குரல்கள் மெல்ல மெல்ல
ஒன்றாகக் கேட்கத் தொடங்கின

நம்முடைய துயரங்கள் ஒன்றென
நம்முடைய பிரச்சினைகள் ஒன்றென
நம்முடைய எண்ணங்கள் ஒன்றென
நம்முடைய அவமானங்கள் ஒன்றென
நம்முடைய ஏமாற்றங்கள் ஒன்றென
நம்முடைய நம்பிக்கைகள் ஒன்றென
நம்முடைய இதயம் ஒன்றென

ஒன்றென்பது
ஒன்றுக்குள் ஒன்றல்ல
ஒன்றாயொலித்தல்
ஒருங்கிணைந்திருத்தல்
ஒவ்வொன்றும் ஒவ்வொன்றாகவே
ஒருமித்திருத்தல்
ஒருவரை ஒருவர் உணர்ந்திருத்தல்
எனவாக..

அந்தக் குரல்கள் உரத்துக் கேட்கின்றன
ஆம்
ஒன்றாகவே...
ஒன்றாக
ஒன்றாக
ஒன்றாகவே....



காக்கைச் சிறகினிலே
காக்கை கரவா கரைந்துண்ணும்

இறக்கை: 11 இறகு: 6

திருவள்ளுவராண்டு 2053

ஆனி
ஜூன் 2022

ஆசிரியர்
வி. முத்தையா
9841457503

பொறுப்பாசிரியர்
க. சந்திரசேகரன்
9715146652

ஆசிரியர் குழு
முகிலன்
அமரந்த்தா
கசன்

தொடக்க கால நெறியாளர்கள்
கி. பி. அரவிந்தன்
வீர. சந்தானம்

நெறியாளர்கள்
டிராட்ஸ்கி மருது
க. பஞ்சாங்கம்
கே. எம். வேணுகோபால்

புலம்பெயர் நாடுகளுக்கான
தொடர்புக்கு:

கனடா:
மான்சிங்
T. Rajahmansinghe
aharaj34@yahoo.ca

ஐரோப்பா:
க. முகுந்தன்
K. Mukunthan
kmukunthan@gmail. com

காக்கையில் வெளியாகும்
கதை, கவிதை மற்றும்
கட்டுரைகளின் கருத்துகள்,
எழுத்தாளர்களின் கருத்தாகும்.
காக்கையின் கருத்தாகாது.

# காலம் குரூரமானது: தோழமை பேணுங்கள்!

இந்தியாவின் முன்னாள்பிரதமர் ராஜீவ்காந்தி கொலைவழக்கில் சிக்கி, 31ஆண்டுகள் சிறைப்பட்டு, நாட்டின் உச்சநீதிமன்றமே தாமாக முன்வந்து விடுவித்திருக்கும் பேரறிவாளன்குறித்த செய்திகள்தான் இப்போது ஊடகங்களிலும் சமூகவலைத்தளங்களிலும் பேசு பொருளாகியிருக்கின்றன. வாதப்பிரதிவாதங்கள் அநாகரிகமான சொற்களால் நிரம்பிவழிகின்றன.

அதிலும் வலதுசாரி அரசியல்வாதிகளைவிடவும் வலதுசாரிஅரசியல் கருத்தாளர்கள் என்கிற பெயரில் விவாதத்துக்கு வருகிறவர்களின் வாதவிவாதங்கள் மிகுந்த கண்டனத்துக்குரியது. அரசியல் குறித்த தெளிவோ பத்திரிகையாளரின் பொறுப்புணர்வோ சிறிதும்இல்லாமல் குழப்புகிற நெறியாளர்கள் சிலரின் குதர்க்கமான கேள்விகள் வாதங்களையே திசைதிருப்பியும் விடுகின்றன.

மிகுந்த நிதானமுள்ள நெறியாளர்களில்சிலர்,'பொதுவெளியில் நீங்கள் இப்படிப்பேசுவது சரியா?' என்று கேட்டால் 'தவறுதான். அதனாலென்ன?' என்று எதிர்க்கேள்வி கேட்டு பார்வையாளர்களையும் சிறுமைப்படுத்துகிறார்கள். அதிலும் அவர்தம் உடல்மொழியும், கண்ணசைவுகளும் சூழலை கொதிப்புக்குள்ளாக்கவே செய்கின்றன.

'பேரறிவாளன் என்ன தியாகியா? நாட்டுக்கு உழைத்த உத்தமரா? சாதனை நிகழ்த்தியவரா? சட்டத்தின் பார்வையில் அவர் இன்னும் குற்றவாளிதானே?' என்று தேசத்தின்தந்தை மகாத்மாவைக் கொன்றவர்களும் கேட்கிறார்கள். அவரைப் பறிகொடுத்தவர்களும் கேட்கிறார்கள். பறிகொடுத்தவர்களின் குரலிலாவது ஒரு தார்மீகக் கோபம் இருக்கிறது என்று கொள்ளலாம். சரி. ஆனால் கொலையாளிகளின் குரலில் ஒலிப்பது அறமல்ல; நஞ்சு கலந்த வெறுப்பு அரசியல்.

சூதுவாதுநிறைந்த உலகில், கள்ளங்கபடமற்ற வயதில் சிக்குண்டு சிறைக்குப்போன 'பிள்ளை' பேரறிவாளன் என்பதாலும் அந்தப் பிள்ளை குற்றமற்றவன் என்பதைச் சட்டத்தின்பார்வையில் நிலைநாட்டுவதற்காக அவரதுதாயார் அற்புதம்அம்மாள் காட்டிய தீரமும் தீவிரமும் பேரறிவாளனின் விடுதலையில் தமிழகமக்களைக் கொண்டாடவே வைத்திருக்கிறது. ஆனால் இந்தக் கொண்டாட்டம் ராஜீவ்காந்தியின் கொலைக்கு எதிரானதல்ல; பேரறிவாளனின் விடுதலைக்கு ஆதரவானது என்பதை மக்கள் புரிந்துகொண்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு நாள் விடியும்போதும் 'இன்னைக்கு யார்வீட்டில் எழவு?' என்று கேட்டு கண்விழிக்கும்போதே விரல்சொடுக்கி எழுகிற குரூரஅரசியல் செயல்வடிவம் பெற்றுவரும் சூழலில் சனாதனத்துக்கு எதிரான சக்திகளும் சமூகநீதிசக்திகளும் மிகுந்த கவனத்துடனும் நிதானத்துடனும்தான் எழுதுகிறார்கள்; பேசுகிறார்கள். இருந்தாலும் அவர்களையும் அந்தச்சூழல் எரிச்சலூட்டி அதைச்சுற்றியே பேசவும் விவாதிக்கவும் வைக்கின்றன.

# காக்கைச் சிறகினிலே

**ஒவ்வொரு மாதமும் 1ஆம் தேதி**
**உங்கள் கைகளில்**

ஒவ்வொரு மாதமும்
29 அல்லது 30ஆம் தேதியில்
'காக்கைச் சிறகினிலே' இதழ் அஞ்சல்
செய்யப்படுகிறது. அடுத்து வருகிற
5ஆம் தேதிக்குள் இதழ் கிடைக்கப்பெறாதவர்கள்
தொடர்புகொள்ள வேண்டிய
செல்பேசி எண்: **98414 57503**

**உறுப்பினர் கட்டணம் – உள்நாடு**

தனி இதழ் விலை..............................ரூ. **40**
ஆண்டுக் கட்டணம் ..........................ரூ. **400**
இரண்டு ஆண்டுக் கட்டணம்.........ரூ. **750**
ஐந்தாண்டுக் கட்டணம்....................ரூ. **2000**
மாணவர் சந்தா ....................................ரூ. **300**

(மாணவர்கள், கல்வி நிறுவனத் தலைவர் அல்லது துறைத் தலைவர் சான்றிதழோடு விண்ணப்பிக்க வேண்டும்)

**உறுப்பினர் கட்டணம் – வெளிநாடு**

ஆண்டுக் கட்டணம் ..........................**$ 40**

பணவிடை (மணியார்டர்) மூலமும் சந்தா செலுத்தலாம். காசோலைகள், வங்கி வரைவோலைகள் அனைத்தும்

KAAKKAI,
A/c No. **60111010005660**
CANARA BANK,
TRIPLICANE, CHENNAI - 5.
IFSC: **CNRB0016011**

என்ற பெயருக்கு, சென்னையில் மாற்றத்தக்கதாக அனுப்ப வேண்டும்.

Google Pay மூலம் செலுத்த:
**98414 57503**

தொடர்பு முகவரி:
**காக்கை, 22, MJB தெரு,**
**திருவல்லிக்கேணி, சென்னை–600 005.**
**செல்பேசி: 98414 57503,**
**தொலைபேசி : 04428471890**

மின்னஞ்சல்:
**kaakkaicirakinile@gmail.com**

முகநூல்:
**www.facebook.com/kaakkai.cirakinile**

இணைய முகவரி:
**kaakkai.in**


அதேபோல ஒவ்வொரு நாளும் என்ன அரசியலைப் பேச வேண்டும் என்பதை நாசகாரஊடகங்களும் கொலைபாதக அரசியல்வாதிகளும்தான் தீர்மானிக்கிறார்கள். நாட்டின் உண்மையான ஜனநாயக சக்திகள் இந்தப் பேரிரைச்சலுக்கு எதிர்க்குரல் கொடுப்பதிலேயே கவனம் குவித்துக்கொண்டு பேராபத்துகளை உருவாக்கிக்கொண்டிருக்கும் பல முக்கிய நிகழ்வுகளைக் கண்டும்காணாமலே பயணிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

'சனாதனத்துக்கு எதிராகவும் எளிய மக்களுக்கு ஆதரவாகவும் செயல்படுகிற அரசு' என்கிற தோற்றத்தை முன்னிறுத்திக்கொண்டுள்ள முதலமைச்சர் வீட்டிலேயே வேத மந்திரங்கள் ஒலிக்கின்றன. கருணாநிதி வீட்டுக்குள் புக முடியாத வேதமந்திரங்கள் ஸ்டாலினின் நடுவீட்டுக்குள் போய் உட்கார்ந்து கொண்டன. கட்சியின் முக்கியப் பொறுப்பில் உள்ளவர்களும்கூட மதஅடையாளங்களை முன்னிறுத்திக் காட்டுகிறார்கள். பல அமைச்சர்கள் அப்படியே பக்திப் பழங்களாக மாறிவிட்டார்கள். அதிலும் இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் அதிலேயே கரைந்துவிட்டார். சனாதனிகளின் மனமும்செயலும் புண்படாமலும் புழுதிபடாமலும் பார்த்துக்கொள்வதில் மிகுந்த சமர்த்தராக வளர்ந்து வருகிறார். இதெல்லாம் கட்சியின் கொள்கைகளுக்கு ஆபத்தானவை; எதிர்விளைவுகளை ஏற்படுத்தக்கூடியவை. தவறினால் 'திராவிட மாடல்' ஆட்சி என்று சொல்லிக் கொண்டிருப்பதற்குப் பொருளில்லாமல் போய்விடும்.

எனவே, இந்தக் கட்சியும் இந்தக் கட்சியின் தீவிர கொள்கைப் பற்றாளர்களும் ஆட்சியும் ஆட்சிப் பொறுப்பிலுள்ள அமைச்சர்களும், மிகுந்த கவனத்துடன் செயல்படவேண்டும் என்பதை சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. எதிராளிகள் 'திராவிடம்' என்று குறிவைத்துத் தாக்குவது அதிமுகவையோ அல்லது திமுகவுக்கு முந்தைய திராவிடத்தையோ அல்ல. கொஞ்சநஞ்ச திராவிட சித்தாந்த அடையாளத்தோடு இருக்கும் திமுகவைத்தான். திமுகவினரால் மட்டுமே திமுகவை ஆட்சிக்குக் கொண்டு வந்துவிட முடியாது. மக்களும் அந்த மக்கள் சக்தியைத் திரட்டுவதில் ஒவ்வொரு தோழமை சக்தியும் காட்டிய உழைப்பும் உறுதியும் விலைமதிப்பிட முடியாதவை. எனவே, இந்த நேரத்தில் பகையாளிகள் யார்? எதிராளிகள் யார்? துரோகிகள் யார்? என்பதை அடையாளம் கண்டுகொள்கிற தெளிவும் பார்வையும் இருக்கவேண்டும். ஆட்சியும் அதிகாரமும் கைக்கு வந்துவிட்டபிறகு நட்புமுரண் எது? பகைமுரண் எது? என்பதைப் பிரித்துப்பார்க்கிற பக்குவமும் அரசியல்நிதானமும் வேண்டும்.

தவறைத் தவறென்றும் சரியைச் சரியென்றும் குட்டிக்காட்டுகிற, சுட்டிக்காட்டுகிற தோழமைசக்திகளை மிகுந்த அரசியல்புரிதலோடும் பரந்த கொள்கைத் தெளிவோடும் அணுகவேண்டும். சட்டம் தன் கடமையைச் செய்யும் என்பதுசரி. ஆனால் கடமை என்பது சட்டத்தால் மட்டுமே அணுகுவதல்ல.

தோழமைசக்திகள் அரசியலிலும் இருக்கிறார்கள்; அரசியலுக்கு வெளியேயும் இருக்கிறார்கள். அவர்களைத் தள்ளிவைத்துப் பார்க்காதீர்கள், தனித்துவிட முயற்சிக்காதீர்கள்.

தோழமை பேணுங்கள்; நாம் வாழும் காலம் குரூரமானது.

●

கட்டுரை

**இரா.மோகன்ராஜன்**
mohanrajan.r@gmail.com



ஓவியம்: ஹாசிப்கான்

# 'அற்புதம்' அம்மா!

அற்புதம் அம்மாள், பேரறிவாளனின் முதுகில் இரண்டு சிறகுகளைப் பொருத்துகிறார். பேரறிவாளன் இப்போது வானத்தில் பறக்கும் கூண்டுப் பறவையொன்றின் முகத்தைக் கொண்டவராக இருக்கிறார். சிறகு பொருத்திய அந்த அம்மாள் முகத்தில் கூண்டைத்திறந்து பறவையை விடுவித்த பிரபஞ்ச மகிழ்ச்சி. வானத்தைப் பறவைக்குச் சொந்தமாக்கிவிட்ட பேரன்பின் பேருவகை. விடுதலை குறித்த முழுமையான பொருள் உணர்ந்தவர்களுக்கே பறத்தலின் பேருண்மை குறித்துப் பேச முடியும். கொண்டாட முடியும்.

ஹாசிப்கான் வரைந்த ஓவியம் ஒன்று சமூக வலைத்தளங்களில் வலம் வருகிறது. அந்த ஓவியம் அப்படித்தான் இருக்கிறது. பேசுகிறது.

அம்மாக்களில் அற்புதம், அபூர்வம் என்ற சொற்களும், பெயரும், பொருளும் எத்தனைப் பேருக்கு பொருந்திவரும்?.அற்புதம் அம்மாள். சாவுக்கே சாவுமணி அடித்திருக்கிறார். பிழையானத் தீர்ப்பை மாற்றி எழுத வைத்திருக்கிறார். மகனை மரணத்திடமிருந்து மீட்டதன் வழி மீண்டும் தனது மகனைப் பெற்றெடுத்திருக்கிறார். ஆமாம், பேரறிவாளனுக்கும் இது இரண்டாவது பிறப்பு.

எத்தனை எத்தனை மன்றாட்டுக் கடிதங்கள். மனுக்கள். வேண்டுகோள்கள் அறிவுறுத்தல்கள். நினைவூட்டல்கள் மகனைச் சுமந்தக் கரங்களில் காகிதங்களையும் கண்ணீரையும் ஒருசேரச் சுமந்தலைந்தார்.

எத்தனையெத்தனை மன்றங்களின் படிகளை உறுதியுடன் கடந்து சென்றது அவரது கால்கள். எத்தனை எத்தனை மாளிகைகளை இரைஞ்சி நின்றது அவரது கரங்கள். எத்தனை கட்சிகள், தலைவர்கள், இயக்கங்கள் பின்னால் நடந்தும் ஓடியும் தவித்துக்கிடந்தது அவரது இதயம்.

குற்றவாளிகளாகவே பார்த்துப் பழகிய அதிகார அமைப்புகளுக்கு அவரது மொழியும், போராட்டமும் புரியத்தானில்லை.

தன்னெஞ்சும் பெற்றவயிறுமறிய தன் மகன் குற்றமற்றவன் என்று உறுதியாக நம்பினார்.

குற்றவாளியின் தாய் என்று எளிதில் சுமத்திவிடப்பட்ட சொல். ஆனால் சட்டத்தின் முன்னும் நீதியின் முன்னும் உறுதிப்படுத்தும்

மலையளவு பொறுப்பு 70 வயதான அந்த தாயின் முதுமையின் மீது கற்பாறையென தூக்கிவைக்கப்பட்டது.

1991 மே 21 ஆம் திகதி முன்னாளயப் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி தமிழக மண்ணில், திருபெரும்புதூரில் வைத்துப் படுகொலைச் செய்யப்பட்டிருந்தார். படுகொலைக்குக் காரணமானவர்கள், தொடர்பிலிருந்தோர் யாதொருவரும் தமிழரென்றபார்வையிலும், பாதையிலும் காவல் மற்றும் புலனாய்வு அமைப்புகள் தேடுதல் நடத்திக் கொண்டிருந்தன.

கரை ஒதுங்கியிருந்த ஈழத் தமிழர் தொடங்கித் தமிழகத்தமிழர் வரை ராஜீவ் கொலையில் ஐயத்துடன் பார்க்கப்பட்டனர். தமிழீழப் போராட்டத்தில் இன உணர்வும், ஈகை உணர்வும் கொண்டவர்களில் பெரியாரியத் தொண்டர்கள் முன்வரிசையில் இருந்தனர். ராஜீவ் கொலையில் புலிகளும், அவர்களுக்கு உதவும் தொடர்பில் பெரியாரியரும் இருந்தமையால், பெரியாரியரைத் தேடி கைது செய்யத்தொடங்கி பேரறிவாளனிடம் வந்து நின்றது புலனாய்வுப் புலி.

1991 ஜுன் திங்கள் 11ஆம் திகதி ராஜீவ் கொலைக்குள்ளானதிலிருந்து சரியாக 22 ஆம் நாளில் புலனாய்வுப் பார்வை பெரியார் திடல் மீது விழவும் பேரறிவாளன் தேடப்படும் நபராகிறார்.

காவல் அமைப்புகள் தேடக் குறித்த அதே நாளில் பேரறிவாளனை மல்லிகை இல்லத்துக்கு உடனடியாக அனுப்பி வைக்கின்றனர் அவரது பெற்றோரான குயில்தாசனும் அற்புதம் அம்மாளும். அன்று தொடங்கிய அவரது மகனை மீட்கும் போராட்டம் அவரது விடுதலைவரை ஓயவில்லை. அந்தத் தமிழ்த்தாயின் நெஞ்சுரத்தை கண்டு சிறைக் கம்பிகள் நெகிழ்ந்தன. மரணக் கொட்டடித் தூக்குக் கயிறு இற்று விழுந்தது.

மகன் உயிருக்காக ஒருகையில் வற்றா அன்பையும், பிறிதொரு கையில் சோர்வடையா நம்பிக்கையையும் ஏந்திக் கொண்டு நாட்டின் குறுக்குமறுக்குமான நீதியின் வாசல் கதவுகளைத் தட்டிக் கொண்டே இருந்தார். அவரது அழு கண்ணீர் சேகரிக்கப்பட்டிருக்குமானால் தமிழகம் ஒரு உயிர்த்ததும்பும் ஜீவநதியைக் கண்டிருக்கும். கல்லறையில் உறங்கிக் கொண்டிருந்த இந்திய நீதியின் கண்களை அவரது கண்ணீர் உயிர்ப்பித்திருக்கிறது. திறந்து வைத்திருக்கிறது.

புனைவை மெய்யாக்கிய அதிகாரவர்க்கத்திற்கெதிராக மெய் என்பது மெய் மட்டுமே என்று ஆழப்பதியவைத்தார் அற்புதமென்ற தாய்.

தன் மகன் என்றில்லாமல் தூக்குத் தண்டனையே கூடாதென்ற பெருந்திரள் போராட்டங்களுடனும், முன்னெடுப்புகளுடனும் தன்னையும் இணைத்துக் கொண்டார். நான்குபேர் கொண்ட போராட்டமா, நாலாயிரம் பேர் கொண்ட ஆர்ப்பாட்டமா அங்கெல்லாம் முழக்கங்களிடையே அந்தத் தாயின் வெங்கலக்குரல் தழும்பி ஒலிக்கும்.

தூக்குத்தண்டனை எதிர்ப்பு, தமிழினவிடுதலை, பெரியாரியக் கருத்தாளர் மேடை, இந்தியச் சட்டங்கள், தீர்ப்புகள் நீதி வழங்கு முறைகள் குறித்தப் பார்வை, அலசல்கள், மறுக்கப்பட்ட நீதி, புனையப்பட்ட வழக்குகள் என பலப்பல மன்றங்களின் மேடைகளில் அற்புதம் அம்மாள் தான் அடக்கிக் கொண்டிருந்த கண்ணீருடனும் உறுதி நிறைந்த குரலுடனும் நீதியைத் தேடிச் செல்லும் தாய்மையின் தவிப்புடனும் இவ்வுலகுக்கு வேண்டுகோள் விடுப்பவராக, நீதியின் மனச்சான்றை உலுக்குபவராக இருப்பார்.

வெற்றுப் பார்வையாளராக அல்லாமல் முனைமுகத்து நிற்பவராகவே இருந்து வந்துள்ளார்.

தமிழகத்தின் மூன்று முதல்வர்களையும் பல்வேறு சமயங்களில் அவர்கள் ஆட்சியிலிருந்த காலங்களில் நேரில் சந்தித்து பேரறிவாளன் விடுதலை அல்லது தண்டனைக் குறைப்பு அல்லது பேரறிவாளன் உடல் நிலைக் குறித்தோ தனது கோரிக்கைககளைச் சமர்ப்பிப்பவராக இருந்தார்.

இறுதியாக இன்றைய முதல்வர் மு.க.ஸ்டாலினைச் சந்தித்து, பேரறிவாளனுக்கு ஏற்பட்டிருந்தச் சிறுநீரகத் தொற்று காரணமாக அவரை பரோலில் விடுவதற்கு வேண்டுகோள் வைத்துக் காத்திருந்தார். அந்த நேரத்தில்தான் தொடர்ச்சியான பரோல் கிடைத்தது அவருக்கு. உங்கள் உணர்வுகளைப் புரிந்திருக்கிறேன் என்று முதல்வர் சொன்னதும், செய்ததுமே அந்தத் தாய்க்குக் கிடைத்தப் பெரும் பரிசு.

எனது தாய்க்காகவே விடுதலையை விரும்புகிறேன் என்று முன்பொருமுறை பேரறிவாளன் சொன்னது நிறைந்தப் பொருளுடையது.

ஜோலார்பேட்டை அரசுப் பள்ளியில் படித்த பேரறிவாளன் பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் பள்ளியிலேயே இரண்டாவதாக வந்தார். மின்னணு தகவல் தொடர்பியலில் பட்டயப் படிப்பை முடித்த அவர் சிறைக்கூடத்திலும் தொடர்ந்து படிப்பதற்கு அற்புதம் அம்மாளின் ஊக்கம் முக்கியமானதாக இருந்தது. தனது மகன் சிறைக் கொட்டடியில் சக கைதிகளுக்கு கல்வி கற்பிப்பதை நிறைந்த மனதுடன் வரவேற்பவராக இருந்தார்.

தனது மகனை சிறை வாழ்விலிருந்து மீட்க முயலும் தாய் அற்புதம் அம்மாள்தாம் மெய்யாக தனிமைச்சிறையில் வாடுபவராக இருந்தார். மகனற்ற வீட்டின் துயரம் தனிமைச் சிறைதானே. அண்ணா நூற்றாண்டை ஒட்டித் தனது விடுலை குறித்த வேண்டுகோள் ஒன்றை அன்றைய முதல்வர் கருணாதிக்கு எழுதியபோதும் சலிக்காதுப் போராடும் தனது பெற்றோர் குறிப்பாகத் தனது தாயாரின் முதுமை தரும் அச்சம் மனதைப்பிழிவதாகக் குறிப்பிட்டார்.

தாய்க்கும் அந்தத் தனையனுக்குமான பேரன்பையும் உறவையும் சிறைச் சுவர்களாலும் கூடத் தடுத்துவிட முடியவில்லை.

பேரறிவாளன் என்றால் அற்புதம் அம்மாள். அற்புதம் அம்மாள் என்றால் பேரறிவாளன் என்று பிரித்தறியா நினைவுகள் நமது மனதில் எழவே செய்யும்.

காக்கைச் சிறகினிலே ஆசிரியர் வி.முத்தையாவுக்கு

# பெரியார் சுயமரியாதைத்தடி விருது



காக்கைச் சிறகினிலே இதழின் தனித்துவத்தையும் தமிழ்நிலத்தில் அது ஆற்றிவரும் சமூகப் பங்களிப்பையும் பாராட்டி ஆசிரியர் வி.முத்தையா அவர்களுக்கு தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் செங்கை நகரப் பேரவை 'பெரியார் சுயமரியாதைத்தடி விருது' வழங்கிச் சிறப்பித்துள்ளது.

அறிவின் விடுதலைக்காகப் பேசும், செயற்படும் இடங்களுக்கு ஓடோடிச் செல்லும் தாய் அவர். தூக்குத் தண்டனைக்கு எதிராக முழங்கும் மேனாள் உச்சநீதிமன்ற நீதிபதி வீ.ஆர். கிருஷ்ணய்யர் பேரறிவாளன் பற்றிப் பேசுவாறோ இல்லியோ,அற்புதம் அம்மாள் பற்றி தவறாது குறிப்பிடுவார். போராட்டமும் கண்ணீருமான உறுதியான அவரது செயற்பாடு தன்னை மனமுருகச் செய்வதாக குறிப்பிடுகிறார் . இணைய இதழான அருஞ்சொல் தளத்தில் அண்மைக் கட்டுரை ஒன்றிலும் அற்புதம் அம்மாள் பற்றி மேனாள் உயர்நீதிமன்ற நீதிபதி கே.சந்துருவும் இப்படியே நினைவுகூர்கிறார்.

தனது மகன் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதிய முறையீட்டுக் கடிதங்களைத் 'தூக்குக் கொட்டடியிலிருந்து ஒரு முறையீட்டு மடல்' என்று நூலாகத் தொகுத்து அதைப் பதிப்பித்து வெளியிட்டதுடன் ஊர் ஊராகச் சென்று வெளியிட்டு தாமே நேரில் விநியோகித்தார். சென்னைப் புத்தகக் காட்சியில் பேரறிவாளன் தொடர்பான நூல்கள் உள்ளிட்ட உலக விடுதலைக் குறித்தான நூல்களைக் காட்சிப்படுத்தியிருந்தார்.

பேரறிவாளனைத் தானே விடுவிப்பேன் என்று ஜெயலலிதா அற்புதம் அம்மாளுக்கு உறுதி அளித்தார். கூப்பியக் கரங்ளுடன் கண்களில் நீர் தளும்ப நிற்கும் அவரதுக் கரங்களை முதல்வர் ஜெயலலிதா ஆறுதலுடன் பற்றி நின்ற காட்சி மானுடம் மறக்காது.

திரையிலும், திரைக்கு வெளியிலும் தாய் பற்றிய மிகையான மரபான விதந்தோதலுக்கு நடுவில் அற்புதம் அம்மாள் போன்றத் தாய்மாரின் மெய்யான ஓயாப் பாசப்போராட்டம் நீதியின் கதவுகளைத்திறக்கச் செய்யும் என்பதை செய்துக்காட்டியிருக்கிறது.

ஆழ்ந்து வாசிக்கும், எழுதும் பழக்கமுடைய பேரறிவாளன், விடுதலையானப் பிறகு செய்தியாளர் சந்திப்பில் தனது தாயை மார்க்சிம் கார்க்கியின் தாய் நாவலில் வரும் பாவெல்லின் தாய்க்கு ஒப்பிட்டுப் பேசினார். தனது 19 வயதில் சிறை சென்றபோதும் அதற்குப் பிறகுமாக பல்வேறு காலக்கட்டங்களில் நான்கு முறை அந்த நாவலை வாசித்ததாகக் குறிப்பிட்டார். புரட்சியாளர்களின் தாயான மாக்சிம் கார்க்கியின் தாய் நாவல் போராட்டக்காரர்களின் மறைநூல் என்றே சொல்லலாம். அறிவு சொல்கிறார்.

"ஒவ்வொரு காலக் கட்டத்திலும் ஒவ்வொரு உணர்வைத் தந்த அந்த நாவலின் தாய் போல. எனது விடுதலைக்காககப் போராடிய என் தாயின் தியாகம், போராட்டம் மிகப் பெரியது!" என்றார்.

அறிவு மிகச்சரியாகத்தான் தனது தாய் பற்றி சொல்லியிருக்கிறார்.

முடியாட்சிக்கு எதிரானப் புரட்சியில் தொழிலாளி வர்க்கப் போராளிகளுடன் நின்று கற்றும், பெற்றும், இணைந்தும் போராடிய மார்க்சிம் கார்க்கியின் தமிழ் வடிவின் தாய் அற்புதம் அம்மாள் என்றால் கார்க்கிக்கு மட்டுமல்ல அற்புதம் அம்மாளைப் பெற்ற தமிழ்நிலத்துக்கும் பெரும்பேறுதான்.!

*கட்டுரையாளர்: எழுத்தாளர்*

கட்டுரை

பி.ஏ. காதர்

இலங்கையில் நடைபெறும் 'கோத்தா போ வீட்டுக்கு!'

# இரண்டாவது சுதந்திரப் போராட்டம்

**பிரித்தானியர் இலங்கையை ஆட்சி செய்தபோது உருவான மத மறுமலர்ச்சி இயக்கம், மதுவிலக்கு இயக்கம்,இடதுசாரி இயக்கம் போன்றவை நடத்திய போராட்டங்கள் வரலாற்றில் என்றும் போராட்டங்களாகவே மறையாத மக்கள் போராட்டங்களாகவே இன்றும் நினைவுகூரப்படுகின்றன. அவற்றை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமல்ல. இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் வெடித்த ஏனைய மக்கள் போராட்டத்துக்கும் 'கோத்தா போ வீட்டுக்கு!' என்ற முழக்கத்தோடு தற்போது நடைபெறும் போராட்டத்துக்கும் இடையிலான வேறுபாடுகளையும் இதன் முக்கியத்துவத்தையும் எமது கடமைகளையும் தொட்டுக் காட்டுவதே இதன் நோக்கமாகும்.**


இலங்கை சுதந்திரம் பெற்றபின்னர் நாடு பல்வேறு போராட்டங்களைக் கண்டிருக்கிறது. அவற்றில் மூன்று மகத்தான சாத்வீக மக்கள் போராட்டங்களும், மக்கள் விடுதலை இயக்கத்தின் தலைமையில் நடந்த இரண்டு ஆயுதம் ஏந்திய கிளர்ச்சிகளும் தமிழ் மக்கள் மத்தியில் வெடித்த விடுதலைப் போராட்டம் நீண்ட கால ஆயுதப் போரட்டமாக நீடித்ததும் இவற்றுள் முக்கியத்துவம் வாய்ந்தவை.

### ஆயுதப் போராட்டமா? சாத்வீகப் போராட்டமா?

இன்று அரசியல் வட்டாரத்திலும் அறிவுஜீவிகள் மத்தியிலும் ஆயுதப் போராட்டமா சாத்வீகப் போராட்டமா எது உண்மையான போராட்டம் என்ற வாதம் மேலோங்கி இருக்கிறது. உலகில் நடைபெற்றபல ஆயுதப்போராட்டங்கள் கூட தோற்கடிக்கப்பட்டுள்ளன. அதே சமயம் எல்லா சாத்வீகப் போராட்டங்களும் வெற்றி பெறுவதுமில்லை. ஆயுதப் போராட்டத்தின் மூலம் சுதந்திரம் பெற்ற பல மக்களும் நாடுகளும் கூட மீண்டும் ஏகாதிபத்தியத்தின் பிடிக்குள் சிக்குண்டு கிடப்பதைக் காணலாம். இதற்கு ஆபிரிக்காவில் நிறையவே உதாரணங்கள் உண்டு. மறுபுறத்தில் இதுவரை ஒரு சமூக மாற்ற புரட்சிகூட சாத்வீகப் போராட்டத்தால் சாத்தியமானதில்லை என்றாலும் கூட அதன் முற்போக்குப் பாத்திரத்தைக் குறைத்து மதிப்பிட முடியாது. சாத்வீக வழியில் பல நாடுகளில் பல ஜனநாயக உரிமைகளை வென்றெடுத்திருக்கிறார்கள். உதாரணத்துக்கு மே தினப் போராட்டம் இதற்கு நல்லதோர் உதாரணம்.

இன்றைய டிஜிட்டல் யுகத்தில் சாத்வீகமான முறையில் ஜனநாயகக் கோரிக்கைகளை முன்வைத்து மக்கள் நடத்துகின்ற போராட்டங்கள் முக்கிய பாத்திரம் வகிக்கின்றன. நான் நடத்திய நீண்ட ஆய்வின் அடிப்படையில் இது தொடர்பாக பின்வரும் முடிவுகளுக்கு வந்துள்ளேன்:

1. காலத்துக்குக் காலம் போராட்ட வடிவம் வேறுபட்டிருக்கிறது. 60- 70களில் ஆயுத போராட்டம் முதன்மை பெற்றிருந்தது. 90களின் பின்னர் குறிப்பாக டிஜிட்டல் யுகத்தில் சாத்வீக போராட்டங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன.
2. ஆயுதப் போராட்டமின்றி சமூகப் புரட்சிகள் எவையும் வெற்றிபெற்றதாக வரலா று கிடையாது.







3. ஒரு நாடு இன்னொரு நாட்டை ஆக்கிரமிக்கும் போது ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளுக்கு ஆயுத போராட்டத்தால் தம்மை மீட்கும் உரிமை உண்டு.
4. விடுதலைப் போராட்டங்கள் பெரும்பாலும் (அனைத்தும் அல்ல) ஆயுத போராட்டங்களாகவே இருந்துள்ளன.
5. இந்த மூன்று சந்தர்ப்பங்களைத் தவிர்ந்த ஏனைய நிலைமைகளில் இன்றைய காலகட்டத்தில் ஜனநாயகத்துக்கான சீர்திருத்த போராட்டங்கள் சாத்வீக வடிவை எடுப்பதில் பல அனுகூலங்கள் உள்ளன. அவையாவன:
   - அவற்றை ஆயுத முனையில் நசுக்குவதனை ஆட்சியாளர்களால் நியாயப்படுத்துவது கடினம்.
   - சமூக மாற்றத்துக்கான போராட்டங்கள் தவிர்ந்த ஏனைய சீர்திருத்தங்களுக்கான போராட்டங்களில் அநாவசிய இழப்புகளைத் தவிர்க்கலாம்.
   - சாத்வீக வழியில் மெல்ல மெல்லவேனும் பெறப்படும் வெற்றிகள் நீண்டகாலம் நிலைக்கின்றன.

### இலங்கையில் இதுவரை இடம்பெற்ற பாரிய மக்கள் போராட்டங்கள்

இலங்கையில் எங்கோ ஒரு மூலையிலாவது எதோ ஒரு மக்கள் போராட்டம் தினமும் நடந்தவண்ணமே உள்ளது. எண்ணிக்கையில் சிறுபான்மை மக்கள் தங்கள் பிரத்தியேக பிரச்சினைக்காக போராடுகிறார்கள். தொழிலாளர்களும் மீனவர்களும் விவசாயிகளும் மாணவர்களும் ஆசிரியர்களும், தலித்களும் தத்தமது கோரிக்கைகளை முன்வைத்துப் போராடுகிறார்கள். இதனைத் தவிர சுற்றாடல் பாதுகாப்பு, பெண்ணுரிமை, மனித உரிமை, பாலுறவு சமத்துவம்,, மிருகவதைக்கெதிரான இயக்கம் போன்றவை நவீன வடிவங்களாக உருவாகியுள்ளன.

இவற்றுள் 1980இல் ஜே ஆர் ஆட்சியில் பொது வேலை நிறுத்தம் முறியடிக்கப்பட்டு வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டோர் வேலை நீக்கம் செய்யப்பட்ட அநீதி மறக்கக் கூடியதல்ல. தலவாக்கலை பகுதி மலையக மக்கள் நில அபகரிப்புக்கு எதிராக நடத்திய போராட்டத்தின் போது 11.05.1977 ம் திகதி பொலிசாரின் துப்பாக்கி சூட்டுக்கு பலியாகி சிவனு லெச்சுமணன் வீரமரணம் எய்திய நிகழ்ச்சி இன்றும் மலையகத்தில் வருடம்தோறும் நினைவு கூரப்படுகிறது. 2012இல் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் முன்னெடுத்த 100 நாள் போராட்டமும், 2021 அக்டோபர் மாதம் ஆசிரியர்களும் பாடசாலை அதிபர்களும் நடத்தி வெற்றபெற்ற பிரமாண்டமான வேலைநிறுத்தமும் முக்கியமானவை.

எனினும் இலங்கையில் இவை அனைத்தையும் விட மூன்று மக்கள் போராட்டங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

முதலாவதாக மலையக தமிழ் மக்களின் வாக்குரிமையையும் பிரஜவுரிமையையும் பறித்த சட்டங்களுக்கு எதிராக 1952 ஏப்ரல் 28ம் திகதி தொடக்கம் 143 நாட்கள் சுழற்சி முறையில் நடைபெற்ற சத்தியாக்கிரக போராட்டம் ஒரு முழு மக்கள் சமூகத்துக்கும் எதிராக இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக நடத்திய போராட்டம் என்ற வகையில் முக்கியத்துவம் பெறுகிறது.

இரண்டாவதாக, 1953 ஆகஸ்ட் மாதம் 12ம் திகதி இடம்பெற்ற ஹர்த்தால் மலையகத் தோட்டத் தொழிலாளர் தவிர்ந்த ஏனைய தொழிலாளர் அனைவரும் நடத்திய வேலைநிறுத்தத்திற்கு ஆதரவாக சகல நகரங்களிலும் கடைகளை அடைத்து ஆதரவளித்த இந்த ஹர்த்தால் இலங்கையில் நடைப்பெற்ற நாடுதழுவிய முதலாவது போராட்டம் என்ற சிறப்பைப் பெறுகிறது.

இப்போராட்டத்தின் போது ஊர்வலமாகச் சென்ற தொழிலாளர்மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒன்பது பேர் வீரமரணம் எய்தினார்.

மூன்றாவதாக, 1961 பெப்ரவரி மாதம் 20ம் திகதி தொடக்கம் தமிழரசு கட்சி தலைமையில் சிங்கள மொழித்திணிப்புக்கு எதிராக நடத்தப்பட்ட ஒத்துழையாமைப் போராட்டம் தமிழ் பேசும் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக அம்மக்கள் நடத்திய பாரிய போராட்டம் என்றவகையில் சிறப்புப்பெறுகிறது. இப்போராட்டத்தில் லட்சக்கணக்கான மலையக தோட்டத் தொழிலாளரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு ஆதரவளித்தனர்.

எனினும் இவ்வுன்னதமான இப்போராட்டங்களுக்கெல்லாம் இல்லாத தனித்துவமான சிறப்பு 'கோத்தா போ வீட்டுக்கு!' என்ற கோஷத்தோடு தற்போது நடைபெறும் போராட்டத்துக்கு உண்டு.




### 'கோத்தா போ வீட்டுக்கு' என்ற போராட்டம் எவ்விதத்தில் வேறுபடுகிறது?

கோத்தா போ வீட்டுக்கு' என்ற கோஷத்தோடு தற்போது நடைபெறும் போராட்டத்தைப் போன்ற ஒன்று இதுவரை இலங்கையில் நடைப்பெற்றதில்லை, அதில் பல குறைகள் இருந்தாலும் கூட பின்வரும் சிறப்பம்சங்களை அது கொண்டிருக்கிறது:

- இதுவரை நடைபெற்ற போராட்டங்கள் ஒன்றில் தொழிற்சங்க நடவடிக்கையாக அல்லது அரசியல் கட்சி சார்ந்த நடவடிக்கையாக அல்லது ஒருசாராரின் உடனடிக் கோரிக்கைகளை முன்வைத்த போராட்டங்களாகவே இருந்துள்ளன . முதல் தடவையாக இலங்கை வாழ் அனைத்து மக்களையும் அல்லது மக்களினதும் பொது அபிலாசையை உள்ளடக்கிய,கூட்டுத் தலைமையின் கீழ் நடைபெறும் போராட்டமாக இது அமைந்துள்ளது.
- இதுவரை முன்னெடுக்கப்பட்ட பெரும்பாலான அரசியல் போராட்டங்கள் ஆட்சியில் இருக்கும் அரசியல் கட்சிக்கெதிராக எதிர்க்கட்சிகள், தாம் ஆட்சிக்கு வருவதற்காக நடத்தப்பட்ட போராட்டங்களாகவே இருந்துள்ளன. 1977ல் இடம்பெற்ற ஜேஆர் தலைமையிலான சத்தியாகிரகம் 2015 சோபித தேரோ - ரணில் தலைமையில் நடைபெற்ற மஹிந்த ராஜபஷவுக்கு எதிரான அணிதிரட்டல் என்பன இதற்கான இரு உதாரணங்கள் . முதல் தடவையாக ஒரு ஆட்சி முறைக்கு எதிரான மக்கள் போராட்டமாக இது திகழ்கிறது.
- இதுவரை எண்ணிக்கையில் சிறுபான்மையினர் தமது அரசியல் கோரிக்கைகளை முன்வைத்து அவ்வப்போது தனித்தனியாக போராடியிருக்கிறார்கள், முதல் தடவையாக இன, மத பேதப் பிளவுகளை கடந்த ஒரு பொதுக் கோசத்தின் கீழ் அனைத்து மக்களையும் ஓரணியில் திரட்டும் முயற்சி உண்மையாகவே மேற்கொள்ளப்பட்டு ஒரு திருப்பம் ஏற்பட்டுள்ளது.
- 2009இல் தமிழ் மக்கள் சிந்திய இரத்தத்தின்மீதும் 2019 திட்டமிடப்பட்ட ஈஸ்டர் பயங்கரவாத தாக்குதலின் பிணக்குவியலின் மீதும் முஸ்லீம் மக்களின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இனவெறியாட்டத்தின் மீதும் தனி சிங்கள வாக்குகளை அறுவடை செய்துகொண்டு அறுதி பெரும்பான்மை இராட்சத பலத்தோடு ராஜபக்ச குடும்பம் ஆட்சிக்கு வந்தபோது எண்ணிக்கையில் சிறுபான்மையான அனைத்து தமிழ் பேசும் மக்களது எதிர்காலமும் கேள்விக்குறியானது. பௌத்த மதபீடமும் அறுதிப் பெரும்பான்மை சிங்கள மக்களும் சிங்கள அரச படைகளும் மாத்திரமல்ல முழு நிர்வாகயந்திரமும் நீதிமன்றமும் கூட இவ்வாட்சியாளர்களின் பின்னால் இனவாத ரீதியில் அணிதிரண்டு நின்ற போது நவ பாசிசத்தின் கோரமுகம் தென்படத் தொடங்கியது. மகிந்த இவர்களின் மற்றொரு மதமானார். நாட்டை மீட்ட தெய்வ மகனாக இவர்களால் கொண்டடப்பட்டார். யாராவது எதிர்பார்த்தார்களா ராஜபக்ச குடும்பத்திற்கு எதிராக அவருக்கு வாக்களித்த சிங்கள மக்களே இவ்வளவு சீக்கிரம் கிளர்ந்தெழுந்து "ஆட்சியை விட்டு வெளியேறு" என தெருவில் இறங்கி போராடுவார்கள் என்று? யாராவது எதிர்பார்த்தார்களா சிங்கள இனவாதத்துக்கு எதிராக சிங்கள மக்களே குரல் கொடுப்பார்கள் என்று? சிங்கள மக்களும் தமிழ் பேசும் மக்களும் மொழி கடந்து மதம் கடந்து ஓரணியில் நின்று போராடுவார்கள் என்று? இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக நினைத்துப் பார்க்க முடியாத இந்த அதிசயம் நடைபெறுகிறது.
- இதுவரை ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் மக்கள் ஆதரவால் பதவிக்கு வரவில்லை, மாறாக ஆட்சியில் இருந்து கொண்டிருக்கும் அசாங்கத்தின் மீதுள்ள அதிருப்தியைப் பயன்படுத்தி பொய்யான வாக்குறுதிகளை வழங்கியும் இன முரண்பாடுகளைப் பயன்படுத்தியுமே ஆட்சியைக் கைப்பற்றின. தற்போது முதற்தடவையாக ஒரு பொருளாதார வேலைத்திட்டத்தையும் அரசியல் சீர்திருத்தத்தையும் முன்வைத்தே எந்த கட்சியும் ஆட்சிக்கு வரவேண்டிய நிர்ப்பந்த சூழலை ஏற்படுத்தியுள்ளது.
- ஆங்காங்கே பசளை கோரியும் பால்மா கோரியும் பெட்ரோல் கோரியும் நடைப்பெற்ற பொருளாதார போராட்டங்களுக்கு ஒரு அரசியல் அடிப்படையை கொடுத்து அனைத்து சக்திகளையும் 'கோத்தா வெளியேறு' என்ற கோசத்தின் கீழ் ஒன்றிணைத்து




அதனை நாடு தழுவிய கோஷமாக மாற்றியது.

- வன்முறையற்ற அமைதி வழிப் போராட்டமே தமது பாதை என்பதில் உறுதியாக நிற்பதால் மத்திய தர வர்க்கத்தையும் இணைக்க முடிந்தது, அரசின் சதி முயற்சிகளை அம்பலப்படுத்த முடிந்தது, சர்வதேச அங்கீகாரத்தையும் பெற முடிந்தது.
- கொழும்பு மைய போராட்ட மரபை மாற்றி சகல உள் நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் போராட்டத்தை விரிவுபடுத்தி முழுமக்களும் தழுவிய போராட்டமாக மாற்றியுள்ளது.
- அனைத்துக்கும் மேலாக இனவாதத்தை முறியடிக்கும் 'இன மத ரீதியாக அன்றி நாட்டின் பிரஜைகளாக சிந்தித்து ஒன்றுபடுவோம்' என்ற ஒரு சித்தாந்தத்தை இப்போராட்டம் இலங்கை மக்களிடையே அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்மூலம் இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக சிங்கள பௌத்த பேரின வெறியை பின்தள்ளி இலங்கை என்பது சிங்களவர்களுக்கு மாத்திரமல்ல முழுமக்களுக்கும் அது சொந்தமானது என்ற சித்தாந்தத்தை முன்னிறுத்தியுள்ளது. இது தற்காலிகமானதாக இருக்கலாம் ஆனால் இந்த உடைவு முக்கியமானது.
- சுருக்கமாகக் கூறினால் இப்போது நடைபெறுவது இரண்டாவது சுதந்திர போராட்டம். 1948ல் ஆங்கிலேயர்களிடம் இருந்து போராடாமல், ஒரு துளி இரத்தம் சிந்தாமல் சுதந்திரம் பெற்றோம். ஆனால் நாம் இப்போது நடத்துவது அதிகார வெறி பிடித்த எமது சுதேச ஆட்சியாளர்களுக்கு எதிரான இரண்டாவது சுதந்திரப் போராட்டம். அது அத்தனை சுலபமானதல்ல. ஆனால் முடியாததல்ல.

### புரட்சிகர சூழலும் புரட்சியும்..

புரட்சிகர சூழல் என்பது இதுதான். ஆயிரம் நூல்களை விட ஒரு புரட்சிகரப் போராட்டம் மக்களுக்கு ஆயிரம் பாடங்களைக் கற்றுக் கொடுக்கிறது என ஒரு மேதை கூறியது இதைத்தான். வி .ஐ. ஜோன் ரீட் "உலகைக் குலுக்கிய அந்த பத்து நாட்கள்" என்ற நூலில் உலகை மாற்றிய 1917 ரஷ்ய புரட்சி, 1547 முதல் ரஷ்யாவில் கோலோச்சிய சார் மன்னராட்சியை சில நாட்களில் தூக்கி எறிந்ததை நேரடி சாட்சியாக விபரித்தது இதைத்தான்.

பல்லாண்டுகளாக சிறுகச்சிறுக திரண்ட மக்களின் அதிருப்தித் துகள்கள் கொதிநிலை கொண்டு பொங்கி எழும் போது அவை புரட்சிகர சூழல் எனப்படுகின்றன. எல்லா புரட்சிகர சூழல்களிலும் புரட்சிகள் வெடிப்பதில்லை. பாரிய போராட்டங்கள் யாவும் புரட்சியாக மாறுவதுமில்லை. 2010 டிசம்பர் 18ம் திகதி முஹம்மது பௌஷீசி என்பவர் போலீஸ் ஊழலுக்கும் வன்முறைக்கும் எதிராக தீக்குளித்ததை அடுத்து துனிசியாவில் வெடித்த ஜனநாயகத்துக்கான பாரிய போராட்டம் இதற்கொரு உதாரணம். 1955 டிசம்பர் 1 ம் திகதி ரோசா பார்க்ஸ் என்ற கறுப்பின வீரப்பெண் தான் அமர்ந்திருந்த பஸ் ஆசனத்தை வெள்ளை இன பயணிக்கு விட்டுக்கொடுக்க மறுத்ததை அடுத்து இன ஒதுக்கல்வாத போலீசார் அவரைக் கைதுசெய்ததை தொடர்ந்து வெடித்த நிறவெறிக்கு எதிரான மார்ட்டின் லூதர் கிங் (ஜூனியர்) தலைமையில் அமெரிக்காவிலே நடைபெற்ற பாரிய போராட்டம் நிறவாதத்திற்கு பலத்த அடி கொடுத்து ஜனநாயக கோரிக்கைகள் பல வென்றெடுத்தாலும் கூட- புரட்சியில் முடியவில்லை.

வோல் ஸ்ட்ரீட்டை கைப்பற்றுவோம் (Occupy Wall Street ) என்ற சுலோகத்தின் கீழ் வங்கிகளுக்கும் கார்போரேட்களுக்கும் எதிராக 17 செப்டம்பர் 2011 அமெரிக்காவில் நடத்தப்பட்ட பாரிய போராட்டமும் சரி, 2013 ஜூலை மாதம் அமெரிக்காவில் தொடங்கிய 'கருப்பு உயிர்கள் முக்கியம்' என்ற இயக்கம் (Black lives matter) 2020 மே 25 ம் திகதி ஜார்ஜ் பிலோயிட் என்ற கருப்பு நிறத்தவர் முகம் நிலத்தில் கிடக்க அவரது கழுத்தில் தனது முட்டுக்காலை வைத்து நெறித்துக்கொன்ற டெரெக் சோவின் என்ற வெள்ளைநிறவாத பொலிஸ்காரனின் கோர சம்பவத்தை அடுத்து உலகளாவிய ரீதியில் வெடித்த நிறவாதத்திற்கெதிரான இயக்கமும் சரி சமூகப் புரட்சியில் முடிவடையவில்லை. ஆயினும் இவை யாவும் வரலாற்றில் முற்போக்கான பாத்திரத்தை வகித்தன.

### எமது கடமை என்ன?

இதன் பின்னனியில் வெளிசக்திகளின் கரம் இருக்கிறதா என்ற கேள்விக்கு இல்லை என்று பதில் கூற முடியாது. ஏனெனில் இத்தகைய பாரிய நெருக்கடிகள் நாடுகளில் ஏற்படும் போது வல்லரசுகள் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க நினைப்பது இன்றைய போக்காகும். வர்ண புரட்சிகள் (colour revolutions) என குறிப்பிடப்படும் எகிப்து லிபியா உக்ரைன் போன்ற நாடுகளில் நடைபெற்ற மக்கள் பேரெழுச்சிகளின் பின்னால் அமெரிக்கா இருந்ததும், முன்னாள் அமெரிக்க அதிபர் ரீகன் காலத்தில் 1983 இல் ஜனநாயகத்திற்கான தேசியப் பங்களிப்பு (the National Endowment for Democracy -NED) என்ற பெயரில் சி.ஐ.ஏ. யின் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு அரசு சாரா அமைப்பின் மூலம் பிறநாடுகளில் ஆட்சி மாற்றத்துக்காக அங்கு இயங்கும் அரசு சாரா அமைப்பிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு எவ்வாறு பயிற்சி அளிக்கப்படுகிறது நிதி வழங்கப்படுகிறது என்பதெல்லாம் இன்று பரம இரகசியமல்ல.

2015இல் இலங்கையில் நடந்த ஆட்சிமாற்றத்தில் கூட வெளிச்சக்திகளின் கரம் இருந்தது. அது போன்றே ‘*Gota GO Home*’ மிலும் அதன் கரங்கள் இருக்கக்கூடும். அது மாத்திரமல்ல உளவுப்பிரிவு அதற்குள் ஊடுருவி இருக்கும், ஊடுருவி இருக்கிறது. இது சித்திரத்தின் ஒருபக்கம் மாத்திரமே. மறுபுறம் அனைத்து அரசியல் கட்சிகளும், பெரும்பாலான சமூக ஸ்தாபனங்களும் தொண்டர் நிறுவங்களும், தொழிலாளர்களும், மாணவர்களும், கல்விமான்களும், தொழில்நுட்பவியலாளர்களும், அனைத்து மதத்தினரும், அனைத்து மொழி பேசுவோரும் ஆண்களும் பெண்களும் குறிப்பாக இளைஞர்கள் தலைமை தாங்குகின்ற இப்போராட்டத்தில் சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் பங்கு கொள்கிறார்கள். எனவே வெளிச்சக்திகள் ஊடருவிவிடுவார்களோ என்ற அச்சத்தில் அதில் இருந்து ஒதுங்குவது காட்டை முழுமையாகப் பார்ப்பதற்குப் பதிலாக மரத்தை மாத்திரம் பார்க்கும் குறுகிய பார்வையாகவே இருக்கும். இப்போக்கு பிழையானவர்களின் கையில் இப்போராட்டத்தை தாரை வார்ப்பதாகவே விளைவு அமையும்.

தூய புரட்சி என்பது வெறும் கற்பனாவாதமே. அப்படி ஒரு புரட்சி எங்கும் எப்போதும் நடைபெறப்போவதில்லை. மக்கள் போராட்டம் என்பது தெளிவானவர்கள் தெளிவற்றவர்கள் பத்தாம்பசலிகள் புதிய சிந்தையாளர், ஏன் முன்னர் எதிரியாக இருந்தவர்கள் கூட கலந்து கொள்ளும் ஒரு கதம்பமாகும். இதற்குள் முரண்பட்ட பல்வேறு நலன்கள் முட்டி மோதும். இப்படியான வரலாற்று காலகட்டத்தில் எவரும் ஒதுங்கி இருக்கக்கூடாது. விழிப்பு பெற்றவர்கள் இதில் இணைந்து கலந்து தீவிரமாகச்செயல்பட்டுதலைமைகொடுக்கவேண்டும். இல்லையென்றால் ‘மக்கள் போராடுகிறார்கள் ஆளும் வர்க்கம் தலைமையை அபகரிக்கிறது’ என்ற ஒரு மகா மேதையின் கூற்று உண்மையாகிவிடும். *2015* இலும் இதுவே இங்கு நடந்தது. அது மீண்டும் நடைபெறக்கூடாது. புரட்சிகர சக்திகள் தங்களில் நம்பிக்கை வைக்கவேண்டும், களத்தில் இறங்கி தமது கொள்கையாலும், செயற் திறனாலும் நேர்மையாலும் மக்களின் நம்பிக்கையை வென்று தலைமையை வெல்லவேண்டும், ஊடுருவல்காரர்களை ஒதுக்கித்தள்ள வேண்டும்.

வரலாற்று மாற்றம் நடைபெறும்போது கைகட்டி வேடிக்கை பார்ப்பவனும் வெறும் விமர்சனத்தால் தன்னை தூயவன் என கட்ட முயல்வோனும் வரலாற்றுக்கு துரோகமிழைத்தவனே.

கட்டுரையாளர்: தகைசார் கல்வியாளர், ஆய்வாளர், எழுத்தாளர், உரைஞர், பன்முக சமூகச் கரிசனையாளர். எண்பதுகளின் ஆரம்பத்தில் ஈழ ஆய்வு நிறவனம் (ஈரோஸ்) வெளியிட்ட இருபதாம் நூற்றண்டின் நவீன அடிமைத்தனம் எனும் வரலாற்று ஆய்வுநூலை எழுதியவர். அக்காலகட்டத்தில் மோகன்ராஜ் எனும் பெயரில் வெளிவந்த இந்த நூல் இலங்கை மலையக மக்கள் குறித்த ஆரம்பகால ஆய்வு நூலாக மிகுந்த கவன ஈர்ப்பைப் பெற்றது..
(இங்கிலாந்து)


**ஆறாம் திணை பதிப்பகத்தின் வெளியீடாக**

- ஈடிணையற்ற இந்திய வரலாற்று ஆய்வாளரும் மூலச் சிறப்பு வாய்ந்த மார்க்சியச் சிந்தனையாளருமாகிய டி.டி. கோசம்பியின் வாழ்க்கை வரலாறு, அவர் மேற்கொண்ட முக்கியமான ஆய்வுகளின் சுருக்கங்கள், இதுவரை தமிழில் வெளிவராத கட்டுரைகளின் தமிழாக்கம் ஆகியவற்றின் தொகுப்பாக...
- எழுத்தாளர் **மூ. அப்பணசாமி** தொகுத்து எழுதி, மொழியாக்கம் செய்து அளிக்கும்.
- தமிழ்நாட்டின் தலைசிறந்த மார்க்சிய அறிஞர்களான **ஆ. சிவசுப்பிரமணியன், ந. முத்துமோகன்,** ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக வரலாற்று ஆய்வுத்துறைப் பேராசிரியர் **எஸ். குணசேகரன்** ஆகியோர் எழுதியுள்ள அணிந்துரைகளுடன்.




**வரலாறு - பண்பாடு - அறிவியல்:**
**டி.டி. கோசம்பியின் வாழ்க்கையும் ஆய்வுகளும்**

விலை **ரூ. 400**

**350** பக்கங்கள்
முன்வெளியீட்டுப் பதிவில் **ரூ. 300**

நூல் டி.டி. கோசம்பியின் 115 ஆம் ஆண்டு பிறந்த நாளான 2022 **ஜூலை 31** அன்று வெளிவருகிறது.
ராயல் அளவு (150X230 mm) | இயற்கை வண்ண மேப்லித்தோ தாள் | அழகிய வடிவமைப்பு | சிறந்த பைண்டிங்

பதிவுசெய்துகொள்ள ஜீபே எண்: **G-Pay 88389 69909**

கட்டுரை

**என்.சரவணன்**
nsaravanan@gmail.com

# பேரினவாத போதையால் அழிந்த தீவு!

**கடந்த மே 9ஆம் திகதி மக்கள் அரசியல்வாதிகளுக்குக் கொடுத்த தண்டனைகள் முழு அரசியல்வாதிகளுக்கும் நல்ல பாடத்தைக் கற்றுக் கொடுத்திருக்கிறது. பாராளுமன்றத்தில் சிலர் தாங்கள் அரசியலை விட்டு ஒதுங்குவதாக அறிவிக்கிறார்கள், சிலர் தாம் தலைமறைவாக ஒளிந்து வாழ்வதாகத் தெரிவிக்கின்றனர். சிலர் தம்மை உரு மாற்றிக்கொண்டு பாராளுமன்றம் வருகின்றனர். உடுத்தும் உடுப்பு கூட தமக்கு இல்லை என்கின்றனர். இவர்கள் எல்லோரும்; பிரச்சினையை தாம் தீர்க்கா விட்டால் தமது ஊர்களுக்கும், வீடுகளுக்கும் இனித் திரும்ப முடியாது என்று பாராளுமன்றத்தில் அறிவிக்கின்றனர். இனி வரும் காலம் மேலும் நெருக்கடியான காலம் என்பதை பிரதமரே தமது உரைகளில் மீண்டும் மீண்டும் தெரிவித்து வருவதானது, மக்களின் போராட்டம் மேலும் தீவிரமாவதற்கான அறிகுறிகளையே எடுத்துக் காட்டுகின்றன.**

ஆசிய பசுபிக் நாடுகளிலேயே முதலாவது திவாலான நாடாக இலங்கை உருவாகியுள்ளது.

கடந்த மே 18 ஆம் திகதி இலங்கை முற்றாக திவால் என்கிற அறிவித்தலை உத்தியோகபூர்வமாக அறிவித்தது. அதற்கு முதல் முப்பது நாட்களுக்கு முன்னரே இந்த அறிவிப்பைச் செய்திருந்தாலும் அதனைத் தீர்ப்பதற்கு அந்த முப்பது நாட்களும் அவகாசமாக இருந்தது. அந்த அவகாசக் காலம் முடிந்ததும் இயல்பாகவே திவால் என்கிற நிலை பிரகடனமானது.அன்றைய தினம் பாராளுமன்றத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேசும்போது திறைசேரியில் ஒரு மில்லியன் டொலர் கூட இல்லை. என்றும் அறிவித்திருந்தார்.

### ரணில் ஒரு வின்ஸ்டன் சர்ச்சிலா

ரணில் விக்கிரமசிங்க இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக தற்காலிகமாக நியமிக்கப்பட்ட அவசரகாலப் பிரதமர். ராஜபக்ச அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களை விட சர்வதேச ரீதியில் நன்மதிப்பைப் பெற்றவர் என்பது அவருக்கு கொடுக்கப்பட்ட அவசரப் பதவிக்கு ஒரு தகுதி எனலாம். அவரை நம்பி சர்வதேசம் கடன் கொடுக்கும் என்கிற நம்பிக்கை அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் கூட இருக்கிறது. எனவே அவரை விரும்பாத பெரும்பான்மையைக் கொண்ட பாராளுமன்றம் இந்த நெருக்கடி நிலையில் ரணிலையே ஒரு ஆபத்பாந்தவனாக ஏற்றுகொண்டது.

ரணில் பிரதமராவது இது முதல் தடவையல்ல. இன்னும் சொல்லப்போனால் அவர் ஆறாவது தடவையாக இலங்கையின் பிரதமராக ஆகியிருக்கிறார். இலங்கையின் வரலாற்றில் ஆறு அதி கூடிய தடவைகள் பிரதமராக இருந்த சாதனையும் ரணிலுக்குத் தான். ஆனால் இந்த ஆறு தடவையில் ஒரு தடவை கூட அவரை முழு பதவிக்காலத்தை அனுபவிக்க எதிர்க்கட்சிகள் விட்டதில்லை. சகல தடவையும் முழுமையில்லாமலே இடையில் ஆட்சி பறிக்கப்பட்டிருக்கிறது. 77 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக 45 ஆண்டுகள் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்திருக்கிறார்.

பிரேமதாச 1993 மே தினத்தன்று கொல்லப்பட்ட வேளை டீ.பி.விஜேதுங்க ஜனாதிபதியின் இடத்துக்கு நிரப்பப்பட்டார். 94ஆம் ஆண்டு தேர்தலின் பின் எதிர்க்கட்சித் தலைவரானார். 1999 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகாவுடன் போட்டியிட்ட போதும் அத் தேர்தலில் ரணில் வெற்றி பெறவில்லை. ஒன்பது தேர்தலில் போட்டியிட்டு ஐந்து தடவைகள் கொழும்பு மாவட்டத்தில் அதிக விருப்புகளை பெற்றிருந்த அவர் இறுதித் தேர்தலில் தோற்றே போனார்.

பாராளுமன்றத் தேர்தலில் தோற்றுப் போனவர் பிரதமராக ஆகியிருக்கிறார். ஐக்கிய தேசியக் கட்சி முற்றுமுழுதாக தோற்றுப் போய் வெறும் போனஸ் ஆசனத்தை மட்டுமே பெற்றுக்கொண்ட நிலையில் அந்த ஒரேயொரு போனஸ் ஆசனத்தின் வழியாக வந்தவர் ரணில். பாராளுமன்ற வரலாற்றில் ஒரே ஒரு ஆசனத்தைப் பெற்ற கட்சியொன்றைச் சேர்ந்தவர் பிரதமராகத் தெரிவாகும் முதல் சந்தர்ப்பமாகவும் இது இருக்கும்.


அப்படிப்பட்ட ரணில்; அவரை அதிகம் வெறுத்தவர்களால், அதிகம் தூசித்தவர்களால் பிரதமராக ஆக்கப்பட்டார் என்றால் அந்த தேவைக்கான தீவிரத்தன்மையை நாம் உணர வேண்டியிருக்கிறது. மே 15ஆம் திகதி ரணிலிடம், வெளிநாட்டு பத்திரிகையாளர் ஒருவர்; 'உங்களது கட்சியின் ஒரே உறுப்பினராக பாராளுமன்றை பிரதிநிதித்துவம் செய்யும் நீங்கள் எவ்வாறு நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்? என்று ஒரு கேள்வியை எழுப்பியிருந்தார். அதற்கு பதிலளித்த ரணில், "2ஆம் உலக யுத்தம் தொடங்கிய போது வின்சன்ட் சர்ச்சில் (Winston Churchill) நான்கே நான்கு பேரின் ஆதரவில் தான் பிரித்தானியாவின் பிரதமராக ஆனார். ஏன்? ஏனென்றால் அது நெருக்கடி காலம். நானும் அப்படித்தான்."என்றார்.

புதிய பிரதமரை ஒரு ஆபத் பாந்தவனாக பார்க்கும் ஒரு தரப்பு இருக்கும் அதே நேரம் அவர் இந்தப்போராட்டத்தைக்காட்டிக்கொடுத்துவிட்டார் என்கிற கருத்தும் பலமாகவே இன்று பரப்பப்பட்டு வருகிறது. அதில் ஒரு வகையில் உண்மையும் இருக்கிறது. இப்போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்திருக்கிறது இந்தப் பதவி ஏற்பு. ஓரளவு நிலைமையை சரி செய்வார் என்கிற நம்பிக்கையில் வீடுகளுக்குத் திரும்பிவிட்டவர்களும் உள்ளார்கள். அதேவேளை இனி இந்தப் போராட்டத்தை முன்னெடுக்க முடியாதபடி ராஜபக்சக்களை காப்பாற்றிவிட்டார். இனி சற்றும் இந்தப் போராட்டம் முன்னேற முடியாது என்று சொன்னவர்களும் கூட இருக்கிறார்கள்.

ஆனால் ரணில் இலங்கையின் இன்றைய நெருக்கடியின் ஆழத்தையும் யதார்த்தத்தையும் உணர்ந்த வெகு சில அரசியல்வாதிகளில் ஒருவர் என்று கூறலாம். அதுபோக எப்பேர்பட்ட பிரச்சினையையும் தீர்க்க மற்றவர்களை விட தனக்கு அருகதை உண்டு என்று முன்வந்தது ஒரு பெரும் சவாலான விடயம் தான்.

ரணில் மீது பல்வேறு அரசியல் விமர்சனம் வைக்க முடியும் ஆனால் ரணிலை ஒரு ஊழல்வாதியென எவராலும் கூறிவிடமுடியாது. பிணைமுறி விவகாரம் கூட அவரை அரசியல் பழிவாங்குவதற்காகப் பயன்படுத்தினாலும் எவரும் அதனை நிரூபித்தது கிடையாது. அப்பேர்பட்ட பணம் வெளியில் போய்விடாதபடி இறுதியில் தடுத்ததும் ரணில் தான். ரணிலின் இந்த 45 வருடகால அரசியலில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைக்கும் சம்பளத்தையோ, அல்லது வரப்பிரசாதங்களையோ, வாகன பெர்மிட்டுகளையோ கூட பெறாத ஒருவர். பெரும் செல்வந்த நிலபிப்ரபுத்துவ குடும்பத்தைச் சேர்ந்த அவர்தான் அக்குடும்பத்தின் கடைசி வாரிசு. ரணில் சொத்து சேர்த்து வைப்பதற்கு ஒரு வாரிசும் அற்றவர். அவருக்குப் பின் அவரின் சொத்துக்களை தான் கற்ற பாடசாலைக்கு உரித்து எழுதி வைத்து விட்டவர்.

ஏன் இது இங்கு அவசியப்படுகிறது என்றால் தற்போது நாம் பேசும் தலைப்பு ஒரு நாட்டின் பாரிய நிதி நெருக்கடி, திவால் என்பவற்றைப் பற்றியும்,



ரணில் விக்கிரமசிங்க

அதைத் தீர்க்க வந்தவரின் நேர்மை பற்றியும் களத்தில் இருக்கிற உரையாடலைப் புரிந்து கொள்வதற்கு இதனை கடக்க வேண்டியிருக்கிறது.

ரணில் தற்போது உள்ள உண்மை நிலைமையை பாராளுமன்றத்திலும், ஊடகங்களிடமும் பகிரங்கமாக கூறி வருகிறார். கடந்த ஓராண்டாக பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் ராஜபக்சக்களிடமும், அமைச்சர்களிடமும் திவால் பற்றி கேள்வி எழுப்பிய போதெல்லாம் அதை அரசியல் அவதூறு என்று சண்டைக்கு வந்தார்கள். உண்மை நிலையை மூடி மறைத்தே வந்தார்கள். கடந்தஏப்ரல்வரை எதையும்ஒத்துக்கொண்டதில்லை.

ரணில் பதவி ஏற்றதிலிருந்து இந்த கசப்பான உண்மைகளை நாளாந்தம் அறிவித்து வருகிறார். மக்கள் முதலில் இந்த அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ளவும் யதார்த்தத்தை ஏற்றுக் கொண்டு பழகவும், தயாராகவும், இயங்கவும் இந்த உண்மைகள் தான் உதவுகின்றன.

எவ்வளவு கடன் இருக்கிறது என்கிற விபரம் கூட இன்னும் பூரண தரவுகள் இல்லை என்று மே 19 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இதனை ஓரளவு சரி செய்யும் வரை மக்கள் சில தியாகங்களுக்கும், பொறுமைக்கும் தயாராக வேண்டும் என்றார். பெட்ரோல், எரிவாயு, மருந்துகள் எப்போது வரும் என்கிற திகதியை அறிவிக்கிறார். வீணாக வரிசையில் இருக்காதீர்கள் என்கிறார். அவற்றைக் கிடைக்கச் செய்வதில் தாமதிக்கும் தரப்பினரின் மீது நடவடிக்கை எடுக்கப் பணிக்கிறார். முடிந்தால் கிடைக்கிற நிலங்களில் உணவுப் பயிர்ச்செய்கைகளையும் மேற்கொள்ளுங்கள் என்றார். எரிபொருள் நிலைமையை சமாளிக்க அரச உத்தியோகத்தர்களில் அனைவரும் பணிக்கு சமூகமளிக்க வேண்டியதில்லை என்றும் அத்தியாவசிய சேவையில் உள்ளவர்கள் மாத்திரம் அடுத்த இரண்டு தினங்களுக்கு வாருங்கள் என்றும் அதன் மூலம் நீண்ட வரிசைகளையும், பெட்ரோல் விரையத்தையும் குறைத்து ஓரளவு சேமிக்கலாம் என்றும் பாராளுமன்றத்தில் அறிவிக்கிறார். அத்தியாவசிய நாளாந்தம் அவர் வெளியிடும் உண்மை நிலை பற்றிய அறிவிப்புகள் கசந்தாலும், ஆத்திரம் தந்தாலும், சில வேளைகளில் வேடிக்கையாக இருந்தாலும் மக்கள் தம்மை தயார்படுத்த அவை

உதவுகின்றன என்பது உண்மை.

### எரிகிற வீட்டில் பிடுங்குவது லாபம்

வாங்கிய கடன்களை திருப்பிச் செலுத்த முடியாது என்று இப்போது இலங்கை அறிவித்திருக்கிறது. ஜப்பானுக்கு 3 பில்லியன், சீனாவுக்கு 7 பில்லியன், இந்தியாவுக்கு 4 பில்லியன் டாலர்களை திருப்பிச் செலுத்த முடியாது என்று அறிவிக்கப்பட்டிருகிறது. இதைத் தவிர பல சர்வதேசக் கடன் வழங்கும் நிறுவனங்களிடம் இருந்தும் மில்லியன் கணக்கான பணம் அதிக வட்டிக்கு வாங்கப்பட்டுள்ளது. கடந்த சில வருடங்களாக கடன்களை அடைப்பததற்காக அதிக வட்டிக்கு கடன்களை வாங்கும் நிலையே அதிகரித்திருந்தது.


இலங்கையின் மீது அரசியல் ஆதிக்கத்தைச் செலுத்த முனைந்த நாடுகள் இலங்கையை கடனில் சிக்க வைப்பதன் மூலம் தமது அரசியல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சியில் தீவிரமாக செயலாற்றி வந்தன. குறிப்பாக கடந்த இருதசாப்தங்களுக்குள் சீனா இந்து சமுத்திர பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கு இலங்கையை ஒரு கைப்பாவையாக ஆக்கும் முயற்சியில் இருந்து வந்திருக்கிறது. அதற்காக தாராளமாக கடன்களை வழங்கி வந்தது. அந்தக் கடன்கள் லாபமீட்ட முடியாத திட்டங்களில் இலங்கையை சிக்க வைத்து அத்தகைய கடன்களை ஊக்குவித்தது. ஹம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம், கொழும்பு தாமரைத் தாடாகக் கோபுரம் போன்ற பில்லியன் கணக்கான முதலீட்டுத் திட்டங்கள் இவற்றுக்கு சிறந்த உதாரணங்கள். இந்த ஆண்டு மாத்திரம் அவர்களுக்கு 920 மில்லியன் டாலர்கள் திருப்பி செலுத்த வேண்டிய நிலையில் அவர்கள் கடும் விசனத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

இந்த நிலைமைகளால் அவர்களிடம் இறைஞ்சி நிற்கும் நிலையையும், இறைமையையும், நாட்டின் சொத்துக்களையும், அரசியல் விட்டுக்கொடுப்புகளையும் செய்யும் நிலைக்கு இலங்கை தள்ளப்படும். எரிகிற வீட்டில் புடுங்குவது லாபம் என்பது போல எரிந்துகொண்டிருக்கும் நிலைமையை கடன் வழங்கிய நாடுகளும் நிறுவனங்களும் இப்படித்தான் சூறையாடப் போகின்றன.

உலக வங்கி, சர்வதேச நாணைய நிதியம் (IMF), ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற நிறுவனங்களுக்கு எதிராக கடும் எதிர்ப்பரசியலை நிகழ்த்தி வந்த இடது சாரிக் கட்சிகள் கூட அந்த நிறுவனங்கள் உள்ளே வந்து உழைக்கும் மக்களின் வாழ்வாதாரங்களில் நிகழ்த்தப் போகும் சுமைகளை விரும்பாவிட்டாலும் வரவேற்றே ஆக வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு தள்ளப்பட்டுள்ளன.

பல அதிவேக நெடுஞ்சாலைகளை அமைப்பதற்கான திட்டங்களுக்கு கடன் வழங்கி அந்த கட்டுமானப் பணிகளுக்கான கொந்தராத்துக்களையும் தமக்கே தரும்படி கடன் நிபந்தனையாக்கிக் கொண்ட சீனா அதனை சாத்தியப்படுத்துவதற்காக அரசியல் தலைவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் தாராளமாக கையூட்டு வழங்கியது. இந்த நெடுஞ்சாலைகள் திறக்கப்பட்ட பின்னர் அப்பாதைகளைப் பயன்படுத்துவதற்கான கட்டண வசூலிப்புகளையும் குறிப்பிட்ட வருடங்களுக்கு தமக்கே உரித்தாகும் வகையில் அந்த ஒப்பந்தகளை செய்து கொண்டனர். எனவே இத்தகைய திட்டங்களால் இலங்கை தீவிர கடனாளியாக ஆனதே தவிர இவற்றுக்கூடாக வருமானம் ஈட்டி கடனைத் திருப்பி செலுத்தும் வாய்ப்பை இழந்தது. திறைசேரியில் இருந்த எச்சசொச்ச கஜானா பணத்தையும் ஏனைய கடன்களையும், கடன்களின் வட்டியையும் திருப்பிச் செலுத்தும் நிலைக்கே தள்ளட்டது.

உலக வங்கியும், ஆசிய அபிவிருத்தி வங்கியும் சில



ராஜபக்ச

திட்டங்களுக்காக வழங்கிய கடன் தொகை, அந்த அபிவிருத்தித் திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ள நிலையில் சுமார் 1900 மில்லியன் டாலர்கள் வரை எஞ்சியிருக்கிறது. தற்போதைய நெருக்கடி நிலையை சமாளிப்பதற்கு எதிர்ப்பையும் மீறி அவற்றையும் உபயோகிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது இலங்கை. எரிபொருள், எரிவாயு, மருந்து, உணவு, குழந்தைகளுக்கான பால்மா போன்ற அத்தியாவசியத் தேவைகளுக்கு அவற்றையும் பயன்படுத்த திட்டமிட்டு வருகிறது அரசு. இதனை (Loan Renovating & Repurposing) என்று அழைப்பார்கள். உலக வங்கி இவ்வாறு 400 மில்லியன் டொலர்களை பயன்படுத்த அனுமதியளித்திருக்கிறது. இப்படி செய்தாலும் அது சில மாதங்களுக்கு மட்டும் தான். இந்த இடைக்காலத்தில் வேகமானதும், காத்திரமானதுமான திட்டங்களை அமுல்படுத்தி ஏனைய நிலைமைகளை சரிக்கட்ட பயன்படுத்திக் கொள்ள நேரிடும்.

இன்னமும் உண்மையான நெருக்கடியை மக்கள் சந்திக்கவில்லை என்றே கூறவேண்டும். ஒரு சில மாதங்களுக்குள் இதனை கட்டுக்குள் கொண்டுவர முடியாமல் போனால் மக்கள் சொல்லொணா நெருக்கடிக்குள் தள்ளப்படுவதை தடுக்க முடியாது.



### செலுத்த முடியாத கடனில் சிக்க வைத்தல்

இந்தக் கடன்களை செலுத்தாமல் இவர்களிடம் மீண்டும் கடன்களையோ, உதவிகளையோ கேட்க முடியாது. அது மட்டுமன்றி, இந்தக் கடன்களை திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் அது சர்வதேச அளவில் இலங்கைக்கு எதிரான வழக்குகளாக மாறும். அந்தக் குற்றங்கள் ஏனைய நாடுகள் கடன்கள் வழங்க முன் வருவதைக் கூட சட்ட ரீதியில் தடுத்து நிறுத்தும் வாய்ப்புகள் உருவாகும். எனவே இந்த நிலைமைகள் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கிறது.

இந்தியா இந்த கடன்களை நிவர்த்திக்கும் அதே வேளை புதிய கடனுதவிகளையும் உதவிகளையும் வழங்கி வருகின்றது. ஆனால் அவை பொருளாதார அரசியல் நிபந்தனைக்கு உட்பட்டதுதான் என்பதையும் இங்கே நினைவிற் கொள்ள வேண்டி இருக்கிறது. இந்த அரசியல் நிபந்தனைகள் குறித்து சிங்களத் தரப்பில் பல விவாதங்கள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இந்தியாவுக்கு எதிரான சிங்கள சக்திகள் இதைப் பற்றிய பல எச்சரிக்கைகளைச் செய்து வருகின்றன.

பில்லியன் கணக்கான இலங்கை ரூபாக்களை மத்திய வங்கி அச்சடித்து வெளியிட்டு வருகிறது என்று விமர்சித்து வந்த ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவி ஏற்ற மூன்றே நாட்களில் மேலும் அதிகப் பணத்தை அச்சடிக்க உத்தரவிட்டார். அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு இதைத் தவிர வேறு மாற்று வழிகள் இல்லை என்றார் அவர்.

வெளிநாட்டு முதலீடுகளைக் கொண்டு வருவதற்காக அவர்கள் கூறிய நிபந்தனைகளுக்கு இணங்க உட்கட்டமைப்பு வசதிகளை பெருக்க வேண்டியிருந்தது. அவர்களை திருப்திப்படுத்துவதற்காகவும், முதலீட்டாளர்களைக் கவருவதற்காகவும் கடன்பட்டு அந்த உட்கட்டமைப்புப் பணிகளை மேம்படுத்த வேண்டியேற்பட்டது. அதற்காகப் பட்ட கடனை அடைக்கத்தான் பெரும்பாலும் அந்த முதலீடுகள் பயன்பட்டன. அதற்கும் ஏராளமான சுரண்டல்களைச் செய்துவிட்டு சென்றார்கள். வேலைவாய்ப்புகள் சில கிட்டின அல்லவா என்று மட்டும்தான் தற்காலிகமாக திருப்திபட்டுக்கொண்டனர் ஆட்சியாளர்கள். 80 களில் இப்படித்தான் மின்நிலையங்கள் அதிகரித்தன. ஆனால் எதிர்பார்த்த அளவு முதலீட்டாளர்கள் அதிகரிக்கவில்லை. மக்களின் தேவையை விட முதலீட்டாளர்களின் தேவைகளைத் தான் மின்சார வசதிகள் பூர்த்தி செய்தன. இன்றும் கொழும்பின் மின்சாரத்தில் பெரும்பங்கு மக்களின் பாவனைக்காக பயன்படுத்தப்படுவதைவிட முதலீட்டாளர்களின் தேவையைத் தான் அதிகம் அவை பூர்த்தி செய்கின்றன.

2000 களில் இருந்து அதிவேகப் பெருந்தெருக்களின் தேவையை முதலீட்டாளர்கள் நிர்ப்பந்தித்தார்கள். ஏராளமான காடுகளையும், பசுமையான வனாந்திரங்களையும், விளையும் வயல் நிலங்களையும், மக்களின் குடியிருப்புகளையும் ஊடறுத்துச் செல்லும் பெருந்தெருக்கள் குறுக்கும் நெடுக்குமாகப் போடப்பட்டன. வனவிலங்குகளின் இருப்பிடங்களையும், அதன் நடமாட்டப் பாதைகளையும் குழப்பியதால் அவை மக்கள் வாழும் குடியிருப்புகளையும், விவசாய நிலங்களையும் அழித்து வருகின்றன. இந்தப் பெருந்தெருக்கள் நாட்டை மேலும் அதிக கடன் சுமைக்குள் தள்ளியது தான் மிச்சம். கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலைக்குத் தள்ளின. இந்தத் திட்டங்களில் இடைத்தரகர்களும், அரசியல்வாதிகளும் செய்த ஊழல்கள் பற்றி பாராளுமன்றத்தில் நிறைய தகவல்கள் எதிர்க்கட்சிகளாலும் ஊடகங்களாலும் அம்பலப்படுத்தப்பட்டுள்ளன.

திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்தி தாராளமான முதலீட்டை நாட்டுக்குள் அனுமதித்ததன் விளைவு, சுரண்டலும், உள்நாட்டு வளங்கள் கொள்ளயடித்தலும், நாட்டின் நிலங்களும், சொத்துகளும் விற்கப்பட்டதும், வேலைவாய்ப்பின் பேரால் அடிமட்ட கூலி உழைப்பாளர்கள் இந்த முதலீட்டாளர்களுக்காக உருவாக்கப்பட்டதும்தான் மிச்சம். மேலும் உலகமயமாதல் சித்தாந்தத்துக்குள் இந்த திறந்த பொருளாதாரத் திட்டங்கள் மக்களை இழுத்துப் போட்டதன் விளைவு மத்தியதரவர்க்க பூர்ஷ்வா குணங்களைக் கொண்ட, சமூக பிரக்ஞையற்ற வர்க்கத்தை வளர்த்துவிட்டதும் இதனூடே நிறைவேறியது.

தற்போது ரணிலின் அறிவிப்புகளும் கூட நாட்டின் சொத்துக்களை மேலும் விற்று கடன்களைத் தீர்க்கும் திட்டத்தைத் தான் வெளிப்படுத்துகின்றன. இனி வரும் காலம் கடினமான காலம் என்றும் மக்கள் அதனை எதிர்கொள்ளும் தியாகத்தை புரிய தயாராகும்படியும் பிரதமர் பாராளுமன்றத்தில் கேட்டுக்கொண்டதை இங்கே நினைவுறுத்த வேண்டும்.

### அரசியல் ஸ்திரத்தன்மை முன் நிபந்தனை

கோத்தபாய அரசாங்கம் மாறும் வரை உலக வங்கி கடன் தரப்போவதில்லை என்று அறிவித்திருப்பதாக லக்ஷ்மன் கிரிஎல்ல சமீபத்தில் பாராளுமன்றத்தில் அறியத்தந்திருந்தார். அவர் நேரடியாக அதைச் சொல்லியிருந்தாலும் அந்த அர்த்தத்தில் தான் உலக வங்கி அறிவித்திருக்கும்

என்பதை நாமும் உணரலாம். அதன் விரிவான அர்த்தமாக அரசியல் ஸ்திரத்தன்மையற்ற ஒரு அரசால் பிரச்சினையை முகாமைப்படுத்தி தீர்க்கும் பலத்தைக் கொண்டிருக்காது என்பதைத் தான் உலக வங்கி உட்பட கடன் வழங்கும் தரப்பினர் நிபந்தனையாகக் கொண்டிருக்கின்றனர் என்று விளங்கிக் கொள்ள முடியும். ஏற்கெனவே ஊழலாலும், நிர்வாக வினைத்திறன் அற்ற அரசாகவும், அராஜகம் மலிந்த ஆட்சியாகவும், பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கும் அரசாங்கமாகவும் உலகுக்கு அம்பலப்பட்ட அரசாங்கம் இது. கடன் வழங்குபவர்கள் முதலில் கடன்களைக் கட்டும் அருகதை இருக்கிறதா, வருமானத்தைப் பெருக்கும் ஆற்றல் இருக்கிறதா? நெருக்கடியற்றதும், நீதியானதுமான அரசாங்கத்தை நடத்தும் வல்லமை இருக்கிறதா? என்று பார்ப்பது வழக்கமான வழிமுறை தான். தற்போது புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் “கட்சி சாரா நெருக்கடி கால அரசாங்கம்” என்று அறிவித்துக்கொன்டாலும் புதிய அமைச்சரவையில் அங்கம் வகிப்பவர்கள்




ஏற்கெனவே ஊழல், மோசடி குற்றச்சாட்டுகளையும், மோசமான வினைத்திறனைக் கொண்டவர்களாகவும் அடையாளம் காணப்பட்டவர்கள். இதனை நாடு கிளர்ச்சியில் இறங்கி இருக்கும் பெருவாரி மக்கள் அங்கீகரிக்கவும் மாட்டார்கள்.

கடந்த மே 9ஆம் திகதி மக்கள் அரசியல்வாதிகளுக்கு கொடுத்த தண்டனைகள் முழு அரசியல்வாதிகளுக்கும் நல்ல பாடத்தைக் கற்றுக் கொடுத்திருக்கிறது. பாராளுமன்றத்தில் சிலர் தாங்கள் அரசியலை விட்டு ஒதுங்குவதாக அறிவிக்கிறார்கள், சிலர் தாம் தலைமறைவாக ஒளிந்து வாழ்வதாகத் தெரிவிக்கின்றனர். சிலர் தம்மை உரு மாற்றிக்கொண்டு பாராளுமன்றம் வருகின்றனர். உடுத்தும் உடுப்பு கூட தமக்கு இல்லை என்கின்றனர். இவர்கள் எல்லோரும்; பிரச்சினையை தாம் தீர்க்கா விட்டால் தமது ஊர்களுக்கும், வீடுகளுக்கும் இனித் திரும்ப முடியாது என்று பாராளுமன்றத்தில் அறிவிக்கின்றனர். இனி வரும் காலம் மேலும் நெருக்கடியான காலம் என்பதை பிரதமரே தமது உரைகளில் மீண்டும் மீண்டும் தெரிவித்து வருவதானது, மக்களின் போராட்டம் மேலும் தீவிரமாவதற்கான அறிகுறிகளையே எடுத்துக் காட்டுகின்றன.

நாட்டின் உறுதியான அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாமல் கடன்களைப் பெற முடியாது. கடன்களைப் பெறாமல் மக்களின் உடனடி அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது. பிரசினைகளை பூர்த்தி செய்யாமல் அமைதியைக் கொண்டு வரவும் முடியாது..... மீண்டும் அந்த அமைதி குலைந்த நாடொன்று கடனைக் கோரவோ, பெறவோ முடியாது. இது ஒரு சுழற்சி.

எனவே இதற்கு அரசியல் அதிகாரத்தின் ஸ்திரத்தன்மை முன் நிபந்தனையானது. மக்கள் ராஜபக்சக்களை வெளியேறச் சொல்வது “சும்மா” அல்ல. அவர்கள் ஏற்படுத்திய நாசம் முழுவதுமே அம்பலப்பட்டுவிட்டது. அவர்கள் சொன்ன சமாதானங்களும், சமாளிப்புகளும் நீர்த்து போய்விட்டன. அவர்களுக்கு கொடுத்த கெடு முடிந்து விட்டது. எனவே தான் “கோட்டா கோ கம” (கோட்டா ஊருக்கு ஓடு) போராட்டம் தொடர்கிறது.

### குற்றங்கள் அதிகரிப்பு

உலகெங்கும் நெருக்கடி காலம் என்று வந்து விட்டால், அங்கே குற்றச் செயல்கள் மலிந்து விடும் என்பது பொது நியதி. இது வெறும் கொள்ளை, களவு மாத்திரமல்ல. சகல குற்றச் செயல்களும் தான். விரக்தியுற்ற மக்கள் என்ன செய்கிறார்கள் என்பதை அறியாது தன்னியல்பாக குற்றங்களில் ஈடுபடும் நிலை ஒரு கட்டத்தின் பின் அதிகரிக்கத் தொடங்கி விடும். இலங்கை அந்த இடத்தை இப்போது எட்டிக் கொண்டிருக்கிறது. அத்தியாவசியத் தேவைகளுக்காக வரிசையில் நிற்கும் மக்கள் தமக்கிடையில் மோதிக்கொள்கிறார்கள். பாதைகளில் இறங்கி வீதிகளில் மறியல் போராட்டம் செய்கிற போது தீவிரம் பெற்று அடிதடி, சொத்துக்களை சேதப்படுத்துதல் என்பவற்றில் இறங்குகிறார்கள். இதுவரை பத்துக்கும் மேற்பட்ட கொலைச் சம்பவங்களும் நடந்துள்ளன. மேலும் மே 9 அரசியல்வாதிகளின் சொத்துக்களை தேடித்தேடி அழித்ததும், பாராளுமன்ற உறுப்பினர் கொலை செய்யப்பட்டதும் கூட முக்கிய அறிகுறிகள். தமது குழந்தைகளின், பெற்றோர்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாத கையறு நிலையில் மானமிழந்து களவு, பொய், திருட்டு, ஏமாற்று என்பவற்றை செய்யத் துணிகிறார்கள். அறம் இழந்து ஒருவரை ஒருவர் ஏமாற்றுவது பழக்கத்துக்கும், புழக்கத்துக்கும் உள்ளாகிறது. இறுதியில் அதுவே சமூகமயமாகி விடுகின்றது. ஈற்றில் இந்த சமூகச் சீரழிவானது பண்பாடு மிக்க பாரம்பரிய கலாசார பண்பையும், மரபையும் சீரழித்து விடும் நிலையை ஏற்படுத்தி விடுகிறது. இத்தனை காலம் இப்படி ஒரு நிலையை நாம்

சித்தாந்தமாகத் தான் அறிந்து வைத்திருந்தோம். இப்போது அது நேரடியாக நிகழ்வதை கண்கூடாகக் காண்கிறோம்.

மூன்று தசாப்த கால யுத்தம் தராத அழிவை ராஜபக்சக்கள் இலங்கைக்கு ஏற்படுத்தியிருக்கிறார்கள். நாட்டுக்கு மக்களுக்குச் சேர வேண்டிய வரிகளை விட்டுக்கொடுத்துத் தான் 'ஊழல்' சொத்தை ஈட்டினார்கள். அவர்கள் பில்லியன்களில் சொத்து சேகரித்தது மட்டுமன்றி அந்த ஊழல்களைப் புரிவதற்காக முழு அரசாங்க நிர்வாக கட்டமைப்பையும் ஊழலுக்கு வழி கோரினார்கள். தேசம் முழுவதும் ஊழல்மயப்பட்டது. அராஜகம் நிறுவனமயமாக்கப்பட்டது. அதை நடத்தவும், மறைக்கவும் அதிகாரத்துவம் அளவுக்கு அதிகமாக துஷ்பிரயோகம் செய்யப்பட்டது. கூடவே அசமத்துவமும் தலை தூக்கியது. தமது இருப்புக்காக இலங்கையின் உச்சவடிவமான அரசியலமைப்பையே ஒரு குடும்பத்துக்கு சாதகமாக மாற்றிய வரலாற்றுத் தவறை நிறைவேற்றினார்கள். அவர்களைத் தான் மக்கள் இன்று விரட்டுகிறார்கள்.

### இனவாத போதை உருவாக்கிய தலைமை

இலங்கையின் சிங்கள மக்கள் இனவாதிகள் அல்லர். அவர்கள் பேரினவாதமயமாக்கலுக்குள் அகப்பட்டுப் போனவர்கள். அவர்களை வழிநடத்திய பேரினவாத சித்தாந்தத்தை ஏற்படுத்தியதன் பின்னால் நெடிய அரசியல் வரலாறு உண்டு. அந்த வரலாற்றுக்குப் பின்னால் அந்த பேரினவாதத்தால் இலாபமடைய முற்பட்ட அரசியல் தலைவர்களும், அரசியல் நிறுவனங்களும் உள்ளன. அந்த பேரினவாதத்தை சமூகமயப்படுத்துவதற்காக பாடவிதானங்களையும் தயாரித்தார்கள். அரசியல் மயப்படுத்துவதற்காக அரசியலமைப்பை மாற்றினார்கள். அரசின் சட்டம், நிர்வாகம், இராணுவம், நீதிமன்றம் என அனைத்திலும் சிங்கள பௌத்த பேரினவாதம் நிறுவனமயப்படுத்தப்பட்டது. இந்த முழுத் தயாரிப்புடன் தான் ஒரு போரை நடத்தி மாபெரும் தமிழின அழிப்பையும் செய்து முடித்தார்கள்.

அவர்கள் செய்த அந்த சங்காரத்துக்கு பேரினவாதமயப்படுத்தப்பட்ட மக்களின் அங்கீகாரம் கிடைத்தது. பேரினவாதச் சித்தாந்த போதையேற்றப்பட்ட அந்த மக்கள்; தனிநாட்டு பிரிவினைப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்தவர்களாக ராஜபக்சக்களை ஏற்றுக்கொண்டார்கள். அதே போதையில் பத்தாண்டுகளுக்கும் மேல் வைக்கப்பட்டதில் கண் மூடித்தனமாக அவர்களை மீண்டும் மீண்டும் ஆட்சியில் திளைக்க வைத்தார்கள். ஊழல் செய்தாலும், கொலைகளைப் புரிந்தாலும், அராஜகங்களைச் செய்தாலும் அவர்கள் பயங்கரவாதத்திலிருந்து நாட்டை மீட்டவர்கள் செய்துவிட்டுப் போகட்டும் என்கிற மன நிலையானது பசியும், வறுமையும் அவர்களின் வீட்டுக் கதவுகளைத் தட்டும் நிலைக்குக் கொண்டுவந்திருக்கிறது. இப்போது பட்டினி அந்த போதையிலிருந்து தெளிய வைத்தபோது தான் பேரினவாதத்துக்குள் தாம் எப்படி மூழ்கடிகப்பட்டிருக்கிறோம் என்கிற உண்மையை உணரத் தொடங்கியிருக்கிறார்கள். அவர்கள் தான் இப்போது போராட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள். அதற்காக ஒட்டுமொத்த சிங்கள மக்களும் அந்த போதையிலிருந்து முற்றாகத் தெளிந்து விட்டார்கள் என்கிற அர்த்தமில்லை. பேரினவாத அரை போதையில் இன்னும் இருப்பவர்கள் அதிலிருந்து முழுத் தெளிவடைய இன்னும் சில காலம் எடுக்கக் கூடும்.

எனவே தான் பேரினவாத சித்தாந்தத்தையும், அதற்குத் தலைமை தாங்கும் சக்திகளையும், பேரினவாத சித்தாந்தமயப்படுத்தப்பட்ட மக்களையும் பிரித்துப் பார்த்தல் நமக்கு அவசியமாகிறது. இப்படிப் பிரித்துப் பார்க்காவிட்டால் சாதாராண சிங்கள அப்பாவி உழைக்கும் வர்க்கப் பிரிவினரும் நமக்கு எதிரிகளாகத் தோன்றிவிடுவர்கள். பேரினவாத சித்தாந்தத்துக்கு இன்று ஒரு அரசு உண்டு. பெரிய இராணுவக் கட்டமைப்பும், நிர்வாகமும் இருக்கிறது. அதை எதிர்த்து நிற்கவேண்டுமென்றால் அம்மக்களோடு சகோதரத்துவ (Solidarity) அரசியலைக் கட்டியெழுப்ப வேண்டும். நாம் அதனைச் செய்ததில்லை. தமிழ் பேசும் மக்கள் தரப்பில் அதற்கான முஸ்தீபை செய்ததில்லை.

### "கோட்டா கோ கம"

ராஜபக்சக்களை வீட்டுக்கு அனுப்பும் போராட்டம் "கோட்டா கோ கம" என்கிற பெயரில் காலி முகத்திடலில் ஆரம்பிக்கப்பட்டு ஐம்பதாவது நாட்களை எட்டுகிறது. ரணிலின் வருகையோடும், 9 ஆம் திகதி நிகழ்ந்த கலவரத்தோடும் அப்போராட்டத்தில் கலந்துகொள்பவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. ஆனால் அதை இளைஞர் யுவதிகள் பலர் முன்னேடுத்தபடி தான் இருக்கிறார்கள். இனி வரும் நாட்களில் மக்கள் எதிர்கொள்ளப்போகும் மேலதிக நெருக்கடிகள்; அவர்களை நிச்சயம் போராட்டத்துக்குள் தள்ளும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. அது மட்டுமன்றி அது வன்முறை வடிவம் எடுத்தாலும் ஆச்சரிப்படுவதற்கில்லை. அதை அரசாங்கம் அடக்கவும் முடியாது. ஏனென்றால் அப்படி ஒரு அடக்குமுறையை செய்துவிட்டு கடன் தரும் தரப்பினரிடம் கையேந்தவும் முடியாது. ஜனநாயக உறுதிப்பாடற்ற நாடுகளுக்கு உதவி வழங்கும் வழமையும் இல்லை.. இல்லையென்றால் வரலாற்றில் மோசமான அராஜக ஆட்சியாளனின் ஆட்சியில் இந்தப் போராட்டக்காரர்களை விட்டுவைத்திருக்க மாட்டார்கள் என்பதை நாமறிவோம்.

இன்றுஇலங்கைஎதிர்கொள்ளும்நெருக்கடியானது இன, மத, சாதி, பிராந்திய பேதம் கடந்து பட்டினி ஒன்றிணைத்திருக்கிறது. அந்தத் தீவின் மீட்புக்காக மட்டுமன்றி,இனத்துவ அரசியல்பிரிவினையிலிருந்தும் மீட்பதற்கு இதனை ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்த நிறைய வாய்ப்புகள் உள்ளன. அதனைப் பயன்படுத்துவோம்.

**கட்டுரையாளர்: எழுத்தாளர், ஊடகவியலாளர்**

## குஞ்சரம் 1



ராம் மகாலிங்கம்

## தெற்கு ஆசியாவிலிருந்து வந்து விருது பெறும் முதல் தமிழர்

அமெரிக்காவிலுள்ள மிக்சிகன் பல்கலைக்கழகத்தில் கால் நூற்றாண்டுக்கும் மேலாக உளவியல் துறையில் பேராசிரியராகப் பணிபுரிந்து வரும் டாக்டர் ராம் மகாலிங்கத்துக்கு இந்த ஆண்டுக்கான ஹெரால்ட் ஜான்சன் விருது கிடைத்துள்ளது.

1996 இல் இருந்து வழங்கப்பட்டு வரும் இந்த விருதினை இதுவரையில் இந்தியாவில் இருந்து எவருமே பெறாத வேளையில் தமிழகத் தமிழராகிய இவர் பெற்றிருப்பது பெரு மகிழ்ச்சியினை அளிக்கிறது. இந்தியா மட்டுமல்ல தெற்கு ஆசியாவிலேயே இவ்விருதினைப் பெறும் முதலாமவர் டாக்டர் ராம் மகாலிங்கம்தான்.

சமத்துவம் - சமூக நீதியை மையமாகக் கொண்டு பணியாற்றிவரும் நமது பேராசிரியர் நிறவெறி - சாதிய மேலாதிக்கம் இரண்டுக்கும் இடையிலுள்ள நுட்பமான தொடர்பு குறித்த ஆய்வில் ஈடுபட்டு அதனைக் களையும் பணியினை மேற்கொண்டு வருவதற்காக இந்த விருது இவரைத் தேடி வந்திருக்கிறது.

பேராசான் மார்க்ஸ்...

தந்தை பெரியார்...

அண்ணல் அம்பேத்கர்

மூவரையும் பிதாமகராகக் கொண்ட

நமது பேராசிரியருக்கு இவ்விருது கிடைத்திருப்பது நம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்தும் மற்றொரு தருணம்.

*எழுத்தாளர் பாமரன் (தமிழ்நாடு)*
*மே 2022*

# குஞ்சரம்

### ஊர் சுற்றிக் காக்கையார்

## குஞ்சரம் 2

நினைவேந்தல்:

## நல்லாசான் மயிலங்கூடலூர் பி. நடராசன் (14 அக்டோபர் 1939 - 12 மே 2022)

'நடராஜா மாஸ்டர்' என்று அழைக்கப்பட்ட மயிலங்கூடலூர் பி. நடராஜன் (ஆடலிறை) இனி எம்மோடு இல்லை. அவரால் வழிகாட்டப்பட்டுத் தம்மை வளர்த்துக்கொண்ட மாணவப் பரம்பரை மிக நீண்டது. அவர்களதும் சார்பில் எம் ஆசிரியருக்கு எனது அஞ்சலி.

நடராஜா மாஸ்டர் எங்களுக்கு உயிரியலைக் கற்பித்தவர். ஆனால் பாடசாலையில் அவரது செயற்பாடுகள் அனைத்தும் தமிழ் சார்ந்தே இருந்தன. மிகத் தெளிவான உச்சரிப்போடு கற்பிக்கும் அவருக்குத் தமிழ்மீது இருந்த ஈடுபாடு அளப்பரியது. பல பண்டிதர்களிடம் தமிழைக் கற்ற அவருக்கு மகாஜனக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த கவிஞர் செ.கதிரேசர்பிள்ளையே எனக்கும் அங்கு ஆசிரியராய் வாய்த்தது எனக்குக் கிடைத்த நல்வாய்ப்பு. நடராஜா மாஸ்டர் பாடசாலையில் இருந்த நூலகத்தில் சிறந்த இலக்கிய நூல்களும் இருக்கவேண்டும் என விரும்பி அதை நடைமுறைப்படுத்தியவர். அதனால் என்போன்றோர் தமிழிற் கிடைத்த அரிய நூல்களைப் பாடசாலையிலேயே வாசிக்க முடிந்தது.

சிறுவர் இலக்கியத்தில் அவரது ஆர்வமும் ஆற்றலும் குறிப்பிடப்பட வேண்டியவை. அவரது தமிழாசிரியர்களின் வழி அவரும் நினைவுமலர்களைச் சிறுவர் பாடல்களாய்ப் பதிப்பித்தவர். தனதும், வேறு சிலரதும் சிறுவர் பாடல்களை நூலாக்கம் செய்தவர் நடராஜா மாஸ்டர். தனது படைப்புகளை வெளிக்கொணர்வதைவிட, மற்றவர்களை ஊக்குவிக்கும் போக்கு ஆசிரியரிடத்தில் இருந்ததை அவரை அறிந்தோர் அறிவர். பாடசாலையிற் பரிசுபெற்ற எனது சிறுகதையை 'ஈழநாட்'டில் வெளிக்கொணர விரும்பிய அவரது விருப்பத்தை எனது மனத்தயக்கம் மறுத்தது இப்போது நினைவுக்கு வருகிறது.

பத்தாம் வகுப்பிற் படிக்கும்போது பாடசாலையின் விளையாட்டுப் போட்டிக்கு (தெரிவுநிலைப் போட்டிகளுக்கு) அறிவிப்பாளனாக என்னை அவர் தெரிவு செய்தது கொஞ்சம் ஆச்சரியம் தந்த மகிழ்வான ஒரு விடயம். பின்னாளில் அறிவிப்பாளனாக அரங்குகளில் நிற்கும் தருணங்களில் எல்லாம் இந்த நிகழ்வு மனதில் மேலெழுந்து வரும். (நான் துணிந்து மேடைகளில் நிற்க இன்னொரு காரணமாய் இருந்தவர் எங்கள் அதிபர் பொ. கனகசபாபதி அவர்கள்).

நாம் ஒன்பதாம் வகுப்பிற் பயில்கையில் வகுப்பில் தமிழ் - விஞ்ஞான மன்றம் என ஒன்றை எம்மைக் கொண்டு உருவாக்கி, அதன்மூலம் 'அறிவு' என்ற மாத இதழைக் கொண்டுவரச் செய்தவர் ஆசிரியர். அக்காலப் பகுதியில் இலங்கையில் வெளிவந்த 'அம்பு' எனும் அறிவியற் சஞ்சிகையைக் கல்முனை ஸாஹிராக் கல்லூரியோடு மகாஜனக் கல்லூரியும் சேர்ந்து

வெளியிடச் செய்தவர் ஆசிரியர். அதன் தீவிர வாசகர்களாய் எம்மை மாற்றியவர். கற்பித்தது உயிரியலாய் இருந்தாலும் வகுப்பைத் தமிழ் மணக்கச் செய்தவர் அவர்.

பல வருடங்களுக்குமுன் இங்குவந்த பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் எமது ஆசிரியரைப் பற்றிக் கூறியது இப்போதும் நினைவில் நிற்கிறது."யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக ஆய்வுக் கட்டுரைகள் எவையாயினும் அவை நடராஜா மாஸ்டர் கண்ணிற் படாமல் வாரா. அவற்றிலுள்ள மொழிப் பிரயோகங்களைச் சீர்படுத்திப் பிழைகளைத் திருத்தி ஒழுங்காக்க அவர் ஒருவரால் மட்டுமே முடியும். அவரிடம் கற்க நிறைய உண்டு. தமிழில் ஒரு பேராளுமை அவர்." இன்று கலாநிதி பொ. இரகுபதியிடம் நடராஜா மாஸ்டர் பற்றி உரையாடியபோது அந்தக் கூற்றுச் சரியென அவரும் உறுதி செய்தார். "தர்க்கரீதியாகத் தமிழைப் பிழையற எழுத நடராஜா மாஸ்டர் ஒருவரால் மட்டுமே முடியும்" என்றார் அவர்.

இயற்கையின் விதியில் நடராஜா மாஸ்டர் மறைந்துவிட்டார். அவரது நினைவுகள் அவரோடு பழகிய எவர்க்கும் மனதில் அமர்ந்திருக்கும்.

**கவிஞர் இளவாலை விஜயேந்திரன்**
*(நோர்வே) மே 2022*

**குஞ்சரம் 3**

## தமிழர் கலை அடையாள வரவேற்பு ஆற்றுகை – இன்னிய அணி நோர்வே 2022

*தமிழர் கலை அடையாளமாய் உலகின் உயர் மலை முகடுகளைத் தாண்டி நோர்வே ஒஸ்லோ நகரில் ஒளிர் பெற்ற இன்னியத்தின் எழில்.நோர்வே தமிழர் வள நிலையம் அன்னை பூபதி கல்வி கலைக் கூடத்தின் முப்பதாவது ஆண்டு முத்து விழாவில் 30.04.2022 சனிக்கிழமை ,இன்னிய அணியின் எழிலார்ந்த அறிமுகத்துடன் ஆரம்பமாகியது. விழாவின் முகிழ்ப்பாய் இன்னியம் பெருங்காட்சியாய் ஈழத் தமிழர் கலை அழகியலின் ஈழ நாடிய முத்திரைகளுடன் ஆடல் ஆற்றுகைக் கோலமாய் உலகில் முதன் முதலாய் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் பங்கு கொண்ட இன்னிய அணியாய் அமைந்து விழாவுக்கு புது அர்த்தத்தை தந்தது.*

*இன்னியத்தின் தொடக்கம் கிழக்குப் பல்கலைக்கழக உலக நாடக தின விழாவில் தலைக் கோல் ஊர்வல அணியாக 1997 ஆம் ஆண்டு தொடங்கியது. பேராசிரியர் மௌனகுரு குழுவினரோடு தொடங்கிய இன்னியக் கலை பயணம் இந்த ஆண்டில் 25 ஆண்டுகளை நிறைவு செய்கிறது இன்று வடக்கு கிழக்கு மலையகம் என தமிழ் பாடசாலைகளில் தமிழ் பாண்ட் எனும் அங்கீகாரத்தை பெற்றமையோடு. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவிலும் அறிமுகமாகியுள்ளது.கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 1999ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழாவில் தொடங்கி இன்று வரை இன்னியத்தின் தொடர்ச்சி நீட்சி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.*

**மேனாள் கிழக்குப் பல்கலை நுண்கலைப் பீடாதிபதி**
*பாலசுகுமார் (இங்கிலாந்து) மே 2022*

**குஞ்சரம் 4**



ஆ. இரா. வேங்கடாசலபதி

## கனடா இலக்கியத் தோட்டம் விருதுகள் 2021

உலகமெங்கும் பரந்திருக்கும் தமிழ் வளர்க்கும் நோக்கோடு உருவாகிய கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் அமைப்பினால் 2001-ம் ஆண்டு முதல் வழங்கப்பட்டுவரும் உயரிய தமிழ் விருது 'இயல் விருது' ஆகும். இந்த அமைப்பு வழங்கும் 'இயல் விருது' தமிழ் ஆளுமைகளின் வாழ்நாள் சாதனையை கௌரவிப்பதாய் அடையாளப்படுத்தப்படுகிறது. இந்தவகையில் இந்த ஆண்டு(2021) பேராசிரியர் ஆ. இரா. வேங்கடாசலபதி அவர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

இயல் விருது பொற்ற தமிழ் ஆளுமைகள் சுந்தர ராமசாமி(2001), கே கணேஸ்(2002), வெங்கட் சாமிநாதன்(2003), இ. பத்மநாப ஐயர் (2004), ஜார்ஜ் எல். ஹார்ட்(2005), ஏ. சி. தாசீசியஸ்(2006), லட்சுமி ஹோம்ஸ்ட்ராம்(2007), அம்பை(2008), கோவை ஞானி(2009), ஐராவதம் மகாதேவன்(2009), ச. பொன்னுத்துரை(2010), எஸ். ராமகிருஷ்ணன்(2011), நாஞ்சில் நாடன்(2012), தியோடர் பாஸ்கரன்(2013), ஜெயமோகன்(2014), இ. மயூரநாதன்(2015), சுகுமாரன்(2016), வண்ணதாசன்(2017), இமையம்(2018), சு. வெங்கடேசன்(2019), உள்ளிட்ட ஆளுமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. உலளாவிய கொரோனா பொதுமுடக்க நிலை காரணமாக 2020 நிகழ்வு தடைபட்டிருந்தது .

தமிழுக்குப் பணியாற்றும் பல்துறை ஆற்றலாளர்களையும் மேன்மையான உலகளாவிய தமிழ் இலக்கியப் படைப்பாளிகளையும் தெரிந்து அவர்களுக்கு ஆண்டுதோறும் பல விருதுகள் வழங்கி கௌரவிக்கிறது கனடா தமிழ் இலக்கியத் தோட்டம்.

இந்த வகையில் 2021 ஆம் வருட விருதாளர்கள்:

புனைவுப் பரிசு - பா.அ. ஐயகரன்

அபுனைவு விருது - மேநாள் நீதிபதி கே.சந்துரு

கவிதை விருது - ஆழியாள்

மொழிபெயர்ப்புப் பரிசு - மார்த்தா ஆன் செல்பி

**நல்ல ஐயா (பிரான்சு) மே 2022**

**குஞ்சரம் 5**

**பேசும் படங்கள்**
**2022 மே 18**

## கொழும்பு காலி முகத்திடலில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்







**குஞ்சரம் 6**

**கனடா ரொறன்ரோ**

மே 15 'தமிழர் இன அழிப்பு நினைவேந்தல் நாள்' என கனடா பாராளுமன்றம் பட்டியலிட்டது.

**Gary Anandasangaree** is at **House of Commons - Chambre des Communes**.
1h · Ottawa, Ontario ·

Today, the Canadian parliament unanimously passed a motion to recognize May 18th as Tamil Genocide Remembrance Day.

On this very important day, Canada becomes the first national parliament in the world to recognize May 18th of each year as Tamil Genocide Remembrance Day.

The motion passed today is the culmination of years of hard work and advocacy by so many members of the Tamil community.

The genocide against innocent Tamil civilians on the island of Sri Lanka faces many human rights violations and an international community that seeks justice.

Much work lies ahead to ensure those responsible for these atrocities are held to account. Today, on Tamil Genocide Remembrance Day, we recommit to ensuring peace, justice, and accountability on the island.

**குஞ்சரம் 7**

## தமிழ்நாடு

**சென்ற நூற்றாண்டில் மாக்சிம் கார்க்கியின் படைப்பு வழி உலகமெங்கும் அறியப்பட்ட 'தாய்'**
**இன்று பேரறிவாளன் வழி எம்முன் வாழும் தாய்**



நன்றி
ஓவியம் :
Ravi Palette

*தகவல் தொகுப்பு: முகுந்தன் (பிரான்சு) மே 18*

கட்டுரை

மு.நாகநாதன்

# இந்தியா: பெருகி வரும் கடன்கள்; மூழ்கிக்கொண்டிருக்கும் பொருளாதாரம்

இந்தியா விடுதலைப் பெற்ற பிறகு 67 ஆண்டுகளில் இந்தியா பெற்ற வெளிநாட்டுக் கடன் ரூ.55 இலட்சம் கோடியாகும். 2014இல் பிரதமர் நரேந்திர மோடி பதவியேற்ற பிறகு கடந்த 8 ஆண்டுகளில் மட்டும் 73 இலட்சம் கோடியைக் கடனாகப் பெற்றுள்ளது. வெளிநாடுகளிலிருந்து தனியார் பெறும் வணிகக் கடன்கள் குறிப்பாக, 2019க்குப் பிறகு உச்ச நிலையைத் தொட்டுள்ளது. குறிப்பாக, ஆர்சலர் மிட்டல் குழுமம், ரிலையன்சு ஜியோ தகவல் தொழில்நுட்பக் குழுமம், இந்தியப் பெட்ரோலியக் குழுமம், ரிலையன்சு தொழில் குழுமம், டாடா தொழில் குழுமம் போன்ற குழுமங்கள் பெற்ற வெளிநாட்டு வணிகக்கடனளவு ரூ.2.8 இலட்சம் கோடியாகும்.

அரசு கடன் வாங்கலாமா? அப்படி கடன் வாங்கினால் எந்த அளவிற்கு வாங்கலாம். கடன் வாங்குவதால் ஏற்படும் விளைவுகள், பொருளாதாரப் பாதிப்புகள் என்ன? எனப் பல வினாக்களுக்குப் பதில் சொல்லும் காலம் வந்துவிட்டது.

1991ஆம் ஆண்டிற்குப் பிறகு தாராளமயமாதல், உலகமயமாதல், தனியார்மயமாதல் (LPG) என்ற கொள்கைகளின் வழியாக சந்தைப் பொருளாதாரம் எல்லா நாடுகளிலும் பாய்ந்து வளர்ந்தது. ஆனால், அந்த சந்தைப் பொருளாதாரம் இன்று அமெரிக்காவையும் ஐரோப்பிய நாடுகளையும் கடனில் மூழ்கச் செய்துள்ளது. நாட்டின் ஒட்டுமொத்த பொருள் உற்பத்தியைவிட அமெரிக்காவின் கடன் 104 மடங்கு உயர்ந்துள்ளது. இதே நிலையைத்தான் ஐரோப்பிய நாடுகள், ஜப்பான், இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் சந்தித்து வருகின்றன.

பொது நிதியியல் (Public Finance) நூல்களில் அரசின் வரவு - செலவுக் கோட்பாடுகள் வரையறை செய்யப்படுகின்றன. அரசு வரி வருவாய், வரியல்லாத வருவாய் அளவு எப்படி மேலாண்மை செய்யப்பட வேண்டும் என்பதைப் பொது நிதியியல் கோட்பாடுகள் வலியுறுத்துகின்றன. இதே கருத்தைத்தான் பொருளாதாரம் பயிலும் மாணவர்களுக்கும் கற்பிக்கப்படுகின்றது. ஆனால், உலக முதலாளித்துவம், நிதிப்பாடத்திட்டங்களில் சுட்டப்படும் அடிப்படைக் கொள்கைகளை முழுமையாகச் சிதைத்து வருகிறது.

18ஆம் நூற்றாண்டிற்குப் பிறகுதான் பொது நிதியியல் என்கிற ஒரு கோட்பாடு வலிமைப் பெற்றது. அதற்கு முன்பு மக்களுக்கான பொது நிதியியல் என்கிற கொள்கை செல்வாக்குப் பெறவில்லை. ஆடம் சுமித் என்கிற பொருளியல் அறிஞர், வரிகள் குறைவாகவும், அது மக்களுக்குச் சுமையாக இல்லாமலும் இருக்க வேண்டும் என்றார். இதனடிப்படையில் பொதுச் செலவும் மிகக் குறைந்த அளவே செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தினார். மன்னராட்சிக் காலத்தில் தொடங்கிய போர்கள் இன்றளவும் தொடர்கின்றன. போர்ச் செலவுகள்தான் பொது நிதியியலின் வரி வருமானத்தைச் சிதைத்து பொதுக்கடனைப் பெருக்கி வருகின்றன.

ஐரோப்பிய நாடுகளின் வரலாற்றில் பத்தாண்டுகள் போர், எட்டாண்டுகள் போர் எனப் பல போர்கள் நடைபெற்றன. 18ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்திற்கும் பிரான்சு நாட்டிற்கும் நடைபெற்ற போரில் இங்கிலாந்து பல நாடுகளை வென்றது. தனது வணிக ஆதிக்கத்தை உலகளவில் எடுத்துச் சென்றது. டச்சு, போர்ச்சுக்கீசிய, பிரெஞ்சு, ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் குழுமங்கள் இந்தியத் துணைக்கண்டத்தில் வணிகக் கழகங்களாக 17ஆம் நூற்றாண்டில் நுழைந்தன. வணிகம் என்ற பெயரில் இந்தியாவின் மூலப்பொருட்களையும், வளங்களையும் கொள்ளையடித்துச் சென்றன. ஐரோப்பிய நாடுகளில் நடைபெற்ற போர்களின் செலவுகளைக் கூட இங்கிலாந்தின் கிழக்கிந்திய குழும ஆட்சி இந்தியத் துணைக்கண்டத்து மக்கள் மீதுதான் சுமத்தியது.

1857ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்தியத் துணைக்கண்டத்தின் நிர்வாகப் பொறுப்பை நேரடியாக ஏற்ற பிரித்தானியப் பேரரசு இந்தியாவில் பொதுக்

கடனைப் பல ஆயிரம் கோடிகளாக உயர்த்தியது. ஐரோப்பிய நாடுகளில் நிலவுடைமைச் சமுதாயம் உருவாக்கிய கொடுமைகள் எண்ணிலடங்கா. மக்கள் மீது ஒடுக்குமுறையை ஏவி மனித உரிமைகளை அடியோடு பறித்தனர். வரிச்சுமையையும், கடன் சுமையையும் மக்கள் மீதே திணித்தனர்.

1215இல் அறிவிக்கப்பட்ட 'மனித உரிமை சாசனம்தான்' (Magna Carta) மனித உரிமைகளின் முதல் அறிவிப்பு எனக் குறிப்பிடலாம். சட்டவிரோதமான முறையில் கைது செய்தல், சிறைபிடித்தல், கொடுமை செய்தல் போன்ற மனித நேயமற்ற, மனித உரிமைகளைப் பறிக்கின்ற செயல்களுக்கு அரசிடம் மேல் முறையீடு செய்யலாம் என மனித உரிமை சாசனம் சில உரிமைகளை அளித்தது. மேலும் நாட்டின் குடிமகன்கள் சொத்துரிமையைப் பெறுவதற்கும், சொத்துகளை அடுத்த தலைமுறையினருக்கு அளிப்பதற்கும் வழிவகுத்தது. இந்த உரிமைப் பட்டயம் மக்களின் மீது பெருமளவு வரிகளை விதித்து வரிச்சுமையை ஏற்றக்கூடாது என்ற கருத்தியலையும் கொண்டுள்ளது.

இதற்குப் பிறகும் ஐரோப்பிய நாடுகள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்காகப் போர்களைத் தொடர்ந்த வண்ணமே இருந்தனர். 1337இல் தொடங்கி 1453 வரை இங்கிலாந்திற்கும் பிரான்சிற்கும் நூறாண்டுகள் சண்டை தொடர்ந்தது. இந்தப் போரின் முடிவு இங்கிலாந்து ஒரு பேராதிக்கச் சக்தியாக வளர்வதற்கு வழிவகுத்தது.



ஐரோப்பிய நாடுகளின் ஏகாதிபத்தியம் கருவுற்று வளர்ந்த நிலையில் பிரெஞ்சுப் புரட்சி வெடித்தது. மற்ற நாட்டின் ஆட்சியாளர்கள் இதைக் கண்டு அஞ்சினர். ஜனநாயக அடிப்படை உரிமைகளை மக்களுக்கு அளிப்பதற்கு முன் வந்தனர். இக்காலக்கட்டத்தில் இயற்கைவாதிகள் (Physiocrats) என அழைக்கப்படுகிற பிரான்சு நாட்டின் பொருளியல் அறிஞர்கள்தான் முதன்முதலில் கடன் சுமையை எதிர்த்தனர்.

வேளாண் தொழில்தான் செல்வத்தைப் பெருக்குகிறது, மிகை மதிப்பையும் அளிக்கிறது, மற்ற தொழில்களுக்கும் வேளாண் இடுபொருட்கள்தான் அடிப்படையாக அமைகின்றன என நாட்டின் பொருளியல் அறிஞர்கள் வாதிட்டனர். ஒரு பொருளாதார வரைபடத்தை வரைந்து வேளாண் துறையில் மிகை மதிப்பு எப்படி உருவாகிறது என்பதையும் சுட்டினர். அறிஞர் காரல் மார்க்சு, தொழில் புரட்சிக்குப் பிறகு முதலாளித்துவம் தொழில் அடிப்படையில் தொழிலாளர்களைச் சுரண்டி, மிகை மதிப்பை முதலாளிகள் எடுத்துச் செல்கிறார்கள் என்ற அடிப்படைக் கருத்தை இயற்கை வாதிகள் என்கிற பொருளியல் அறிஞர்களின் பொருளாதாரக் கோட்பாட்டிலிருந்துதான் பெற்றார்.

தங்கள் நாட்டிலும் பிரெஞ்சுப் புரட்சி போல் ஒரு புரட்சி ஏற்பட்டுவிடக்கூடாது என்ற ஆளும் வர்க்கத்தின் அச்சத்தால் நாடாளுமன்ற முறையும், மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களும் முன்னிறுத்தப்பட்டன. மக்கள் நலத் திட்டங்களுக்குப் பொதுச் செலவு செய்வதை ஆண்டுதோறும் அளிக்கப்படும் நிதிநிலை அறிக்கைகளிலேயே குறிப்பிடப்பட்டன. இங்கிலாந்து நாட்டில் தோன்றிய தொழில் புரட்சியால் ஏற்பட்ட அறிவியல் தொழில்நுட்பங்களின் தாக்கங்கள் மற்ற நாடுகளிலும் வெளிப்பட்டன. ஆனால் இங்கிலாந்து, பிரான்சு போன்ற ஆதிக்க நாடுகள் தங்களின் ஆட்சியின் கீழிருந்த காலனி நாடுகளின் வள ஆதாரங்களைப் பயன்படுத்தி உலகளவில் லாபம் ஈட்டின.

இந்தச் சூழ்நிலையிலும் ஐரோப்பாவில் நடந்த போர்களுக்கும், இந்தியத் துணைக்கண்டத்தில் ஏகாதிபத்திய நாடுகள் நடத்திய போர்களுக்கும் ஏற்பட்ட செலவினை இந்தியப் பொதுக்கடனாக மாற்றி மக்களின் வரிச்சுமையை ஏற்றினர். சான்றாக, 1765ஆம் ஆண்டு வங்கத்தில் காலூன்றி ஆதிக்கம் செலுத்திய கிழக்கிந்தியக் குழுமம், இந்தியத் துணைக்கண்டத்தில் பிரெஞ்சுப் படையினருக்கும் இங்கிலாந்துப் படையினருக்கும் நடந்த போர்ச் செலவினை வங்கம் ஏற்கும்படி செய்தனர். இப்படிப்பட்ட சுரண்டல் ஆதிக்க நிகழ்வை வங்காளத்தைச் சேர்ந்த பொருளாதார அறிஞர் ஆர். சி.டட், இந்தியா தனக்கான நிர்வாகச் செலவினையும் ஏற்றுக்கொண்டது. அடிக்கடி நடக்கும் போர்களுக்கும் இந்தியப் பகுதிகளைக் கைப்பற்றுவதற்கும் இந்தியத் துணைக்கண்டத்தின் வருவாயிலிருந்துதான் அளிக்கப்பட்டது (*India paid for her own administration; paid also for the frequent wars of conquest and annexation in India by R.C.Dutt, Economic History of India*). எனச் சுட்டுகிறார்.

1834இல் இந்தியாவின் கடன் அன்றைய பண மதிப்பில் 36.9 கோடி ரூபாயாகும். மேலும், ஆப்கானிஸ்தான், சிந்து, குவாலியர், இரண்டாம் பர்மா போர், இரண்டு முறை சீக்கியர்களுடன் நடைபெற்ற போர் செலவினைக் கடனாக மாற்றி இந்திய மக்களின் மீது சுமையை ஏற்றியது. 1857இல் தொடங்கிய படைவீரர் புரட்சிக் (Mutiny) காலத்தில் ஏற்பட்ட போர்ச் செலவையும் சேர்த்ததனால் இக்கடன் தொகை 60 கோடியாக உயர்ந்தது. 1861ஆம் ஆண்டில் இக்கடன் தொகை 693 கோடியாக உயர்ந்தது.

முதல் உலகப் போரின் போது ஏற்பட்ட கடனையும், இந்தியத் துணைக்கண்டத்தின் பல

பகுதிகளில் உருவாக்கப்பட்ட தொடர்வண்டி கட்டமைப்புச் செலவையும், நீர்ப்பாசனத் திட்டச் செலவையும் இந்திய மக்களிடமிருந்தே பிரித்தானிய ஏகாதிபத்தியம் பெற்றது. இதில் இங்கிலாந்தில் சில தனியார் அளித்த கடனும் அதன் வட்டியும் அடங்கும்.

மேற்கூறிய கடன்கள் இங்கிலாந்து நாணயமான ஸ்டெர்லிங்கிலும் இந்திய ரூபாய் மதிப்பிலும் கடனும் வட்டியுமாக இணைத்து இங்கிலாந்து இந்தியாவிலிருந்த நிதியாதாரங்களை எடுத்துக்கொண்டது. இத்தகைய கடன்களைப் பெற்றதனால் இந்தக் கடன் தொகையில் பெருமளவு வெளிநாட்டுக் கடனாகக் (External Public Debt) கருதப்பட்டது.

இந்தியப் பொருளாதார அறிஞரான தாதாபாய் நெளரோஜி, "பிரித்தானிய கொடுங்கோல் ஆட்சியும், வறுமையும்" (Poverty and UnBritish Rule in India) என்ற நூலில் இங்கிலாந்து, இந்தியாவிலிருந்து கொள்ளையடித்த பல நிதியாதாரங்களைப் புள்ளிவிவரங்களோடு பட்டியலிட்டு விளக்கினார். பிரித்தானிய இந்தியாவிற்குள் இரண்டு இந்தியாக்கள் உள்ளன. முதல் இந்தியாவில் - வெள்ளைக்கார உயரதிகாரிகள், இராணுவத்தினர், முதலாளிகள் இருந்தனர். இவர்கள் இங்கு உண்டு களித்ததோடு மீதமிருந்த செல்வத்தை இங்கிலாந்திற்கு எடுத்துச் சென்றனர். இரண்டாம் இந்தியாவில் - வேளாண் குடியினர், தொழிலாளர்கள், வறுமையில் வாடிய மக்கள் இருந்தனர். இவர்கள் முதல் இந்தியாவால் சுரண்டப்பட்டனர் என விளக்கியுள்ளார்.

அறிஞர் மார்க்சும், ஆழ்ந்த புலமையோடு இந்தியாவில் இயங்கி வந்த நிதித்துறை, போர்த் துறை, பொதுப் பணித்துறை பற்றி விளக்கியுள்ளார். உள்நாட்டு வளங்களையும், நிதியையும் பிரித்தானிய அரசு இந்தியாவிலிருந்து எடுத்துச் சென்றதனால் "நிதித்துறையை உள்நாட்டுக் கொள்ளை என்றும், போரை வெளிநாட்டுக் கொள்ளை என்றும் குறிப்பிட்டார்.

பொதுப் பணித்துறை, பொதுப் பணிகளை முழுமையாகப் புறக்கணித்துவிட்டதாகவும் இங்கிலாந்து நாட்டில் வலியுறுத்தப்படுகிற தடையற்ற போட்டிக் கொள்கை இந்தியாவில் பின்பற்றப்படவில்லை என்றும், அதனால் விவசாயம் சீரழிந்து வருகிறது" எனவும் மார்க்சு குறிப்பிட்டுள்ளார்.

*(From time immemorial there were three departments – finance or the plunder of interior; that of war or plunder of exterior; and finally the department of public works…..Now, the British in East India accepted from their predecessors the departments of finance and war, but they have neglected entirely that of public works. Hence the deterioration of agriculture which is not capable of being conducted on the British principle of free competition- Karl Marx, New York Daily Tribune on 25 June 1853)*

நிதிப் பற்றாக்குறை, கடன்சுமை ஆகிய நிதியியல் உள்ளடக்கிய கூறுகளுடன் இந்தியா 1947இல் விடுதலைப் பெற்றது. பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்த சுரண்டல் முறை பொருளாதாரத் திட்டத்தால் இந்தியப் பொருளாதாரம் நலிந்த நிலைக்குச் சென்றுவிட்டது என்பதை உணர்ந்த இந்தியாவின் முதல் பிரதமர் நேரு திட்டமிடல் கொள்கையைப் பின்பற்றினார்.

1951இல் முதல் ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கப்பட்டது. இந்தியாவின் கடன் ரூபாய் 2523 கோடியாக அப்போது இருந்தது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண்மை, நீர்ப்பாசனம், மின் உற்பத்தித் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. இதே போன்று இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இரும்பு, எஃகு, கனரகத் தொழில்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. பெரும்பாலும் பொதுத் துறை நிறுவனங்கள் இந்தியாவில் நேரு காலத்தில் முன்னுரிமை அளிக்கப்பட்டு உற்பத்தி, பணித்துறைகளிலும் வளர்க்கப்பட்டன. ஆனால், நேருவின் மறைவிற்குப் பிறகு இந்தியாவில் 1965-66இல் பருவமழை பொய்த்ததனால் ஏற்பட்ட உணவுப் பற்றாக்குறை, வறட்சி இந்தியப் பொருளாதாரத்தில் ஒரு தேக்க நிலை ஏற்பட்டது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பதிலாக 1966 முதல் 1969 வரை ஆண்டுத் திட்டங்களாக அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.

இத்தகையைப் பொருளாதாரச் சிக்கல்களால் இந்தியா பெருமளவிற்குக் பொதுக்கடனை எழுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தியக் கடன் அளவு ரூ.10,796 கோடியாக உயர்ந்தது. இந்தக் கடன் அளவு 327 விழுக்காடு உயர்வு என மதிப்பீடு செய்யப்படுகிறது. மேலும், பாகிஸ்தானுடன் 1965இல் ஏற்பட்ட போர் பொது நிதியியலைப் பெருமளவிற்குப் பாதித்தது. கடனளவு உயர்வதற்கும் இது ஒரு காரணமாகும். உலக வங்கியின் அழுத்தத்தின் காரணமாக 1966ஆம் ஆண்டு இந்தியாவின் ரூபாய் மதிப்பு 36 விழுக்காடு அளவிற்குக் குறைக்கப்பட்டது.

1980ஆம் ஆண்டிற்குப் பிறகு தனியார் தொழில் முனைவோர்கள் வெளிநாட்டிலிருந்து வணிகக் கடனைப் பெறலாம் என அறிவிக்கப்பட்டது. இதன் விளைவாகத்தான் அந்நியப் பொதுக்கடன் உயர்ந்தது என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

1975ஆம் ஆண்டு நெருக்கடி நிலையின் போது எனது மாமனார் க.ரா.ஜமதக்னியுடன் பெருந்தலைவர் காமராசர் அவர்களைச் சந்தித்த போது அவர் குறிப்பிட்ட தகவல் ஒரு அதிர்ச்சியை அளித்தது. இந்திய காங்கிரசுத் தலைவராக இருந்த தனக்குத் தெரியாமலேயே இப்பண மதிப்புக் குறைப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும், இதன் விளைவாகத்தான் தனக்கும் பிரதமர் இந்திரா காந்திக்கும் சில கருத்து வேறுபாடுகள் தோன்றின என்றும் குறிப்பிட்டார்.

பெருந்தலைவர் காமராசர் ரூபாயின் மதிப்பைக் குறைத்துவிட்டால் மீண்டும் சரி செய்ய முடியுமா? என்ற கேள்வியை என்னிடம் கேட்டார். அதற்கு ஏற்றுமதியைப் பெருக்கி, இறக்குமதியைக் குறைத்து ஆண்டு தோறும் ஒன்றிய அரசு நிறைவேற்றும் நிதிநிலை அறிக்கையில் நிதி மேலாண்மையை ஆக்கப்பூர்வமாகச் செய்து நிதிநிலைப்

பற்றாக்குறையையும், நிதியியல் பற்றாக்குறையையும் குறைத்தால் ஓரளவிற்குப் பணமதிப்பை உயர்த்தலாம் எனக் குறிப்பிட்டேன்.

ஆனால், நடந்தது என்ன?

1981ஆம் ஆண்டு பன்னாட்டு நிதியத்திலிருந்து (IMF) 3000 கோடி ரூபாய் இந்தியா கடனைப் பெற்றது. இந்தச் செயலுக்கு நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் இணைந்து பெருமளவிற்கு எதிர்ப்புத் தெரிவித்தன. இந்திரா காந்தி மறைவிற்குப் பிறகு பிரதமர் பொறுப்பேற்ற ராஜிவ் காந்தி, தனியார்மயக் கொள்கையை ஊக்குவித்தார். மோட்டார் வாகன உற்பத்தி தொழில், ஒன்றிய அரசின் தொழில் துறை அனுமதி பட்டியலிலிருந்து முழுமையாக நீக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பல பன்னாட்டு உள்நாட்டு வாகன நிறுவனங்கள் எவ்விதக் கட்டுபாடுமின்றிப் பல நகரங்களில் இருசக்கர, நான்கு சக்கர வாகனங்களை உற்பத்திச் செய்யத் தொடங்கின. அரசு ஊழியர்கள், நடுத்தர வருமானப் பிரிவினர் வாகனங்களைக் கடனில் பெறுவதற்கு உறுதிமொழிகள் வழங்கப்பட்டன. பல தனியார் கடன் நிறுவன அமைப்புகளும் அதிக வட்டியுடன் இவ்வாகனங்களைப் பெறுவதற்கு கடனளித்தன. இவ்வாறாக, வருமானப் பிரிவில் இருந்த மக்களும், அரசும் கடன் வாங்குவதில் போட்டியிட்டன.

இந்தியா விடுதலைப் பெற்ற பிறகு 67 ஆண்டுகளில் இந்தியா பெற்ற வெளிநாட்டுக் கடன் ரூ.55 இலட்சம் கோடியாகும். 2014இல் பிரதமர் நரேந்திர மோடி பதவியேற்ற பிறகு கடந்த 8 ஆண்டுகளில் மட்டும் 73 இலட்சம் கோடியைக் கடனாகப் பெற்றுள்ளது. வெளிநாடுகளிலிருந்து தனியார் பெறும் வணிகக் கடன்கள் குறிப்பாக, 2019க்குப் பிறகு உச்ச நிலையைத் தொட்டுள்ளது. குறிப்பாக, ஆர்சலர் மிட்டல் குழுமம், ரிலையன்சு ஜியோ தகவல் தொழில்நுட்பக் குழுமம், இந்தியப் பெட்ரோலியக் குழுமம், ரிலையன்சு தொழில் குழுமம், டாடா தொழில் குழுமம் போன்ற குழுமங்கள் பெற்ற வெளிநாட்டு வணிகக்கடனளவு ரூ.2.8 இலட்சம் கோடியாகும்.

2022 மே 13 ஆங்கில இந்து நாளிதழில் வெளி வந்த புள்ளிவிவரப்படி, இந்தியாவின் பண மதிப்பு அமெரிக்க டாலருக்கு எதிராக ரூ.77.52 என்ற அளவிற்குச் சரிந்துள்ளது. இந்தியாவினுடைய வர்த்தகப் பற்றாக்குறை 1,78,292 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. மேலும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நமது நாட்டில் இருந்து முதலீடுகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டுள்ளனர். குறிப்பாக, கடந்த மூன்று மாதங்களில் 33,840 கோடி ரூபாய் முதலீடுகள் இந்தியாவிலிருந்து திரும்பப் பெறப்பட்டுள்ளன. இதன் காரணமாகத்தான் இந்தியாவினுடைய பண மதிப்பு பெருமளவில் சரிந்துள்ளது என இந்து நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.

2003ஆம் ஆண்டு வாஜ்பாய் ஆட்சிக்காலத்தில் நிதியமைச்சராக இருந்த யஷ்வந்த் சின்கா 'நிதியியல் பொறுப்பு - நிதிநிலை அறிக்கை மேலாண்மை சட்டத்தை' நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினார். அனைத்து நிதித் தொடர்பான துறைகளிலும் நிதிப் பற்றாக்குறையைக் குறைத்து நிதியியல் கட்டுப்பாட்டை இந்தியாவில் கொண்டு வர வேண்டும் என இச்சட்டம் வலியுறுத்தியது. 2004இல் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் காங்கிரசுக் கூட்டணி ஆட்சி ஏற்பட்டவுடன் நிதியமைச்சராக இருந்த ப.சிதம்பரம் தனது முதல் நிதிநிலை அறிக்கையிலேயே இச்சட்டம் கூறிய பரிந்துரைகளைப் புறக்கணித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. 2016ஆம் ஆண்டு பிரதமர் மோடி ஆட்சிக்காலத்தில் ஒன்றிய அரசில் வருவாய் - செலவுத் துறையில் செயலராகப் பணிபுரிந்த என்.கே. சிங் தலைமையில் நிதிப்பற்றாக்குறையைக் குறைப்பதற்கும், நிதி மேலாண்மையை உறுதி செய்வதற்கும் ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழுவில் இந்திய மைய வங்கியின் ஆளுநர் உர்ஜித் பட்டேலும், ஒன்றிய அரசின் முன்னாள் நிதிச் செயலராக இருந்த அரவிந்த் சுப்ரமணியமும் உறுப்பினர்களாகப் பணியாற்றினர். சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டு பெருமளவில் நிதிப்பற்றாக்குறையைக் குறைத்து நிதியியல் மேலாண்மையை உறுதி செய்தால்தான் இந்தியப் பொருளாதாரம் தேக்க நிலையிலிருந்து விடுபடும் என எச்சரித்தனர். வளர்ச்சிப் பாதையில் செல்வதற்குப் பல பரிந்துரைகளையும் அளித்தனர். இந்தப் பரிந்துரைகள் இன்றளவும் பின்பற்றப்படவில்லை. எனவே, இந்தப் பரிந்துரைகளை வழங்கிய குழுவிலிருந்த உர்ஜித் பட்டேலும், அர்விந்த் சுப்ரமணியமும் ஒன்றிய அரசின் பொறுப்புகளில் இருந்து விலகிவிட்டனர்.

2020-21ஆம் ஆண்டில் நாட்டின் ஒட்டு மொத்த உற்பத்தியில் இந்தியாவின் கடன் அளவு 87.8 விழுக்காடு அளவிற்கு உயர்ந்துள்ளது. ஆண்டு தோறும் இந்தக் கடனுக்காக ஒன்றிய அரசு செலுத்தும் வட்டித் தொகை மட்டும் ஒன்றிய அரசின் வருவாயில் 44.6 விழுக்காடு 2022 மார்ச் மாதத்தில் இந்தியாவின் பொதுக் கடன் அளவு 135.87 இலட்சம் கோடி ரூபாயாக உயரும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. 250 ஆண்டுகள் காலனி ஆதிக்கத்தில் இருந்த இந்தியா பெற்ற கடன் அளவையே இன்றும் காலனி ஆதிக்க உணர்வை எதிரொலிப்பது போல இந்தியா பொதுக்கடனில் மூழ்கி வருகிறது.

பிரித்தானிய அரசு அரசியல், பொருளாதார ஒடுக்குமுறையை மேற்கொண்ட போது இங்கிலாந்தின் பல்கலைக்கழகங்களில் உயர் பட்டங்களைப் பெற்று இந்திய ஆட்சிப்பணியில் (ICS) சேர்ந்து மக்கள் படும் இன்னல்களைக் கண்டு பல துணிச்சலான நடவடிக்கைகளைப் பலர் மேற்கொண்டனர். சான்றாக, தமிழ்நாட்டில் பென்னி குயிக் தனது சொந்தச் செலவில் முல்லைப் பெரியாறு நீர்ப்பாசன அணையைக் கட்டியது போல பஞ்சாபில் சர் மால்கம் லயால் டார்லிங், ஆட்சிப்பணியை ஏற்று வேளாண் குடியினர் பட்ட துயரங்களை ஆய்வு செய்து 1925ஆம் ஆண்டில் 'பஞ்சாப் உழவர்கள் வளத்திலும், கடனிலும்' ('The Punjab Peasant in Prosperity and Debt' by Sir Macolm Lyall Darling) என்ற நூலினை எழுதினார். இந்திய பனியாக்கள் அதிக வட்டியில் கடன் வழங்குவதை நிறுத்த கூட்டுறவுத் துறையே சிறந்த முறை எனப்

பரிந்துரையை வழங்கினார். மக்களின் வாழ்நிலையைக் கண்டறிவதற்குக் குதிரையில் ஏறி 2300 கிலோ மீட்டர் பயணம் செய்தார். அவர் எழுதிய நூலில், இந்திய உழவன் கடனில் பிறக்கிறான், கடனில் வாழ்கிறான், கடனிலேயே இறக்கிறான், கடனையே உயிலாக அடுத்த தலைமுறைக்கு வழங்குகிறான்' (Indian farmer born in debt, lives in debt, dies in debt and bequeaths the debt). என்று பதிவு செய்திருக்கிறார். சென்ற ஆண்டு கூட தங்களுடைய வாழ்வாதார உரிமைகளைப் பெறுவதற்காக ஒன்றிய அரசு எதேச்சதிகார முறையில் கொண்டுவந்த இரண்டு வேளாண் சட்டங்களை எதிர்த்து இரண்டு ஆண்டுகள் களம் அமைத்துப் போராடி இச்சட்டங்களைத் திரும்பப் பெறுவதற்கு வழிகோலியதல்லவா. அன்றோ பனியாக்கள் அதிக வட்டியில் கடன் வழங்கி வேளாண் குடியினரை வதைத்தார்கள். இன்றும் அதே பனியாக்கள் வேளாண் குடியினரின் வள ஆதாரங்களை அவர்களின் உழைப்பை உறிஞ்சுகிறார்களே என்ற எண்ணம் நமக்குப் பெரும் கவலையை அளிக்கிறது. இதற்குத்தானா இந்திய விடுதலை என்ற கேள்வியும் எழுகிறது.

பிரதமர் மோடியின் ஆட்சியில் ஒன்றிய அரசு ஒவ்வொரு குடிமகனையும் கடனாளியாக ஆக்கிவிட்டது. விடுதலைப் பெற்று 75 ஆண்டுகளுக்குப் பிறகும் இந்தியக் குடிமகன் கடனில் பிறக்கிறான், கடனில் வாழ்கிறான், கடனில் இறக்கிறான். கடனையே அடுத்த தலைமுறைக்கு விட்டுச் செல்கிறான் என்றுதானே சொல்லத் தோன்றுகிறது.

கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில், உலக சுகாதார நிறுவனம் குறிப்பிடுகிற இறப்பு எண்ணிக்கை 47 இலட்சமா அல்லது 40 இலட்சமா என்பதில் பல கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. ஆனால், பல இலட்சம் ஏழை எளிய மக்கள் உயிரிழந்துவிட்டனர். பல கோடி இளைஞர்கள் வேலை இழந்துவிட்டனர். பல கோடி மக்கள் தங்களின் வாழ்வாதாரங்களை இழந்து விட்டனர்.

உலகப் பசிக்கொடுமை குறியீட்டில் 116 உலக நாடுகளின் வரிசைப் பட்டியலில் இந்தியா 101ஆம் இடத்தில் உள்ளது. பாகிஸ்தான், வங்க தேசம், நேபாளம் ஆகிய நாடுகளை விட இந்தியா இந்த வரிசைப் பட்டியலில் பின்தங்கியுள்ளது. இதே போன்று பன்முக வறுமைக் குறியீடு 109 நாடுகளின் வரிசைப் பட்டியலில் இந்தியா 66ஆம் இடத்தில் உள்ளது. ஆனால், இதே காலக்கட்டத்தில் உலகின் 177 பெரும் பணக்காரர்களில் 2020ஆம் ஆண்டு இந்த வரிசையில் இந்தியாவின் 40 பெரும் பணக்காரர்கள் இணைந்துள்ளனர். மேலும், முகேஷ் அம்பானியின் ரிலையன்சு தொழில் குழுமத்தின் சொத்து மதிப்பு 24 விழுக்காடு அளவிற்கு உயர்ந்துள்ளது. உலகளவில் அம்பானி எட்டாம் இடத்தில் உள்ளார். 2022இல் அம்பானியை விஞ்சி அதானி உலகப் பணக்காரர்களின் பட்டியலில் இரண்டாம் இடத்தை எட்டியுள்ளார். கடந்த ஆண்டின் ஒவ்வொரு வாரத்திலும் ரூ.6 ஆயிரம் கோடியை ஈட்டியுள்ளார்.

எத்தகையக் கொடுமை?

விலைவாசி விண்ணைத் தொடுகிறது. பணவீக்கம் உச்சத்தை எட்டுகிறது. இந்தியா பெரும் கடனில் சிக்கித் தடுமாறுகிறது. 40 கோடி இந்திய மக்கள் வறுமையில் வாடுகின்றனர். ஆனால் சில குஜராத்தியப் பெரும் பணக்காரர்கள் உலகப் பணக்காரர்களாக மாறி வருகின்றனர்.

இந்த நிலை எதை எடுத்துக்காட்டுகிறது. மீண்டும் காலனி ஆதிக்க நிலைக்குப் பொருளாதாரம் செல்கிறது என்பதை ஐக்கிய நாடுகள் மன்றத்தின் பொதுச்செயலாளராகப் பணியாற்றுகிற அன்டோனியோ கெட்டரஸ் (Antonio Guterres) 2020இல் நெல்சன் மண்டேலா ஆண்டுக் கருத்தரங்க உரையில் குறிப்பிட்டுள்ளார். "வரலாற்றில் ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கியது காலனி ஆதிக்கம்தான். உலகின் வடக்குப் பகுதியில் உள்ள நாடுகள் குறிப்பாக, நான் சார்ந்த கண்டமான ஐரோப்பா, அடக்குமுறையைக் கையாண்டு வன்முறை வழியாகத் தெற்கு நாடுகளின் மீது காலனி ஆதிக்கத்தைப் பல நூற்றாண்டுகளாகத் திணித்தது... உலகின் 50 விழுக்காட்டு மக்களின் மொத்த செல்வத்தை 26 பெரும் பணக்காரர்கள் தங்களின் ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டதனால் அப்பட்டமான ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டுள்ளன. பொருளாதார நிலையற்ற தன்மை, ஊழல், நிதிச்சிக்கல்கள், பெருகி வரும் குற்றச்செயல்கள், உடல் நலிவுகள், மன உளைச்சல்கள் ஆகியன இந்த ஏற்றத்தாழ்வுகளால் ஏற்படுகிறது" என அன்டோனியோ குறிப்பிட்டுள்ளார்.

2019ஆம் ஆண்டில் கொரோனா பெருந்தொற்று உலகளவில் பரவி பொருளாதார வீழ்ச்சியை ஏற்படுத்தியது. இந்த கடுமையான, மோசமான பொருளாதார நெருக்கடியிலும் பல நாடுகள் போர்ச்செலவினைக் குறைக்கவில்லை. உலக மக்கள் தொகை ஆய்வறிக்கையில் (2022), உலகில் அதிகமாக இராணுவத்திற்குச் செலவிடும் நாடுகளில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. வரிசைப் பட்டியலில் அமெரிக்கா, சீனா, இந்தியா, ரஷ்யா, இங்கிலாந்து, சவுதி அரேபியா, ஜெர்மனி, பிரான்சு, ஜப்பான், தென் கொரியா ஆகிய நாடுகள் அடுத்தடுத்த நிலையில் உள்ளன. இதில் கொடுமை என்னவென்றால், மற்ற 9 நாடுகள் இராணுவத்திற்குச் செய்யும் செலவுத் தொகையை மொத்தமாகக் கூட்டிக் கணக்கீடு செய்யும் போது அமெரிக்காவின் செலவுத் தொகை 77800 கோடி டாலர் ஆகும். இது மற்ற 9 நாடுகளின் கூட்டுத்தொகையான 73000 கோடி டாலரைவிட அதிகமாக உள்ளது. உலகில், ஐக்கிய நாடுகள் மன்றத்தில் இடம் பெற்றுள்ள 193 நாடுகளில் இந்தப் பத்து நாடுகள்தான் இராணுவத்திற்காக அதிகம் செலவு செய்கின்றன. பொதுக் கடனைப் பெருக்கி அல்லவா இந்தப் போர்ச் செலவு செய்யப்படுகிறது.

இன்று இலங்கைத் தீவில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி இந்தியாவிலும் ஏற்படுமா என்ற கேள்வி சிலரால் எழுப்பப்படுகிறது. மேற்கூறிய புள்ளிவிவரங்கள் இந்த அச்சத்தை உறுதி செய்கிறது.

**கட்டுரையாளர் : சென்னைப் பல்கலைக்கழகப் பொருளாதாரத் துறையின் தலைவராகவும் தமிழ்நாட்டு மாநிலத் திட்டக்குழுவின் துணைத்தலைவராகவும் பணியாற்றியவர்.**

தகுதியுரை


**ரவிசுப்பிரமணியன்**

ravisubramaniyan@gmail.com


**2022ஆம் ஆண்டின் மா. அரங்கநாதன் இலக்கிய விருது**

சென்னை ராணி சீதை அரங்கத்தில் 16.4.2022 சனிக்கிழமை மாலை நடைபெற்ற நிகழ்வில் ஓவியத்தென்றல் டிராட்ஸ்கி மருது அவர்களுக்கும் வரலாற்று ஆய்வாளர் குடவாயில் பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும் மா. அரங்கநாதன் இலக்கிய விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்டபோது திரு. ரவிசுப்பிரமணியன் அவர்களால் வாசிக்கப்பட்ட தகுதியுரைகள் கட்டுரை வடிவில் இங்கே வெளியிடப்பட்டுள்ளன. – பொறுப்பாசிரியர்

## 1

### டிராட்ஸ்கி மருது

# வண்ணங்களுக்கு வசப்படாதொரு வாழ்வு

சின்னஞ்சிறு செடியோ, விழுது விட்டு நிலைகொள்ளும் பெருவிருட்சமோ, துளிர் நீட்டி தலையெடுத்து முளைத்து நின்று நிலைபெற, அதற்கான மண்ணும் சூழலும் நீரும் இன்ன பிறவும் இன்றியமையாததாகிறது என்பது மருதின் வாழ்வுக்கும் பொருந்தும்.

காவிரியும், பொருநையும் மட்டுமல்ல வைகை நதிக்கரையும் சில செம்மாந்த கலைஞர்களை நமக்கு அளித்திருக்கிறது. மருது என்று நம்மால் அன்போடு அழைக்கப்படுகிற ம. டிராட்ஸ்கி மருது அவர்களில் ஒருவர். இப்படியான பெயர்களை ரொம்பவும் அபூர்வமாகத்தான் நீங்கள் கேட்கமுடியும். உலகின் ஒரு புரட்சி இயக்கத்தில் துவங்கி, நம் தமிழக வரலாற்றில் இடம் பெற்ற வீர மன்னர்களின் பெயரில் வந்து நிலைகொள்கிறது இப்பெயர்.

மருதுவின் தந்தை மருதப்பன் அவர்கள் தனது 14ஆம் வயதிலேயே காந்தி ஆஷ்ரமம் சென்று தங்கியிருந்து திரும்பியவர். இலங்கையில் வெள்ளையர்கள் ஆட்சி நடந்த காலத்தில், தலைமறைவு வாழ்க்கைக்காக இந்தியாவுக்குத் தப்பி வந்த, கொல்வின். ஆர். டி. சில்வா, என். எம். பெரேரா ஆகியோரை தனது 19 ஆம் வயதிலேயே ஆதரித்து, அவர்கள் தொடர்பால் டிராட்ஸ்கியவாதியுமானார். அதே சமயம் பெரியாரோடும் தொடர்பில் இருந்தார். இந்தப் பின்னணியில்தான் மருதுக்கு இடப்பட்ட பெயர் டிராட்ஸ்கி மருதாகிறது.

வெள்ளையர்களை எதிர்த்த மருது சகோதரர்கள் பெயரோடு டிராட்ஸ்கியைச் சேர்த்து 1953 இல் பிறந்த தன் மூத்தமகனுக்கு பெயர் சூட்டிய அவர்,



டிராட்ஸ்கி மருது

அது போலவே மற்ற இரு மகன்களுக்கும் திலகர் என்றும் போஸ் என்றும் புரட்சியாளர்கள் பெயர்களையே சூட்டுகிறார். தன் நான்கு மகள்களுக்கும் அழகு தமிழ்ப் பெயர்களை சூட்டி மகிழ்கிறார். ‘பெயர்களில் என்ன இருக்கிறது? என்று ஒரு முறை தமிழ்ப் பண்பாட்டு ஆய்வறிஞர் தொ. பரமசிவம் அவர்களிடம் கேட்டபோது, அவர் சொன்னார்: ‘ஒரு வகையில் பெயர்களில்தான்

எல்லாம் இருக்கிறது' என்று. அது மருதுவின் குடும்பத்துக்கு சாலப்பொருந்தும்.

அரசியல் பண்பாட்டில் மட்டுமல்லாது, கலைகளின்பால் மிகுந்த ஈடுபாடு கொண்ட மருதப்பன் அவர்கள், தன் பிள்ளைகளுக்கு சினிமா ஓவியம் சிற்பம் என பல கலைகளையும் அறிமுகம் செய்து வைக்கிறார். வீட்டில் பெரிய நூலகம் அமைத்து பிள்ளைகளை பல்துறை சார்ந்த புத்தகங்களை வாசிக்கத் தூண்டியபடியே இருந்திருக்கிறார். அதன் விளைவாகத்தான் அவரது மற்ற இரு பிள்ளைகளான திலகர் திரைப்பட இயக்குனராகவும், போஸ் ஓவியராகவும் இருக்கின்றனர்.

1950களிலேயே முழு நீள அனிமேஷன் படங்களுக்கு தன் பிள்ளைகளை அழைத்துச் சென்றவராக இருந்துள்ளார் அவர் தந்தை. மருதுவின் அம்மா ருக்மணியம்மாள் பரிட்சை நாட்களில் கூட, இப்படி சினிமாவுக்கு அனுப்புறிங்களே என்று தடுத்தும் கேளாது, டெசர்ட் என்று உங்கள்வாத்தியார் வார்த்தையில்தான் சொல்வார்; நீங்கள் அங்கு காட்சியாகப் பாருங்கள்' என்று சொல்லி அனுப்பியிருக்கிறார். இந்த அரசியல் பண்பாட்டு கலாச்சார பின்புலம் சமைத்த கலை ஆகிருதியே மருது. பதின்ம வயதுகளிலேயே ஓவியக்கலைக்கு தன்னை ஒப்புக்கொடுத்துவிட்ட மருது, முறையாக ஓவியம் பயின்று சென்னை ஓவியக்கல்லூரியில் அனிமேஷன் பயிற்சி எடுத்து முதல் மாணவனாகத் தேறியவர்.

ஆதிமூலம் அவர்களும் மருதுவும் இணைந்து சிறு பத்திரிகைகளில் பெரும் அர்ப்பணிப்போடு எந்த எதிர்பார்ப்பும் இன்றி பல ஆண்டுகள் இயங்கினர். எதற்கும் சுணங்காத இவர்களின் தொடர் இயக்கத்தின் வழியே, பொது மக்கள் - பத்திரிகையும் நவீன ஓவியத்தை உள்வாங்க ஒரு பாலம் போல் செயல்பட்டனர். இதன் மூலம் தனி ஓவியத்திற்கும் விளக்கப்படத்திற்குமான இடைவெளியைக் குறைத்து, விளக்கப்படமே தனி ஓவியமென சமகாலத்தில் அறியப்படவும் வைத்தனர். குறிப்பிட்ட சில ஆண்டுகள் இருவரது ஓவியங்கள் மட்டுமே தமிழ் இலக்கியப் புத்தகங்களின் அட்டைகளாக, பத்திரிகை ஓவியங்களாக தமிழ் வெளியில் நிறைந்திருந்தன. ஒரு வகையில் அவர்களது வைக்கப்படாத தொடர்கண்காட்சிகள் அவை. கண்ணிலும் கருத்திலும் பார்வையிலும் புலன்களிலும் அவை ஏற்படுத்திய விழிப்புணர்வை கேள்விகளை எதனாலும் அளவிட்டு மதிப்பிட்டுவிட முடியாது.

இவை தவிர தன் தொடர்ந்த இயக்கத்தின் மூலம் சில புதிய கலைச் சாளரங்களையும் திறந்து வைத்தவர் மருது. 80களிலேயே கம்ப்யூட்டரை தன் கலையோடு இணைத்துக்கொண்ட ஓவியக்கலையின் முன்னோர். உடல் மொழியை ஓவியங்களில் நிகழ்த்திக்காட்டிய இவர், பலவிதமான பண்பாட்டு கலாச்சாரக் கலப்புகளில் அறியாமல் உழன்ற ஓவிய உருவங்களை அசல் தமிழ் வடிவங்களாய் தன் நெடுநாள் ஆய்வின் மூலம் மீட்டெடுத்து வரைந்து நிறுவியவர். அவர் சொல்லில் நடையில் பேச்சின் உள்ளடக்கத்தில் இருக்கும் தாவிச்செல்லும் துள்ளல் போல, அவர் படைப்பில் மட்டுமல்ல, தன் புலத்தின் இதர பிரிவுகளான திரைப்படத்தில் தந்திரக்காட்சி, டைட்டில் அனிமேஷன், விளம்பர அனிமேஷன் என்று வித விதமாய் தாவித்தாவி சென்று களமாடி வென்ற மல்லன் மருது.

ஓவியர், வடிவமைப்பாளர், கணிப்பொறி வரைகலை கலைஞர், கலை இயக்குனர், சிறப்புத் திரைப்படக் காட்சிகளை உருவாக்குபவர் (SFX), இழப்புகளைப் பொருட்படுத்தாது துணிச்சலாக சமுகப் பிரச்சனைகளுக்காக பொதுவெளியில் வந்து முன் நிற்கும் கலைஞர், எழுத்தாளர், பேச்சாளார் என கலையின் திசை தோறும் விரியும் மருதுவின் சிறகுகளுக்கு எல்லைகள் இல்லை. உலகின் பல்வேறு நாடுகளில் ஓவியக் கண்காட்சிகள் நிகழ்த்தி அந்நாட்டு பிரதிநிதிகளாலும் அமெரிக்கா, ஆஸ்த்ரேலியா, கனடா, ஜப்பான் போன்ற நாடுகளின் தமிழ்ச்சங்கங்களாலும் இவர்தம் கலைக்காக அழைத்துப் பாராட்டப்பட்ட மருது, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் ஒவியத்தென்றல் பட்டமளித்து கௌரவிக்கப்பட்டவர். தனது ஓவியக்கலைக்காக தமிழக அரசின் மாநிலப்பரிசு மற்றும் கலைமாமணி விருதினையும் பெற்றவர்.

வெங்கட்சாமிநாதன் துணைவியாரிடம் பேசிக்கொண்டிருக்கும் போது கேட்டேன், "உலகமே அவர் விமர்சனங்களைக் கண்டு பயப்படுதேம்மா உங்களுக்கு மட்டும் ஏன் அவர்கிட்ட பயமே இல்ல" என்று கேட்டேன். அவர் சொன்னார். "ஆமா அது ஒண்ணுதான் குறைச்சல். இந்த எழுத்தாளர்களோட கலைஞர்களோட வாழ்றவா இருக்காளே அவாள்லாம் ரொம்ப பாவம்டாப்பா. குடும்பப் பொறுப்பே கொஞ்சமும் இல்லாத இந்த லூஸ்களோட வாழ்றது இருக்கே அது பல சமயம் சாபம். சில சமயம் வரம்". இதை வெவ்வேறு த்வனிகளில் பல கலைஞர்களின் மனைவிகள் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். ஆனால் அந்த ஒரு சிறு முணு முணுப்புக்கூட இன்றி, மருதுவின் இத்தனை பெருமைகளுக்கும் பக்கத்துணையாயிருந்து, கனிந்த பாசத்தோடும் வாத்சல்யத்தோடும் அவரை தன் அன்பால் பரிபாலித்து, மென்மேலும் அவரது கலைகள் துலங்க இன்றும் துணை செய்பவர் மருதுவின் மனைவி ரத்தினம் அம்மாள். மருதுவுக்கு அனுசரணையாக இருக்கும் அவரது உறுதுணை வணக்கத்திற்குரியது.

உடல்மொழி, இயக்கம் ஆகியவற்றைக் தன் படைப்புகளில் உருவாக்கி ஜாலம் நிகழ்த்தி, பாரம்பரியமும் நவீனமும் இணைந்த நியோ கிளாசிக்கல் தன்மையை நிறுவி மூலத்தமிழ்த் தாதை தன் படைப்புகளில் சத்தியச் சாட்சிகளாக நிறுத்தி வைக்கும் இவர், 42 தமிழ், தெலுங்கு படங்களுக்கு கம்யூட்டர் கிராபிக்ஸ் செய்தவர், 6 படங்களுக்கு கலை இயக்குனர், 25 ஆண்டுகளில் 50க்கும் மேற்பட்ட மாணவர்களை உருவாக்கி உலகெங்கும் உலவவிட்டவர் என்று இன்னும் இன்னும் கலைகளின் திசைகள் தோறும் அர்த்த கனத்தோடு துள்ளித் துள்ளித் தாவும் மருதுவின் வாழ்வும் வண்ணங்களுக்கு வசப்படாதொரு கலை வாழ்வு.

## 2

### குடவாயில் பாலசுப்பிரமணியன்

# பெருமங்கலத்து அருந்தச்சன்

கும்பகோணத்தில் நான் பிறந்திருந்தாலும் கோவில்கள் சூழலிலேயே வளர்ந்திருந்தாலும் அதைப்பற்றிய அடிப்படை விஷயங்களையும் அறியாதிருந்தேன். முழுமையாய் அறிந்திராதோர் சொல்லும் தகவல்களே சதம் என்றிருந்தேன். என் லாட்ஜ்க்கு பக்கத்துக் கடைக்காரார்தான் புகழ்பெற்ற கல்வெட்டு ஆராய்ச்சியாளர் சேதுராமன். அவரோடு நான் அடிக்கடி பேசும் வாய்ப்பு பெற்றிருந்தும் அவரிடமிருந்தும் ஏதும் அறிந்துகொண்டேனில்லை. சென்னைக்குக் குடி பெயர்ந்த பின், இவற்றை எல்லாம் தெரிந்துகொள்ளவில்லையே என்ற ஏக்கம் என்னைத் துளைத்தது. அப்போது தேனுகா தந்த குடவாயில் பாலசுப்ரமணியன் கட்டுரைகளே, எனக்கு அள்ள அள்ளக் குறையாத சுரங்கமாய் விவரங்களைத் தந்தன. ஒரு விஷயத்தை எப்படிப் பார்க்கவேண்டும் எப்படிப் புரிந்துகொள்ளவேண்டும் என்ற கண் திறப்பையும் அவை எனக்குத் தந்தன. பல் துறை சார்ந்த மேற்கோள்கள் மூலம் அவர் நிறுவும் வரலாற்று உண்மைகள் என்னைபிரமிக்கவைத்துள்ளன. அவரின் தெளிவு, தீர்க்கம் ஒரு விஷயத்தில் அவர் எடுக்கும் அறுதியான முடிவு போன்றவை மூலம் இத்துறையில் அதற்கு முன் உளறிக்கொட்டிவர்களின் போதாமைகளையும் உணர்ந்துகொண்டேன். இப்படிப் பல்துறைசார்ந்த ஒரு ஆவணக் களஞ்சியத்தை இத்தனை நாள் அறியாமல் கிடந்தோமே என்று எனை நொந்துகொண்டேன்.



குடவாயில் பாலசுப்பிரமணியன்

அவரை நேரில் பார்க்கும் துடிப்பு இருந்துகொண்டே இருந்தது. அந்த நிலையில் டி. என். ராமச்சந்திரன் அவர்களைப்பற்றிய ஆவணப்படம் இயக்கிக்கொண்டிருந்த காலத்தில்தான், அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. எனினும் அப்போதும் அவரின் பிரம்மாண்டத்தைக் கண்டு நான் சிலிர்த்ததை வெளிப்படுத்திக் கொள்ளவே இல்லை. அந்தப் படப்பிடிப்பின்போது நான்எழுப்பிய சின்னச் சின்னக் கேள்விகளுக்கு அவர் சொல்லிய பதில்கள் என்னை மிகுந்த பிரமிப்பில் ஆழ்த்தின. எந்தக் கேள்வியைக் கேட்டாலும் பல்துறை சார்ந்த அவரின் மேதமை அதில் வெளிப்பட்டபடியே இருந்தது. வரலாறு, தொல்லியல், கல்வெட்டியல், சிற்பம், கட்டடக்கலை, ஓவியம், இசை, நாட்டியம், நாணயவியல், பக்தி இலக்கியம் கல்வெட்டுக்கள், செப்பேடுகள் என குறுக்கும் நெடுக்குமாய் அவர் பயணித்திருந்த விஸ்வரூப சொரூபத்தை அந்த பதில்களில் கண்டேன்.

சிற்பங்களைப் பற்றி எடுத்துக்கொண்டால் ஒரு சிற்பம் பல்லவர் காலமா, சோழர் காலமா, நாயக்கர் காலமா, மராட்டியர் காலமா என்று துல்லியமாகச் சொல்லிவிடுகிற அதிகாரப்பூர்வமான நம்பகமான மனிதர் குடவாயில் பாலசுப்பிரமணியன். ஒரு கோவில் ஓவியத்தை எடுத்துக்கொண்டால் அதில் கோபமும் சிரிப்பும் எப்படி ஒரே சட்டகத்தில் வந்தது என்பதை மிக நுட்பமாக அர்த்த கனத்தோடு சொல்லக்கூடியவர் அவர். வரலாற்றில் காலக்குழப்பம் என்பது மிகப் பெரும் இடர். ஆனால், எத்தனை காலமானாலும் அதனுள் ஆழ்ந்து அதனுடைய சகலவித பன்முகத் தன்மைகளையும் ஆராய்ந்து மிகச்சரியாக சொல்லக்கூடிய முக்கியமான வரலாற்று அறிஞர் குடவாயில்.

தஞ்சை பெரிய கோவிலைச் சார்ந்து எந்த கேள்வியையும் நீங்கள் அவரிடம் கேட்கலாம். ராஜராஜ சோழனுக்கும் பெருந்தச்சனுக்கும் பிறகு பெருவுடையார் கோயிலை மிகப் பெரிய அளவில் ரசித்தவர் குடவாயில் பாலசுப்பிரமணியனாகத்தான் இருக்க முடியும். அந்த அளவுக்கு அங்கிருக்கிற ஒவ்வொரு கல்லும் அதில் இருக்கிற ஒவ்வொரு சொல்லும் அவருக்குத் தெரியும். அந்த கோவில் மட்டுமல்ல தமிழகத்தின் பலகோயில்களின் வரலாறு அவர் விரல் நுனியில் அல்லது இதழ் நுனியில். சோழர்கால வரலாற்றுக்கும் சரி, நாயக்கர் கால வரலாற்றுக்கும் சரி அவர் செய்த பங்களிப்புக்கு எல்லையே இல்லை. கிட்டத்தட்ட ஐந்தாம் நூற்றாண்டு தொடங்கி 19ஆம் நூற்றாண்டு வரையிலான தமிழர்களின் சிற்பக்கலை மற்றும் கட்டிடக்கலைக்கு அவர் செய்த அர்ப்பணிப்பான பங்களிப்பு அசாதாரணமானது.

கலை மேன்மை, கட்டிடக்கலை, மன்னர்கள் குடும்பத்து உணர்வுப் போராட்டங்கள், அப்போதைய அரசியல், ஆன்மீகம் இப்படி எது சார்ந்து கேட்டாலும் அவரால் சொல்ல முடியும். சைவ சித்தாந்தம் சார்ந்தும், வேர்ச்சொல் வரலாறு சார்ந்தும், தொல்லியல், கல்வெட்டு, சுவடிகள், பட்டயங்கள், நாணயவியல் சார்ந்தும், கிரந்தம், பாலி, வடமொழி சார்ந்தும் தென்மொழி சார்ந்தும் அவர்

அளிக்கும் பதில்கள் வெறும் தகவல்கள் அல்ல. தரவுகள் அல்ல. தெரியாத பல புதிர்களின் விடை. தமிழர்களின் வளம் துலங்கிய கலை வாழ்வின் அறியப்படாத சம்பத்து. நம் சிந்தனைக் குளத்தில் எறிகிற ஒரு கல். அதனாலேயே பல அறிஞர்களும் அவரை இன்றும் தேடித்தேடி வந்தபடி இருக்கிறார்கள்.

பல்லவர் கோ நகரமான நந்திபுரம் என்பது தஞ்சை அருகேயுள்ள வீரசிங்கம் பேட்டை என்று கண்டுபிடித்தது, ராஜ ராஜ சோழனின் ஈழத்து வெற்றிக்காக வெளியிடப்பட்ட அரிய தங்கக் காசினை அரசுக்கு வழங்கியது, மாமல்லபுரத்துப் படைப்புகளைச் செய்த சிற்பிகள் பெயர்கள் அடங்கிய கல்வெட்டை, வழக்கம்போல சாலை விரிவாக்கத்துக்கு மேன்மை அறியாதோர் அழிக்க முயல்கையில் காத்தது, நாட்டிய மரபில் தலைக்கோல் திகழ்ந்த விதத்தை, சகோட யாழின் வடிவத்தை தாராசுர திருபுவன சிற்பங்களைக் காட்டி நிறுவியது, தாவி முதல் என்ற தேவாரப்பாடலுக்கு அவர் ஆதாரங்களோடு கண்டு சொன்ன தெளிவு, தாராசுர பெரியபுராணச் சிற்பங்களைக் காட்டி சங்கப்புலவர்கள் பற்றிய செய்தியை வரையறுத்தது, ராஜேந்திர சோழனே தன் நட்சத்திரத்தைப் பதிவு செய்ததை திருவாரூர் கல்வெட்டின் மூலம் உறுதி செய்தது என்று இன்னும் இன்னும் நீள்கிறது அவரது சாதனைப் பட்டியல்.

யாரும் செய்யாத வகையில் இவர் பணி எப்படித் தனிச்சிறப்பு பெறுகிறதென்றால் மூலத்தை ஒப்பு நோக்குவது, கள ஆய்வுக்கு பல நாட்கள் பயணித்து நேரில் சென்று கிடையாய் கிடந்து ஆய்வு செய்வது, பல்துறை விஷயங்களை ஒன்றோடு ஒன்று இணைத்து கண்டு நிறுவுவது போன்ற பல காரணிகளால் நிகழ்வதாகும். உதாரணமாக ராஜேந்திர சோழன் சென்ற எல்லா இடங்களுக்கும் இவரே செல்கிறார். களப்பணியாற்றி பல் துறை சார்ந்து ஆய்வு மேற்கொண்டு அது வரை கண்டு பிடிக்கப்படாத அர்த்த பரிமாண அடுக்குகளை வகை வகையாகப் பிரித்துக் காட்டுகிறார். முன் தோன்றிய மூத்த குடி என்று மேடைக்கு மேடை உள்ளீடற்று முழங்கும் இங்குதான் குடவாயிலின் ஆய்வுக்குரல் ஓங்கி ஒலிக்கிறது.

இந்தத் துறையும் ஒரு சாபம் நிறைந்த துறையே. இந்தியாவில் ஆர்ட் ஹிஸ்டரி என்ற ஒரு படிப்பே கிடையாது என்று சொல்லிவிடலாம். தமிழ்நாட்டில் இங்கு அவசியம் இருந்தாக வேண்டிய அந்த படிப்பு தமிழகத்தின் எந்தப் பல்கலைக் கழகத்திலும் கிடையாது. அதனால் இங்கு ஆர்ட் ஹிஸ்டாரியன்ஸ் உருவாக வாய்ப்பே இல்லாமல் இருக்கிறது. இது ஒரு தனித்த பல்கலை சார்ந்த சிறப்புப் பாடம் என்று சொல்லலாம். நம் மாநிலத்தைப் பொருத்தவரை குடவாயில், பாரதிபுத்திரன் போன்ற விரல்விட்டு எண்ணத்தக்க ஒரு சிலர்தான் அதற்கான முழுத்தகுதிகளோடு இங்கு உள்ளனர். இந்த வெகு சிலரே எந்த பிரதிபலனும் பாராது, எல்லாப் பணிகளையும் தங்கள் தோள்களில் சுமந்துகொண்டு தங்கள் வாழ்க்கையையே அதற்கு அர்ப்பணித்து தங்களது சொந்த முயற்சியில் நேரம் பணத்தைச் செலவிட்டு, ஊனை உருக்கி அதற்குள் ஊடாடிப் பணியாற்றுகிறார்கள். நுண்கலை சார்ந்த இந்தப் படிப்பு கல்வியியலில் சேர்க்கப்படாததால் குறைந்த பட்சம் இவர்களது கண்டுபிடிப்புகளை அறிந்து கொண்டாடும் பிரகிருதிகள் கூட இங்கு உருவாகவில்லை. இசைக்கும் ஓவியத்திற்கும் இங்கு இதே கதிதான்.

தமிழ்த் துறையைச் சார்ந்தவர்கள்தான் தமிழ் வரலாற்றை எழுதியிருக்கிறார்கள். வரலாற்றுத் துறையைச் சார்ந்தவர்கள் எழுதியதில்லை என்ற குறையை நீக்கியவர் குடவாயில் பாலசுப்பிரமணியன். எல்லாச் சிறப்புகள் இருந்தும் தங்கள் ஆய்வு முடிவுகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் சுணக்கம் காண்பிப்பார்கள் பலர். ஆனால் குடவாயில் அதிலிருந்தும் வேறுபட்டவர். அரிய கண்டுபிடிப்புகளைப்பற்றி தொடர்ந்து பேசுவது கட்டுரைகள் எழுதுவது மக்களைத் திரட்டி கூட்டங்கள் நடத்துவது பல்கலைக்கழகங்களுக்கு சென்று அபூர்வ நினைவாற்றலோடு மாணவர்களுக்குப் பாடம் நடத்துவது மின்னணு சாதனங்களைப் பயன்படுத்தி நம் கலை மேன்மைகளை உலகெங்கும் பரவி இருக்கின்ற நம் தமிழர்களுக்கு கொண்டு செல்வது என்று இன்றும் செயல்படுகிறார் குடவாயில்.

குடவாயில் கோட்டம் பெருமங்கலத்தில் 1948ல் பிறந்த பாலு என்கிற குடவாயில் பாலசுப்பிரமணியன் தன் நெருங்கியவர்களால் மதி என்றும் அழைக்கப்படுகிறார். இவர் மூன்று அண்ணன்களோடும் ஒரு தம்பியோடும் பிறந்தவர். இவரது தாயார் அபயாம்பாள் கர்நாடக இசைப்பாடகி. தந்தையார் முனுசாமி அந்தக் காலத்திலேயே இண்டர்மீடியட் தேறியவர். அறிவியல் வரலாறு கட்டிடவியல் என முனைவர்பட்டம் வரை பயின்ற இவரின் ஆன்மீக குரு தயானந்த சரஸ்வதி. மற்ற இரு ஆசான்களில் ஒருவர் நாகசாமி, இன்னொருவர் சேக்கிழார் அடிப்பொடி தி. நா. ராமச்சந்திரன். உற்ற நிழலாயிருந்து இவர் தம் சாதனைகளுக்கு அணுக்கம் செய்யும் மனைவி கண்ணம்மாள் பி. எஸ். சி. தாவரவியல் படித்தவர். இவர்களுக்கு ஸ்ரீவித்யா அஞ்சனா என்ற இரு மகள்கள் உள்ளனர்.

எல்லாவற்றையும் விட அவர் ஆன்மிகக் கலைகொண்ட ஒருதெய்வீகமனிதர். மாச்சரியங்களோ புகார்களோ அற்றவர். தன்னைத் தேடி வந்து தகவல் கேட்பவர்கள் இன்னார் இனியர் என்று ஒரு நாளும் வேறுபாடு காட்டாதவர். தன் பள்ளிக்காலத்திலிருந்து சேகரித்த, மெய்வருத்தம் பாராது உழைத்துச் செலவழித்துக் கண்டுபிடித்த, எல்லாவற்றையும் சந்தோஷமாக சர்வ சாதாரணமாக எந்தத் தான்மையுமற்று அடுத்த தலைமுறைக்கு ஒரு இளம் மாணவனுக்கு கையளித்து விடுகிறார் அவர். ஒரு வகையில் தன் வாழ்வின் அர்த்தமே அதுதான் என்கிறார் குடவாயில். மொத்தத்தில் இவர் வாழ்வே ஒரு அரும் தமிழ்ப் பனுவல் என்றால் அது மிகைக்கூற்று அல்ல.

*கட்டுரையாளர்: எழுத்தாளர், ஆவணப்பட இயக்குநர்*

கட்டுரை

மீனாசுந்தர்

# மருத்துவ நுழைவுத்தேர்வும் பெற்றோரின் கடமைகளும்

**எதற்கெடுத்தாலும் விலைமதிப்பற்ற உயிரை மாய்த்துக் கொள்வதால் என்ன நிகழ்ந்து விடப் போகிறது? இது ஒருவகை உளவியல் சார்ந்த மனநெருக்கடி. மருத்துவ நுழைவுத் தேர்வில் வெற்றிபெற முடியவில்லையென்று ஊரும் உலகும் தூற்றிவிடுமென்று அவர்களுக்குள்ளாகவே செய்து கொள்ளும் மாயக் கற்பனை. அதற்கு அவர்கள் தந்து கொள்ளும் விலையே உயிர் மாய்ப்பு. கற்ற கல்வி நமக்குப் போதிப்பது இதைத்தானா?**

*இந்த ஆண்டிற்கான மருத்துவ நுழைவுத் தேர்வு (NEET) விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு நிறைவுபெற்றுள்ளன. ஆண்டுதோறும் இத்தேர்வு குறித்த அறிவிப்பைக் கண்ணுறும் போதெல்லாம் இறந்து போன அனிதாக்கள் நினைவுக்கு வந்து பயமுறுத்துகிறார்கள். இந்தாண்டு எத்தனை உயிர்களைப் பலி கொள்ளுமோ இந்த நீட் பூதமென மனம் பதறுகிறது. அரசியல் சதுரங்கத்தில் அரசியல்வாதிகள் மட்டுமே காய் நகர்த்திக் கொண்டிருந்த வேளையில் இப்போது ஆளுநரும் புதிதாகச் சேரந்து கொண்டிருக்கிறார். ஆனால் இவரின் பணி காய்களை நகர்த்தவிடாமல் பார்த்துக் கொள்வது என்பது, தனக்கு வாய்ப்பு வரும்போதும் அதைக் கண்டுகொள்ளாமல் மௌனம் காப்பது என்பதாக அமைந்திருப்பது தான் தமிழகத்தின் துரதிர்ஷ்டம். சென்ற ஆண்டுகளில் தேர்வெழுதி தோல்வியடைந்தவர் குடும்பங்களில் நிலவும் தீரா மனவேதனையை பிள்ளைகள் இந்தாண்டும் நீடித்து விடுவார்களோவென்ற பதட்டம் பெற்றோர் முகங்களில் அப்பட்டமாய் தென்படுவதைத் தவிர்க்க முடியவில்லை. பிள்ளைகள் பல வாய்ப்புகளிருந்தும் மருத்துவம் ஒன்றையே விடாப்பிடியாய் பிடித்துக் கொண்டு அபலைகள் போலத் தவிப்பதை எத்தனை நாட்களுக்குப் பெற்றோர் பொறுத்துக் கொள்ள முடியும்? சென்றாண்டு அரசுப் பள்ளியில் படித்த தேனி சில்லுவார்பட்டியைச் சேர்ந்த மாணவன் தனது இரண்டாம் முயற்சியில் வெற்றி பெற்றானென்பது அனைவருக்கும் மகிழ்ச்சிதானென்ற போதிலும் அவன் அவ்வெற்றியை எங்ஙனம் கைக்கொண்டான் என்பது கவனிக்கத்தக்கது. மிகவும் ஏழ்மைக் குடும்பச் சூழலில் தன் ஆசிரியர்களின் பொருளுதவியில் எடுத்துக் கொண்ட தனிப்பயிற்சியே தன் வெற்றிக்குக் காரணம் என்று வெள்ளிடை மலையாக அவன் வெளியிட்டிருந்த கருத்து நீட் தேர்வின் உள்வாதைகளை உலகிற்கு வெளிப்படுத்தி நிற்கிறது.*

*இதிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது, நடைமுறையில் உள்ள அரசின் பாடத்திட்டத்தை மட்டும் வைத்துக் கொண்டு நுழைவுத் தேர்வுக் கொடூரனை எதிர்*



கொள்ள முடியாது என்பது தான். அரசுப்பள்ளி மாணவன் மருத்துவத் தேர்வில் அபார வெற்றி என்பது போல மிகத் தட்டையாக ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டு, அதன் பின்புலத்தில் நிலவும் உண்மைப் பிரச்சனையை வெளிக் கொணராமல் போவது அறமல்ல. இச்செய்தி அரசுப் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு நம்பிக்கையளிக்கக் கூடியதெனினும் இதை ஒரு சோற்றுப் பதமாகக் கொள்ளவியலாது. ஏனெனில் இந்தத் தேர்வு முடிவு தொடர்புடைய மாணவனை மட்டும் பாதிப்பதில்லை. நீட் வெற்றிக்காக அவன் சார்ந்த குடும்பமும் பெற்றோரும் படும் துயரம் சொல்லில் அடங்காதவை. சொல்லப் போனால் பிள்ளைகளைவிடப் பெற்றோர்கள் தான் பிள்ளைகளை மருத்துவர் ஆக்கியே தீர வேண்டும் என்று கங்கனம் கட்டிக் கொண்டு திரிகிறார்கள்.

அண்மையில் நண்பர் ஒருவரைச் சந்தித்தேன். முகத்தில் வழக்கமாகத் தவழும் பொலிவில்லை. மிகவும் சோகமாகக் காட்சி தந்தார். கன்னத்தில் தாடி, கண்களில் சரியாய்த் தூங்காத அயர்வு, உடல் சோர்வு எல்லாமும் அவரின் அகத்தைச் சொல்லாமல் சொல்லின. ஏதோ பிரச்சினையில் இருக்கிறார் என்பது மட்டும் தெரிந்தது. என்னவென்று விசாரித்தேன். சொல்ல மருகினார். திரும்ப அழுத்திக் கேட்டதில் வீட்டில் கொஞ்சம் பிரச்சனை என்று மழுப்பினார். நெருக்கமான நண்பர் என்பதால் உரிமையில் சும்மா சொல்லுங்கள் என்றேன்? நேரம் சரியில்லை. ஜாதகக்கோளாறு, கெட்ட நேரம் தற்சமயம் உச்சத்தில் இருக்கின்றது. மனைவி மக்கள் யாரும் சொல்வதைக் கேட்க மறுக்கிறார்கள். அவரவர் எண்ணத்திற்கு நடந்து கொள்ள வேண்டுமென விரும்புகிறார்கள். நான் ஒரு குடும்பத் தலைவன் என்ற நினைப்பே அவர்களிடமில்லையெனப் பலவாறாக அடுக்கிக் கொண்டே சென்றார்.

பிரச்சனையின் மூலம் என்னவெனில், மகனை மருத்துவர் ஆக்கிப் பார்க்க வேண்டுமென்பது மட்டுமே நண்பரின் இலட்சியமாய் இருந்திருக்கிறது. அதற்குத் தக்க திட்டமிட்டு நிறைய செலவு செய்து தரமான பள்ளியில் சேர்த்திருக்கிறார். மகனும் நினைத்தவாறே நன்றாகப் படித்து மிக உயர்வான எண்ணிக்கையில் மதிப்பெண்கள் பெற்றிருக்கிறான். அது வரையில் அவருக்கு மகிழ்ச்சி தான். ஆனால் மருத்துவம் படிப்பதில் மகனுக்குத் துளியும் விருப்பமில்லை. அவனது எண்ணம் கலைக் கல்லூரியில் இளங்கலை முடித்துவிட்டு குடிமைப்பணித் (ஐ.ஏ.எஸ்) தேர்வெழுத முயற்சிக்க வேண்டுமென்பது தான். இதை அவன் வெளிப்படையாகவும் சொல்லிவிட்டான். அவன் தாயார் முதலில் தயங்கியிருக்கிறார். பின் மகனின் நியாயமான எண்ணத்தைப் புரிந்து கொண்டு ஆதரவு தெரிவித்திருக்கிறார். நண்பருக்கோ ஒருவேளை ஆட்சியர் தேர்வு நிறைவேறாமல் போனால் மகன் எதிலும் நிலை கொள்ளாமல் போய்விடுவானோவென்ற பயம். நுழைவுத் தேர்வு எழுதி மருத்துவர் ஆனபின் ஆட்சியர் தேர்வெழுதினால் தேர்வு முடிவு எப்படி அமைந்தாலும் கவலைபடத் தேவையில்லை. மருத்துவத் தொழிலை வைத்து மகன் பிழைத்துக் கொள்வான் என்பது தந்தையின் கணக்கு. இதன் உள்ளீடு மருத்துவர் ஆக வேண்டுமென்னும் தனது கனவை நிறைவேற்றிவிட்டு அடுத்து அவன் இலட்சியத்தை நிறைவேற்றிக் கொள்ளட்டும் என்பது தான். மகனோ தனது நிலைபாட்டில் உறுதியாக நின்றுவிட்டான். தனது நிலைபாட்டை விளக்கிவிட்டான். அவன், எனது இலட்சியத்தில் குழப்பமில்லை. மருத்துவ நுழைவுத் தேர்வென்ற பெயரில் தனது உழைப்பை வீண் செய்ய விரும்பவில்லை என்றும், அதனால் ஏற்படும் காலவிரயத்தைத் தான் விரும்பவில்லையென்றும் தெளிவாகச் சொல்லிவிட்டான். மனதிற்குப் பிடிக்காத ஒன்றிற்காக எதற்காக தான் உயிரைக் கொடுத்துப் படிக்க வேண்டும் என்றும் கேட்டிருக்கிறான். மட்டுமல்லாது, என் இலக்கு ஆட்சியர் தேர்வு தான். அதற்கு ஒரு இளங்கலைப் பட்டம் போதுமானது. நான் போட்டித் தேர்விற்காக எல்லா முயற்சிகளையும் எடுக்கத்தொடங்கிவிட்டேன் என்று தெளிவாக இருந்திருக்கிறான். இத்தனை சின்ன வயதில் மகன் இவ்வளவு தெளிவாக முடிவெடுத்ததற்காக மகிழ்ந்து கொண்டாட வேண்டிய தருணங்களை நண்பர் தனக்குத் தானே தண்டனை வழங்கிக் கொண்டதைப் போல மாற்றிக் கொண்டிருக்கிறார்.

மனிதன் வாழும் காலங்களில் பலவாறாகத் தடுமாறி அலைகிறான். அவன் எண்ணங்கள் ஓரிடத்தில் நிலைகொள்ளாமல் தவிக்கின்றன. மனம் ஒரு குரங்கு என்பதற்கு நம்மில் பலரும் இலக்கணமாக இருந்து வருகிறோம். தனது நிலையறிந்து வாழ்வை முன் நகர்த்த நினையாமல் அடுத்தவர் நிலை பார்த்துச் சூடு போட்டுக் கொள்வதை என்னவென்பது? தேவையற்ற மனச்சிடுக்குகளை உள்ளத்தில் ஏற்றிக் கொண்டுத் துன்பப்படும் அவர்கள் தம்மைத் தவிர மற்றவரெல்லாம் மகிழ்ச்சியாக இருப்பதைப் போலக் கற்பனை செய்து கொள்கிறார்கள். பொதுவாக பெற்றோர்கள் தாங்கள் சிறு வயதில் நினைத்து நிறைவேறாத ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளும் இயந்திரமாகப் பிள்ளைகளைக் கருதுகிறார்கள். அவர்களுக்கு மனமொன்று இருக்கிறதென்பதையும் ஆசைகள், இலட்சியங்கள் அவர்களுக்கும் இருக்குமென்பதையும் வசதியாக மறந்து போகிறார்கள். குழந்தைகள் தங்கள் வழியாக இந்த உலகிற்கு வந்தார்கள். அவ்வளவு தான். அவர்களைச் சொந்தம் கொண்டாட நமக்கெந்த உரிமையுமில்லை என்பான் கலில் ஜிப்ரான். குழந்தைகள் நம்முடைய அடிமைச் சேவகர்களல்லர் என்பதைப் குழந்தை மனவியல் அறிஞர்கள் பலரும் பல சமயங்களில் வலியுறுத்தியும் இதனைப் பெற்றோர்கள் புரிந்து கொள்ளத் தவறுவதேன்?

இருப்பதை விடுத்துப் பறப்பதற்கு ஆசைப்படும் பெற்றோர்களின் எண்ணம் அவர்களைப் பாடாய்ப் படுத்துகிறது. தமது எண்ணங்களின் படியே அனைத்தும் நடக்க வெண்டுமென்ற அதீத எதிர்பார்ப்புகளைப் பெற்றோர்களில் சிலர் வளர்த்துக் கொள்கிறார்கள். அதில் சிறு இழப்பு நேர்ந்தாலும் அவர்களால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. இதில்

மனிதர்க்கு மனிதர் கூடுதல் குறைச்சலில்லை. தகுதிக்கேற்ப இந்த நிலை எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறது. பக்கத்தில் இருக்கும் பரவசத்தை அனுபவிக்கத் தெரியாத இவர்கள் எங்கோ இருக்கும் துயரத்தை இழுத்துப் போர்த்திக் கொண்டு நேரம் சரியில்லை என்று புலம்புவதில் என்ன அர்த்தமிருக்கிறது? எல்லாவற்றிற்கும் காலத்தைக் குற்றவாளியாக்கித் தப்பித்துக் கொள்வதா? சிலர் எல்லாம் எனது போதாக் காலமென்று புலம்புவதைப் பார்க்க பரிதாபமாக உள்ளது. இவர்களின் மனக்குழப்பத்திற்குக் காலம் என்ன செய்யும்? சென்ற ஆண்டு மருத்துவ நுழைவுத் தேர்வு நடைபெறுவதற்கு முதல் நாள் மதுரையில் ஒரு மாணவி தற்கொலை செய்து கொண்ட நிகழ்வைத் தொலைக்காட்சியில் பார்த்த போது மனம் பதைத்தது. அந்தப் பெண் தன்னை மன்னித்துவிடுமாறு அம்மாவிற்கும் அப்பாவிற்கும் தம்பிக்கும் அலைபேசியில் குரல்வழியாகப் பதிவு செய்து வைத்திருந்ததைக் கேட்கையில் பெற்று ஆளாக்கிய பெற்றோரை நினைத்து மனம் பதறிற்று. மருத்துவப் படிப்பு மாநில பட்டியலில் இருந்த வரை பன்னிரண்டாம் வகுப்பில் எடுக்கும் மதிப்பெண்கள் அடிப்படையில் மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு வந்தனர். அவர்களுள் பலர் மிகச்சிறந்த மருத்துவர்களாக உருவாகியிருக்கிறார்கள் என்பது நிதர்சனம். உலகளவில் சென்னையில் குறிப்பிடத்தக்க மிகச் சிறந்த மருத்துவர்களும் மருத்துவமனைகளும் இருப்பதாக மருத்துவ புள்ளிவிபரம் குறிப்பிடுகிறது. பலரும் அயல்நாடுகளிலிருந்து மருத்துவம் செய்துகொள்ள சென்னையை நாடி வருகிறார்கள். புகழ்பெற்ற மருத்துவர்களான இவர்கள் எங்கு படித்து மருத்துவரானார்கள்.? எந்த நுழைவுத் தேர்வு இவர்களைத் தகுதி செய்தது? நாடெங்கிலும் பாடத்திட்டங்கள் ஒன்று போல இல்லாத சூழலில் நுழைவுத் தேர்வை மட்டும் ஒரே தரத்தில் எங்ஙனம் நடத்த வியலுமென்பது தான் பல மூத்த கல்வியாளர்களின் வினாவும் கவலையும். அரசுப் பள்ளி மாணவனின் தனிப்பயிற்சி தான் அவனை வெற்றியடையச் செய்திருக்கிறது. இந்த வெற்றி பள்ளி பாடத்திட்டமும் வகுப்பறை போதனையும் மட்டுமே மருத்துவ நுழைவுத் தேர்வை எதிர்கொள்ள போதாதென்பதையே உரத்துச் சொல்கின்றது.



மருத்துவ நுழைவுத் தேர்விற்குப் பயந்து தற்கொலை செய்து கொண்டவர்கள் எண்ணிக்கையில் தமிழகம் முன்னணி மாநிலமாக அறிவிக்கப்பட்டு விடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. 2017 ஆம் ஆண்டு செப்டம்பரில் உயிரை மாய்த்துக் கொண்ட அரியலூர் மாவட்டம் குழுமூரைச் சேர்ந்த அனிதா தொடங்கி இன்று வரையும் இது தொடர்கிறது. பெரவள்ளூர் பிரதீபா, பெரம்பலூர் கீர்த்தனா, திருநெல்வேலி தனலட்சுமி, விழுப்புரம் மோனிஷா, கோவை சுபஸ்ரீ, திருப்பூர் ரிதுஸ்ரீ, பட்டுக்கோட்டை வைஷியா, புதுச்சேரி சிவசங்கரி, மதுரை ஜோதிஸ்ரீ துர்கா, தர்மபுரி ஆதித்யா, திருச்செங்கோடு மோதிலால் எனத் தொடரும் இந்தப் பட்டியலை இனியாவது தடுக்க வேண்டாமா? “என்னால முடியலைம்மா.. என்னை மன்னிச்சிக்கிடுங்க“ என்று மரண வாக்குமூலம் கொடுத்திருக்கும் மதுரை மாணவியின் வார்த்தைகள் மனசாட்சியுள்ள எவரையும் உலுக்கியெடுக்கும் வல்லமை மிக்கவை. மருத்துவ நுழைவுத் தேர்வு தேவையில்லை என்ற வாதம் ஒருபுறமிருப்பினும் மருத்துவப் படிப்பு இல்லையென்றால் இந்த உலகில் வாழவே தகுதியில்லையென்ற மனநிலையை அந்தக் குழந்தைகளுக்கு ஏற்படுத்தியது யார்? சாதிக்க இன்னும் ஆயிரம் வழிகள் உலகில் உள்ளனவென்பதை அறிவுறுத்தத் தவறியது யார்? அரசா? பெற்றோரா? ஆசிரியரா? சமூகமா? தொடரும் இவ்வினாக்களுக்கு விடைதான் யாது? இப்படி நீங்களும் நானும் கூடப் பொறுப்பேற்றுக் கொள்ளத் தான் வேண்டும். இதே மதுரையில் தான் ஒரு சலூன்கடைக்காரரின் ஏழை மகள் தனது படிப்பிற்காகச் சேமித்து வைத்திருந்த பணத்தைத் தீநுண்மி நெருக்கடிக் காலத்தில் ஏழைகளுக்காகப் பங்கிட்டுக் கொடுத்து வரவாற்றில் இடம் பெற்ற நிகழ்வும் நடந்துள்ளது. அந்தப் பாலும்பிஞ்சிற்கு மனிதநேயம் பொங்கும் இம்மனநிலை ஏற்படுவதற்கு யார் காரணம்? அவளின் பக்குவம் எங்கிருந்து வந்தது? பெற்றோரன்றி யார் அக்குழந்தையை இப்படித் தகுதிப்படுத்த முடியும்?

எதற்கெடுத்தாலும் விலைமதிப்பற்ற உயிரை மாய்த்துக் கொள்வதால் என்ன நிகழ்ந்து விடப் போகிறது? இது ஒருவகை உளவியல் சார்ந்த

மனநெருக்கடி. மருத்துவ நுழைவுத் தேர்வில் வெற்றிப் பெற முடியவில்லையென்று ஊரும் உலகும் தூற்றிவிடுமென்று அவர்களுக்குள்ளாகவே செய்து கொள்ளும் மாயக் கற்பனை. அதற்கு அவர்கள் தந்து கொள்ளும் விலையே உயிர் மாய்ப்பு. கற்ற கல்வி நமக்கு போதிப்பது இதைத் தானா? ஒரு காலத்தில் வயது வந்தோர்களிடமும் திருமணமான கிராமத்துப் பெண்களிடமும் உயிரை மாய்த்துக் கொள்கிற இந்தப் பழக்கம் அறியாமையால் மிகுந்து காணப்பட்டது. அதற்குக் காதல் தோல்வி, வாழ்க்கையில் ஏமாற்றம் போன்ற பல காரணங்கள் இருந்தன. அவர்கள் வேறு வழியில்லாத தருணத்தில் தான் அந்தக் கடின முடிவை எடுத்தார்கள். கிராமங்களில் முடிவெடுத்த பின்பும் கூடப் பலரும் சாவதற்கு அஞ்சினார்கள். எங்கள் கிராமத்தில் நான் சிறுவனாக இருந்த போது குடும்பப் பிரச்சனையில் மனம் வெறுத்த பெண் ஒருவர் தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்கிறார். ஒதுக்குப் புறமாக இருந்த பெரிய கிணற்றுப் பக்கம் சென்ற பெண் கிணற்றில் விழுந்து சாகப் போகிறேனென்று கோபத்தில் சத்தம் போட்டு விட்டு கிணற்றை நோக்கி ஓடிவிட்டார். பின்னாலேயே உறவினர்கள் துரத்தி ஓடினார்கள். அவர் கிணற்றை அடைந்து விட்டாரென்று எண்ணிய நிலையில் கிணற்றின் கரையில் பெண் நிலைகுத்தி நின்று விட்டார். அவரைக் கைப்பிடித்து அழைத்து வந்து ஓய்வாக விசாரிக்கையில் கிணற்றைப் பார்த்ததும் பயமாக இருந்தது. அப்படியே நின்று விட்டேன் என்று சொல்லியிருக்கிறார். இப்படிச் சாவதற்கு அஞ்சிய தலைமுறையின் பிள்ளைகள் இன்று வாழ்வதற்கு அஞ்சிய நிலையில் சாதாரணமாக உயிரை மாய்த்துக் கொள்வதை என்னவென்பது?

அண்மையில் இந்தியாவில் 2019 ஆம் ஆண்டு நிகழ்ந்த தற்கொலை மரணங்களின் புள்ளி விவரங்களைத் தேசிய குற்ற ஆவணக் கழகம் (NCRB –NATIONAL CRIME RECORD BUREAU) வெளியிட்டுள்ளது. அந்தப் பட்டியலைப் பார்க்கும் போது பெரும் அதிர்ச்சி ஏற்படுகிறது. அறிக்கையில் 2019 ஆம் ஆண்டு இந்தியாவில் மட்டும் ஒரு இலட்சத்து 39,123 தற்கொலை மரணங்கள் நிகழ்ந்துள்ளன என்று குறிக்கப்பட்டுள்ளது. நாளொன்றுக்குச் சராசரியாக 381 பேர் தற்கொலை செய்து கொள்கின்றனராம். இதில் பெரும் வேதனை என்னவென்றால் இக்கணக்கின் விகிதம் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துச் செல்வதுதான். 2018 ஆம் ஆண்டு 1 இலட்சத்து 34,516 ஆக இருந்த தற்கொலை மரணங்கள் 2019 இல் 3.4 விழுக்காடு அதிகரித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுபோன்ற உயிர்வதைச் செயல்களில் அதிகமாக யார் ஈடுபடுகிறார்கள் என்ற கணக்கீட்டையும் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். அதில் 23.4 விழுக்காடு கூலித் தொழிலாளிகளும் திருமணமாகிய பெண்கள் 15.4 விழுக்காடு என்றும், சுயதொழில் செய்பவர்கள். 11.6 விழுக்காடு, வேலையில்லாத பட்டதாரிகள் 10.1 விழுக்காடு, விவசாயத் தொழிலாளர்கள் 7.4 விழுக்காடு, மாணவர்கள் 7.4 விழுக்காடு ஏனையோர் 19 விழுக்காடு என்று அந்தக் கணக்கு நீள்கிறது. திருமணம் ஆனவர்களின் பட்டியலில் ஆண்கள் 68.4 பெண்கள் 62.8 விழுக்காடுகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளன. நாட்டிலேயே மகாராஸ்டிரா மாநிலம் முதலிடத்தையும் தமிழ்நாடும் இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளன. மூன்றாமிடத்தை மேற்குவங்கமும் நான்காம் இடத்தை மத்தியபிரதேசமும், ஐந்தாமிடத்தை கர்நாடகமும் பதிவு செய்துள்ளன. ஒட்டுமொத்தத்தில் 49.5 விழுக்காடு இந்த ஐந்து மாநிலங்கள் சார்ந்த மரணங்களென்று குறிப்பிடப்பட்டுள்ளது. உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன் என்பது திருமூலர் வாக்கு. சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும். பதின்பருவக் கல்வி வரை பல சிரமங்களுக்கிடையே வளர்த்து ஆளாக்கும் பிள்ளைகளைத் தொடர்ந்து எப்படி வழிநடத்த வேண்டும் என்பதில் தெளிவான திட்டம் பெற்றோருக்கு வேண்டும். பிள்ளைகளின் படிப்பு, அவர்களின் எதிர்காலம் மீதான அக்கறை ஒரு பெற்றோருக்கு எவ்வளவு முக்கியமோ அதைவிட மேலாக அவர்களின் உயிரும் முக்கியம். படிப்பிலுள்ள வேறு உயர் வாய்ப்புகளைச் சமயம் வாய்க்கும் போதெல்லாம் மறைமுகமாகக் குழந்தைகளுக்குச் சுட்டி வளர்க்க வேண்டும். பிள்ளைகளுடன் மனம் விட்டுப்பேச நேரம் ஒதுக்க வேண்டும். அவர்களின் விருப்பங்களை அறிந்து அதில் சாதகமான அம்சங்களை அவர்களுடன் வெளிப்படையாக, மென்மையாக உரையாடி அதற்கேற்பச் செயல்பட முனைய வேண்டும்.

சில தினங்களுக்கு முன் ஓர் ஆசிரியத் தம்பதி தம் பிள்ளையின் விருப்பத்திற்காகத் தாங்கள் சிறுவயதிலிருந்து கட்டி வைத்திருந்த மருத்துவக் கனவைத் தூக்கி எறிந்துவிட்டதாக ஒரு செய்தி நாளிதழ்களிலும் சமூக ஊடகங்களிலும் வேகமாகப் பரவியது. பிள்ளையின் விருப்பமறிந்து உயர்கல்வியைத் தேர்வு செய்த அவர்களின் பொறுப்புணர்வைப் பலரும் பாராட்டியிருந்தனர். இஃது ஒரு நல்ல முன்னுதாரணம். அதிலும் அவர்கள் ஆசிரியர்கள் என்பதால் அச்செய்தி கூடுதல் கவனம் பெற்றது. படித்தவர்கள், ஆசிரியர்கள் அரசுப்பணியில் இருப்பவர்கள், மக்கள் பிரதிநிதிகள் இவ்விசயத்தில் முன்னுதாரணமாக நடந்து கொண்டால் நல்ல மாற்றம் ஏற்பட வழியுண்டு. கிராமப்புறங்களில் விபரம் தெரியாதவர்கள் மேற்குறித்தவர்களின் பிள்ளைகள் எங்கு படிக்கின்றனர்? எந்தப் படிப்பைத் தேர்வு செய்கின்றனர் என்று மறைமுகமாகக் கவனித்துத் தங்கள் பிள்ளைகளுக்கு வழிகாட்டத் துணிகின்றனர். விபரமறிந்தவர்கள் தெளிவான பாதையில் நடைபோடும் போது கவனிப்பவர்களும் அந்த மாயையிலிருந்து எளிதில் விடுபட வகையுண்டு. மருத்துவத் தொழில் புனிதமானது, உயர்வானது, மகத்துவமானது. சமூகத்தில் உயர்ந்த மதிப்பை, செலவாக்கை வழங்கக் கூடியது. மாற்றுக்கருத்தில்லை. ஆனால் கிராமத்தில் ஒரு சொலவடையுண்டு. தங்க ஊசி என்பதற்காக வயிற்றிலா குத்திக் கொள்ள முடியும்.?

தொடர்புக்கு 9442510251 7010408481

நூல் விமர்சனம்

**க.பஞ்சாங்கம்**
drpanju49@yahoo.co.in




# வித்தியாசங்களின் மேல் நின்று கிளை பரப்பும் கவிதைகள்

கவிதை எழுதப்படுவதற்கு என்ன அடிப்படைக் காரணம் என்று பார்த்தால் சொற்களோடு கொண்ட பழக்கமும் உறவும்தான் என்று எனக்கு இப்பொழுது தோன்றுகிறது. சொல்லப்பட்ட அல்லது எழுதப்பட்ட கவிதைகளில் வந்து உட்கார்ந்து கொண்ட சொற்கள் புனையும் மாயவெளிதான் மீண்டும் மீண்டும் கவிதைகள் எழுதப்படுவதற்கு மூல ஊற்றாக இயங்குகின்றது.எதோடு பழகுகிறோமோ அதுவாக மனம் மாறுவது இயல்பான ஒன்றாக இருக்கிறது. கவிதை வாசிக்கிறோம் என்ற பெயரில் நாம் உண்மையில் சொற்களோடு பழகத் தொடங்கி விடுகிறோம். அவை தரும் புதிர்ச் சுவையில் ஈர்க்கப்பட்டவர்களாய்ப் பிடித்ததைப் பற்றியே பேசும் மனித மன இயல்புக்கு ஏற்ப அவை குறித்தே உரையாடுகிறோம்; விவாதிக்கிறோம்; எண்ண அலைகளில் மிதக்கிறோம்; ஒரு கட்டத்தில் சொல்லின் சுழிக்குள் நம்மை அறியாமலேயே நாம் மாட்டிக் கொண்ட நிலையில் நாமும் கவிதை எழுதத் தொடங்கிவிடுகிறோம் அல்லது மொழியின் பதியமாக இருக்கும் மனதிற்குள் இருந்து நாமே வியந்து போகும்படிக் கவிதை வரிகள் பிறக்கத் தொடங்கி விடுகின்றன.இதற்கு எந்த நேரத்தில் பிறக்கும் எந்த இடத்தில் பிறக்கும் என்றெல்லாம் ஒரு கணக்கு வழக்குக் கிடையாது.தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டுகொண்டு கிடக்கும்போது ,தூக்கத்தில் கனவு காணும்போது,பயணத்தில் இருக்கும்போது,நல்லதொரு புத்தகத்தை வாசித்துக் கொண்டிருக்கும்போது, குளிக்கும் போது,கழிவறையில் இருக்கும் போது,கலவியில் ஈடுபட்டிருக்கும் போது ,துக்கம் அழுத்தும்போது என்று எந்த நேரத்திலும் சொற்களின் பிடிக்குள் சிக்கி அவர்களிடமிருந்து கவிதை பிறக்கலாம். இந்தத் தொகுப்பில் உள்ள “ கி.பி.4712” – என்ற கவிதை (ப.40) இப்படித்தான் வேலைக்குப்போகும் பயணத்தின்போது ஆட்டோ ஒரு பாலத்தில் ஏறி இறங்குவதற்குள் எழுதி முடிக்கப்பட்டது என்ற தகவலைக் கவிஞர் கல்பனா நமக்குத் தருகிறார். “சொற்குவியல்களின் துரத்தும் கொலைத் தீவிரம்” என்றும் அதன் பிரசவ வலியையும் பதிவு செய்கிறார்..

◆ ◆ ◆

கல்லூரியில் படிக்கின்ற காலத்திலேயே கவிஞர் ப.கல்பனா, “ பார்வையிலிருந்து சொல்லுக்கு” (1998) என்ற முதல் கவிதைத் தொகுப்பினை வெளிக்கொணர்ந்தவர். சென்னை கிருத்துவக் கல்லூரியில் பேராசிரியர் பாரதிபுத்திரன் முன்னின்று நடத்திய “வனம்”கவிதை நிகழ்வில் கலந்து கொண்டவர் . 23 ஆண்டுகள் கழித்து இப்பொழுது “நானொரு நேனோ துகள்” என்ற புதுமையான தலைப்பில் தொகுப்பு கொண்டு வந்துள்ளார்.கவிதைகள் பலவும் புதிய மின்னணு உலகத்தின் புதிய அனுபவங்களைத் தனக்கேயான புதிய மொழியில் பேசுகின்றன. ஒவ்வொன்றும் அரசியல்தான் என்கிற புரிதல் அவருக்குள் நிகழ்ந்து உள்ளதால் தன் உள்ளேயும் வெளியேயும் நடக்கும் அனைத்தையும் ஒன்று விடாமல் உன்னிப்பாகத் கவனித்து விசாரணை செய்பவராகத் தன் கவிதைகளில் வெளிப்படுகிறார். ஃபூக்கோ சொன்னதுபோல இடர்ப்பாடுகளுக்கு வாய்ப்பைத் தரும் புதிய தன்னிலையை வடிவமைக்கும் புதிய தொழில்முனைவராகத் தன்னைக் கண்டு கொள்கிறார். தன்னைத் தான் கண்டுபிடித்துக்கொள்ளும் இந்தக் கண்டுபிடிப்புதான் மனித வெளியில் மறைந்து கிடக்கும் அதிகாரத்தின் முகமூடியைத் திறந்து பார்க்கும் அறிவு வளத்தை அவருக்கு வழங்கி இருக்கிறது.எனவே அவர் கவிதைத் தேர்வும் மொழியாடலும் வித்தியாசமாக அமைந்து வாசகர்களுக்கும் வித்தியாசமான வாசிப்பு அனுபவங்களைத் தருகின்றன. “உள்நோக்கிய மொழி” என்ற ஒரு கவிதை..

அவனோடு பேசுவதாக
நீ வதந்திகளைக் கிளப்பிவிட்டுக் கொண்டிருந்தாய்

உன்னோடு பேசுவதாக
அவன் வதந்திகளைக் கிளப்பிவிட்டுக்
கொண்டிருந்தான்

மிக மெதுவாக
எனக்குள் நகைத்துக் கொள்கிறேன்

என்னிடம் பேசிக்கொண்டிருக்கும்
என்னிடம்.

இதுபோலவே”மனப் பேச்சு” என்ற கவிதையில், “உறங்கும் நேரம் போக/ எந்நேரமும் துரத்தும் மனக்குரல் / நானே என்னிடம் பேசுகிறேன்/

நாளெல்லாம்.”என்கிறார்.

எந்த அளவிற்கு மண்ணுக்குள்ளே வேர் ஆழமாகச்

செல்லுகிறதோ அந்த அளவிற்கு வெளியே உயரமாக வளர்ந்து கொண்டே போகும் மரம். .அது போன்றுதான் கவிஞர்களும் அகத்துக்குள் ஆழமாகச் செல்லச் செல்லப் புறத்திற்குள்ளும் இன்னும் ஆழமாகவும் விரிவாகவும் பயணம் செய்கிறார்கள்

◆ ◆ ◆

பல கவிதைகளில் நகர வாழ்வு சார்ந்த நுணுக்கமான அவதானிப்புகள் பெரிதும் பதிவாகி உள்ளன. 1848 –லேயே நகர உருவாக்கம் என்பது மூலதனக் குவிப்பு வெறிகொண்ட முதலாளித்துவத்தின் ஒரு தந்திரம்தான் என்று "பொதுவுடைமை அறிக்கையில் " காரல்மார்க்ஸ் இவ்வாறு பதிவு செய்துள்ளார்:

"மக்கள்தொகையும் உற்பத்திச் சாதனங்களும் சொத்துக்களும் பரவிக்கிடக்கும் நிலையை ஒழித்துவிட்டு மக்கள் கூட்டத்தை நகர வளர்ச்சி என்ற பெயரில் ஆங்காங்கே குவித்து வைத்துள்ளது. உற்பத்திக் கருவிகளையும் மையப்படுத்தி உள்ளது. சொத்துக்களை ஒரு சிலர் கையில் குவிய வைத்துள்ளது .இதன் தவிர்க்க இயலாத விளைவாக அதிகாரமும் மையப்படுத்தப்பட்டு விட்டது. எனவே இது தமக்கெனத் தனியான நலன்களுக்கு ஏற்பச் சட்டங்கள் ,வரிவிதிப்புகள், அரசாங்க அமைப்புகள் என உருவாக்கி சுயேச்சையான மாநிலங்களை எல்லாம் ஒன்றுமில்லாமல் ஆக்கி ஒரே அரசாங்கம், ஒரே சட்டத் தொகுப்பு, ஒரே தேசிய வர்க்க நலன், ஒரே தேசம், ஒரே சுங்கவரி முறை கொண்ட ஒரே தேசமாக ஒன்றிணைத்துக் கொண்டு விட்டது". இன்று சந்தைப் பொருளாதாரம் இந்தியாவிற்குள் வந்த பிறகு நாம் இதைக் கண்முன்னாலேயே கண்டு கொண்டிருக்கிறோம். இப்படியான ஒரு நகரம் எப்படி இருக்கும்? குற்றங்களின் கொள்கலமாக, தீமைகளின் விளையாட்டு மைதானமாக மாறி இருக்கிறது.இதைக் கவிஞர்கள் சரியாகக் கண்டு கொள்கிறார்கள்.கவிஞர் கல்பனா "நகர நரகம் "என்று இதற்குப் பெயர் இடுகிறார்.இப்படி எழுதுகிறார்:

நகரம் அழகுதான்....
சாலைகளுக்கு அடியில்
அந்தர்யாமியாக ஓடும்
நரகல் நதி

நகரம் தனக்குள் ஏற்படுத்திய அருவருப்பை இதைவிட மேலாக எடுத்துரைத்திட முடியாது.மற்றோரிடத்தில் இந்த நகரம் பேசிப்பேசிக் களித்து மகிழும் ஆண் பெண் உறவைக் கூட எந்த அளவிற்கு நேரம் வாய்க்காதபடி எந்திரமாய் மாற்றிப் போட்டிருக்கிறது என்பதை நுட்பமாகப் பதிவு செய்துள்ளார்:

" நீ ஓய்வாக இருக்கும் பொழுது/எனக்குப் பேச நேரம் கிடைப்பதில்லை/ நான் ஓய்வாக இருக்கும் பொழுது/ உனக்குப் பேச நேரம் கிடைப்பதில்லை / நீயும் நானும் பேசும் பொழுது/ சொல்லிக் கொள்கிறோம்/ ஓய்வாக இருவரும் பேசிக் கொள்ள வேண்டும் / நேரம் கிடைக்கும் பொழுது."

எளிமையான மொழி கொண்டு வலிமையான காட்சிகளை வடிவமைப்புச் செய்யும் மொழித்திறன் கல்பனாவிடம் சர்வ சாதாரணமாகக் கூடி வந்துள்ளது என்பதை வாசகர்கள் தொகுப்பு முழுவதும் கண்டு சுவைக்கலாம்.

◆ ◆ ◆

கல்பனாவின் கவிதை ஆக்கத்தில் குறிப்பிடத்தக்க ஒன்று நம்முடைய இந்த "செல்பேசி" உலகில் நாமும் நம் மனித உறவுகளும் என்னவாக மாறிப் போய்விட்டன என்பதைக் காட்சிப்படுத்தும் பாங்காகும்."இரண்டறக் கலத்தல் குறித்த நவீன டைரி குறிப்பு ", "செல் கிரகம்", "புலன மொழி", "புலனக் குழுக் சொந்தங்கள் ",மாந்திரிக மின் குரல்கள், " டிஜிட்டல் காமம் ",சர்வம் வெப்பினார் மயம்", " காண்டல் இல்லாது யாண்டு பல கழிய "மின்மலர்"முதலிய கவிதைகள் நிகழ்கால டிஜிட்டல் வாழ்வைப் புனைவு மொழியில் நம் முன் காட்சிப்படுத்துகின்றன. குறிப்பாக நவீனக் காதலர்களின் நவீன மனத்தை மிக நுட்பமாகப் பதிவு செய்துள்ளார்: அவற்றுள்ளே பெண்ணுக்குரிய நவீன உரிமைக் குரலும் ஒலிக்கின்றது.கல்பனா என்ற கவிஞருக்குள் திரண்டு வந்திருக்கும் நான் வித்தியாசமானவள், எதையும் வித்தியாசமாகப் பார்ப்பவள்,சிந்திப்பவள் என்ற சுய கண்டுபிடிப்பின் விளைச்சல் இவர் கவிதை முழுவதிலும் கலந்து கிடக்கின்றது.எனவேதான் இவரால் சுவர் இருந்த இடத்தில் ஜன்னலைக் கொண்டுவந்து பொருத்த முடிகிறது.வாழ்க்கையையும் "சிறகை வெட்டுவதற்கு என்றே கத்தரிக்கோலுடன் திரியும்" ஒன்றாக உருவகப்படுத்த முடிகிறது. இன்னும் மனத்திற்குள் கண நேரத்தில் ஓடி மறையும் எண்ணத் துளிகளையும் வாழ்வில் சந்திக்க நேரும் சிறுசிறு நிகழ்வுகளையும் இவர் புனைவு மொழியில் பிடித்திருக்கும் பாங்கு வாசிப்பு இன்பத்தைப் பெருக்குவதாக அமைந்துள்ளது.சான்றாக ஒன்றைச் சொல்லி இந்த மதிப்புரையை முடித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன்.நாம் இன்றைக்கு கேமராக்களால் சூழப்பட்டு இருக்கிறோம்.எல்லோரும் உணரும் இந்த அனுபவத்தைக் கவிஞர் பதிவு செய்ய எண்ணுகிறார்;எங்கிருந்து தொடங்குகிறார் பாருங்கள்; செவ்வாய்க் கிரகத்தின் வெப்பப் புயலைப் படம்பிடிக்கும் சேட்டிலைட் கேமராவில் தொடங்குகிறார்;தொடர்ந்து நகரம் முழுவதும் பொருத்தப்பட்டிருக்கும் கேமராக்களை இவர் சொற்களால் படம் பிடிக்கிறார்."

"வீட்டுப்படி இறங்கியதிலிருந்து/ அலுவலக வாயில் வரை / மிகச்சரியாக 37 கேமிராக்கள்" என்று எண்ணியுரைக்கும் கவிஞர், குனிந்தாலும் நிமிர்ந்தாலும் கேமராக்கள் படம் எடுத்த வண்ணம் இருக்கின்றன என்றெல்லாம் எழுதும் கவிஞர் சட்டெனத் தனக்குள் திரும்புகிறார். நம் முகத்தை நாம் அலைபேசி கேமராவால் நூற்று சொச்சம் முறை பல்வேறு அபிநயம் காட்டி எடுத்து ஊர் உலகத்திற்குப் பதிவிட்டுக் கொண்டே இருக்கிறோம். மூன்று நூற்றாண்டுகளாய் காற்றில் கிளை பரப்பிய மரம் ஒரே ஒரு புயலில் நொடிப்பொழுதில் சரிந்து கிடப்பதைப் பார்த்த பிறகும் எதற்கு இத்தனைத் தன் மோகம் என்று கேட்கிறார். இவ்வாறு இந்தக்கவிதைப் பனுவல் வித்தியாசமான ஒரு வாசிப்பு அனுபவத்தை உறுதிப்படுத்துகிறது. புத்தர் கூறியதுபோலக் கவிஞர் கல்பனா தனக்குத்தானே ஒளியாக இருப்பதால் அல்லது அப்படி நம்புவதால் தன் புனைவு வெளியை வெளிச்சம் ஆக்குகிறார். பேராசிரியர் ரவிக்குமார் தன்னுடைய பின்னுரையில் கூறுவதுபோலத் தமிழ்ப் பெண் கவிஞர்களில் இவர் தனித்த அடையாளங்களோடு விளங்குகிறார் என்பதில் ஐயமில்லை.

**ப.கல்பனா, நானொரு நேனோ துகள்–கவிதைகள்**
**பரிசல் புத்தக நிலையம், சென்னை – 106.**
**தொ.எண்: 9382853646**

கட்டுரை

க.பழனித்துரை
gpalanithurai@gmail.com

# உயர் கல்வியும் சமூகமும்

காந்தி, நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து தான் கொலைசெய்யப்படுகின்றவரை தன் கருத்துக்களை தொடர்ந்து வெளிப்படுத்திக் கொண்டேயிருந்தார். அவை அனைத்தும் வி. ராமமூர்த்தி என்பவரால் தொகுக்கப்பட்டு புத்தகமாக வெளிவந்துள்ளது. அந்தப் புத்தகத்தை கு.இலக்குவன் தமிழாக்கம்செய்து பாரதி புத்தகாலயத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இதற்குத் தலைப்பு "காந்திஜியின் இறுதி 200 நாட்கள்". மனச்சாட்சிக்கு மதிப்பளிக்கும் ஒவ்வொருவரும் படித்தால் நம் மனத்தில் சிந்தனையில் செயல்பாட்டில் பெரும் மாற்றங்களைக் கொண்டுவந்துவிடும். மனமாற்றத்திற்குப் படிக்க வேண்டிய ஒரு சில நூல்களில் இந்த நூல் மிக முக்கியமான ஒன்று. மனச்சாட்சியை உலுக்கும் தன்மை கொண்ட நூல் என்றால் அது மிகைஆகாது. அவர் வாழ்ந்த அந்தக் காலம் பற்றிய ஒரு சிறிய புரிதலுடன் அதனைப் படித்தால் நம்மை மாற்றும் சக்தி அந்த நூலுக்கு உண்டு. அந்த 200 நாட்களில் அவர் தன் உரையின் மூலமும், கடிதங்களின் மூலமும் வெளிப்படுத்திய கருத்துக்கள் இன்றைய அரசியல், சமூகம், ஆளுகை, நிர்வாகம் என அனைத்துக்கும் பொருந்துவதாக உள்ளன. அதில் ஒன்று கல்வி பற்றிய அவரின் ஆழமான கருத்து. அவர் சுதந்திர இந்தியாவிற்கு ஒரு புதிய கல்விக் கொள்கையையே தந்தார். அந்தக் கல்வி ஆதாரக் கல்வி. அது தான் புதுமைக் கல்வி. அது சமுதாயத்திற்கான கல்வித் திட்டம். மாணவர்களுக்கு மட்டுமான கல்வி அல்ல. அந்தக் கல்வியில், கல்விச்சாலைக்கும் சமூகத்திற்கும் ஓர் உயிரோட்டமான தொடர்பு இருந்தது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை மட்டுமல்ல, வாழ்வியலை உயர்த்தும் உன்னதக் கல்வி முறையைக் காட்டினார். அந்த நிலையில் உயர் கல்வி பற்றி அவர் வெளியிட்ட கருத்து மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அது இன்று மிகவும் தேவையானது என்பதால் அந்தக் கருத்தை இங்கு பதிவு செய்கிறேன்.

ஓர் உயர்கல்வி நிறுவனம் என்பது, அந்த நிறுவனத்தைச் சுற்றி இருக்கின்ற சமூகங்களின் வாழ்வியலில் தன் செயல்பாட்டால் மேம்பாடு கொண்டுவர இயலவில்லை என்றால் அந்த நிறுவனம் தரும் கல்வி பொருளற்றது என்று கூறினார். ஓர் உயர்கல்வி நிறுவனம் என்பது, ஓர் உயிரோட்டமிக்க தொடர்பை தன்னைச் சுற்றி இருக்கின்ற சமூகங்களுடன் ஏற்படுத்திச் செயல்பட வேண்டும். அப்படிச் செயல்பட்டு அந்த மக்களின் வாழ்வில் விரும்பத்தக்க மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும் என்பதுதான் அவரின் சிந்தனையோட்டம். மேற்கத்திய கல்வி முறையால் இந்தச் சமூகத்தை மாற்ற இயலாது என்பதை திடமாக நம்பினார். அது மட்டுமல்ல மேற்கத்திய கல்வி முறையால் இந்திய சமூக வாழ்வியலின் உன்னத மேம்பாட்டுக்கு உதவிட முடியாது என்று முடிவெடுத்துத்தான் புதிய கல்வி முறை நோக்கி நகர்ந்தார்,

காந்தியின் கல்விக் கொள்கை, சமூக மாற்றத்திற்கானது, மேம்பாட்டுக்கானது, உயர்வுக்கானது என்று வரையறுக்கப்பட்டுள்ளது. அந்தக் கல்வி மேற்கத்திய கல்வி முறையிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. இந்தக் கல்விமுறை இந்திய மக்களுக்கு குறிப்பாக கிராமங்களில் வாழ்ந்த மக்களுக்கு அறிவும் ஞானமும், அளப்பறிய உயர்தர்ம வாழ்க்கை நெறிகளும் உண்டு என்பதை அங்கீகரித்துச் செயல்படுவது. அதற்காகவே காந்தியக் கல்வியை நடைமுறைப்படுத்த உயர்கல்வி நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வந்தன. காலப்போக்கில் அரசின் ஆதரவற்ற நிலையில் அனேகமாக ஒன்றைத் தவிர அனைத்தும் மற்ற மேற்கத்திய கல்வி நிறுவனங்களுடன் இணைக்கப்பட்டுவிட்டன. ஒரே ஒரு நிறுவனம் மட்டும் தன்னை தக்கவைத்துக் கொண்டது. அதுதான் காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம். அந்தப் பெயரைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவே எதாவது ஒரு முறையில் தன்னை அந்த நிறுவனம் சமூகத்துடன் இணைத்துக்கொள்ள கிராம மேம்பாட்டுச் செயல்பாடுகளைச் செய்து வருகின்றது. அது காந்தி கல்விக்கொள்கையின் எச்சம்.

கிராம மக்களுடன் இணைந்து கிராமப் புனரமைப்புக்குச் செயல்படுவதற்காக உருவாக்கப்பட்டது என்பதுதான் இதன் வரலாற்றின் ஆரம்பம். அத்துடன் கிராமப் புனரமைப்புக்குச் செயல்படுவதற்குத் தேவையான ஊழியர்களை தயார் செய்ய உருவானவைதான் இந்த நிறுவனத்தின் பாடத்திட்டங்கள். அதன் பிறகு விரிவாக்கப்பட்டது தான் ஆராய்ச்சி. எனவே விரிவாக்கம், கல்வி, ஆராய்ச்சி என்கிற மூன்றும் படிப்படியாக வளர்ந்தவை. இந்த மூன்றில் கிராம மேம்பாட்டுக்கான விரிவாக்கப்பணிதான் பிரதானமாக்கப்பட்டது காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத்தில். ஒரு காலக் கட்டம் வரை விரிவாக்கப்பணியைத்தான் கிராமங்களில் செய்து வந்தது. பொதுவாக விரிவாக்கப் பணி என்பது கல்வி, ஆராய்ச்சி என்ற

இரண்டையும் தாண்டி நடைபெற வேண்டிய பணி. ஆனால் காந்திகிராமத்தில் இதற்கு மாறாக விரிவாக்கத்தில் தான் உயர்கல்வி நிறுவனம் உருவாக்கப்பட்டது. விரிவாக்கப்பணிகளில் மிகப்பெரிய அனுபவங்களைத் தாங்கி நிற்கும் பல்கலைக்கழகமாக காந்திகிராமப் பல்கலைக்கழகம் இன்றும் திகழ்கிறது. சமீபத்தில் இந்தப் பல்கலைக் கழகத்தில் ஒரு பயிற்சிப் பட்டறை நடந்தது. இந்தப் பயிற்சி பணிப் பட்டறையில் ஆறு மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகங்களில் பணியாற்றும் மத்திய அரசின் “உன்னத் பாரத் அபியான்” என்ற திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர். இந்தத் திட்டத்தில் ஊரக விரிவாக்கப் பணிகளை எப்படிச் செயல்படுத்துவது என்பது பற்றிய புரிதலை ஏற்படுத்துவதற்குத்தான் இந்தப் பயிற்சியை பல்கலைக் கழக மானியக் குழு நடத்தியது.

இந்தத் திட்டம் மத்திய அரசால் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டு, தோல்வியைச் சந்தித்தது. அதன்பிறகு, அதற்கு உயிர் ஊட்டப்பட்டு உன்னத் பாரத் அபியான் 2.0 என அறிமுகப்படுத்தப்பட்டு முழுவீச்சில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. முதலில் இந்தத் திட்டம் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டும். ‘உன்னத பாரதம்படைக்கும் இயக்கம்’ என்பது இதன் பொருள். இதன் செயல்பாடு என்பது இந்தியாவில் உள்ள 1000க்கும் அதிகமான பல்கலைக் கழகங்களிலும் 40000க்கு மேலான கல்லூரிகளிலும், படிக்கும் மாணவர்களுடன் கிராமங்களுக்குச் சென்று கட்டாயமாக கிராமப் பணிகள் செய்து, அதன் அடிப்படையில் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற வேண்டும் என்று மத்திய அரசு முடிவு செய்து அறிவித்துள்ளது.



இதுவரை பல்கலைக் கழகங்களும் கல்லூரிகளும் மாணவர்களுக்கு வகுப்புக்களில் பாடம்சொல்லி தேர்வு நடத்தி சான்றிதழ் தருவதை மட்டுமே கட்டாயப்பணியாக வைத்திருந்தன. அத்துடன் ஆராய்ச்சி என்பதும் இணைக்கப்பட்டது. தற்போது கிராம விரிவாக்கப் பணி என்பதை மூன்றாவது கட்டாயப் பணியாக உயர்கல்வி நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதைத்தான் காந்தி விரும்பினார். படித்தவர்கள் எப்பொழுது சமூகப்பார்வை பெறுவார்கள் என்றால், அவர்கள் சமூகத்துடன் இணைந்து செயல்பட்டால்தான் சமூகம்பற்றிய அக்கறை அவர்களிடம் உருவாகும். ஆகையால்தான் காந்தி உயர்கல்வி நிறுவனங்கள் சமூகத்துடன் இணைந்து பணி செய்ய வேண்டும் எனக் கூறினார். இதை ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்கின்றார்களா இல்லையா என்பது வேறு. இதை எப்படிச் செயல்படுத்துவது என்று பெரும்பாலான ஆசிரியர்களுக்குத் தெரியாது என்பதுதான் நிதர்சனமான உண்மை. காரணம் உயர்கல்வி நிலையங்கள் தன்னை ‘அறிவுருவாக்கம் செய்யும் உற்பத்தித் திருத்தலம்’ என நினைத்துச் செயல்படும் ஒரு மாபெரும் கட்டமைப்பு. அது கிஞ்சித்தும் சமூகம் சார்ந்து சிந்திப்பது கிடையாது, ஆகையால்தான் மக்கள் வரிப்பணத்தில் மருத்துவப் படிப்பை மேற்கொள்ளும் மாணவர்கள் கூட கிராமத்தில் பணி செய்ய மறுக்கின்றார்கள். அதன் அடிப்படையில் கிராமப்பணி என்பது கட்டாயமாக்கப்பட வேண்டியுள்ளது. படித்தவர்கள் சமூகத்துடன் இணைவதும் கிடையாது, அவர்கள் ஓர் தனி உலகமாக இயங்கும் பார்வை கொண்டவர்களாகவே இயங்குகின்றார்கள். அப்படி இயங்கும் படித்தவர்களை சமூகத்திற்குள் சென்று சேவை செய் என்றால் எப்படிச் செய்வது என்பதுதான் கேள்வி.

அடுத்து உயர்கல்வி நிலையங்களில் பணிபுரிவோர் சமூகம் அறிவுடன் செயல்படுவதாக என்றுமே நினைத்தது கிடையாது. கிராமங்களில் வாழ்வோரை தாழ்வாகப் பார்க்கும் பார்வை படித்தவர்களுக்கு உண்டு. ஆகையால்தான் மகாத்மா காந்தி இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன் முதல் பணியாக கிராம மக்களின் சுய மரியாதையை மீட்டெடுக்க வேண்டும் என்றார். இந்திய நாகரீகத்தின் விழுமியங்கள் கிராமிய கலாச்சாரத்தின் வெளிப்பாடுகளாகும். கிராமத்தில் பொருளாதாரம் உண்டு, வாழ்வாதாரம் உண்டு, கலை உண்டு, இலக்கியம் உண்டு, ஆன்மீகம் உண்டு, மருத்துவம் உண்டு என்பதை நம் படித்த சமூகம் உணர்ந்து செயல்பட்டது கிடையாது. எதோ அங்கு மூட நம்பிக்கையும், சாதியமும், வறுமையும், தாண்டவமாடுவதாக எண்ணும் போக்கு படித்தவர்களிடம் உண்டு. இவை அனைத்தும் இடையில் வந்தவை. குறிப்பாக வறுமை என்பதும், அடிமை வாழ்வு என்பதும் வெள்ளையரால் வந்தது என்பதை நம்மில் பலரும் அறியாதவை. அந்த நிலையில் உயர்கல்வி நிலையங்கள் கிராமங்களுக்குச் சென்று கிராமத்து மக்களின் தேவை அறிந்து அவர்களுடன் இணைந்து செயல்பட்டு கிராம மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபட வேண்டும் என்று அரசு ஆணையிடுகின்றபோது, இந்தப் பணிகளைச் செய்வதற்கு ஆசிரியர்களுக்குப் புரிதலும் தொலைநோக்குப் பார்வையும் வேண்டும். அது மட்டுமல்ல இந்தத் திட்டப் பணியினை கிராமங்களில் உணர்வுடன் நிபுணத்துவத்துடன் நிறைவேற்றத் தேவையான அணுகுமுறைகளையும், முறைமைகளையும் உருவாக்குவது கட்டயமாகின்றது. அதற்காகத்தான் இந்தத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த ஒவ்வொரு உயர் கல்வி நிறுவனத்திற்கும் ஒரு ஒருங்கிணைப்பாளர்; அதேபோல் ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் உயர்கல்வி நிலையச் செயல்பாடுகளை ஒருங்கிணைக்க ஒரு பிராந்திய ஒருங்கிணைப்பாளர்; பிராந்தியங்களை இணைக்கும் தேசிய ஒருங்கிணைப்பாளர் என

நியமனம் செய்துள்ளது பல்கலைக்கழக மானியக்குழு.

அப்படிப்பட்ட பிராந்திய அளவிலான நிகழ்வு ஒன்று காந்திகிராம கிராமிய பல்கலைக் கழகத்தில் ஏப்ரல் 27 லிருந்து 29 ஆம் தேதிவரை நடந்தது. அதில் மிக முக்கியமாக கற்றுக் கொடுக்கப்பட்ட பொருள், "சமூக அடிப்படையிலான பங்கேற்பு ஆய்வு". அந்த பங்கேற்பு ஆய்வு என்பதை எப்படிச் செயல்படுத்துவது என்பதனையும் இந்தப் பயிற்சியின் மூலம் விளக்கினர். மத்திய அரசின் இந்த புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எப்படிப்பட்ட தயாரிப்புடன் மாணவர்களும் ஆசிரியர்களும் கிராமங்களுக்குச் செல்ல வேண்டும், அப்படிக் கிராமங்களுக்குச் செல்லும்போது கிராமங்களில் என்னென்ன செயல்பாடுகளைச் செய்திட வேண்டும் எவைகளையெல்லாம் மறந்தும் செய்துவிடக்கூடாது என்பதை அந்த மூன்று நாள் பயிற்சியில் ஆறு மாநில உயர்கல்வி நிறுவனங்களிலிருந்து வந்த ஆசிரியர்களுக்குக் கற்றுத் தந்தனர். இந்தப் பணிகளை கிராமங்களில் செய்ய மிகவும் முக்கியமாக நம் ஆசிரியர்களுக்குத் தேவை ஒரு மனமாற்றம். அதாவது கிராமத்திற்குச் சென்று பணியாற்றும்போது கிராமத்தை தத்தெடுக்கின்றோம் என்று கூறக்கூடாது. அந்தச் சொல் கிராமத்து மக்களைச் சிறுமைப்படுத்துவதாகும். அதேபோல் கிராமத்து மக்களுக்கு நாம் அறிவு புகட்டச் செல்கிறோம் என்ற மனோபாவத்துடனும் செல்லக் கூடாது. நாமும் கிராம மக்களும் இணைந்து ஒருவருக்கொருவர் கற்றுக் கொண்டு கிராம மேம்பாட்டுக்குப் பணி செய்வோம் என்ற மனோபாவத்தில் செயல்பட வேண்டும் என்பதுதான் மிகவும் வலியுறுத்திய கருத்தாகும்.

இந்தப் பயிற்சியை கருத்தளவில் வடிவமைத்து ஒருங்கிணைத்து நடத்தியவர் டாக்டர் ராஜேஷ் தாண்டன் என்ற யுனெஸ்கோ பேராசிரியர். இவர் இந்தப் பணியில் தன்னை 30 ஆண்டு காலமாக கரைத்துக் கொண்டு ஆசிய நாடுகளின் உயர்கல்வி நிலையங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பயிற்சியளித்து வருகிறார். ஆகையால்தான் இவரை பல்கலைக்கழக மானியக் குழு இந்தப் பயிற்சியையும் நடத்தப் பணித்துள்ளது. இவர் பெரிய பயிற்சி நிறுவனத்தை நடத்தி வருகிறார். இன்றும் அந்த நிறுவனத்தின் தலைவராகச் செயல்படுகிறார். இந்த மூன்று நாள் பயிற்சியையும் இவர் வகுப்பாக எடுக்காமல் களத்திற்கு, ஆசிரியர்களை அனுப்பி, களப்பணிகளில் ஈடுபட வைத்து, அதன் அடிப்படையில் விரிவாக்கச் செயல்பாடுகளை எப்படிக் கிராமத்தில் செய்வது பற்றி வகுப்புக்களில் விவாதித்து புரிய வைத்தார். இந்தப் பயிற்சிக்கு தென் இந்திய மாநிலங்களிலிருந்து வந்த 38 ஆசிரியர்களும் ஒரே துறையைச் சார்ந்தவர்கள் அல்ல. பல துறைகளைச் சார்ந்த ஆசிரியர்கள் வந்திருந்தனர். இருவர் மருத்துவம் படித்து ஆசிரியராக பணி புரிபவர்கள். இந்த அத்தனை பேரும் அந்த மூன்று நாட்களும் நடந்து கொண்ட விதம் செயல்பட்ட விதம் மிகவும் ஆச்சரியம் அளித்தது.

பொதுவாக நம் நாட்டில் ஆசிரியர்கள் பயிற்சியை ஒரு பொருட்டாகவே கருத மாட்டார்கள். மேற்கத்திய நாடுகளிலும் வட அமெரிக்க நாடுகளிலும் ஏன் சீனாவிலும்கூட பயிற்சி என்றால் மிகச் சிரத்தையுடன் கலந்து கொள்வார்கள் ஆசிரியர்கள். யாரோ நம்மை அனுப்பி வைத்து விட்டார்கள். நம் தலைவிதி யார் யார் பேசுவதையெல்லாம் கேட்க வேண்டியிருக்கிறது என்று வேப்ப எண்ணையைக் குடித்தவர்கள்போல் வகுப்பில் இருப்பார்கள் நம் நாட்டு ஆசிரியர்கள். கடைசிநாளில் அவர்களுக்கு முக்கியம் சான்றிதழ். அவ்வளவுதான்! ஆனால் இந்த நிகழ்வுக்கு வந்திருந்த 38 பேரும் சினிமா பார்க்க ஆர்வப்படும் குழந்தைகளைப்போல் மூன்று நாளும் தன்னை இழந்து படிக்கவந்துள்ள மாணவர்களைப்போல் செயல்பட்டது மிகவும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. இது ஒரு சிறிய துவக்கமாக இருந்தாலும் இந்தத் திட்டத்தை ஆசிரியர்கள் சரியாக முறையாக புரிந்து கொண்டு கிராமப் பணிகளில் ஈடுபட்டால் மிகப் பெரும் மாற்றங்களைக் கொண்டு வந்து விடலாம். இந்தப் பயிற்சி வித்தை கற்றுக் கொடுக்கும் பயிற்சியல்ல. மாறாக கிராமங்களைப் புரிந்து கொண்டு, கிராம சமூகத்தை புரிந்து கொண்டு, கிராம அமைப்புக்களைப் புரிந்துகொண்டு, கிராம நிறுவனங்களைப் புரிந்து கொண்டு, கிராம சமூகக் கலாச்சாரத்தைப் புரிந்துகொண்டு, மக்களை மதித்து மக்களின் அறிவை மதித்து, மக்களுடன் இணைந்து செயல்படுவது என்பதைத்தான் மூன்று நாளும் இந்தப் பயிற்சியில் இவர்கள் கற்றுக் கொண்டனர். இந்தப் பயிற்சியில் மிக முக்கியமானது அறிவைப் பெறுவது அல்ல. மாறாக தங்களை மாற்றிக் கொள்வது. தங்களின் சிந்தனையை, நடத்தையை, செயல்பாட்டை மாற்றிக்கொள்வது ஒரு புதிய சிந்தனைச் சூழலில் இயங்குவது என்பதைத்தான் இந்தப் பயிற்சியில் மையக் கருத்தாக விவாதிக்கப்பட்டது.

இந்தப் பயிற்சி ஒரு வித்தியாசமான முறையில் வடிவமைத்து காலையிலிருந்து மாலைவரை சோர்வில்லாமல் நடத்தி கிராம வேலையில் ஆர்வம் மிக்கவர்களாக ஒவ்வொரு ஆசிரியரையும் அனுப்பி வைத்தது ஒரு நிறைவான செயல். அந்த நிகழ்வில் எனக்கும் ஒரு வாய்ப்புக் கிட்டியது, இந்த ஆசிரியர்களுடன் உரையாட. இந்த முறைமை என்பது வேறு ஒன்றும் அல்ல, இதுதான் காந்தியின் கல்விக் கொள்கை. மக்களுடன் பயணிப்பது, மக்களுக்கு அறிவும் ஆற்றலும், சக்தியும் உள்ளது என நம்புவது, அவர்கள்மேல் நம்பிக்கை கொள்வது, அவர்களுடன் இணைந்து பணி செய்து மக்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது. இதைத்தான் காந்தியும் கூறினார். இதை நடைமுறைப்படுத்தவேண்டும் என்று கட்டளையும் இட்டார். மாற்றம் நம்மிடமிருந்து துவங்கட்டும் என்று கூறிய காந்தியின் கருத்துக்கேற்ப இந்த பயிற்சி வடிவமைத்து செயல்பட்டதுதான் சிறப்பிலும் சிறப்பு. அதுவும் காந்தியின் கட்டளைப்படி கிராமியப் பணிகளுக்காக காந்திய சீடர்களால் உருவாக்கப்பட்ட காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத்தில் நடந்தது சாலச் சிறந்ததாக அமைந்தது.

*கட்டுரையாளர்: அரசியல் அறிவியல் பேராசிரியர் (பணிநிறைவு)*

தொடர்

தராசு ஷ்யாம்
shyamtv@gmail.com

7

# அமணமாகிய சமணம்

சமயம் இல்லாமல், காப்பியம் இல்லை. சமயத்தைப் பரப்பும் நோக்கத்திற்காகவே படைக்கப்பட்ட பல தமிழ்க் காப்பியங்களில் தலையாயது சீவகசிந்தாமணி.

ஒரு கதையைக் காப்பியமாக்கும்போது கட்டமைப்புக்கே முதல் இடம். புறநிலைக் கட்டமைப்பு, அகநிலைக் கட்டமைப்பு என்று அது இருவகை.

காப்பியத் தலைவனின் பிறப்பு முதல் அவன் மேற்கொள்ளும் தவ வாழ்க்கை வரையிலான செயல்பாடுகளை விவரிப்பது ஒரு வகை. அவனது வாழ்வின் முக்கிய நிகழ்ச்சியில் தொடங்கித் தேவைக்கேற்ப முன் பின் நிகழ்வுகளைத் தொகுப்பது மற்றொரு வகை;

சமணத் தத்துவங்களையும், வழிபாட்டையும் எடுத்துரைப்பதே சீவக சிந்தாமணியின் நோக்கம். என்றாலும் தமிழ்ச் சமூகத்தின் பொதுவான சமய வழிபாடுகளைப் பதிவு செய்யவும் திருத்தக்கர் தவறவில்லை.

சமயச் சிந்தனைகளில் ஊழ்வினை எப்போதுமே உறுத்து வந்து ஊட்டும். சீவகன் எட்டுப் பெண்களை மணந்து பின் அவர்களைப் பிரிந்து செல்வதற்கு ஊழ்வினையைக் காரணம் காட்டுகிறார் திருத்தக்கர்.

**"வாழ்வுப் பயிருக்கு நோய் செய்வன**
**தீவினையாகிய விலங்கு"**

என்று வினைக்கோட்பாடே காரணம் காட்டப்படுகிறது. மகாராணி விசயை அடைந்த துன்பத்திற்கும்–

**உம்மை நின்றதொர் ஊழ்வினை உண்மையால்**
**இம்மை இவ்இடர் உற்றனள்**

(உம்மை: முற்பிறப்பு.. இம்மை: இப்பிறப்பு)

ஊழ்வினையே காரணம் என்கிறார் திருத்தக்கர்.

அறம் எது? பிறர்க்கு உதவுவதே நல்லறம். அதற்கான பக்குவம் ஏற்பட வாழ்வின் நிலையாமையை உணர்த்தியே ஆக வேண்டும். செல்வம் என்றும் நிலைக்கும்..இளமை என்றும் கொழிக்கும்..அதிகாரம் என்றும் நிலைக்கும்..அழகு என்றும் இருக்கும் என்று நினைக்கும் மனித இயல்பை மாற்றுவதே காப்பியங்களின் நோக்கம். சீவக சிந்தாமணியும் அதற்கு விதிவிலக்கல்ல.

"நாமகளாகிய கலைமகளை அடைவதில் தொடங்கியது என் வாழ்க்கை. காந்தர்வதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை என்ற எட்டுப் பெண்களைத் தலைவிகளாகக் கொண்டேன் பின்னர் எனக்குரிய மணமகளையும் பெற்றேன். நிறைவாக முக்தி அடைவதில் என் வாழ்வு முடிந்தது, நான் எட்டு குணநலன்களை அடைந்தேன் என்பதையே என் திருமணங்கள் தத்துவ ரீதியாகப் பேசுகின்றன எழுத்தாளரே!" என்று விளக்கினான் சீவகன்.

நாம் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தோம். அந்த மாயா வினோத உலகின் மயக்கம் மெல்லக் கலையத் துவங்கி இருந்தது.

"வளர்ப்புத் தந்தையின் ஒப்புதலைப் பெற்று வித்யாதர மன்னன் கலுழவேகன் மகள் காந்தர்வ தத்தையை இராசமாபுரத்தில் வீணைப் போட்டியில் வென்றேன். அவளையே பரிசாகப் பெற்றேன். நான் பெறாமலேயே கட்டியங்காரனின் பொறாமையையும் பகைமையையும் அடைந்தேன்!" என்று மீதிக் கதையைச் சொல்லத் துவங்கினான், சீவகன்.

வாழ்க்கையில் இன்பத்திற்கு எது காரணமோ அதுவே துன்பத்திற்கும் காரணம். சமணத் தத்துவங்கள் இதைத் தொடர்ந்து வலியுறுத்துகின்றன. அவையே வாழ்வின் அனுபவங்களைப் பெருக்கி இறுதியில் "நிலையாமை" என்ற அரும்பொருளை உணர்த்துகின்றன. தானே தன்னை உணர்தலே சமணத்தின் அடிப்படை.

**இன்பக் காரண மாம்விளை யாட்டினுட்**
**டுன்பக் காரண மாய்த்துறப் பித்திடு (சீ. சி: 909)**

கிழக்கத்திய சமய நம்பிக்கைகளில் மறுபிறப்புக் கோட்பாடு குறிப்பிடத்தக்கது. சீவகன் முற்பிறப்பில்

அசோதரனாகப் பிறந்தவன். (முனிவன்). அவனது மனைவிகள் தேவருலகில் பிறந்தனர். நந்தட்டன் தேவனாகப் பிறந்தான்.

சிந்தாமணியில் ஓரிடத்தில் கூட ஊன் உணவு பற்றிய பேச்சே இல்லை. நல்ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கம் முதலான சமண அறங்கள் மட்டுமே தெளிவுபடுத்தப்படுகின்றன.

இராசமாபுரத்தில் குணமாலை-சுரமஞ்சரி ஆகிய இருவரும் வணிகக் குடியில் பிறந்த தோழியர். கையால் இடித்து மேனியில் பூசிக் கொள்ளும் சுண்ணம் என்ற நறுமணப்பொடி செய்வதில் இருவருமே சிறந்தவர்கள். தங்களில் எவருடைய சுண்ணம் சிறப்பு வாய்ந்தது என்ற போட்டி அந்த இணைபிரியாத தோழிகளுக்குள் வந்தது. அது தான் விதி!

"இரண்டும் என்னிடம் கொண்டு வரப்பட்டன எழுத்தாளரே! பல்வேறு கூறுகளை ஆராய்ந்து குணமாலையின் சுண்ணமே சிறந்தது என்று நான் தீர்ப்பளித்தேன். அப்போது கட்டியங்காரனின் பட்டத்து யானை மதம் பிடித்துக் கூட்டத்தில் புகுந்தது. அதனிடமிருந்து குணமாலையைக் காப்பாற்றும்படி ஆனது. அதனால் எங்களுக்குள் ஏற்பட்ட நேசத்தால் எனது இரண்டாவது திருமணம் நடந்தது!" என்றான் சீவகன்.

முன்னதாக அந்தணர் சோற்றுத் திரளை ஒரு நாய் தீண்டியது என்று சொல்லி அதைத் தடியால் அடித்தனர்.

**அந்தணர்க்கு ஆக்கிய சோற்று குவாலினை**
**வந்து ஒரு நாய் கதுவிற்று அது கண்டு அவர்**
**உய்ந்து இனி போதி என கனன்று ஓடினர்**

(சீ. சி: 934)

"நான் இரக்கப்பட்டு அதன் செவியில் மறைமொழி ஓதினேன். அப்போது ஓர் அதிசயம் நடந்தது. அந்த நாய் அதன் உடல் நீங்கி. வேறு உருவடைந்தது!" என்றான் சீவகன் நம்மிடம்.

"என் பெயர் சுதஞ்சணன் நான் இப்பொழுது இயக்கர் தலைவனாகிச் சந்திரோதயமென்னும் நகரில் இனிதே வாழும் பேறுபெற்றேன். உனக்குக் குற்றேவல் செய்யும் கருத்துடையேன்!" என்றது அந்த உருவம்

"அது கேட்ட நான் வியந்து "நண்ப! எனக்குப் பகைவரால் துன்பம் நேரும்போது துணைபுரிவாயாக! இப்பொழுது நின்னூர் சென்று இன்புறுக!" என்று கூறினேன்.



அப்போது பட்டத்து யானை அசனிவேகத்துக்குத் தீங்கு விளைவித்ததாக சீவகன் மீது குற்றச்சாட்டு சுமத்தி அவனைக் கட்டியங்காரனின் படைவீரர்கள் கைது செய்தனர். சீவகனிடம் தோற்றதால் பட்டத்து யானை உணவுக் கவளம் உட்கொள்ள மறுத்துச் சாகக் கிடக்கிறதாம். சிறைப்படுத்துவது என்று அரசர்கள் முடிவு செய்துவிட்டால் காரணங்களுக்கா பஞ்சம்?

"கட்டியங்காரனின் சதியைப் பார்த்தீரா, எழுத்தாளரே!" என்று ஒரு கணம் நொந்து கொண்டான் சீவகன். பின்னர் தொடர்ந்தான்.

"காந்தருவதத்தை தன் மந்திர சக்தியால் என்னை மீட்க முயன்றாள். ஆனால் நான் சுதஞ்சணனை நினைத்தேன். அவன் காற்று-கனமழையைத் தோற்றுவித்து அரசன் படையை நிலைகுலையச் செய்தான். என்னைத் தன் மார்போடு அணைத்தெடுத்து விண்ணில் விரைந்து அவனது நகரான சந்திரோதயம் பதிக்குச் சென்றான்." என்று நடந்த சம்பவங்களை விவரித்தான் சீவகன்.

சிறிது காலம் சுதஞ்சணனுடன் கழித்த சீவகன் பின்னர் அவனிடமிருந்து விடைபெற்றுப் பல்லவ தேசத்தில் சந்திராபம் என்ற ஊரை அடைந்தான். அது பருவம் தவறாமல் மழை பெய்யும் நன் நாடு.

படுமழை பருவம் பொய்யாப் பல்லவ தேய மென்னுந்
தடமலர்க் குவளைப் பட்டந் தழுவிய யாணர் நன்னாடு
(சீ. சி. 1185)

*"ஆனால் அங்கும் எனக்கு முன் என் விதி காத்து இருந்தது." என்று தொடர்ந்தான் சீவகன்.*

*பல்லவ தேசத்தின் அரசர் தனபதி. அவர் மகன் உலோக பாலன். இருவரும் சீவகனோடு நட்பு கொண்டு இருந்தனர். அரசன் மகள் பதுமை. ஒரு நாள் அவளை நாகம் தீண்டியது. சீவகனை விதி அழைத்தது.*



நங்கைதன் முகத்தை நோக்கி நகைமதி யிதுவென்
றெண்ணி யங்குறை யரவு தீண்டி
(சீ. சி. 1271)

*சீவகன் நாகக் கடி வைத்தியம் தெரிந்தவன். பாம்பு தீண்டிய உடலில் வீசும் மணத்திலிருந்து எத்தகைய நாகம் தீண்டியது என்பதை அறிந்து கொள்ளும் வித்தை கைவரப் பெற்றவன்.*


*நஞ்சு ஏறிய உடம்பிலிருந்து காய்ச்சும் பசுவின் பால் மணம் வந்தால் தீண்டியது அந்தண நாகம். நந்தியாவட்டைப் பூ நாற்றம் வரின் அரசநாகம், தாழைமலர் மணம் வந்தால் தீண்டியது வணிக நாகம், அரிதார மணம் வந்தால் தீண்டியது வேளாண்நாகம்.*

*நாக விஷத்தை முறிந்துச் சீவகன் பதுமையைக் காப்பாற்ற இருவருக்கும் காதல் ஏற்பட்டது. கடிமணம் நடந்தது. சில காலம் தங்கியபின் அங்கிருந்து புறப்பட்டு தக்க நாட்டில் கேமமாபுரம் என்ற ஊரை அடைகிறான்.*

*தக்க நாட்டின் பெரு வணிகன் சுபத்திரன். அவளது மகள் கேமசரி. அவள் பிறந்தபொழுது சுபத்திரன் கணிகனை அழைத்து "இவளுக்குக் கணவன் யார்?" என்று கேட்டு இருக்கிறான். "உன்மகள் எவனைக் கண்டு நாணுகிறாளோ! அவனே இவளுக்குக் கணவன். பிற ஆடவரைக் காணுங்கால் கேமசரிக்கு நாணம் தோன்றாது," என்று கூறினான் சோதிடன்.*

*எனவே தன் கடைக்குவரும் அழகிய இளைஞர்களை மனைக்கு அழைத்துச்சென்று விருந்து வைத்து வந்தான் சுபத்திரன். ஒருவரையும் பார்த்துக் கேமசரி வெட்கப்படவே இல்லை. மகளுக்கு மணப்பருவம் கழிந்து விடுமோ என்று சுபத்திரன் வருந்தினான்*

*"அப்போது தான் என்னை விதி அங்கு அழைத்துச் சென்றது. சுபத்திரன் என்னையும் இல்லத்திற்கு அழைத்துச்சென்று விருந்து கொடுத்தார். என்னைக் கண்ட கேமசரி பெரிதும் நாணமுற்றாள். பின்னர் எனக்கும் அந்த மங்கை நல்லாளுக்கும் திருமணம் நடந்தது. ஆனால் அவளைப் பிரிந்து மத்திம தேசத் தலைநகரான ஏமாமாபுரத்திற்குச் சென்றேன்!" என்று தன் மணவாழ்க்கையை விவரித்தான் சீவகன்.*


ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு
உ
திருத்தக்கதேவரியற்றிய
சீவகசிந்தாமணி மூலமும்
நச்சினார்க்கினியருரையும்
இவை
உத்தமதானபுரம்
மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்தியகலாநிதி
டாக்டர் வே. சாமிநாதையரவர்கள்
பல பிரதிரூபங்களைக்கொண்டு பரிசோதித்து
நூதனமாக எழுதிய பலவகை ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன்

*பிறவிக்குக் காரணம் பற்று. பற்று நோய் பற்றினால் பிறவியை அறுக்க இயலாது. பிறப்பறுக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் மண வாழ்வில் இருந்து விடுபட வேண்டும். கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிச் சென்ற தத்துவங்களில் முக்கியமானது புலனடக்கம். சமணம் வலியுறுத்தியது இதையே.*

அருமையின் எய்தும் யாக்கையும் யாக்கையது அழிவும்
திருமெய் நீங்கிய துன்பமும் தெளிபொருள் துணிவும்
குருமை எய்திய குணநிலை கொடைபெறு பயனும்
பெருமை வீட்டொடும் பேசுவல் கேளிது பெரியோய்.
(சீ. சி. 2748)

மேற்கண்ட முக்தி இலம்பகச் செய்யுளில் சமண மதத்தின் தத்துவக் கட்டமைப்பு முழுமையாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. மானுடப்பிறப்பு அருமையானது. ஆனால் வாழ்க்கை

*தற்காலிகமானது.*

*இயல்பில் மானுடன் நன்மை விரும்பி. அந்த இயல்பை நீங்குதல் பாவம். ஆகையால் அறிஞர் சொல் கேட்டுத் தெளிவடைவது மானுடன் கடமை. அறிவர் பாதம் பணிந்து அவர்களின் குணநிலைகளைப் பெற்று முழுமை அடைதலே வாழ்வின் நோக்கம்.*

*அஞ்சனக் கோல் கண்ணுக்கு மைதீட்டுமே யன்றி தன்னை அழகுபடுத்திக் கொள்ள அதற்குத் தெரியாது. அறிவுரையும் அப்படித்தான்; மற்றவர்களுக்குச் சொல்லப் பயன்படுமே தவிர அது நமக்குப் பயன்படாது.*

*சீவகன் வாழ்வின் அத்தனை மணநிகழ்வுகளும் அதையே அவனுக்கு உணர்த்தின. ஆனாலும் சீவகன் விதி இல்லறத்துக்குள்ளேயே அவனை இழுத்துச் சென்றது.*

*ஏமாமாபுர அரசன் நரபதி. அவனுக்கு ஐந்து மகன்கள். அவர்களுக்கு வில்வித்தை பயிற்றுவிக்க அமர்த்தப்பட்டான், சீவகன். நரபதியின் அழகு மகள் கனகமாலை.*

*பூந்தோட்டம் ஒன்றில் மலர்களைப் பறித்த சீவகன் அவற்றை மாலையாக்கினான். அதைத் தோழிப் பெண் எடுத்துச் சென்று கனகமாலையிடம் தந்தாள். அது காதலில் முடிந்தது. மன்னன் நரபதி மைந்தர்களின் வில்வித்தை அரங்கேற்றத்தில் கனகமாலை சீவகனுக்கு மாலையிட்டாள்.*

*“அப்போது ஓர் அதிசயம் நடந்தது எழுத்தாளரே! காந்தர்வதத்தையின் மாயாசக்தியின் உதவியால் என்னைத் தேடிக் கொண்டு வந்தான் தோழன் நந்தட்டன். அவனோடு பால்ய நினைவுகளைப் பேசிக் கொண்டு மகிழ்ந்திருந்தேன். அப்போது ஆநிரைக் கள்வர்கள் ஏமாமாபுரக் கால்நடைகளைக் கவர்ந்தனர். அவர்களை அடக்க நந்தட்டனுடன் சென்றேன். என்னை நோக்கி வந்தது ஓர் அம்பு!” என்றான் சீவகன் நம்மிடம்.*

*சீவகன் வரலாற்றில் நாம் முன்னரே சந்தித்த இன்னொரு தோழன் பதுமுகன் எய்தது அது. ஓலை ஒன்று அதில் கட்டப்பட்டிருந்தது. இருந்த செய்தியோ ஆச்சர்யமானது.*

*(மேலும் வளரும்)*

பார்வை:

சிந்தாமணிச்செல்வர் நூற்கடல் தி.வே.கோபாலையர் அவர்களின் சொற்பொழிவுகள் மற்றும் எழுத்தாளர் ஜெயமோகனின் சமணப் பார்வைகள்.

அடிக்குறிப்பு

**உவேசாவின் பதிப்பு முயற்சி**

சீவகசிந்தாமணி 18 ஆம் நூற்றாண்டு வாக்கில் கிட்டத்தட்ட மறைந்தது. பக்தி இலக்கியங்கள் மட்டுமே சிறப்பாகப் போற்றப்பட்டு வந்தன.

தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாதய்யர் (1855–1942) கும்பகோணம் கல்லூரியில் பணியாற்றி வந்தார். அப்போது அரியலூரிலிருந்து கும்பகோணத்திற்கு முன்சிபாக மாற்றம் பெற்று வந்தார் சேலம் இராமசாமி முதலியார். அவரிடம் உ.வே.சாவுக்கு அறிமுகம் ஏற்பட்டது. முதலியார் உ.வே. சாமிநாதையருக்கு ஐம்பெருங்காப்பியங்களைப் பற்றிச் சொல்லி சீவகசிந்தாமணியின் ஓர் இலம்பகத்தையும் அளித்தார்.

அதைப் பயின்ற உ.வே.சா சமண நண்பர்களின் உதவியுடன் சமணமதத்தின் கருத்துகளையும், திருத்தக்கதேவரின் வாழ்க்கையையும் அறிந்துகொண்டார். பின்னர் அதைப் பதிப்பிக்க முயன்றார். சமணக் காப்பியத்தை பதிப்பிப்பதை சைவர்கள் எதிர்த்தனர். தமிழ்ப்பணியே முதன்மையானது.. மதநம்பிக்கை அல்ல என்ற முடிவை முன்வைத்தார் உ.வே.சா.

ஏற்கனவே ஆங்கிலேயர் ஒருவர் பதிப்பித்த சிந்தாமணி நாமகள் இலம்பகம் அச்சுநூல் இருந்தது. தியாகராசச் செட்டியார் அவரிடமிருந்த பிரதியை அனுப்பி வைத்தார். சுப்பிரமணிய தேசிகர் திருநெல்வேலியிலிருந்து சில ஏட்டுப்பிரதிகளை வருவித்துக் கொடுத்தார். மேலும் தேடி விருஷபதாச முதலியாரிடம் சுவடிகளைப் பெற்றார்.

திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுப்ரமணிய மகாதேசிகர் மடத்தின் சேமிப்பில் இருந்த சிந்தாமணி சுவடியையும் உ.வே.சா. பயன்படுத்தி இருக்கிறார். அதாவது சமண நூலைப் பதிப்பிக்க உதவியவர் ஒரு சைவ மடாதிபதி. பட்டிணப்பிரவேசச் சர்ச்சைக் காலகட்டத்தில் இதையும் தமிழ் கூறும் நல்லுலகம் நினைவு கூர்தல் வேண்டும். அவ்வாறாக சிந்தாமணியின் 23 நகல்களை உ.வே.சா. சேர்த்தார்

அன்றைய பதிப்புமுறை என்பது பதிப்பிக்கவிருக்கும் நூலை வாங்குவதாக செல்வந்தர்களிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டு நூலை அச்சிடுவது. உ.வே.சாமிநாதையர் தமிழார்வம் கொண்ட செல்வந்தர்களைச் சந்தித்து ஆதரவு பெற்று நூலை அச்சிட்டார் . சோடசவதனம் சுப்பராய செட்டியார், ராஜ பாலாச்சாரியார் வேலுச்சாமிப் பிள்ளை ஆகியோர் கையெழுத்துப் போட்டு உதவினர். அச்சிடுவதற்காகச் சென்னை சென்று ராமசாமி முதலியார் இல்லத்தில் தங்கினார் அய்யர். சென்னைக்கும் கும்பகோணத்திற்குமாகப் பயணம் செய்து பல பிரதிகளையும் ஒப்பிட்டு பாடபேதங்களைக் குறித்து இறுதியில் நூலைப் பதிப்பித்தார் உ.வே.சா.

விரிவான முன்னுரை, நூலாசிரியர் வரலாறு, உரையாசிரியர் வரலாறு, கதைச்சுருக்கம் ஆகியவற்றுடன் அக்டோபர் 1887ல் பதிப்பு முயற்சி இனிதே நிறைவேறியது.

பதிப்புப் பணியில் சி.வை.தாமோதரம் பிள்ளை வழிகாட்டி உதவியதாக உ.வே.சா. முன்னுரையில் சொல்கிறார். வீடூர் சந்திரநாதச் செட்டியார் நூல் ஒப்புநோக்க உதவினார். தேரழுந்தூர் சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார், திருமானூர் கிருஷ்ணையர் ஆகியோரின் உதவிகள் பற்றியும் உ.வே.சா. குறிப்பிட்டுள்ளார்.

சீவகனின் கதை வடமொழியில் பல நூல்களில் சொல்லப்பட்டதுதான். இது புராணமோ வரலாறோ அல்ல, ஒரு வகை உருவகக்கதை மட்டுமே.

**மயிலம் ஆலகிராமம் ஜினாலயம்**

விழுப்புரம் மாவட்டம் மயிலம் ஆலகிராமம் என்ற சிற்றூரில் முப்பதுக்கும் மேற்பட்ட சமண குடும்பங்கள் வாழ்கின்றன அங்கு வடக்கு நோக்கிய வாயிலுடன் ஒரு ஜினாலயம் உள்ளது சுமார் 200–300 ஆண்டுகள் பழமையானது பலமுறை மறுசீரமைப்பு செய்துள்ளதால் சமணச் சான்றுகள் மறைந்துவிட்டன ஆனால் அர்த்த மண்டபக் கருவறையில் ஆதிநாதர் எட்டு சிறப்புகளுடன் கம்பீரமாக உள்ளார் சமய வேறுபாடின்றி அவ்வூர் மக்கள் ஆலய வழிபாடு செய்கின்றனர் தினசரி இருவேளை பூஜை நவராத்திரி விழா திருவீதி உலா ஆகியவை நடக்கின்றன என்று சொன்னார்கள்.

கட்டுரை

**ஆ. சிவசுப்பிரமணியன்**
sivasubramanian@sivasubramanian.in

**பேராசிரியர் ந.முத்துமோகன்**

# பண்பாட்டு மண்ணில் காலூன்றிய தத்துவவாதி

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)



'எனக்கு மார்க்சியம் தெரியும் ஆயின் இந்தியத் தத்துவமோ தமிழர் தத்துவமோ தெரியாது என்று கூறுவதில் நியாயம் கிடையாது
—ந.முத்துமோகன்


ஜெர்மனிய நாட்டின் காண்ட் என்ற தத்துவவாதியின் காண்டியத் தத்துவத்திற்கும் இந்திய வேதாந்த தத்துவத்திற்கும் இடையில் ஒரு தொடர்பிருப்பதாக ஜெர்மானிய அறிஞர்கள் சிலர் நம்பினர். வேறு சிலர் கடவுளால் முதலில் பேசப்பட்ட மொழி சமஸ்கிருதம் என்றும் நம்பினர்.

ஹெகல் என்பவரின் கருத்துமுதல்வாதம் தத்துவம் குறித்து 'பொருளுலகின் செயல்பாடு கருத்துலகால் களவாடப்பட்டுவிட்டது'என்று மார்க்ஸ் கூறியதைக் குறிப்பிடும் முத்துமோகன் 'இந்தியத் தத்துவத்தில் பொருளின் செயல்பாடு களவாடப்படவில்லை.செயல்பாடு எனும் பண்பு(குணம்) பொருளுலகிற்குச் சொந்தமானது என்று கூறி அதனைப் பொருளுலகிற்கே விட்டுவிட்டது.சகல பண்புகளையும் பொருளுலகிற்கு விட்டுவிட்டு புனித அந்தஸ்து என்ற ஒன்றை மட்டும், பிரம்மம் தன்னோடு தக்கவைத்துக் கொள்கிறது. இதுதான் வேதாந்தத்தின் இந்தியச் சாதி அமைப்பின் ரகசியம். அந்தஸ்து அடிப்படையில் புனிதத்தின் அடிப்படையில் பிரம்மமும் உலகமும் அளக்கப்பட்டு ஒன்று புனிதமானதாகவும் ஒன்று தீட்டுமயமாகவும் கண்டறியப் படுகின்றன. உலகின் மீது புனித அதிகாரம் அறிவிக்கப்படுகிறது. (இதை விரிவாக எடுத்துக் காட்டுகளுடன் கூறிச் செல்கிறார்)

உலகைத் தீட்டு என்று அறிவிக்காமல் பிரம்மத்தின் புனிதத்தைக் கட்டமைக்க முடியாது என்பது கவனிக்கத் தக்கது. உலகைத் தீட்டு என்று அறிவிப்பதன் மூலம் பிரம்மம் புனிதமாக்கப் படுகிறது; உலகம் சடப்பொருளாக்கப் படுகிறது. ஒன்றைச் சடப்பொருள் ஆக்குவதன் மூலம் அதன்மீது மற்றதன் ஆதிக்கம் நிறுவப்படுகிறது.'என்று குறிப்பிடுகிறார்

இக் கருத்தை மேலும் விவரித்துச் செல்லும் முத்துமோகன் நான்கு வருணங்களில் ஒன்றான க்ஷத்திரிய வருணத்தின் வளர்ச்சி குறித்துக் குறிப்பிடுகிறார். வேதங்களிலும் உபநிடதங்களிலும் பிராமண ரிஷிகள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளனர்.உபநிடதங்களில் இடம் பெறும் அரசர்களும் கூட பிரம்ம ஆன்ம தத்துவங்களைக் குறித்தே பேசுவார்கள். ஆனால் உபநிடதங்களுக்குப் பின்னால் உருவான மகாபாரதம் இராமாயாணம் என்ற இரண்டு காப்பியங்களிலும் இரண்டாவது வருணத்தைச் சேர்ந்த ஷத்திரியர்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளார்கள்.

இது தொடர்பாக அவர் கூறிச் செல்லும் செய்திகள் மிகவும் ஆழமானவை. 'இந்தியவைதீகச் சிந்தனை மரபின் வரலாற்றில்,' இவ்விரு காப்பியங்களின் கதைகள் உருவான காலத்தை "ஒரு மாபெரும் சத்திரியத் தலையீடு" என்று மதிப்பிட்டுள்ளார். புனித அதிகாரம் என்பதில்தான் வேத உபநிடதச் சிந்தனைகள் ஆர்வம் காட்டின.ஆனால் 'ஆரியப் புரோகித வர்ணத்தின் புனித அதிகாரத்தைக் கட்டி எழுப்புவதுதான் வைதீக இலக்கியங்களின் வேலைத்



திட்டமாக இருந்தது' என்று குறிப்பிட்டு அதை விளக்கிச் செல்கிறார்.இவ் விளக்கத்தில் இடம் பெற்றுள்ள மூன்று முக்கிய கருத்துக்கள் வருமாறு:

# சடங்குள்,தத்துவங்கள் வாயிலாக வேத உபநிடதங்கள் இவ்வேலையைச் செய்தன.

#வருண அமைப்பின் தோற்றமும் அகமண முறையும் இதே பணியைச் செய்தன.

#இராமாயணமும, மகாபாரதமும் 'அரசியல் அதிகாரம் என்ற ஒரு புதிய தலையீட்டை,ஏற்படுத்தின.

இதன் தொடர்ச்சியாக அரச குடிகளாக (ஷத்திரியர்)ஆரியக் குடிகள் மட்டுமின்றி பூர்வீக இந்தியப் பழங்குடிகளும் இருந்துள்ளனர் என்கிறார். புத்தரும் மகாவீரரும் அரச குடும்பத்தில் தோன்றியவர்களே. "எந்த வர்ணம் அதிகச் செல்வாக்குடன் விளங்குகிறதோ அந்த வரணத்தில்தான் வர்த்தமான மகாவீரர் பிறக்கவேண்டுமென்று ஒரு தெய்வ விதி' இருந்ததாக" ஒரு கதை இருந்ததாகவும் குறிப்பிடுகிறார். கடவுள் மறுப்புத் தத்துவமான சார்வாகம்(லோகாயுதம்) வேகமான பிராமண எதிர்ப்பைக் கொண்டிருப்பதன் அடிப்படையில் அது ஷத்திரியத் தத்துவமாக இருக்கவேண்டும் என்றும் கருதுகிறார். வரலாற்று அடிப்படையில் பார்த்தால் சத்திரியரகள்தான் பிராமணர்களின் புனித அதிகாரத்தை முதலில் கேள்வி கேட்வர்களாக அமைந்தார்கள் என்பது இவரது கருத்தாக உள்ளது. கேள்வி கேட்பதன் மூலமாகவே அரசியல் அதிகாரத்தை அரங்குக்குக் கொண்டுவர முடியும் என்ற கூறுவதுடன் உபநிடதக் காலத்திற்குப் பின்பே இது நடந்துள்ளது என்று கருத்துரைக்கிறார்.தமது கருத்துக்குச் சான்றாக இவ்விரு இலக்கியங்களிலும் ஏராளமான எடுத்துக்காட்டுகள் உள்ளன என்றுரைத்துள்ளார்.

அதே போன்று இந்நூல்கள் கி.பி.மூன்றாம் நூற்றாண்டு வரை பலமுறை பதிப்பிக்கப் பட்டதால் சத்திரியர்களின் தீவீர எதிர்ப்பு மழுங்கடிக்கப்பட்ட பிரதிகளே இப்போது கிடைக்கின்றன என்று குறிப்பிட்டுள்ளார்.இருப்பினும் இவற்றில் இந்நிகழ்வுகள் சில ஒளிந்து கிடப்பதாகக் கூறும் இவர் இதற்குச் சான்றாக இவ்விரு நூலகளிலும் பல வடிவங்களில் இடம் பெறும் விசுவாமித்திரர் கதையைக் குறிப்பிட்டுள்ளார். அது வருமாறு:

கௌசிகன் என்ற இயற் பெயர் கொண்ட விசுவாமித்திரன் பிறப்பால் ஷத்திரியன்.. அவன் மன்னனாக இருந்தபோது யாகத்தில் பிறந்த காமதேனு என்ற பசுவை மையமாகக் கொண்டு பிராமணரான வசிட்டன் என்ற பிரம்ம ரிஷியுடன் மோதல் நிகழ்வதாக இராமாயணம் குறிப்பிடுகிறது. வசிட்டனுடன் நிகழ்த்திய போரில் கௌசிகன்(விசுவாமித்திரன்) தோற்கிறான். இப்போருக்கான மையச் சிக்கல்'பிராமணனின் யாகப் பலம் பெரிதா, சத்திரியனின் அரசியல் பலம் பெரிதா' என்பதுதான் என்பது நூலாசிரியரின் கருத்தாக உள்ளது. இவ்விரு நூலகளிலும் இக் கேள்வி மீண்டும் மீண்டும் கேட்கப்படுகிறது என்கிறார்.

பிரம்ம ஆற்றலைப் பெறுவதற்காக ஆட்சியைத் துறந்து யாகக்கல்வி பெற்றாலும் பிறப்பால் பிராமணன் இல்லை என்பதால் கௌசிகனால் பிரம்மரிஷி என்ற பட்டத்தைப் பெறமுடியாமல் போகிறது.ஆறுதல் பரிசாக ராஜரிஷி என்ற பட்டமே கிடைக்கிறது.எப்படியோ கௌசிகன் விசுவாமித்திரனாகிறான்.

அடுத்து பரசுராமன் கதை. பிராமணரான பரசுராமன் ஷத்திரியன் குலங்களைப் பலமுறை அழித்துள்ளான்.சில அரிய போர்க்கலைகளை அறிந்திருந்த அவன் அவற்றை ஷத்திரியர்களுக்குக் கற்றுக் கொடுப்பதில்லை என்று உறுதிபூண்டிருந்ததாக மகாபாரதம் குறிப்பிடுகிறது.' சத்திரியன் (கௌசிகன்) பிரம்மஞானத்தைப் பயில முனைவதும் பிராமணன்(பரசுராமன்)போர்க்கலையைத் தெரிந்திருந்தான் என்பதுவும் பரஸ்பரம் அந்த இருதரப்பாரும் ஒருவர் மற்றொருவரை அச்சத்துடன் அணுகினர் என்பதைக் காட்டுகின்றன' என்பது இந் நூலாசிரியரின் அவதானிப்பாக உள்ளது. அத்துடன் இவ்விரு இலக்கியங்களிலும் இடம் பெறும் தேவர்-அசுரர்களுக்கு இடையிலான போராட்டங்கள் ஆரியர்களுக்கும் ஆரியர் அல்லாத பூர்வ குடிகளுக்கும் இடையில் நிகழ்ந்த போர்களே என்ற ஆய்வாளர்களின் கருத்தை இவர் ஏற்றுக் கொள்கிறார். அத்துடன் இது குறித்து மேலும் சில கருத்துகளை முன்வைக்கிறார். அவை வருமாறு:

- பிராமணர்களின் புனித அதிகாரத்திற்கும் ஷத்திரியர்களின் அதிகாரத்திற்கும் இடையே முரண்பாடு உருவாதல்.
- வேள்விகளும் பிரம்மமும் கேள்விக்குள்ளாக்கப் படுதல்
- ஷத்திரிய குணங்கள் அரசியல் முக்கியத்துவம் பெறுதலும் இதனால் வைதீகச் சிந்தனை நிலைகுலைதலும்

என்பனவற்றை எதிர்கொள்ளவேண்டிய நிலைக்கு வேதாந்தத் தத்துவம் தள்ளப்படுகிறது. இதை

எதிர்கொள்ளத் தவறினால் அது தன் புனித அதிகாரத்தை இழந்துவிடும். இத்தகைய சமூகச் சூழலில் தன் தத்துவத்தை மறுகட்டமைப்புச் செய்யவேண்டிய கட்டாயத்திற்கு வேதாந்தம் ஆளானது. இதன் விளைவாக மகாபாரதத்தின் இறுதிப் பகுதியில் பகவத் கீதை இணைக்கப்படுகிறது.

**பகவத் கீதை**

வேதாந்தத் தத்துவம் மூன்று நூல்களை அடிப்படை நூல்களாகக் (பிரஸ்தான திரயம்) கொண்டுள்ளது இவற்றுள் ஒன்று பகவத்கீதை. குருச்சேத்திரா போர்க்களத்தில் தன் உறவினர்களுடனும் ஆசிரியர்களுடனும் போர் செய்யத் தயங்கிய அர்ச்சுணனுக்கு கிருஷ்ணர் உரைத்த அறிவுரையே (கிருஷணா உபதேசம்) பகவத் கீதை என்ற நூலாக வடிவெடுத்துள்ளது. கோசாம்பி,அம்பேத்கர், சர்தேசாய் ஆகிய அறிஞர்கள் இதைத் தனி நூலாகவே கருதுகிறாரகள்.வேறு சில ஆய்வாளர்களும் மொழிநடை உள்ளடக்கத்தின் அடிப்படையில் மகாபாரத்தில் பின்னர் இணைக்கப்பட்ட ஒரு

*1) 'சத்திரியச் செயல்பாட்டை உள்வாங்கி அகப்படுத்திக்கொண்ட வடிவில் தத்துவ வேதாந்தம்வரையறுக்கப்பட்டது'*

*(2) 'பூர்வகுடிகளின் வெகுசனச் செயல்பாட்டை உள்வாங்கி அகப்படுத்திக் கொள்ளும் விதத்தில் பக்தி வேதாந்தம் வடிவமைக்கப்பட்டது.'*

இப் பணிகளைச் செய்யும் நூலாகவே பகவத் கீதை அமைந்தது.

பகவத் கீதைக்கு முந்தைய உபநிடத வேதாந்தத்தில் பிராமணர்களின் 'சுதர்மம்'(சுயதர்மம்) மட்டுமே வரையறுக்கப் பட்டிருந்தது. பகவத் கீதையில், சத்திரியர்களின் சுதர்மம் வரையறுக்கப்பட்டது. கிருஷ்ணரின் கூற்றுப்படி சத்திரியனான அர்ச்சுணனின் வர்ணக்கடமை போர்புரிதல் ஆகும். இவற்றை விரிவாகக் கூறிச் செல்லும் முத்துமோகன் கிருஷ்ணர் அரச்சுணன் இடையிலான போர்க்கள விவாதம் தத்துவ விவாதம் அல்ல என்கிறார்.' பகவத் கீதையில் நடப்பது தத்துவ விசாரணை அல்ல, வருணக் கடமைகள் பற்றிய விசாரணையே........

**உழைக்கும் மக்களைச் சுரண்டி அவரது செல்வத்தின் ஒரு பகுதியைத் தான் எடுத்துக்கொண்டு இன்னொரு பகுதியை புனித அந்தஸ்து கொண்ட புரோகித வர்க்கத்திற்குக் கொண்டுசேர்க்க வேண்டும். இத்தகைய அக்கறை கொண்ட ஒழுங்கான "தர்ம புத்திரர்களாக" சத்திரியரைப் பயிற்றுவிக்கும் பணி பகவத் கீதையில் தொடங்கிவிட்டது என்றே கூற வேண்டும்.**



நூலாகவே பகவத் கீதையைக் கருதுகிறார்கள். இந் நூலாசிரியர் இது குறித்த விவாதங்களுக்குள் நுழையவில்லை. மாறாக மகாபாரதத்திற்கும் பகவத் கீதைக்கும் இடையே சில உள்ளீடான கருத்தியல் உறவுகள் இருப்பதாகக் கருதுகிறார். அவரது கருத்துப்படி 'பிரம்மத்தின் புனித அதிகாரத்தைவிட விஞ்சிய சக்தியாக சத்திரியர்கள் தமது அரசியல் அதிகாரத்தை முன்னிறுத்தியதை வைதீகம் எப்படி எதிர்கொண்டது என்ற வரலாற்றைப் பகவத்கீதை பதிவு செய்துள்ளது'. இது தொடர்பாக ' இந்திய வைதீக மையம் எதிர்கொண்ட' இரண்டு மிகப் பெரும் வரலாற்றுச் சக்திகளை' நமக்கு அடையாளம் காட்டுகிறார்.அவை வருமாறு:

*1) 'ஆரிய மற்றும் ஆரியரல்லாத சத்திரிய அரசர்களின் அரசியல் அதிகாரச் செயல்பாடுகள்.'*

*2) 'மிகப் பரந்த வட இந்திய மற்றும் தென்னிந்திய வட்டாரங்களில் எழுச்சிபெறும் ஆரியரல்லாத பூர்வ குடிமக்களின் வாழ்வு மற்றும் பண்பாடு.'*

இவ்விரு வரலாற்றுச் சக்திகளின் செயல்பாட்டை எதிர்கொள்ளும் வழிமுறையாக வேதாந்தத் தத்துவத்தில் மாறுதல்களை அது செய்து கொண்டது. இம் மாறுதல்களை ' மறுதகவமைப்பு' *(Re. Accommodate)* என்று குறிப்பிடும் நூலாசிரியர் அது உருவாக்கிக் கொண்ட பின்வரும் இரண்டு வடிவங்களை அறிமுகம் செய்துள்ளார். அதன்படி

சத்திரிய வர்ணத்தின் எல்லைகள்தான் அங்கு நிச்சயிக்கப் படுகின்றன.'இதன் தொடர்ச்சியாக, கீதை குறிப்பிடும் 'நிஷ்காமிய கர்மம்' என்பதை விளக்குகிறார்.

**நிஷ்காமிய கர்மம்**

காமியம் என்றால் ஆசை. நிஷ்காமியம் என்றால் ஆசைகளின்றி என்று பொருள். கர்மம் என்றால் செயல். நிஷ்காமிய கர்மம், என்றால் ஆசைகளின்றி மேற்கொள்ளப்படும் செயல் என்பது பொருளாகும். ஆசைகளின்றி அல்லது பயன்நோக்காது செய்தல் என்பது வேதங்களில் கிடையாது என்று கூறும் இவர், குழந்தைப் பேறு,மேய்ச்சல் காடு, கால்நடைச் செல்வம்,எதிரிகளை அழித்தல் என்பனவற்றை வேண்டியே யாகங்கள் நிகழ்ந்ததாக வேதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதைச் சுட்டிக் காட்டியுள்ளார். அத்துடன் நிஷ்காமியம் என்ற சொல் உபநிடதங்களில் ஓர் அடைமொழியாக இடம் பெறவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். இதன் தொடரச்சியாக ' சத்திரியரை ஒரு வட்டத்தை வரைந்து அதற்குள் வட்டாடவிடுவதுதான் நிஷ்காமிய கர்மம் என்ற கோட்பாடு ' என்ற முடிவுக்கு வந்துள்ளார். 'வர்ண எல்லைக்குள் ஆடிக்கொள் என்பது ஓர் உத்தி. ஆசைகளற்றுசெயல்பட்டுக்கொள் என்று விதிப்பது இன்னொரு உத்தி.இந்த உத்திகளைத்தான் பகவத் கீதை முன் மொழிகிறது' என்ற மதிப்பீட்டையும்

முன்வைக்கிறார். கடமையைச் செயதுவிட்டு அதற்கான பலனை எதிர் நோக்கக்கூடாது என்பது எவ்வகையில் சரியானது ?என்ற வினா சத்திரியர்களிடம் எழுவதும் இயற்கை. இதற்கான விடை பகவத் கீதையில் கிருஷ்ணரின் கூற்றாக இடம் பெற்றுள்ளதை நூலாசிரியர் பின்வருமாறு எடுத்துரைக்கிறார்:

' நானே விஷ்ணு, விஷ்ணுவே பிரம்மம். நானே நான்கு வருணங்களையும் அவற்றின் கடமைகளையும் நிர்ணயித்தேன்'என்றுரைத்த கிருஷணர் தனது விசுவரூபத்தை அர்ச்சுணனுக்குக் காட்ட அவன் அவர் கூற்றை ஏற்றுக் கொள்கிறான்.

இவ்வாறு பலனை எதிர்நோக்காது சத்திரியர் மேற் கொள்ளவேண்டிய கடமைகள் என்ன என்பதும் இந் நூலில் இடம் பெற்றுள்ளன.இக் கடமைகள் வைதீகத்தைப் பேணிப் பாதுகாக்கும் தன்மை உடையனவாகவே இருந்தன. மொத்தத்தில் பகவத் கீதையில் வேதாந்தம் பிராமண சத்திரியக் கூட்டை முன் நிறுத்தியது.(இதன் பின்னர் காலனிய ஆட்சிக்காலத்தில் பிராமணர் வைசியர் கூட்டு உருவானதாக அம்பேத்கர் குறிப்பிட்டுள்ளார்)

சத்திரியர்களுடன் பிராமணியம் ஏற்படுத்திய இக் கூட்டானது' ஆயுதங்களோடு சென்று உயிர்க்கொலை புரிவதற்கு' ஒரு கும்பலை பிராமணியத்திறகு வழங்கியது. இக் கும்பல் வேளாண்குடிகளையும் பழங்குடிகளையும் ஆக்கிரமித்து ஆளுகை செய்வதற்கான இரும்புக்கரமாகப் பிராமணியத்திற்குப் பயன்பட்டது. இங்கு ஆளுகை என்பது குறித்து நூலாசிரியர் தரும் விளக்கம் மிகவும் நுட்பமானது. அதை அவரது கூற்றாகவே காண்போமே:

'அதாவது உழைக்கும் மக்களைச் சுரண்டி அவரது செல்வத்தின் ஒரு பகுதியைத் தான் எடுத்துக் கொண்டு இன்னொரு பகுதியை புனித அந்தஸ்து கொண்ட புரோகித வர்க்கத்திற்குக் கொண்டு சேர்க்க வேண்டும்.இத்தகைய அக்கரை கொண்ட ஒழுங்கான "தர்ம புத்திரர்களாக" சத்திரியரைப் பயிற்றுவிக்கும் பணி பகவத் கீதையில் தொடங்கிவிட்டது என்று கூற வேண்டும்.சத்திரியரது சுதர்மங்களில் ஒன்றாக பிராமணரைப் பாதுகாப்பது என்ற கடமை இப்படித்தான் உருவாகிறது.எனவே வர்ணம், சுதர்மம்,நிஷ்காமிய கர்மம், என்ற கோட்பாடுகளின் மூலமாக பகவத் கீதையில் வேதாந்தம் புரோகிதத்தைப் பேணிப் பாதுகாக்கும் அரசியல் கடமையையும் பொருளாதாரக் கடமையும் சத்திரியர்களின் மீது சுமத்துகிறது.'

இதன் தொடர்ச்சியாக பக்தி வேதாந்தத்தின் பண்பாட்டு அரசியல் குறித்த சில சிந்தனைகளை நம் முன் வைத்து இக் கட்டுரையை முடிக்கிறார். இப் பகுதியின் தொடக்கத்தில்

வேதாந்தத்தின் மூன்று முக்கிய வடிவங்கள் குறித்தும் அவற்றின் செயல்பாடுகள் குறித்தும் நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளதன் சாரம் வருமாறு:

(1)உபநிடதத்தின் பிரம்மவேதாந்தம்: தனது புனித அதிகாரத்தையும் சுதர்மத்தையும் அறிவித்தமை.

(2)பகவத் கீதையின் வேதாந்தம்: சத்திரியரை முன் நிறுத்தியது.பிராமண சத்திரியக் கூட்டணியை அரங்கேற்றியது.

(3)பக்தி வேதாந்தம்: வெகு மக்கள் திரளை முன் நிறுத்துவது.அவர்களிடையே சுதர்மக் கொள்கையைப் பரப்பி அதற்கு ஆதரவுதிரட்டுவது

**பக்தி**

மூன்றாவது வடிவமான பக்தி வேதாந்தம் பகவத் கீதையில் இருந்து தோன்றியது என்று கருதும் நூலாசிரியர் ' பகவத் கீதை பிரம்மத்தை விஷ்ணுவோடு சமப்படுத்துகிறது.விஷ்ணுவை உணர்ச்சி வசப்பட்டு பணிந்து வணங்குதல் வழிபடுதல் ஆகியவையே பக்தி என அது விளக்குகிறது' என்று குறிப்பிடுகிறார். அத்துடன் "எந்தெந்த வடிவில் இறைவனை வணங்கினாலும் எல்லா வழிபாடுகளும் இறுதியில் என்னையே வந்து சேர்கின்றன" என்று பகவத் கீதைத் தொடர்களை மேற்கோள் காட்டிவிட்டு ' இது தாராளத் தன்மை கொண்டதாகக் காட்சி அளிக்கும்.ஆனால் ஏராளமான வட்டார வழிபாடுகளைச் செரித்து அகப்படுத்தும் ஒரு பேரிறைக் கொள்கை என்ற கறாறான தன் விமர்சனத்தையும் முன் வைத்துள்ளார்.(இந் நூலாசிரியர் மேற்கோளாகக் காட்டும் பகவத் கீதைத் தொடர்கள் ஒருவகையில் ஒரு சாராரின் அடையாள நுண் அரசியல் பேசுபவைதான்.இதை வெளிப்படுத்துவதாக நூலாசிரியரின் விமர்சனம் அமைந்துள்ளது.)

அடுத்து (1) வேதாந்தமயப்பட்ட பக்தி.(2) வட்டார மேட்டுக்குடிகளுடன் தொடர்பு கொண்ட பக்தி (3) வேதாந்தம் சித்தாந்தம் ஆகியவற்றுக்குள் ஆட்படுவதற்கு முந்தைய அல்லது அவற்றுக்கு வெளியே தங்கிவிட்ட வெகு மக்கள் பக்தி என மூன்று வகையான பக்தி மரபுகளை அவர் அடையாளம் காட்டி விளக்கியுள்ளார்.அத்துடன் வேதாந்தத்திற்கு வெகு சன வடிவம் ஏன் தேவைப்பட்டது என்பதையும் ஆராய்ந்துள்ளார்.

(1)வேதாந்தத்தின் சுத்த சுயாதீன சுதர்ம வடிவம் (2)வைதீகத்தின் தலைமையை ஏற்றுக் கொண்ட சத்திரிய அரசியல் வடிவம்.(3)வருண தருமத்தை வெகுசனப் பரப்பு முழுவதும் செயல்படுத்தும் பக்தி வேதாந்தம் என்ற மூன்றையும் விளக்கும் இந்நூலாசிரியர் 'இந்த மூன்றும் ஒன்றை மறுத்து மற்றது தோன்றவில்லை ஒன்று மற்றொன்றுடன் கூடி வளர்ந்துள்ளது என்கிறார்.இம், மூன்றின் நிலை பெற்ற கூறாக விளங்குவது 'வைதீகத்தின் தலைமையிலான சாதி வருண ஏற்பாடே 'என்பது இவரது முடிவாக உள்ளது.

கடந்தகாலத்தைப் பற்றிய வெறும் பதிவாக இக் கட்டுரையை முடிக்காமல் நிகழ்காலத்திற்கும் ஆசிரியர் வந்துள்ளார்.' நமது காலத்தில் இந்துத்துவம் வேதாந்தத்தின் மூன்று வடிவங்களையுமே ஒரு சேரப் பயன்படுத்தி வருகிறது' என்ற ஆசிரியரின் பதிவினை முற்போக்காளர்கள் புரிந்து செயல்படவேண்டும்.

*(தொடரும்)*

*கட்டுரையாளர்: மூத்தப் பேராசிரியர்,*
*நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர்*

கட்டுரை

மு.இராமனாதன்

# ஹாங்காங் தமிழ் வகுப்புகள்: கடந்துவந்த பாதை கடினமானதுதான்

**கிழக்கும் மேற்கும் சந்திக்கிற புள்ளியாக ஹாங்காங் எப்போதும் கருதப்பட்டு வந்திருக்கிறது. இங்கு சீனக் கலாச்சாரத்தோடு வளர்ந்த நாடுகளின் வசதிகளும் உள்கட்டமைப்பும் இணைந்து விளங்குகின்றன. ஹாங்காங்கின் மக்கள் தொகை 76 இலட்சம். இதில் சுமார் 92 சதவீதம் பேர் சீனர்கள்தாம். வெளிநாட்டினரில் ஃபிலிப்பைன்ஸினர், இந்தோனேசியர் மற்றும் ஆங்கிலேயர்களுக்கு அடுத்தபடியாக சுமார் 38,000 இந்தியர்கள் வசிக்கின்றனர். இன்னும் நேபாளம், தாய்லாந்து, பாகிஸ்தான் மக்களும் ஹாங்காங்கின் பன்முகக் கலாச்சாரத்தில் பங்கு பெறுகின்றனர். எல்லாச் சமூகத்தினரும் தமது அடையாளங்களைப் பேண முடிகிறது.**

தாய்மொழிக் கல்வியின் மகத்துவத்தை உலகெங்குமுள்ள மொழியியல் அறிஞர்கள் உரக்கச் சொல்லி வருகிறார்கள். என்றாலும் ஆங்கில மோகத்தில் திளைக்கும் பல இந்தியத் தமிழர்களின் செவிகளில் அது விழுவதில்லை. தமிழை இரண்டாம் பாடமாகக்கூடப் படிக்காத ஒரு தலைமுறை தமிழ்நாட்டு நகரங்களில் உருவாகிவிட்டது. ஆனால் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களில் கணிசமானோர் தமது பாரம்பரியத்தின் வேர்கள் தாய்மொழியில் இருப்பதை உணர்ந்திருக்கிறார்கள். அதனால் தமது பிள்ளைகள் தமிழைக் கற்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆனால் பல நாடுகளில் இது நடைமுறைச் சாத்தியமாக இருப்பதில்லை. ஹாங்காங்கிலும் அப்படித்தான் இருந்தது. ஆனால் இப்போது நிலைமை மாறிவிட்டது. தமது பிள்ளைகள் தமிழ் படிக்க முடியவில்லையே என்ற பெற்றோர்களின் ஏக்கம், ஹாங்காங் இளம் இந்திய நண்பர்கள் குழு (Young Indian Friends Club-YIFC) எனும் அமைப்பினரின் 'YIFC கல்விக் கழகம்' நடத்திவரும் தமிழ் வகுப்பால் கழிந்தது!

19 பிப்ரவரி, 2022 அன்று கழகத்தின் பொதுக்குழுக் கூட்டம் நடந்தது. நகரம் கடுமையான கொரோனா கட்டுப்பாடுகளுக்கு இடையில் இயங்கி வருகிறது. கூட்டங்களுக்கு அனுமதியில்லை. ஆகவே பொதுக்குழுக் கூட்டம் மெய்நிகர் சந்திப்பாக நடந்தது. தமிழ் வகுப்பின் அமைப்பாளர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் ஆலோசகர்களும் இணையவழியில் கலந்துரையாடினார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தமிழ் வகுப்புகளும் இணைய வழியாகத்தான் நடந்து வருகின்றன. ஆகவே பொதுக்குழுவில் கலந்து கொண்ட அனைவரும் இப்படியான இணையச் சந்திப்புகளுக்குப் பழகியிருந்தார்கள். தலைவர் தனது ஆண்டறிக்கையில் இத்தனை இன்னல்களுக்கிடையிலும் தமிழ் வகுப்பெனும் தொடர் ஓட்டத்தை இடை நிறுத்தாமல் செலுத்திக்கொண்டிருக்கும் அனைவரையும் நினைவு கூர்ந்தார். அவரது குரலில் நன்றியுணர்வு இருந்தது. பெருமிதமும் இருந்தது. தலைவர் வழங்கியது 17-ஆம் ஆண்டறிக்கை. அதாவது ஹாங்காங் தமிழ் வகுப்புகள் 17 ஆண்டுகளைக் கடந்து விட்டது. இந்தக் கல்வியாண்டு 18ஆம் ஆண்டு.

ஹாங்காங் தமிழ் வகுப்புகள் 2004ஆம் ஆண்டு துவக்கப்பட்டன. அப்போது தமிழ்நாட்டில் தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட பிள்ளைகள்கூடத் தமிழ் மொழியை ஒரு பாடமாகப் படிக்க வேண்டுமென்பது கட்டாயமில்லாத நிலைதான் இருந்தது. 2006 முதல் தமிழக அரசு படிப்படியாகத் தமிழ்க் கல்வியைக் கட்டாயமாக அமலாக்கியதன் பலனாக, 2016 முதல் தமிழகமெங்கும் பத்தாம் வகுப்புத் தேர்வு எழுதிய பிள்ளைகளில் பலர் தமிழை ஒரு பாடமாகவேனும் படித்திருந்தார்கள். ஆனால் எவ்விதமான வற்புறுத்தலும் இல்லாமல் கடந்த 17 ஆண்டுகளாக ஹாங்காங் பிள்ளைகள் தமிழ் கற்று வருகிறார்கள்.

ஹாங்காங் தமிழ் வகுப்பின் இந்தத் தொடரோட்டம் முக்கியத்துவம் வாய்ந்தது. ஹாங்காங் தமிழ்ச் சமூகம், ஹாங்காங்கின் சிறுபான்மைச் சமூகங்களில் ஒன்று. எந்தவிதமான நல்கைகளோ, நிதி உதவியோ, கணிசமான மனிதவளமோ இல்லாத நிலையிலும் ஹாங்காங் தமிழ்ச் சமூகத்தால் தாய் மொழியை தனது இளம் தலைமுறையினருக்குக் கற்பிக்கமுடிகிறது. இந்த வகுப்புகள் 17 வருடங்களைக் கடந்து உறுதியாகவும் பயணிக்கிறது.

இதன் ஆசிரியர்கள் அனைவரும் தன்னார்வலர்கள். இவர்களில் பலரும் ஆசிரியப் பயிற்சி பெற்றவர்களில்லை; ஆனால் இளைய

சமுதாயத்திற்குத் தாய் மொழியைக் கற்றுக் கொடுப்பதை விரும்பிச் செய்பவர்கள். இதன் அமைப்பாளர்களில் யாரும் தமிழ்ப் பண்டிதர்களில்லை. ஆனால் தமிழின்பால் பற்றுடையவர்கள். 125 மாணவர்கள் இந்த வகுப்புகளில் தமிழ் கற்று வருகிறார்கள்.

வெளிநாடுகளில் வாழும் சிறுவர்கள் அன்னியக் கலாச்சாரத்தைச் சுவாசிக்கிறார்கள்; ஆங்கிலம் வழி கற்கிறார்கள்; காலப்போக்கில் தாய்மொழியை ஒரு வீட்டு மொழியாகக்கூடப் பயன்படுத்துவதைப் படிப்படியாகக் குறைத்துவிடுகிறார்கள். ஹாங்காங் இந்திய மாணவர்களும் அப்படித்தான். அவர்கள் தத்தமது தாய்மொழியை ஒரு பாடமாகக் கற்கிற வாய்ப்பு இங்கு மிகக் குறைவுதான். இந்தியர்களும் பாகிஸ்தானியர்களும் நேப்பாளிகளும் அதிகமாகப் பயிலும் எல்லிஸ் கடோரி என்கிற அரசுப் பள்ளியில் இந்தியும் உருதும் கற்பிக்கப்படுகிறது. குரு கோவிந்த சிங் கல்வி அறக்கட்டளை சீக்கிய மாணவர்களுக்குப் பஞ்சாபி கற்பிக்கிறது. இவற்றைத் தவிர ஹாங்காங்கில் முறையாகக் கற்பிக்கப்படும் இந்திய மொழிக் கல்வி என்கிற பெருமை இந்தத் தமிழ் வகுப்பையே சேரும்.



கிழக்கும் மேற்கும் சந்திக்கிற புள்ளியாக ஹாங்காங் எப்போதும் கருதப்பட்டு வந்திருக்கிறது. இங்கு சீனக் கலாச்சாரத்தோடு வளர்ந்த நாடுகளின் வசதிகளும் உள்கட்டமைப்பும் இணைந்து விளங்குகின்றன. ஹாங்காங்கின் மக்கள் தொகை 76 இலட்சம். இதில் சுமார் 92 சதவீதம் பேர் சீனர்கள்தாம். வெளிநாட்டினரில் ஃபிலிப்பைன்ஸினர், இந்தோனேசியர் மற்றும் ஆங்கிலேயர்களுக்கு அடுத்தபடியாக சுமார் 38,000 இந்தியர்கள் வசிக்கின்றனர். இன்னும் நேபாளம், தாய்லாந்து, பாகிஸ்தான் மக்களும் ஹாங்காங்கின் பன்முகக் கலாச்சாரத்தில் பங்கு பெறுகின்றனர். எல்லாச் சமூகத்தினரும் தமது அடையாளங்களைப் பேண முடிகிறது. ஹாங்காங் இந்தியர்களிடையே, தமிழர்களின் எண்ணிக்கை சிந்திகளையும் குஜராத்திகளையும்விடக் குறைவு. ஹாங்காங்கில் தமிழர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட இரண்டாயிரமாக இருக்கலாம் என்பது ஒரு மதிப்பீடு. 25 ஆண்டுகள் முன்பு வரை கணிசமான தமிழர்கள் நவரத்தின வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர். பின்னால் வந்தவர்கள் நிதி, வங்கி, தகவல் தொழில்நுட்பம் முதலான துறைகளில் பணியாற்றுகிறார்கள்.

இந்தச் சிறிய தமிழ்ச் சமூகத்தினரிடமிருந்துதான் 125 மாணவர்கள் வாரம்தோறும் தமிழ் வகுப்புகளுக்கு வருகிறார்கள். ஹாங்காங்கில் உள்ள ஆரம்பப் பள்ளிக்குச் செல்லும் தமிழ்க் குழந்தைகளில் பெரும்பாலானோர் இந்த வகுப்புக்கு வருகிறார்கள். ஆனால், YIFC கல்விக் கழகத்திற்கு இந்த இடத்திற்கு வந்து சேர்வது அத்தனை எளிதாக இருக்கவில்லை. இது ஒரு புது முயற்சியாக இருந்தபடியால் இந்த வகுப்புகளின் அமைப்பாளர்களுக்கு, எந்த ஒரு முன்மாதிரியோ, வழிகாட்டுதலோ இல்லாமல் இருந்தது.

பில் பிரைசனின் *A Short History of Nearly Every Thing* பிரபலமான புத்தகம். அதில் பிரைசன், எளிய மொழியில் அறிவியற் கூறுகளை விளக்குவார். இந்த நூலில் சிக்கலான வாசகங்கள் இராது; கடினமான சூத்திரங்கள் இராது. நகைச்சுவை மிளிர பிரபஞ்சத்தின் பிறப்பு, உலகத்தின் உருவாக்கம் என்று நம்மை நடத்திக் கொண்டு செல்வார். பரிணாம வளர்ச்சி, தனிமங்களின் கண்டுபிடிப்பு என்று பல அம்சங்களைப் பற்றிக் கூறுவார். புத்தகத்தின் முதல் வாக்கியமே நம்மைக் கவர்ந்துவிடும். அது இப்படி இருக்கும்: "நல்வரவு! வாழ்த்துகள்! நீங்கள் இதுவரை வர முடிந்தது என்னை மிகுந்த மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறது. இந்த இடத்திற்கு வந்து சேருவது அத்துணை எளிதானதல்ல. எனக்குத் தெரியும். நீங்கள் நினைப்பதைவிட அது கடினமானதாக இருந்திருக்கும் என்றே நான் சந்தேகிக்கின்றேன்"

இந்த வாக்கியம் நாம் ஒரு புதிய ஐபாட் அல்லது நுண்ணலை அடுப்பு அல்லது குளிர்சாதனப் பெட்டி வாங்கும்போது அதனுடன் தரப்படும் வழிகாட்டுக் கையேட்டின் தொடக்க வாசகத்தைப் போல் ஒலிக்கிறது. தொடர்ந்து எவ்வாறு கோடிக்கணக்கான அணுக்கள் மிகத் துல்லியமாகவும், நுணுக்கமாகவும் ஒன்று சேர்ந்து உங்களை- அதாவது அவரது புத்தகத்தைப் படிப்பவர்களை, அதாவது மனித குலத்தை- உருவாக்கியது என்று பிரைசன் சொல்கிறார். பிரைசன் மனித குலம் மொத்தத்திற்கும் சொல்வது ஹாங்காங் தமிழ் வகுப்புகளுக்கும் பொருந்தும். இந்தத் தமிழ் வகுப்பின் அமைப்பாளர்களும், ஆசிரியர்களும் பெற்றோர்களும் இளம் மாணவர்களும் இந்த இடத்திற்கு வந்து சேருவது அத்துணை எளிதானதாக இருக்கவில்லை. நீங்கள் நினைப்பதைவிட அது கடினமானதாக இருந்தது.

தமிழ் வகுப்புகள் 2004ஆம் ஆண்டு துவக்கப்பட்டதும், செய்தி செவிவழியாகப் பரவியது 30 குழந்தைகள் சேர்ந்தார்கள். தமிழ்ச் சமூகத்தின் புரவலரான டாக்டர் ஜவஹர் அலி, அவருடைய உணவகத்தில் சனிக்கிழமை மதியம் தோறும் இடம் அளித்தார். இன்றைக்கு டாக்டர் அலி அமரராகிவிட்டார். 'அலாடின் கார்மே' என்ற அவருடைய உணவகம் 'சுன் கிங் மேன்ஷன்ஸ்' என்ற கட்டிடத்தின் ஒன்பதாவது தளத்தில் இருந்தது. சுன்

கிங் மேன்ஷன்ஸ் தெற்கு ஆசியர்கள், மத்திய கிழக்கினர், நைஜீரியர்கள் மற்றும் ஐரோப்பியர்கள் சந்திக்கும் இடமாக இருந்து வருகிறது. அந்தப் பதினேழு மாடிக் கட்டிடத்தில் ஐந்து தொகுதிகள் உள்ளன. ஒவ்வொரு தொகுதிக்கும் இரண்டு மின் தூக்கிகள் மட்டுமே. சுன் கிங் கட்டிடம் ஐம்பது வருடங்களுக்கு முன்பு, அன்றைய காலகட்டத்தின் தேவைகளைக்கருத்தில்கொண்டுகட்டப்பட்டிருந்தது. ஆனால், இன்று அதைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை பல மடங்கு அதிகமாகிவிட்டது.

ஹாங்காங் சீனப் பல்கலைக்கழகத்தின் மானுடவியல் பேராசிரியர் கோர்டன் மாத்யூஸ், ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது 120 நாடுகளைச் சேர்ந்த மக்கள் சுன் கிங் மான்ஷன்ஸிற்கு வந்து போகிறார்கள் என்று மதிப்பிட்டிருக்கிறார். அதன் காரணமாக மின் தூக்கியில் ஏறுவதற்கு ஒருவர் மிக நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டும். தமிழ் வகுப்பின் ஒருங்கிணைப்பாளர்கள் குழந்தைகளை சுன் கிங் மேன்ஷன்ஸ் வாயிலில் இருந்து அழைத்து வந்து மின் தூக்கியில் ஏற்றி, தற்காலிக வகுப்பறையில் இருத்தி, பின் வகுப்பு முடிந்த பின்பும் இதே போல் மேன்ஷன்ஸ் வாயிலில் உள்ள நேத்தன் சாலை வரை அழைத்துச் செல்வார்கள்.

முதன் முதலாக வகுப்பு தொடங்கிய போது, மாணவர்கள் அட்டைகளை மடியில் வைத்துக் கொண்டு அதன் மீது எழுதினார்கள். பின்பு உணவகத்தின் மேசைகள் மாற்றி அமைக்கப்பட்டன. ஆசிரியர்களும், மாணவர்களின் நோட்டுப் புத்தகங்களிலேயே பாடங்களையும் பயிற்சிகளையும் எழுதிக் கொடுத்தனர். பின்னர் கரும்பலகைக்கு, அதாவது மார்க்கர் பேனாவுடன் கூடிய வெள்ளைப் பலகைக்கு மாறினர். உணவகத்தின் ஒரு சிறிய பகுதியில் தொடங்கிய வகுப்புகள் பின்னர் சமையலறையைத் தவிர எல்லா இடங்களையும் ஆக்கிரமித்தன. மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. இடப்பற்றாக்குறை காரணமாக மாணவர்கள் சேர்க்கை ஒரு கட்டத்தில் நிறுத்தப்பட்டது.

கூடுதல் வகுப்பறைகளுக்கான அவசியம் உணரப்பட்டது. 2007இல் Democratic Alliance For Betterment of Hong Kong (டி.ஏ.பி) என்ற அரசியல் கட்சியின் உதவியுடன் யாவ் மாவ் தை-யில் உள்ள நியூமேன் கத்தோலிக்கக் கல்லூரியில் நான்கு வகுப்பறைகள் கிடைத்தன. நீண்ட தாழ்வாரங்கள், விசாலமான வகுப்பறைகள், பல்லூடக வசதிகள், இருக்கைகளுக்கு நடுவே நடந்து செல்ல இடம் என எல்லாம் ஒரே சமயத்தில் கிடைத்தது. ஒரு கனவு நனவானது போல் இருந்தது. நான்காம் ஆண்டு 56ஆக இருந்த மாணவர்களின் எண்ணிக்கை அடுத்த வருடம் 70ஆக உயர்ந்தது. நியூமேன் கத்தோலிக்கக் கல்லூரி நிர்வாகம் தமிழ் வகுப்புகள் நடத்த ஆறு ஆண்டுகள் இடம் அளித்தது. வகுப்புகளைத் தவிர பெற்றோர்-ஆசிரியர் சந்திப்புகள், பொங்கல்-ரம்ஜான் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள், சிறப்புக் கூட்டங்கள் போன்றவையும் பள்ளி வளாகத்திலேயே நடந்தன.



மார்ச் 2013இல் நியூமேன் நிர்வாகம் YIFC கல்விக் கழகத்தினரை அழைத்து. பள்ளியின் பராமரிப்பு, மராமத்து, அபிவிருத்திப் பணிகளுக்காக அவர்களது வகுப்பறைகளை இனித் தமிழ் வகுப்புகளுக்காகத் தர இயலாது என்றும், அடுத்த கல்வியாண்டில் புதிய இடத்திற்கு மாறிக் கொள்ளும்படியும் சொன்னது. இது அமைப்பாளர்கள் முற்றிலும் எதிபாராதது. பத்தாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நேரம், தலை சுற்றியது. என்றாலும் யாரும் தளர்ந்து விடவில்லை. மீண்டும் டி ஏ பி உதவிக்கு வந்தது. இந்த முறை டி.கே.டி.எஸ் பாங்-சுயூ-ச்யூன் பள்ளி வளாகத்தில் வகுப்பறைகளைப் பெற்றுத் தந்தார்கள். பிப்ரவரி 2013ஆம் ஆண்டு முதல் தமிழ் வகுப்புகள் இங்கு நடந்து வருகின்றன.

கடந்த இரண்டு ஆண்டுகளாக ஹாங்காங்கின் இயக்கம் கொரோனாவால் ஸ்தம்பித்த போது, பல அலுவலகங்களும் பள்ளிகளும் இணையத்திற்கு மாறின. ஹாங்காங் தமிழ் வகுப்பும் இந்த வழியைப் பின்பற்றியது. ஒவ்வொரு சனிக்கிழமை மாலை மூன்று மணிக்கு ஒவ்வொரு வகுப்பின் ஆசிரியரும் மாணவர்களும் கணினியின் முன் இருப்பார்கள். ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு அமைப்பாளரும் சேர்ந்து கொள்வார். மாணவர்கள் ஆறு நிலைகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு நிலைக்கும் இரண்டு தன்னார்வ ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். இந்த வகுப்புகளின் முன்னாள் மாணவர்கள், இப்போது பள்ளி இறுதி ஆண்டிலும் கல்லூரியிலும் படிப்பவர்கள், ஆசிரியர்களுக்கு உதவுகிறார்கள். தமிழ் வகுப்பின் அமைப்பாளர்கள் பதின்மர். இவர்கள் அனைவரும் தங்களது நேரத்தையும், சக்தியையும் தமிழ் வகுப்பிற்காகச் செலவிடுகிறார்கள். எந்தப் பிரதிபலனும் எதிர்பார்க்காமல் கடுமையாக உழைக்கிறார்கள். ஹாங்காங் தமிழ்ச் சமூகத்தைப் போலவே தமிழ் வகுப்புகளிலும் இந்துக்களும் இஸ்லாமியர்களும் நல்லிணக்கம் பேணுகின்றனர்.

சுவர் இருந்தால்தான் சித்திரம் தீட்ட முடியும். அந்தச் சுவர்தான் உள்கட்டமைப்பு. அதாவது வகுப்பறைகளும் இன்னபிற புற வசதிகளும்; இது மெதுவாக உருக்கொண்டது. அதே போல்

சித்திரம்தான் உள்ளடக்கம். அதாவது பாடத்திட்டம். அதுவும் வளர்ந்துள்ளது. மாணவர்கள் வெவ்வேறு வயதினராக இருந்தனர். அவர்களுடைய மொழி அறிவைக் கருத்தில் கொண்டபோது, ஒரே வயதுள்ள குழந்தைகளை ஒரு வகுப்பில் சேர்ப்பது சாத்தியமாக இல்லை. அவர்களது மொழித் திறனை அளவுகோலாகக் கொண்டே வகுப்புகள் பிரிக்கப்பட்டன. காலப் போக்கில் இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குழந்தையும் சரியான வயதில் முதல் வகுப்பில் சேருவதால், ஒரே வயதுள்ள குழந்தைகளே அந்தந்த நிலையில் பயில்கிறார்கள். மாணவர்களை வெவ்வேறு நிலைகளாகப் பிரித்த பிறகு பாடத்திட்டத்தின் தேவை உணரப்பட்டது.

வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்ட போது குறிப்பிட்ட பாடத்திட்டம் இல்லை. எழுத்துக்கள், வார்த்தைகள், வாக்கியங்கள் எல்லாவற்றையும் ஆசிரியர்கள் நோட்டுப் புத்தகங்களில் எழுதி, அதைப் பார்த்து மாணவர்கள் எழுதினார்கள் பிற்பாடு தமிழ்நாட்டுப் பாடநூல்களின் ஒளிநகல்கள் பயன்படுத்தப்பட்டன. பல்வேறு பாடத்திட்டங்களைப் பரீசிலித்த பிறகு சிங்கப்பூரின் தமிழ்ப் பாடப் புத்தகங்கள், பல்வேறு கலாச்சாரம், பல இனங்களைக் கொண்ட சமுதாயத்திற்காக உருவாக்கப்பட்டிருந்ததை உணர முடிந்தது. அதனால், அவை ஹாங்காங் சூழலுக்கும் பொருத்தமானதாக இருந்தது. இரண்டாம் ஆண்டு முதல், அதாவது 2005ஆம் ஆண்டு முதல் சிங்கப்பூரின் 'தமிழோசை' நூல்களே மிகுதியும் பயன்படுத்தப் படுகின்றன. கூடவே, தமிழகத்தில் தனியார் நிறுவனங்கள் வெளியிட்டிருக்கும் பயிற்சிப் புத்தகங்களும் இலக்கண நூல்களும் பயன்படுத்தப்படுகின்றன.

இன்னொரு பிரச்சினையும் இருந்தது. இந்தியாவில் மொழியைப் படிப்பதில் எழுதும் திறனுக்கே மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ஆனால், மொழி அறிவு நான்கு முக்கியத் திறன்களை உள்ளடக்கியது. அதாவது, கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகியன. ஹாங்காங் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு இவ்வகையான மொழிக்கல்வியே போதிக்கப்படுகிறது. மாணவர்கள் இந்த நான்கு திறன்களிலும் தேர்ந்து, முழுமையான மொழியறிவு பெற வழிவகை செய்கிறது.

ஹாங்காங் தமிழ் மாணவர்கள் ஆங்கிலத்தையும் பிற மொழிகளையும் இந்த முறையிலேயே படிக்கிறார்கள். அதனால், தமிழையும் இதே முறையில் பயில விரும்பினார்கள். இந்த முறைக்கு ஏற்றாற் போல் பாடத்திட்டம் அமைக்கப்பட்டது. இது மனப்பாடம் செய்யும் முறை அல்ல. வகுப்புகள் இறுதித் தேர்வை மட்டும் குறிக்கோளாகக் கொண்டதல்ல. வாய்மொழித் தேர்வுகளும், சொல்லி எழுதும் தேர்வுகளும் உண்டு. வகுப்பறையில் குழந்தைகளின் திறன் தொடர்ந்து பரிசீலிக்கப்படுவதால் ஆண்டிறுதியில் வரும் எழுத்துத் தேர்வின் முக்கியத்துவம் குறைக்கப்படுகிறது.

மாணவர்களின் தமிழ்க் கல்விக்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டதால் புறமே நடத்தப்படும் தேர்வுகளில் அமைப்பாளர்கள் ஆர்வம் காட்டவில்லை. ஆனால் பலருக்கும் இது ஒரு குறையாக இருந்தது. நமது பிள்ளைகளின் கல்வித் தரத்தை வேறு உரைகல்களில் உரசிப் பார்க்க வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். தமிழக அரசின் தமிழ் இணையக் கல்விக் கழகம் (TVA) மூலம் ஆரம்பக் கல்வி (சான்றிதழ்), உயர் நிலை (மேற்சான்றிதழ்), பட்டயம், பட்டம் என்று பல நிலைகளில் தமிழைக் கற்க முடியும். ஹாங்காங் YIFC கல்விக் கழகம், தமிழ் இணையக் கல்விக் கழகத்தில் தேர்வு மையமாகப் பதிவு செய்துகொண்டது. 2016 முதல் விருப்பமுள்ள மாணவர்கள் இணையக் கல்விக் கழகத்தின் தேர்வையும் எழுதுகிறார்கள். கடந்த ஆண்டு ஆரம்பக் கல்வியின் அடிப்படை, இடைநிலை, மேல்நிலை ஆகிய தேர்வுகளை எழுதியவர்களின் எண்ணிக்கை முறையே 12, 9, 8. தேர்ச்சி விகிதம் எல்லா ஆண்டும் 100%.

ஆக, சுவர் கட்டியாகிவிட்டது, சித்திரமும் வரையப்பட்டுவிட்டது. கொரோனாக் காலத்திலும் வகுப்புகள் நிற்கவில்லை. கடந்த 17 ஆண்டுகளில் வெகு அபூர்வமாகவே சனிக்கிழமை வகுப்புகள் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன. ஆள்பலமோ, பணபலமோ, பெரும் செல்வாக்கோ இல்லாத ஒரு சிறுபான்மையினரின் அமைப்பு அன்னிய நாட்டில் தாய் மொழியைப் பயிற்றுவித்து வருகிறது. இதற்குத் தங்கள் நேரத்தையும் உழைப்பையும் செலவிடும் ஆசிரியர்களும் அமைப்பாளர்களும் ஒரு காரணம். தமிழ் படித்தால் பொருளீட்ட முடியுமா என்று கேட்காமல் தங்கள் பிள்ளைகளை இந்த வகுப்புகளுக்கு அனுப்பி வைக்கும் பெற்றோர்கள் ஒரு காரணம். சுயவிருப்போடும் ஆர்வத்தோடும் தமிழ் கற்கும் மாணவர்கள் முக்கியமான காரணம். இந்தத் தமிழ் வகுப்பின் வெற்றிக்குப்பின் இன்னொரு காரணமும் உள்ளது. அது ஹாங்காங் சமூகம் சிறுபான்மையினரான தமிழ் இனத்திற்கு வழங்கி வரும் ஆதரவு. இந்த வகுப்புகள் வருங்காலங்களில் தமது தொடர்ச்சியாலும் வளர்ச்சியாலும் உலகத் தமிழர்களின் கவனத்தை ஈர்க்கும்.

இந்தத் தமிழ் வகுப்பின் அமைப்பாளர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்குமான செய்தியை, எழுத்தாளர் பில் பிரைசனின் வார்த்தைகளில் இப்படிச் சொல்லலாம். "வாழ்த்துகள். நீங்கள் இதுவரை வர முடிந்தது என்னை மிகுந்த மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறது. இந்த இடத்திற்கு வந்து சேருவது அத்துணை எளிதானதல்ல. நீங்கள் கடந்து வந்த பாதை கடினமானதுதான்." பிரைசனின் வார்த்தைகளோடு நான் மேலும் சேர்த்துக் கொள்வேன், "நீங்கள் இதில் திருப்தி அடைந்து விடக்கூடாது. தொடர்ந்து முன்னோக்கிச் செல்ல வேண்டும்"

*கட்டுரையாளர்: மு.இராமனாதன், எழுத்தாளர், பொறியாளர். தமிழ் வகுப்புகளின் ஆலோசகர். தொடர்புக்கு: Mu.Ramanathan@gmail.com.*

கட்டுரை

அ. கா. பெருமாள்

# ஓட்டன்

**ஓட்டன், தான் வேலைபார்க்கும் மிராசுதாரோ அரசனோ பெருவீரனோ யாராக இருந்தாலும்சரி அவருக்கு நன்றியோடு இருப்பான். அரசியல் செய்திகள் அவனுக்கு நன்குதெரியும்; நாட்டுநலன் கொண்டவனாய் இருப்பான். அரசருக்காக உளவு பார்ப்பவனாகவும் இருப்பான்.**

கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம் எனும் ஊரிலுள்ள தாணுமலயான் கோவில் சுமார் 1600 ஆண்டுகளுக்கு முற்பட்டது. இதன் கோபுர அடிஸ்தானம் 600 ஆண்டுகளுக்கும் முந்தையது. ஆனால் கோபுரம் கட்டப்பட்டது. 130 ஆண்டுகளுக்கு முன்புதான். இந்தக் கோபுரம் ஏழு நிலைகள் கொண்டது. 96 அடி உயரம், எல்லா நிலைகளிலும் 550க்கு மேற்பட்ட ஓவியங்கள்.

இரண்டாம் நிலையில் கிழக்கு சுவர் வாசல் மேல்பகுதியில் ஐந்து ஓவியங்கள் உள்ளன. இவை அன்றைய காலத்தில் வழக்கிலிருந்து செய்திப் பரிமாற்றத்தைக் கூறுவது. முதல் ஓவியம் ஒருவர் தரையில் அமர்ந்து கைப்பிடி மேஜையில் எழுதும் காட்சி, இறகுப் பேனா, மைக்குப்பி, இரண்டாம் ஓவியத்தில் அதிகாரி கைமேஜையில் அமர்ந்து கடிதத்தில் ஒப்பமிடுகிறார். மூன்றாம் ஓவியத்தில் அரசர்; நான்காம் ஓவியத்தில் கடிதம் அவர் கையில் கொடுக்கப்படுகிறது. ஐந்தாம் ஓவியத்தில் தூதன் கடிதத்தைக் கொண்டு செல்லும் காட்சி. இவன் தார் பாய்ச்சிக்கொண்டு வெற்றுடம்பாய் கழுத்தில் ஜோல்னாப் பை, கையில் ஈட்டியுடன் இருக்கிறான். இவன் வேகமாக ஓடுகிறான்.

இப்படியாக உள்ள இந்தத் தூதனை கதைப்பாடல்கள் ஓட்டன் என்று கூறும். தென் மாவட்டக் கதைப்பாடல்கள் சிலவற்றில் இவன் தூதனாகவே காட்டப்படுகிறான். ஓட்டன் என்பதற்குக் காலால் நடந்து செல்லும் தூதன் (Runner) என லெக்சிகன் உரை கூறும். இது பழைய சொல். சிலப்பதிகாரம் வேனிற்காதையில் இளம் கால் இகைத்தான் என்பதற்கு அரும்பத உரையாசிரியர் தூதர் எனப் பொருள் கூறுகிறார். அடியார்க்கு நல்லார் ஓட்டன் என்னும் சொல்லையும் கூறுகிறார். இவர் 12ஆம் நூற்றாண்டினர். எனவே 12ஆம் நூற்றாண்டில் ஓட்டன் என்றும் சொல் வழக்கில் இருந்ததாகக் கொள்ளலாம்.

தென் தமிழகக் கதைப்பாடல்களில் ஓட்டன் என்ற சொல் பரவலாகக் காணப்படுகிறது. இந்தக் கதைப் பாடல்களில் ஓட்டன் வருமிடத்தில் பொதுத் தன்மை உண்டு. கதைப்பாடல்களின் கதாநாயகனின் பிறப்பு பற்றிய செய்தி அது.

கதையின் நாயகனின் தாய் குழந்தை இல்லாமல் தவமிருப்பாள். அதனால் கர்ப்பமடைவாள். அவளுக்கு பிரசவம் பார்க்க மருத்துவச்சியை அழைத்துவரும் பொறுப்பை ஓட்டனிடம் ஒப்படைக்கிறான். கர்ப்பிணியின் கணவன். ஓட்டன் மருத்துவச்சியைத் தேடிப்போவான். ஒன்று ரெண்டுபேர் மறுத்துவிடுவார்கள். ஒருத்தியிடம் பேரம்பேசுவான். ஓட்டனின் வாக்குசாமர்த்தியத்தால் அவள் சம்மதிப்பாள்.

ஓட்டன் மருத்துவச்சியிடம் மருத்துவக் கூலிக்குப் பேரம் பேசுவது விரிவாக வரும். பொன் ஆசை காட்டி அவளை அழைப்பான். இது போன்ற உரையாடல் உடையார் கதை, உலகுடையார்கதை, சிதம்பர நாடார் கதை பொன்னிறத்தாள் கதை போன்ற நூற்களில் விரிவாக வரும். பொன்னிறத்தாள் கதையில், ஓட்டனிடம் கர்ப்பிணியின் கணவன் பேசும் பகுதி விரிவாக வரும். இதில் ஓட்டனின் சமயோஜித புத்தி வர்ணனை வரும்.

ஓட்டன், தான் வேலை பார்க்கும் மிராசுதாரோ அரசனோ பெரு வீரனோ யாராக இருந்தாலும் சரி அவருக்கு நன்றியோடு இருப்பான். அரசியல் செய்திகள் அவனுக்கு நன்கு தெரியும்; நாட்டு நலன் கொண்டவனாய் இருப்பான். அரசருக்காக உளவு பார்ப்பவனாகவும் இருப்பான்.

ஓட்டனிடம் அடுத்த நாட்டுக்கு அரசியல் ஓலை கொடுத்து அனுப்புவது என்ற செய்தி சில கதைப்பாடல்களில் உள்ளன. அந்த ஓலையை அப்படியே கொண்டுசெல்ல வேண்டிய கட்டாயம் இல்லை. மனப்பாடம் செய்துகொண்டும் போகலாம். பதில் செய்தியை ஓலையில் கொண்டு வரலாம்;

நினைவில் இருத்தியும் வரலாம் (தோட்டுக்காரி அம்மன் கதை) ஆமையம்மன் - அம்மாளை என்ற நூல்

நாட்டை அரசாளும் நல்லராசனுக்கு செய்தி சொல்ல

**ஓட்டன் தனையழைத்து ஓடவிட்டார் அம்மானை**
**ஓட்டனும் செய்திதனை நெஞ்சிலே**
**கொண்டுதானே ஓடினார் அம்மனை**
**என்று கூறும்.**
**அழகம் பெருமாள் கதைப்பாடல்.**
**புத்தால் அறிந்தோர் சொல்லக் கேட்டு**
**கைகள் தாம்வீசி ஓடினானே**

எனக் கூறும். இப்படிப் பல உதாரணங்கள் சொல்ல முடியும்.

அரசனுக்குப் பெண் பார்க்கின்ற வேலையையும் ஓட்டனே செய்திருக்கிறார்கள். ஐவர் ராசாக்கள் கதை தொடர்பான இடைச்சி செல்லி கதையில் இது பற்றிய செய்தி விரிவாக வருகிறது. குலசேகரப் பாண்டியனுக்கு வயது 16 ஆகிவிட்டது. பெண்பார்க்க வேண்டும். அவனது தந்தை அமைச்சர்களிடம் ஆலோசித்தார்.

அமைச்சர்கள் ஊர்ஊராய் அலைந்து செய்தி சொல்ல ஓட்டர்கள் இருக்கிறார்கள். இவர்களைப் பண்டாரம் என்றும் அழைக்கிறார்கள். அவர்களுக்கு தகுந்த சன்மானம் கொடுத்து நம் காரியத்தைச் சாதிக்கலாம். குலசேகரப் பாண்டியனின் ஓவியத்தை நான்கைந்து வரைந்துகொள்ள வேண்டும். ஒவ்வொரு பண்டாரமும் ஒவ்வொரு திசைக்காய் இளவரசனின் படத்தைக் கொண்டுபோக வேண்டும்; அவன் புகழைப்பாட வேண்டும். நம் குலத்துப் பாண்டியர்களோ வேறு அரசர்களோ இதை அறிந்து வருவார்கள்" என்கிறார்கள்.



'ஓட்டன்' என்பவன் குறிப்பிட்ட சாதியைச் சார்ந்தவன் அல்லன். பண்டாரம் ஓட்டனாகவும் இருக்கிறான். பாடவும் செய்கிறான். இது சாதி சார்ந்த தொழில் அல்ல. ஓட்டன் பற்றிய தனிக் கதைப்பாடல் உண்டு. திருவிதாங்கூர் ராஜ்யத்தை நிறுவிய அனுஷம் திருநாள் மார்த்தாண்டவர்மா (1729-1758) என்ற அரசனின் தூதன் முண்டன். இவனைப் பற்றிய 560 வரிகள் கொண்ட பாடல் அச்சில் வந்திருக்கிறது. இது வில்லுப்பாட்டாகவும் பாடப்படுகிறது.

ஓட்டன் கதையின் ஒரு பகுதியை (298 வரிகள்) பேரா.சர்வேஸ்வரன் அச்சிட்டிருக்கிறார். (1982) இந்தக் கதையுடன் தொடர்புடைய எட்டுக்கூட்ட தம்புரான் கதை அச்சில் வரவில்லை. ஏட்டு வடிவில் உள்ளது. அகஸ்தீஸ்வரம் ஊர் சி.ராமசாமி நாடார் (1895-1985) என்பவரிடம் ஓட்டன் கதையின் முழுவடிவமும், எட்டுகூட்ட தம்புரான் கதை ஏடும் இருந்தது. நான் 80க்களின் இறுதியில் அவற்றைப் படித்துக் குறிப்பெடுத்திருக்கிறேன். அவர் இறந்தபின் அவரிடம் இருந்த அபூர்வமான சில புத்தகங்களும் ஏடுகளும் திருவனந்தபுரம் சென்றுவிட்டன என்று அறிந்தேன். ஓட்டனைப் பற்றிய சரியான பதிவு இல்லாமல் ஆகிவிட்டது.

ஓட்டன்பட்ட கதை அல்லது ஓட்டக்காரன்கதை தலைப்பில் உள்ள இக்கதை மார்த்தாண்டவர்மா என்ற அரசனுக்கு காவலனாக தூதனாக ஒற்றனாகச் செயல்பட்ட முண்டன் என்பவனின் வரலாறு. இவன் இறுதியில் பகைவரால் கொல்லப்படுகிறான்.

வேணாட்டு அரசவம்சத்தின் கடைசி அரசர் இராமவர்மா. இவரது மருமகன் மார்த்தாண்ட வர்மா. திருவிதாங்கூரின் முதல் அரசர் இவர்; இராமவர்மாவின் வைப்பாட்டி மகன் பப்புதம்பி ராமன்தம்பி ஆகிய இருவரும் திருவிதாங்கூர் நாட்டிற்கு உரிமை கொண்டாடினர். கோவில் நிர்வாக அமைப்பினர்களான எட்டுவீட்டுப் பிள்ளைமார்கள் தம்பிகளைத் தூண்டினர். திருவிதாங்கூர் அரசமுறைப்படி மருமகனே ஆட்சிக்கு வர வேண்டும்.

இந்த மாதிரியான உள்நாட்டு விவகாரத்தில் மார்த்தாண்டவர்மாவிற்கு மிக உதவியாக இருந்தவன் ஓட்டன். இவன் பேச்சு வழக்கில் பிராந்தன் (ஏ.ஆர். நாடார் ஏடு) என்றும் அழைக்கப்பட்டான். ஒரு கட்டத்தில் அரசரைப் போல் வேடம் தரித்து உலாவினான். அப்போது பகைவரால் கொல்லப்பட்டான். மார்த்தாண்டவர்மா அரசபதவி ஏற்றதும் (1729) ஓட்டனுக்கு கோவில் எடுத்தார்.

இந்த ஓட்டனின் கோவில் நாகர்கோவில் கன்னியாகுமரி சாலையில் பொத்தையடி ஊரில் உள்ளது. அறநிலையப் பாதுகாப்பு துறைக்கு உரியது. ஓட்டனுக்கு வேறு ஊர்களில் முண்டன் சாமி கோவில் என்னும் பேரில் வழிபாடு உண்டு.

'ஓட்டன்' வெறும் அரசுப்பணியாளன் அல்லன். தேசத்தின் பேரில் பற்றுள்ளவனுங்கூட.

**கட்டுரையாளர்: நாட்டாரியல் ஆய்வாளர்**

பீட்டர் துரைராஜ்

# கல்வியை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டுவரவேண்டும்

## விக்கி மகேசரி நேர்காணல்

‘அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் 15.5.2022 அன்று, சென்னையில், ஒன்றிய அரசின் தேசியக் கல்விக்கொள்கையை (2020) எதிர்த்து, கருத்தரங்கு ஒன்றை நடத்தியது. மூன்று மாநிலங்களைச் சார்ந்த, நான்கு அமைச்சர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மீண்டும் கொண்டுவர வேண்டும், நீட் (NEET), கியூட் (CUET) போன்ற பொது நுழைவுத்தேர்வுகளை இரத்து செய்ய வேண்டும், ஒன்றிய அரசின் புதிய கல்விக்கொள்கைக்கு எதிராக மாநில அரசுகள் சட்டமன்றத்தில் தீர்மானங்கள் இயற்ற வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நிகழ்வுக்கு வந்திருந்த அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் பொதுச்செயலாளரான, பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த, விக்கி மகேசரி(32)யுடன் உரையாடியதிலிருந்து...



அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்?

*1936இல், உருவான அமைப்பு அனைத்திந்திய மாணவர் பெருமன்றம். விடுதலைக்குப் போராடிய ஒரே மாணவர் அமைப்பு இதுதான். விடுதலைக்கு முன்பு ஏற்பட்ட, வங்கப் பஞ்சத்தின் போது, பொதுமக்களிடம் இருந்து நிதிபெற்று, மூன்று ஆண்டுகள் சமைத்து (Community Kitchen) வங்காள மக்களின் துயரத்தில் கைகோர்த்து நின்றோம். பொதுக்கல்வி, மாணவர் உதவித்தொகை (Fellowship), கல்வி உதவித்தொகை (Scholarship), இலவசப் பேருந்து என மாணவர், கல்வி சம்மந்தப்பட்ட அனைத்து திட்டங்களிலும் எங்களது பங்களிப்பு உள்ளது.*

ஒன்றிய அரசு தேசியக் கல்விக்கொள்கையைப் போதுமான விவாதம் இல்லாமல் கொண்டுவந்துள்ளதா?

*மோடி அரசு மாணவர்களுக்கான கல்விக் கொள்கையை, மாணவர் சமுதாயத்தின் ஒட்டுமொத்த எதிர்காலத்தை உத்தேசித்து உருவாக்கவில்லை. அது மாணவர்களோடு, கல்லூரி ஆசிரியர்களோடு, கல்வியாளர்களோடு விவாதித்து இருக்க வேண்டும். அவர்கள்தான் கல்வியோடு சம்மந்தமுடைய முதல் பங்குதாரர்கள். மாறாக இவர்களைப் புறக்கணித்து, ஆர்எஸ்எஸ்*

அமைப்போடு விவாதித்து இந்தக் கொள்கையை உருவாக்கியுள்ளனர். இந்தக் கொள்கையினால் ஏழை மாணவர்கள், ஆதிவாசிகள், மாற்றுத் திறனாளிகள், பெண்கள் பலன்பெறப் போவதில்லை. இது தேசிய கல்விக் கொள்கை அல்ல; இது தேசிய கல்வி விலக்கக் கொள்கை (National Exclusion Policy). இந்தக் கொள்கையானது விடுதலைக்கு முன்பு, ஆங்கிலேய அரசு கொண்டு வந்த கல்விக்கொள்கையின், இரண்டாவது நகல் போல உள்ளது. வர்த்தக நிறுவனங்கள் இலாபம் அடைவதை மையப்படுத்தி, அவைகளுக்கு எழுத்தர்களை உருவாக்கும் முயற்சி இது. இந்தக் கொள்கை மூன்று C ஐ ஆதாரமாகக் கொண்டுள்ளது; வகுப்புவாதமயமாக்கல் (Communalisation), வணிகமயமாக்கல் (Commercialisation), மத்தியப்படுத்தல் (Centralisation). எனவேதான் இந்தக் கல்விக் கொள்கையை எதிர்த்து மாநில அரசுகள் சட்டசபைகளில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று கோருகிறோம்.

**அப்படியானால் நீங்கள் முன்மொழியும் மாற்றுக் கல்விக் கொள்கை என்ன?**

கல்வியை அனைவருக்கும் வழங்க வேண்டும்; இலவசமாக வழங்க வேண்டும்; கட்டாயமாக வழங்க வேண்டும்; அறிவியல்பூர்வமான கல்வியை வழங்க வேண்டும். இன்று (16.5.2022) எங்கள் அமைப்பின் தேசியக் குழு நடைபெற்றது. இன்னும் ஒரு மாதத்தில் ‘மக்களுக்கான கல்விக் கொள்கையை’ (People’s policy of Education) உருவாக்குவது என தீர்மானித்துள்ளோம். நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியை உறுதிசெய்யும் கல்விதான் நமக்குத் தேவை. இதற்காக கியூப நாட்டு கல்விமுறையையும், பின்லாந்தில் இருக்கும் கல்விமுறையையும் ஆராய்ந்து வருகிறோம்.

இந்த அரசு ஆறாவது, ஏழாவது படிக்கும்போதே தொழிற்கல்வியைத் தரவேண்டும் என்கிறது. அது சரியல்ல. இணையவழியில் கல்வியை சொல்லிக் கொடுக்கப்போகிறோம் என்று கூறுகிறார்கள். அது கேட்பதற்கு வேண்டுமானால் உற்சாகமாக இருக்கலாம். இதனால் கணிணித் தொழிலில் ஈடுபடும் அமெரிக்க நிறுவனங்கள் பலன்பெறும். பள்ளிகளில் நிரந்தர ஆசிரியர்களை நியமிப்பதில்லை. இந்த நிலையில் இணையக் கல்வி தருகிறோம் என்று யாரை ஏமாற்றுகிறார்கள்!

**உலகத்தின் எந்த நாடுகளின் கல்விமுறை நன்றாக உள்ளது?**

கியூபா நாட்டில் கல்வி அனைவருக்கும் இலவசமாகக் கிடைக்கிறது. அங்கு மருத்துவமும் இலவசமாகக் கிடைக்கிறது. ஆசிரியராவது போல, ஆலைத் தொழிலாளியாவது போல மருத்துவராவது, கியூபாவில் எளிது. கொரோனா காலத்தில் உலகமெங்கும் சென்று கியூபா மருத்துவர்கள் இலவசமாக சிகிச்சை அளித்தனர். பின்லாந்தில் ஆறாவது வயதில்தான் கல்வி வழங்கப்படுகிறது. பாடத்திட்டம் அனைவருக்கும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஆனால் நமது புதிய கல்விக் கொள்கை, ஒரே மாதிரியான பாடத்திட்டத்தை இந்தியா முழுவதும் உருவாக்க விரும்புகிறது. தமிழ்நாட்டில் நீட் தேர்வு தரும் மன அழுத்தத்தால் தற்கொலைகள் நடக்கின்றன. இத்தகைய தற்கொலைகள் மற்ற மாநிலங்களில் இல்லை. இதைப் புரிந்து கொள்ளாமல் ஒரே மாதிரியான தேர்வு முறையை ஒன்றிய அரசு இந்தியா முழுவதும் திணிக்கிறது. இந்தக் கல்விமுறை மாணவர்களுக்கிடையே போட்டியைமுறையைத் திணிக்கிறது. இதைப் பயன்படுத்தி தனியார் நிறுவனங்கள் பயிற்சி நிறுவனங்களை வைத்து சம்பாதிக்கின்றன. செலவழிக்க முடியாத எளிய மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதனால்தான், ஒன்றிய அரசு வரவு செலவுத் திட்டத்தில் 10 சதத்தை கல்விக்காக செலவழிக்க வேண்டும் என்று கோருகிறோம். இப்போது இரண்டு சதத்திற்கும் குறைவாகவே செலவழிக்கப்படுகிறது. அரசு மருத்துவக் கல்லூரிகளில், இலவசமாகப் படித்த மாணவர்கள் சேவை மனப்பான்மையோடு மக்களுக்கு பணிபுரிவார்கள். இலட்சக்கணக்கில் செலவழித்துப் படித்தவர்கள் ஒரு ஊசி போடுவதற்கு ஐநூறு ரூபாய் கிடைக்குமா என்றுதான் பார்ப்பார்கள்.


**இந்தியாவில் எந்த மாநிலத்தில் கல்வி சிறந்து விளங்குகிறது?**

கேரளாவின் கல்விமுறை நன்றாக உள்ளது. அங்கு தாலுக்காதோறும் சீர்மிகு பள்ளிகளை (Smart School) உருவாக்கியுள்ளனர். ஒவ்வொரு பள்ளிக்கும் இரண்டுகோடி ரூபாய் வரை செலவழித்துள்ளனர். ஆம் ஆத்மி தில்லியில் பள்ளிகளைச் சிறப்பாக வைத்துள்ளதாகக் கூறுகின்றனர். அங்கு கட்டமைப்புகளுக்கு செலவழிக்கிறார்கள். ஆனால் ஆசிரியர்களுக்கு 4000, ரூபாய், 5000 ரூபாய் என சொற்பக்கூலியை கொடுக்கின்றனர். பிறகு எப்படி சிறப்பானக் கல்வியைத் தர முடியும்.

**மாணவர்களுக்கான விளையாட்டுக் கொள்கை எப்படி இருக்கவேண்டும் என்று நினைக்கிறீர்கள்?**

விளையாட்டுக் கொள்கை என்பது கல்வியோடு இணைந்ததுதான். 137 கோடி மக்கள் தொகையுள்ள நம் நாட்டில் ஒலிம்பிக்கில், காமன் வெல்த் நாடுகளின் விளையாட்டுப் போட்டிகளில் மிகவும் பின்தங்கி இருக்கிறோம். இந்திய அரசிற்கு விளையாட்டுக் கொள்கை என்ற ஒன்றே இல்லை. பள்ளிகளில் குழந்தைகள் படிக்கும்போதே செஸ், வினாடி வினா, ஹாக்கி, கால்பந்து என எல்லாவிதமான விளையாட்டுகளையும் (Soft Games & Physical Games) விளையாடும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். அப்போதுதான் காலப்போக்கில் மாணவர்கள் தங்களுக்கு ஆர்வமான விளையாட்டுகளை தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். விளையாட்டு உபகரணங்கள், பயிற்சியாளர் என அனைத்தையும் அரசு தர வேண்டும். ஒவ்வொரு விளையாட்டிற்கும் பயிற்சியாளர்களைத் தர வேண்டும். ஒரு கிராமத்திற்கு ஐந்து பயிற்சியாளர்களாவது இருக்க வேண்டும். பிறகு பாருங்கள், நமது நாடும் கோப்பைகளை அள்ளும். நீச்சலுக்கு செல்ல வேண்டுமானால்,

**வேலை அளிப்பதை உரிமையாகக் கோருகிறோம். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தைப் போல, பகத்சிங் தேசிய வேலை உறுதியளிப்புச் சட்டம் (BNEGEA) கொண்டுவர வேண்டும்.**




ஐயாயிரம் ரூபாய் செலுத்தினால்தான் பயிற்சி எடுக்க முடியும் என்ற நிலையில், சாதாரண மக்கள் நீச்சல் கற்றுக் கொள்ள முடியுமா ? இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, பளுதூக்கும் போட்டியில் ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் பெற்ற மீரா பாய் ஜானுவிற்கு, அவரது அப்பா காரணமாக இருந்தார். ஒலிம்பிக்கில் இந்தியா சார்பாக ஹாக்கி விளையாடிய ஒரு சிறுமிக்கு சரியான உணவில்லை. அவருடைய அப்பா தில்லியில் ஒரு தினக்கூலி தொழிலாளி. அதையும் எதிர்கொண்டுதான் அவர் விளையாடினார்.

**தகவல் தொடர்பு, போக்குவரத்து, தொழில் நுட்பம் வளர்ந்துள்ள சூழலில் வெளிநாட்டில் இருந்து கல்வி நிறுவனங்கள் இந்தியா வந்தால்தான் என்ன! அதை ஏன் எதிர்க்க வேண்டும்?**

நிதி மூலதனம்தான் இந்த உலகையே ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது. கார் வாங்க, வீடு வாங்க மக்களுக்கு கடன் கொடுத்தாகிவிட்டது. இப்போது வெளிநாட்டுக் கல்லூரிகளில் படிக்க வாய்ப்பிருப்பதாக ஆசையைக் காட்டி, கடனைத் தரப் பார்க்கிறார்கள்.

கொரோனாவின் போது அமெரிக்கா, முகக் கவசம், வெண்டிலேடர், மருந்துகளுக்கு செலவழித்ததை விட அதிகமாக சவப்பெட்டிகளுக்கு *(death bag)* லாபம் வருமென்று செலவழித்தது. இந்த அமெரிக்காவிலிருந்தா பல்கலைக்கழகங்களை வரவழைப்பீர்கள். அவர்கள் கிராமங்களில் நிறுவனங்களை ஆரம்பிக்கட்டுமே. அப்படி செய்வார்களா ! மாட்டார்கள். அவர்களுக்கு இலாபம்தான் குறிக்கோள். உண்மையிலேயே வெளிநாட்டு நிறுவனங்கள் தேவையென்றால்,கியூபா, பெரு, வெனிசூலா போன்ற நாடுகளில் இருந்து கல்வி நிறுவனங்களை வரவழைக்கலாமே. சோவியத் யூனியனில் நமது பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் மருத்துவம் படித்தார்களே. ரஷ்ய நாட்டுப் பல்கலைக்கழகங்களை வர்வழைக்கலாமே ! உண்மையில் இவர்களுக்கு வேண்டியது வணிகப் பரிமாற்றமே !

மாநிலத்தின் தன்மைக்கேற்ப, வேலைவாய்ப்பிற்கேற்ப, கல்வித்திட்டத்தை அந்தந்த மாநில அரசுகளே முடிவுசெய்து கொள்ளட்டும். அதனால்தான் கல்வியை மீண்டும் மாநிலப்பட்டியலுக்கு கொண்டு வர வேண்டும் என்று கோருகிறோம். இதனை வலியுறுத்தித்தான் கேரள உயர் கல்வி அமைச்சர் ஆர்.பிந்து, மகாராஷ்டிராவின் தேசியவாத கட்சியைச் சார்ந்த, வீட்டுவசதித்துறை அமைச்சர் ஜிதேந்திர வாட், தமிழ்நாட்டின் அமைச்சர்கள் பொன்முடி, அன்பில் மகேஷ் ஆகியோர் எங்கள் மாநாட்டில் நேற்று பேசினர். ஒன்றிய அரசு உயர்கல்வி சேர்கைக்கு, நடத்தும் நீட், கியூட் தேர்வுகளை இரத்து செய்ய வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம். இதற்காக பொதுக்கருத்தை உருவாக்க, இயக்கம் நடத்துவோம்.

**இளைஞர் கொள்கை எப்படி இருக்க வேண்டும்?**

கல்வி தருவதோடு ஓர் அரசின் வேலை முடிவதில்லை. படித்த படிப்பிற்கு வேலை தர வேண்டும். உதாரணத்திற்கு பஞ்சாபையே எடுத்துக் கொள்வோம். 17 வயது முதல் 25 வயது வரையுள்ள இளைஞர்கள் பெருமளவில் கனடாவிற்குச் செல்கிறார்கள்; ஆஸ்திரேலியா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கும் செல்கிறார்கள். வேலையின்மை அவர்களைத் துரத்துகிறது. ஒவ்வொரு மாணவனும் கிட்டத்தட்ட 30 இலட்ச ரூபாய் செலவழித்துச் செல்கின்றனர். அப்படியானால் பஞ்சாப் மாநிலத்தின் பொருளாதாரம் என்னவாகும்! அதனால்தான் வேலை அளிப்பதை உரிமையாகக் கோருகிறோம். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தைப் போல, பகத்சிங் தேசிய வேலை உறுதியளிப்புச் சட்டம் (BNEGEA) கொண்டுவர வேண்டும் என்று கோருகிறோம்.18 வந்தடைந்த இளைஞர்களுக்கு வேலை தர வேண்டும் அல்லது உரிய நிவாரணம் தர வேண்டும். விவசாயிகள் போராட்டத்தின் போது, டெல்லி எல்லைகளை பாதுகாக்க, ஓராண்டு முழுவதும் கோடிக்கணக்கான ரூபாய்களை ஒன்றிய அரசு செலவழித்தது. அப்படி இருந்தும் விவசாயிகளே போராட்டத்தில் வெற்றிபெற்றனர். மோடி அரசு தொழிலாளர் சட்டங்களை முதலாளிகளுக்கு ஆதரவாகத் திருத்தியுள்ளது. விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள் என பாதிக்கப்பட்ட மக்கள் இந்த அரசை எதிர்த்து மூர்க்கமாகப் போராடுவார்கள். போகிறபோக்கைப் பார்த்தால், 2024 வரைகூட இந்த அரசு நீடிக்குமா என்பதே சந்தேகமாகத்தான் இருக்கிறது.

•

# மடல் திறப்பு

‘காக்கைச் சிறகினிலே ‘ மே மாத (2022) இதழில், பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன் அவர்கள், ‘பண்பாட்டு மண்ணில் காலூன்றிய தத்துவவாதி’ எனும் தலைப்பில் எழுதியுள்ள தொடர் கட்டுரை கருத்துச் சுரங்கம்!

மார்க்சீயம் எனும் சமூக அறிவியலை, உரு போட்டுக்கொண்டு ஒப்பிக்கும் கணக்கு வாத்தியார் போல (கணக்கு வாத்தியார் ஒரு முறை உருப்போட்டதை எப்போதும், எல்லா சூழ்நிலைகளிலும் சொன்னதையேதான் சொல்லிக் கொண்டிருப்பார்) இல்லாமல், அல்லாமல், படைப்பாக்க ரீதியில் மார்க்சீய அறிவியலை பேசும் எழுதும் மார்க்சீயர் பேராசிரியர் ந.முத்துமோகன். அவருடைய கருத்தையே முடிந்த முடிவாக ஏற்க வேண்டும் என்று அவர் சொல்வதும் இல்லை. மனனம் செய்த மார்க்சீய சொற்றொடரை ஒருவர் சொல்லும் போது,மாற்றுக் கருத்துக்கள் ஏதும் எழாது. அதற்கான வாய்ப்பு இல்லை.

ஆனால், நாடு வரலாறு பாரம்பரியம் பண்பாடு –மதம் மொழி சாதி இன்ன பிற வேறுபாடுகள் இருப்பதைக் கணக்கில் கொண்டு, ‘யதார்த்தம்’ என்னவென்று பார்த்து, படைப்பாக்க ரீதியில் யார் மார்க்சீயம் பேசினாலும்,எழுதினாலும்–இதில் பிழைகள் நேரும் வாய்ப்புகள் உண்டு– மாற்றுக்கருத்துமட்டுமல்ல, எதிர்ப்பும் கூட எழும். இது இயற்கைதான். ‘புதுச் செருப்பு கடிக்கும்’ என்பார் ஜெ.கே! பழைய –பழகிய தடத்தில் பயணிப்பதே சுகம். சுலபமும் கூட. “இந்தியப் பண்பாடு, தமிழ்ப் பண்பாடு ஆகியவை குறித்து ஆழங்கால் படாமல் நாம் வெற்றிகரமான மார்க்சியர்கள் ஆக முடியாது”! என்பவர் பேராசிரியர் ந.முத்து மோகன். எனவே, வாய்ப்பாட்டு மார்க்சீயர்கள் அல்லது வைதீக மார்க்சீயர்கள் அல்லது அடிப்படை வாத மார்க்சீயர்கள் எதிர்ப்புக்கும் பழிப்புக்கும் ஆளாகிறார்!இது இப்படித்தான் இருக்கும். வேறுமாதிரி இருக்க முடியாது. தத்துவம், கோட்பாடு தொடர்பான பேராசிரியர் முத்து மோகன் அவர்களின் சிந்தனைகளை பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன்( தொடர் கட்டுரையில்) ஆய்கிறார். ஆய்வாளர் ‘ஆசி’ அவர்களின் கட்டுரைத் தொடரை கருத்தூன்றி வாசித்தால், நமது கண்கள் திறக்கும்! மார்க்சியம் பற்றிய நமது புரிதல் ஆழமும் விரிவும் கொள்ளும்! வாசியுங்கள் ‘காக்கைச் சிறகினிலே’!

**– வீர. வெள்ளிங்கிரி, கோவை.**

தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக , சினிமா பலரை சுலபமாக அடையும் இன்றைய சூழலில் , சிங்கள சினிமா உயிர்ப்புடன் இருந்திருந்தால் , பல உலகத்திரைப்படங்களை சிங்களம் தந்திருக்கமுடியும். அதை சிங்கள பேரினவாதம் தடுத்து விட்டதே என்ற வேதனை, என். சரவணன் அவர்களின் கட்டுரையைப் படித்தபோது ஏற்பட்டது. சிங்கள வெறியர்களால் நமக்கு ஏற்படும் வேதனையை அதே வீரியத்தோடு சிங்களத்தினரும் அனுபவிக்கிறார்கள் என்பதைச் சொன்னதில் கட்டுரையின் வீரியமும் அடர்த்தியும் பல மடங்கு கூடி விட்டது

சிங்களவர்கள் அனைவரும் தமிழர்களுக்கு எதிரானவர்கள் அல்லர். சில அரசியல்வாதிகள் தமிழர்களை எதிரிகளாகச் சித்தரித்து சிலரைத் தூண்டி விட்டதன் விளைவாக தமிழர்களுக்கும் பேரிழப்பு. சிங்கள மக்களின் கலைப் பொக்கிஷங்களும் அவர்கள் அடைந்திருக்க வேண்டிய உச்சங்களும் களவு போய்விட்டன. இந்த நிலையை எண்ணி சிங்களக் கலைஞர்கள் கண்ணீர் சிந்துவது புரிந்து கொள்ளக்கூடியதே. இந்தப் பேரினவாதம் இல்லை என்றால் தமிழர்கள் எத்தனை எத்தனை கலைப்படைப்புகளைப் பொக்கிஷங்களை உருவாக்கி இலங்கைக்குப் பெருமை சேர்த்திருப்பார்கள் , தமிழனின் கலை உணர்வும் சிங்களக் கலைஞர்களில் பங்களிப்பு கலந்த அந்த சினிமாக்கள் உலக சினிமா வரிசையில் எவ்வளவு சிகரங்களைத் தொட்டிருக்கும். அனைத்தும் வீணாகி விட்டதே என்ற ஆதங்கத்தை தவிர்க்க முடியவில்லை.

சிங்கள வெறியர்களால் ஏற்பட்ட இப்பேரழிவை சிங்கள நூல்கள் பதிவு செய்துள்ளன , தமிழ் மேதைகளுக்காக சிங்கள இதயங்கள் கண்ணீர் வடித்தன , தமிழர்ளுக்குஉதவின போன்றசெய்திகள் மதங்களும், மொழிகளும் மனிதனைப்பிரிக்கலாம், அறிவும் கலையும் அவனை இணைக்கிறது என்பதைப் புரிய வைத்தது. இந்தப்புரிதலோடு படிக்கும்போது மு. இராமனாதனின் ஒரே நாடு,பல நேரம் கட்டுரை புதிய பொருளைத் தந்தது. இந்தியா முழுதும் ஒரே நேரம் என்பதில் தமிழ் நாட்டில் இருக்கும் நமக்கு பெரிய பிரச்சனைகள் இல்லை. அதற்காக நாம் வாளாவிருக்கலாகாது. அசாம், மேகாலயா, மணிப்பூர், மிஜோரம், நாகாலாந்து, திரிபுரா, அருணாச்சல் மாநிலங்களின் தீர்க்கக்கோடு விலகி இருப்பதால், ஒரே நேரம் என்ற சித்தாந்தம் அவர்களுக்குத் துன்புறுத்தலாக இருக்கிறது. அது யாருக்கோ நிகழும் துன்பம் என நினைக்காமல் திரிபுரா குழந்தையின் கல்வி இதனால் பாதிக்கப்படுகிறது என அவர்களுக்காக ஒரு தமிழ் இதயம் துடிப்பதும் அதை, ஒரு தமிழ்இதழ் பதிவுசெய்வதும் எழுத்து, கல்வி, கலை ஆகியவையே மனிதனை இணைக்கும் தங்கச்சங்கிலி எனப் புரிய வைக்கிறது.

**–பிச்சைக்காரன், சென்னை.**
**www.pichaikaaran.com எழுத்தாளர் / வலைப்பதிவர்**

காக்கை மே 2022 கண்டேன். ‘இராமசுப்பிரமணியன் கொள்ளிக்கண் தமிழில் புதுமுயற்சி. இனி இது பரவலாக நம் தமிழகம் தழுவிய ஆய்வாக மாறவேண்டும். திற்பரப்பு அருவியின் பின்னால் உள்ள குகைபற்றிய தகவல்கள் புதுக்கதைபோல் உள்ளம் கவர்ந்தது. தமிழர்கள் கட்டியெழுப்பிய இலங்கை சினிமாக் கட்டுரை இரண்டு மாதமும் படித்தேன். கண்கள் என்னையறியாமல் கண்ணீரைச் சொரிந்தன. வாழவவைத்தவர்களையே வீழ்த்திய கொடுமையிலும் கொடுமை. அவற்றுள் பல தீக்கிரையானது நெஞ்சைச் சுட்டெரிக்கிறது.


**–பொன். முத்தையன், திருவிடைமருதூர்**

மே மாதக் காக்கையின் தலையங்கம் சுருக்கமான அற்புதமான பார்வை. நன்றி தோழர்களே!

**–பசீர் சேகு தாவூத், இலங்கையின் முன்னாள் அமைச்சர்**

காக்கை மே இதழில் தலையங்கப் பக்கத்தில் இடம்பெற்றுள்ள முள்வேலிப் படத்தில் நிற்பவள் ஆரணி. எனது தம்பியின் மகள். சாப்பாட்டுக்கு நின்றாளாம். எனது தங்கையின் மடல் மூலம் இதை அறிந்தேன்.

**– முகிலன், பிரான்சு**
**காக்கை ஆசிரியர் குழுத் தோழர்**




கட்டுரை

**நிகழ் அய்க்கண்**

ayykan1960@gmail.com


# அதிகரித்துவரும் புவி வெப்பமயமும் வறட்சியின் கோரமும்

இந்திய ஒன்றியத்தில் 1991களுக்குப்பிறகான காலத்தில் ஆட்சியிலிருந்த மற்றும் ஆட்சியிலிருக்கின்ற அரசியல் கட்சிகள் யாவுமே சந்தையை அடிப்படையாகக்கொண்ட உற்பத்தி முறையை ஏற்றுக்கொண்டுதான் ஆட்சி செலுத்திவருகின்றன. இதில், இதற்குமுன்னர் ஆட்சியிலிருந்த கட்சியானது, மக்கள் நலத்திட்டங்களுடன் சேர்ந்து சந்தைமயத்தினை படிப்படியாக அமல்படுத்திவந்தது. தற்போது ஆட்சியிலிருக்கும் கட்சியானது, வலதுசாரி அடையாள அரசியலுடன் சேர்ந்து சந்தைமயத்தினை தீவிரமாக அமல்படுத்தி வருகின்றது. இங்கு குறிப்பிட்டுச்சொல்ல வேண்டியது என்னவென்றால் தேர்தலென்று வரும்போது வலதுசாரி அடையாள அரசியல் ரொம்பத் தூக்கலாக இருக்கும். மற்ற நேரங்களில் சந்தைமயத்தினை தீவிரமாக அமல்படுத்தும். ஆனால், இரு கட்சிகளுமே சந்தைமயத்தினை வளர்த்தெடுப்பதிலும், அதற்கேற்றபடி சுற்றுச்சூழலை மாசுபடுத்துவதிலும் எந்தவகையிலும் குறைச்சலின்றியே தொடர்ந்து செயல்பட்டு வந்திருப்பதனைப் பார்க்கமுடியும். இதற்கு ஊடகங்களே சாட்சி !

சந்தை உலகிற்கு பிறகான இச்சமயத்தில், செய்தி மற்றும் தொலைக்காட்சி ஊடகங்களைக் குறித்தமட்டில், இரண்டு விடயங்களில் மாற்றம் ஏற்பட்டிருப்பதைக் கவனித்திருக்கமுடியும். ஒன்று, இவ்விரண்டுமே தம்மளவில் செய்தியெனும் பண்டத்தினை விற்பதற்கேற்ற இடமாக மாறியிருக்கிறது. அடுத்து, இவற்றிலிருந்து வெளிவரும் செய்திகளில் பெரும்பாலானவை தனிமனிதனின் விருப்பத்தினை நிறைவேற்றும் வகையில் அமைந்திருப்பது இதன் சிறப்பம்சம். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், விளையாட்டு, சினிமா, ஆன்மீகம், அரசியல், வணிகம் உள்ளிட்டசெய்திகள் யாவுமே, நிறுவனங்கள் மற்றும் தனிமனித சாகசங்களை உயர்த்திப்பிடிப்பதை மூச்சாகக்கொண்டு செயல்பட்டு வருவதினைப் பார்க்கமுடியும். ஊடகங்களிலிருந்து, இவையாவற்றினையும் உள்வாங்கும் ஒவ்வொரு தனிமனிதனும் கூட, தன்னளவில் விற்பனைக்குரிய பண்டமாக மாற்றமடைந்திருப்பதையும் மறுப்பதற்கில்லை. மேற்குறிப்பிட்ட யாவுமே வணிகப்பண்டமயமாகிவிட்ட சூழலில், போட்டி என்பதும் அனைத்து மட்டத்திலும் தவிர்க்க முடியாததாகியுள்ளது. போட்டி அதிகரிக்க அதிகரிக்க அடையாளம் என்பதும் மேலெழுகிறது.

இன்றைய உலகில், ஒரு நிறுவனத்தின் வெற்றி என்பது, ஒவ்வொரு தனிமனிதனின் நுகர்வில் அடங்கியுள்ளது. அதேசமயம், எந்த ஒரு தனிமனிதனின் செயலுக்கும் அந்நிறுவனங்கள் எந்தவிதத்திலும் பொறுப்பேற்றுக்கொள்வதில்லை. அதேபோல, சமூகத்தில் ஏற்படும் பின்விளைவுகளைப்பற்றியும் கவலைகொள்வதில்லை. ஒரு தனிநபர் அல்லது ஒரு நிறுவனத்தின் வெற்றியினை, லாபத்தோடவே பொருத்திப்பார்க்க மட்டுமே இன்றைய தனிமனிதனின் மூளை பழக்கப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஒரு உற்பத்தி நிறுவனம் எவ்வளவு லாபமீட்டுகிறது என்று பார்க்க விரும்புகிற மக்கள், இதனால் சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்டுள்ள பாதகங்களைப்பற்றியோ அதன் தொடர் விளைவுகளைப் பற்றியோ கவலைகொள்வதில்லை. உற்பத்தி நிறுவனங்களும் அதற்கேற்றாற்போல, தொழில் துவங்கினால் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும், நாடு வல்லரசாகிவிடும் எனவும் ஆசைவார்த்தையை சொல்லிச் சொல்லியே மக்களை மடைமாற்றி வைத்திருக்கின்றனர்.

இப்படியாக, மக்களின் நலனை முன்வைத்தல்லாது, லாபத்தை முன்வைக்கின்ற உற்பத்தி முறையானது, ஒருபக்கம் வளர்ந்துவரும் நாட்டில் வாழும் ஏழைமக்களின் உழைப்பையும், செல்வத்தையும், மூலவளங்களையும் கொள்ளையடிப்பவையாக இருந்து வருவதைக்காணமுடியும். இன்னொருபக்கம், உற்பத்தியினாலும், பெட்ரோலிய எரிபொருட்களை அதிகளவு பயன்படுத்துவதினாலும், மண் - காற்று- தண்ணீரை மாசுபடுத்தி, உணவுக்காகவும், தண்ணீருக்காகவும் மக்களை அலையவிட்டிருப்பதுதான் இன்றைய யதார்த்தமாக இருக்கின்றது.

2000-2019 க்கு இடைப்பட்டக்காலத்தில், உலகமுழுக்க வறட்சியானது, இதற்குமுன்பு இருந்ததைக்காட்டிலும் 29 சதவீதம் அதிகரித்துள்ளதாக ஐ.நா புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. வறட்சியினால் கிட்டத்தட்ட 129 நாடுகள் பாதிக்கப்பட்டு, இதன்

விளைவால், 124 பில்லியன் டாலர் அளவுக்கு உற்பத்தியிழப்பு ஏற்பட்டிருக்கின்றது. முழுக்கமுழுக்க வாழ்வாதாரத்திற்காக நம்பியிருந்த 104 கோடி மக்கள், குறிப்பாக ஆஸ்திரேலியா, அப்பிரிக்கா, இன்னபிற தேசத்து மக்கள் தற்போது உணவுப் பற்றாக்குறையினால் அவதியுற்றுள்ளனர்.

பொதுவாக, பருவநிலை மாற்றத்தின் காரணமாக புவிவெப்பமடைவது அதிகரித்து, மழைப்பொழிவற்று போகும்போது, வறட்சி ஏற்படுகிறது. இதன்விளைவாக,, தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு உணவுப்பற்றாக்குறைக்கு வழியேற்படுத்தி விடுகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் " உலக வானிலை ஆராய்ச்சி அமைப்பானது " வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, அடுத்த ஐந்தாண்டுகளில் குறந்தபட்சம் ஒருவருடத்திற்கு, ஆண்டு சராசரி புவிவெப்பநிலையானது தற்காலிகமாக 1.5 டிகிரி செல்சியஸ் வரை உயருவதற்கு 50 : 50 வாய்ப்பிருக்கிறது எனவும், இதனை சரிசெய்ய, புவிவெப்பமடைதலை தொழில்துறை காலத்திற்கு முந்தைய நிலைகளைவிட 1.5 டிகிரி செல்சியாகக் கட்டுப்படுத்துதான் என்கிறது. இதன்படி வெப்பநிலை உயருவதால், என்னென்ன மாற்றங்கள் நிகழும் எனும்போது, முதலில் கடலினுள் இருக்கும் பவளப்பாறைகள் அழிந்துவிடும். அடுத்து, நிலப்பகுதியில் வாழும் பல்லுயிரினங்கள் அழிவது மட்டுமின்றி, காடுகள் எரிந்து அழிந்துபோய் பாலைவனம் போலாகிவிடலாம்.

புவிமண்டலத்தில், வெப்பநிலை உயர்ந்து வருகிறதென்பதனை, தெற்காசிய நாடுகளிலும் உணரமுடிவதாக விஞ்ஞானிகளும், ஆய்வாளர்களும் சுட்டிக்காட்டுகின்றனர். இதற்கு ஆதாரமாக, கடந்த மார்ச் மாதத்தில், ஆர்க்டிக்கில் 30 டிகிரி, அண்டார்டிக்கில் 40 டிகிரி செல்ஸியஸ் வெப்பம் பதிவாகியிருக்கின்றது. அதுமட்டுமல்லாது, ஏப்ரல் மாதத்தில், 122 வருடங்களில் இல்லாத அளவுக்கு இந்தியாவின் வடக்குப் பகுதிகளில் வெப்பநிலை உயர்ந்து அனல்காற்று வீசியதையும், அதேபோல, பாகிஸ்தானில் "நவாப்ஷா" என்னும் பகுதியில் 122.1 பாரன்ஹீட் அளவு வெப்பநிலை பதிவாகியிருந்ததையும் மேற்கோள் காட்டுகின்றனர். இக்கூற்றினை மேலும் உறுதிசெய்யும் விதமாக 15/16.5.2022 தேதிகளில் டெல்லியில் கிட்டத்தட்ட 50 சத சென்டிகிரேட் வெப்பநிலை பதிவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவைத்தவிர்த்த, பிறநாடுகளில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றங்களைப்பற்றி கூறும்போது, அமெரிக்காவின் மேற்குப்பகுதியில் கடந்த 20 வருடங்களாகவே வறட்சி இருந்து வருகிறது. புவிவெப்பமடைதலை சரியாகக் கணித்து, அதற்கேற்றவாறு நடவடிக்கைகளை மேற்கொள்ளாததின் காரணமாக, ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் காடுகள் அழிவு போதாதென்று, விளைச்சல் குறைந்து, உணவு உற்பத்தி பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கிழக்காசியாவிலுள்ள கம்போடியா, லாவோஸ் மற்றும் தெற்கு சீனாப்பகுதியிலும் இதே வறட்சி நிலைதான். ஆப்பிரிக்காவிலுள்ள சோமாலியா, கென்யா, சூடான் மற்றும் அதனைச்சுற்றியுள்ள பிற நாடுகளிலும் வறட்சியின் பாதிப்பு அதிகரித்திருக்கின்றது. காலநிலை மாற்றத்தின் காரணமாக கடந்த 2020இல் மட்டும் மூன்று கோடி மக்கள் இடம் பெயர்ந்திருக்கிறனர் எனும் புள்ளிவிவரத் தகவலிருந்து அதன் தீவிரத்தினை உணர்ந்துகொள்ளமுடியும்.

கடந்த இருபது வருடங்களில், நீர்தேக்கங்கள் ; மண்ணின் ஈரப்பதம் ; பனிப்பொழிவு ; பனிக்கட்டி ஆகியன வருடத்திற்கு ஒரு சென்டிமீட்டர் வீதம் குறைந்து வருவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். 2018 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, உலகளவில் 203 கோடிமக்கள் தண்ணீர் வசதியற்றும், போதிய தண்ணீர் வசதியின்மையாலும் வாடிவருகின்றனர். தென்அமெரிக்க நாடுகளில் ஒன்றான அர்ஜெண்டினாவில், நதிகள் வறண்டுபோய்விட்டிருக்கின்றது. அந்நாட்டின் தலைநகர் சாண்டியாகோவில் தண்ணீர் ரேஷனில் வழங்கப்படுகிறது. அமெரிக்காவின் தென் மேற்குப்பகுதியிலுள்ள ஏழு மாநிலங்களில் ரேஷனில் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. இதனோடு மட்டுமல்லாது, அப்பகுதியிலுள்ள மிகப்பெரிய ஏரி ஒன்றும் வறண்டுகொண்டே வருவதிலிருந்து பேரழிவைத்தரக்கூடிய வறட்சியின் தீவிரத்தினை அறிந்துகொள்ளமுடியும்.

ஒட்டுமொத்த பூமியின் அளவில், 79 சதவீதம் மட்டுமே மனிதச்செயல்பாட்டிற்குள் இருக்கின்றன. அதிலும் பார்க்க, 40 சதவீத நிலப்பகுதி தரம் தாழ்ந்ததாகியிருக்கின்றது. இப்படியான சூழானது, மக்களிடையே கடும் சமத்துவமின்மையை நோக்கித்தள்ளுவதற்கு வழிவகுத்திருக்கிறது. நிலைமை இப்படியிருக்கும்போது, மொத்தமுள்ள விவசாய நிலப்பகுதியும், ஒரு சதவீத தனியார் விவசாய உற்பத்தி நிறுவனங்களின் கைவசமாகிவிட்டது. இதிலிருந்து எதிர்காலத்தில் எழ்மை மிகுந்த மக்களின் உணவுத்தேவைகளை தீர்க்கும் வல்லமை யார் கையிலிருக்கப்போகிறது என்பது சொல்லாமலேயே விளங்கும்.

உலகெங்கிலுமுள்ள ஏழைமக்களோ, ஒருபுறம் கார்ப்பரேட் நிறுவனங்களின் இன்னல்களையும் இன்னொருபக்கம் இயற்கைப்பேரிடர்களினால் ஏற்படும் வறட்சி ; இயற்கைப்பேரிடர் ; வெப்பநிலை அதிகரிப்பு ; தண்ணீர் பற்றாக்குறையின். துயரங்களை அனுபவித்து வருவதுதான் உண்மைநிலை. நிலைமை இப்படியிருக்கும்போது, ஊடகங்களானாலும் சரி, சர்வதேச நாணய நிதியமானாலும் சரி, உலகளவிலுள்ள பெரும் பணக்காரர்களின் நலனை காக்கவேண்டி, மீதமுள்ள மக்களை காவு வாங்க எந்தச்சூழலிலும் தயங்குவதில்லை என்பதனை மக்கள் உணர்ந்து, செயலாற்றும்போதே மண்ணையும் மக்களையும் காக்க இயலும். என்ன செய்யப்போகிறோம் ?

**இக்கட்டுரையை எழுத உதவியது :**

Droughts up to 29% in a generation and world at crossroads .- article by counter currents collective dated 12.5.2022 (counter currents)

World drought get worse cites ration – article by Robert hunzikea dated 9/5/20200 (counter punch)

மீள்பதிவு

## ‘சண்டே லீடர்’ பத்திரிகையின் முதன்மை ஆசிரியர்

# லசந்த விக்ரமதுங்கவின் மரண சாசனம்!

தேசபக்தி என்ற பெயரில் மனித உரிமைகளைப் பறிப்பதிலும், ஊழல் சாம்ராஜ்யத்தை உருவாக்கியதிலும், பொதுமக்களின் வரிப்பணத்தை சூறையாடியதிலும் மற்றெந்த அதிபரையும்விட நீங்களே மிஞ்சி இருக்கிறீர்கள் என்று மஹிந்த ராஜபக்சே பற்றி கடந்த 2009ஆம் ஆண்டு பத்திரிகையாளர் லசந்த விக்ரமதுங்க தனது மரணத்திற்கு முந்தைய தலையங்கத்தில் எழுதியுள்ளார்.

இலங்கையிலிருந்து வெளியாகும் ‘சண்டே லீடர்’ என்கிற ஆங்கில வாரப்பத்திரிகையின் முதன்மை ஆசிரியராகப் பணியாற்றிய லசந்த விக்ரமதுங்க 11-01-2009 அன்று வெளியாக வேண்டிய இதழுக்காக ஜனவரி 7ம் தேதி எழுதிய தலையங்கம் இது. இதை எழுதிய அடுத்த நாளே அவர் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். தனது மரணத்தின் பாதையை அறிந்திருந்த அவருடைய மரண சாசனமாக இந்தத் தலையங்கம் அமைந்துள்ளது.

ராணுவத்தைத் தவிர வேறு எந்த ஒரு தொழிலும் - தொழில் நிமித்தமாக - அந்த தொழில் புரிபவர்களின் உயிரைப் பலியாகக் கேட்பதில்லை; இலங்கையில் இந்த வகையில் பத்திரிகைத் தொழிலும் இருக்கிறது. கடந்த சில வருடங்களாக ஊடக சுதந்திரத்தின் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருகிறது. மின்னணு மற்றும் அச்சு ஊடக நிறுவனங்கள் எரிக்கப்படுவதும், வெடிகுண்டு தாக்குதலுக்கு உள்ளாவதும், மூடப்படுவதும், பலவந்தமாக நிறுத்தப்படுவதும் தொடர்கதையாகி வருகிறது. எண்ணற்ற செய்தியாளர்கள் தாக்கப்படுகின்றனர், மிரட்டப்படுகின்றனர், படுகொலை செய்யப்படுகின்றனர். இந்த அனைத்தும் - கடைசி அம்சம் உட்பட - எனக்கும் பொருந்தும் என்பது எனக்கு மிகவும் சிறப்பு செய்வதாக உள்ளது.

பத்திரிகைத் தொழிலில் மிக நீண்ட காலமாக நான் இருந்து வருகிறேன். உண்மையில், இந்த 2009ம் ஆண்டு, சன்டே லீடர் பத்திரிகையின் 15ம் ஆண்டாகும். இந்த காலக்கட்டத்தில் இலங்கையில் பல மாறுதல்கள் நடந்துள்ளன. அவற்றில் பெரும்பாலான மாற்றங்கள் விரும்பத்தக்கவை அல்ல என்பதை நான் உங்களுக்கு சொல்லித் தெரிய வேண்டியதில்லை. எல்லையில்லா ரத்த தாகம் கொண்டவர்களால் இரக்கமற்று தொடுக்கப்பட்ட உள்நாட்டுப்போரின் மத்தியில் நாம் இருக்கிறோம். பயங்கரவாதிகளாலோ, அரசாங்கத்தாலோ ஏவப்படும் பயங்கரவாதம் என்பது நமது அன்றாட நிகழ்ச்சியாகிவிட்டது. சுதந்திரத்தை முடக்க விரும்பும் அரசு முக்கிய நடவடிக்கையாக படுகொலைகளை நிகழ்த்தி வருகிறது. இன்று பத்திரிகையாளர்கள் கொல்லப்படுகின்றனர். நாளை நீதிபதிகள் கொல்லப்படுவார்கள். இந்த இரு தரப்பினருக்கும் ஆபத்துகள் அதிகரிக்கின்றன. நம்பிக்கைதான் குறைந்து வருகிறது. இருந்தபோதிலும் ஏன் இந்தத் தொழிலை தொடர்ந்து செய்கிறோம் என்று நான் அவ்வப்போது ஆச்சரியப்படுவதுண்டு. நானும் ஒரு கணவன்தான். எனக்கும் மூன்று அருமையான குழந்தைகள் உள்ளனர். எனக்கும் கடமைகளும், பொறுப்புகளும் உள்ளன, நான் சட்டம் அல்லது பத்திரிகை ஆகிய எந்தத் துறையில் இருந்தாலும். ஆபத்துகளை விலை கொடுத்து வாங்குவது தேவைதானா? தேவையில்லை! என்றே பலரும் கூறுகின்றனர். நண்பர்கள் என்னை வழக்குரைஞர் தொழிலுக்குத் திரும்புமாறு கூறுகின்றனர். அத்தொழில் எனக்கு மேம்பட்ட மற்றும் பாதுகாப்பான வாழ்வைத் தரும் என்று அவர்கள் நம்புகின்றனர். மற்றவர்கள், குறிப்பாக இரு தரப்பிலும் உள்ள அரசியல் தலைவர்கள் அரசியலுக்கு வருமாறு என்னை அழைக்கின்றனர், நான் விரும்பும் துறைக்கு என்னை அமைச்சராக்குவதாகவும் கூறுகின்றனர். இலங்கையில் பத்திரிகையாளர்கள் சந்திக்கும் ஆபத்துகளை உணர்ந்த வெளிநாட்டுத்தூதர்கள், என்னை



லசந்த விக்ரமதுங்க

இலங்கையிலிருந்து வெளியேறுமாறும் – அவர்கள் நாட்டில் பாதுகாப்பாக வசிக்குமாறும் அழைக்கின்றனர். எனக்கு முன்னால் பல வாய்ப்புகள் இருந்தாலும், அதில் ஒன்றைக்கூட நான் செய்வதாக இல்லை. உயர்ந்த பதவி, புகழ், செல்வம், பாதுகாப்பு போன்றவை அழைத்தாலும், அவற்றிற்கெல்லாம் மேலாக உள்ளுணர்வின் அழைப்பே முக்கியமாக இருக்கிறது. நாங்கள் என்ன பார்க்கிறோமோ அதை, அவ்வாறே மண்வெட்டி என்றோ, திருடன் என்றோ, கொலைகாரன் என்றோ அப்படியே எழுதுவதால் சண்டே லீடர் பத்திரிகை சர்ச்சைக்குரிய ஒன்றாக விளங்குகிறது. நாங்கள் வார்த்தை விளையாட்டுகளுக்கு பின்னே பதுங்குவதில்லை. நாங்கள் வெளியிடும் புலனாய்வுச் செய்திகள் அனைத்தும் உரிய ஆதாரங்களுடன் வெளியிடப்படுகின்றன. அதற்காக ஆபத்து வரும் வாய்ப்புகள் இருப்பது தெரிந்தும் எங்களுக்கு ஆதாரங்களை வெளிப்படுத்தும் சமூகப்பொறுப்புள்ள மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். நாங்கள் பல ஊழல்களை வெளிக்கொணர்ந்து இருந்தாலும் கடந்த 15 ஆண்டுகளில் நாங்கள் தவறு செய்துவிட்டதாக யாரும் நிரூபித்தது இல்லை. அதேபோல எங்களுக்கு எதிரான எந்த வழக்குகளும் வெற்றிகரமாக முடிக்கப்பட்டதும் இல்லை. சுதந்திரமான பத்திரிகை என்பது கண்ணாடியாக இயங்கி ஒப்பனை இல்லாத உண்மையான சமூகத்தின் முகத்தை மக்களுக்குக் காட்டும். பத்திரிகைகளின் மூலமாகத்தான் நாட்டின் நிலை குறித்தும், நாட்டை நிர்வகிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் குறித்தும் மக்கள் அறிந்துகொள்ள முடியும். இந்தத் தலைவர்கள்தான் குழந்தைகளுக்கு நல்ல எதிர்காலத்தைக் கொடுப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். சில நேரங்களில் இந்த கண்ணாடியின் மூலம் நீங்கள் பார்க்கும் உருவம் மகிழ்ச்சி அளிப்பதாக இல்லாமல் இருக்கிறது. இந்நிலைக்காக நீங்கள் முணுமுணுத்துக் கொண்டிருக்கும் வேளையில், உங்களுக்காக அந்தக் கண்ணாடியை தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கும் பத்திரிகையாளர்கள் மிகப்பெரும் ஆபத்தில் இருக்கின்றனர். இதுதான் எங்களுக்கான அழைப்பு – நாங்கள் புறக்கணிக்க முடியாத அழைப்பு.

ஒவ்வொரு பத்திரிகைக்கும் ஒவ்வொரு பார்வை இருக்கும், எங்கள் பார்வையை நாங்கள் மறைத்ததில்லை. இலங்கையை ஒரு வெளிப்படையான, மதசார்பற்ற, சுதந்திர ஜனநாயக நாடாக நாங்கள் பார்க்க விரும்பினோம். இந்த வார்த்தைகளுக்கு உள்ளே இருக்கும் பொருளை கவனியுங்கள். வெளிப்படையாக என்றால் அரசு என்பது மக்களுக்கு பதில் சொல்ல கடமைப்பட்டதாக, அரசு மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை தவறாகப் பயன்படுத்தாததாக இருக்க வேண்டும். மதசார்பின்மை என்பது, பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட – பல கலாசாரங்களைக் கொண்ட நம்முடைய சமூகத்தில் நாம் அனைவரும் ஒன்றிணைவதற்கான முக்கியமான கருத்தாகும். சுதந்திரம் என்பது, மனிதர்கள் பலவிதங்களில் வித்தியாசமாக படைக்கப்பட்டுள்ளனர் என்பதையும், அவர்கள் இருக்கும் முரண்பட்ட விதங்களிலேயே ஏற்றுக்கொள்வதுமாகும். நாம் விரும்பும் விதத்தில் அவர்கள் இருக்க வேண்டும் என்று கூறுவதல்ல. மேலும் ஜனநாயகம் என்பது... இது ஏன் முக்கியமானது? என்பதையும் நான் விளக்க வேண்டும் என்று எதிர்பார்த்தால், மன்னிக்கவும்! நீங்கள் இந்தப் பத்திரிகையை வாங்குவதை நிறுத்திவிடுவதே நல்லது. பெரும்பாலானவர்கள் ஆதரிக்கிறார்கள் என்பதற்காக ஒரு கருத்தை கேள்வி கேட்காமல் எழுதுவதன் மூலம் – பிரதிபலிப்பதன் மூலம் சண்டே லீடர் பத்திரிகை பாதுகாப்பு தேடியதில்லை. கருத்து முரண்பாடுகளை எதிர்கொள்வதன் மூலமாகவே இதுவரை பத்திரிகையை நடத்தி வந்திருக்கிறோம். இத்தனை ஆண்டுகளாக நாங்கள் கூறிய கருத்துகள் மக்களில் பலருக்கும் சுவை அளிப்பதாக இல்லை என்பது தெரியும். உதாரணமாக, தனிநாடு கேட்கும் தீவிரவாதத்தை ஒடுக்கும் அதே நேரத்தில், பயங்கரவாதத்திற்கான மூல காரணங்களை கண்டறிந்து அவற்றையும் களைய வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். மேலும் இலங்கை இனப்பிரசினையை பயங்கரவாத பூதக்கண்ணாடி மூலமாக மட்டுமே பார்க்காமல், வரலாற்று நோக்கிலும் இந்தப் பிரச்சினையை பரிசீலிக்க வேண்டும் என்றும் கூறிவருகிறோம். பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்று கூறிக்கொண்டு சொந்த நாட்டு மக்கள் மீதே குண்டுகளை வீசி படுகொலை செய்வதை வழக்கமாக கொண்டுள்ள நாடு உலகிலேயே இலங்கை ஒன்றுதான் என்பதையும் எடுத்துக்கூறி அதை எதிர்த்து வருகிறோம். இத்தகைய கருத்துகளுக்காக நாங்கள் தேசவிரோதிகள் என்று முத்திரை குத்தப்படுகிறோம். இது உண்மையிலேயே தேசவிரோதம் என்றால் அதைப் பெருமிதத்துடன் ஏற்கிறோம். சண்டே லீடர் பத்திரிகைக்கு அரசியல் நோக்கம் இருப்பதாக பலரும் கருதுகின்றனர். ஆனால் உண்மையில் அப்படி இல்லை. எதிர்கட்சிகளை விமர்சனம் செய்வதைவிட தீவிரமாக அரசை விமரிசனம் செய்வது ஏனென்றால், கிரிக்கெட் விளையாட்டில் பேட்ஸ்மேனை தவிர்த்து, பீல்டிங் பகுதியில் பந்து வீசுவதில்லையோ, அதேபோல் ஆட்சியில் உள்ளவர்களுக்கு எதிராகத்தான் தீவிரமாக விமர்சனங்களை வைக்க முடியும்; எதிர்கட்சிகள் மீதல்ல. கடந்த காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்தபோதும், அந்த ஆட்சியின் அத்துமீறல்களை, ஊழல்களை வெளிக்கொணர்ந்து அன்றைய ஆட்சியின் தொண்டையில் சிக்கிய முள்ளாக நாங்கள் இருந்தோம். இத்தகைய எங்களின் போக்கும் அந்த ஆட்சி வீழக் காரணமாக இருந்தது. போரை நாங்கள் எதிர்க்கிறோம் என்பதற்காக நாங்கள் தமிழீழ விடுதலைப்புலிகளை ஆதரிக்கிறோம் என்று அர்த்தமில்லை. உலகில் உள்ள மிகவும் இரக்கமற்ற – ரத்தவேட்கை கொண்ட இயக்கங்களில் ஒன்றாக அந்த

இயக்கம் இருக்கிறது. அந்த இயக்கம் அழிக்கப்படவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. ஆனால் அவ்வாறு கூறுவதால், தமிழ் மக்களின் மனித உரிமைகளை பறிப்பதையும், அவர்கள் மீது இரக்கமற்று துப்பாக்கிச்சூடு மற்றும் குண்டுமழை பொழிவதையும் ஏற்க முடியாது. ஏனெனில் அது தவறானது மட்டுமல்ல, புத்தரின் தர்மத்தை பாதுகாப்பதாகக் கூறும் நாம் வெட்கப்படவேண்டியதும் ஆகும். இத்தகைய அத்துமீறிய தாக்குதல்கள், செய்தித்தணிக்கை காரணமாக பொதுமக்களுக்கு உரியமுறையில் சென்று சேர்வதில்லை. இதைவிட நாட்டின் வடக்கு-கிழக்குப் பகுதியில் குவிக்கப்பட்டுள்ள ராணுவத்தின் காரணமாக அப்பகுதியில் வசிக்கும் தமிழ் மக்கள், அவர்களின் சுயமரியாதையை இழந்து, நிரந்தரமாக இரண்டாம்தர குடிமக்களாக வசிக்க வேண்டிய அவலமும் ஏற்பட்டுள்ளது.

போர் முடிந்த பின்னர், அப்பகுதியில் மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்வதன்மூலம் சீற்றத்தை தணிக்கமுடியும் என்று கனவு காணக்கூடாது. இந்தப்போரின் ரணங்கள் நிரந்தர வடுக்களை ஏற்படுத்திவிடும். இதன் விளைவாக தமிழ் மக்களிடம் மேலும் கசப்புணர்வும், வெறுப்புணர்வுமே ஏற்படும். அதை சமாளிப்பது எளிதல்ல. அரசியல் ரீதியாக தீர்வு காணக்கூடிய ஒரு பிரச்சனை, அனைத்து தரப்பு மக்களையும் துன்புறுத்தக்கூடிய சீழ்ப்பிடித்த கொடுங்காயமாக மாறிவிடும். நான் கோபமடைந்தும், சலிப்புற்றும் இருக்கிறேன் என்றால், எனது நாட்டு பெரும்பான்மை மக்களும் - முழு அரசும் - வெளிப்படையாகத் தெரியும் இந்த உண்மையை பார்க்கத் தவறுவதால்தான். நான் இரண்டு முறை தாக்கப்பட்டதும், எனது வீடு துப்பாக்கி குண்டுகளால் துளைக்கப்பட்டதும் அனைவருக்கும் தெரியும். இந்த சம்பவங்கள் குறித்து உரிய விசாரணை நடத்துவதாக அரசுத்தரப்பில் உறுதி அளிக்கப்பட்டாலும், இந்த தாக்குதல் குறித்த விசாரணை நடத்தி, இந்தத் தாக்குதலுக்கு காரணமானவர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. இந்த அனைத்து சம்பவங்களும் அரசின் தூண்டுதல் காரணமாகவே நடந்தது என்று நான் நம்புவதற்கு காரணங்கள் உள்ளன. இறுதியில் நான் கொல்லப்பட்டால், அரசுதான் என்னை கொன்றிருக்க வேண்டும். இதில் துயரமான வேடிக்கை என்னவென்றால், நானும் மஹிந்தாவும் கடந்த கால்நூற்றாண்டாக நண்பர்களாக இருப்பது பொதுமக்களில் பலருக்கும் தெரியாது. அவரை அவரது முதல் பெயரான 'மஹிந்தா' என்ற பெயரிலும், சிங்கள மொழியில் அழைக்கும் 'ஓயா' என்று அவரை இன்றும் அழைக்கும் மிகச்சிலரில் நானும் ஒருவனாக இருப்பேன். அதிபர் மாதத்திற்கு ஒருமுறை பத்திரிகை ஆசிரியர்களை சந்திக்கும் கூட்டத்திற்கு நான் செல்வதில்லை. எனினும் சில பின்னிரவு நேரங்களில் தனியாகவோ, நெருங்கிய நண்பர்கள் சிலருடனோ அதிபரின் இல்லத்திலேயே சந்தித்து அரசியலைப்பற்றியும், பழைய இனிமையான நாட்களைப் பற்றியும் பேசுவதுண்டு. இந்த இடத்தில் சில குறிப்புகளை கூற விரும்புகிறேன். நண்பர் மஹிந்தா! கடந்த 2005ம் ஆண்டில் இலங்கை சுதந்திரக் கட்சியின் அதிபர் வேட்பாளராக நீங்கள் உருவெடுத்தபோது, எங்கள் பத்திரிகையைப்போல இதமான வரவேற்பு உங்களுக்கு வேறு எங்கும் கிடைக்கவில்லை. உண்மையில் உங்கள் முதல் பெயரை குறிப்பிடுவதன் மூலம் பல்லாண்டாக நடைமுறையில் இருந்த சம்பிரதாயங்களை உடைத்தோம். மனித உரிமைகள் மற்றும் சுதந்திரம் மீது அப்போது நீங்கள் கொண்டிருந்த கொள்கைகளுக்காக உங்களை நாங்கள் வரவேற்றோம். ஆனால் 'ஹம்பன்டோடா'வுக்கு உதவும் முறைகேட்டில் நீங்கள் முட்டாள்தனமாக ஈடுபட்டபோது நாங்கள் கனத்த இதயத்தோடு அதை வெளியிட்டோம். மேலும் முறைகேடு செய்யப்பட்ட பணத்தை திருப்பி அளிக்கும்படியும் வலியுறுத்தினோம். அதை நீங்கள் பல வாரங்கள் கடந்து செய்தீர்கள். உங்கள் மீதான நன்மதிப்பில் மிகப்பெரும் தீயவிளைவை அது ஏற்படுத்தியது. அது உங்களை இன்றளவும் துரத்தி வருகிறது. அதிபர் பதவி மீது உங்களுக்கு ஆர்வமில்லை என்று நீங்களே என்னிடம் கூறி இருக்கிறீர்கள். நீங்கள் அதிபர் பதவியைத்தேடி செல்லவில்லை: அப்பதவி தங்கள் மடியில் விழுந்தது. உங்கள் மகன்களே உங்களின் மகிழ்ச்சி என்றும், அரசு நிர்வாகத்தை உங்கள் சகோதரர்களிடம் ஒப்படைத்துவிட்டு, உங்கள் மகன்களோடு நேரத்தை செலவிடுவதே உங்களுக்கு விருப்பமானது என்றும் நீங்கள் கூறியிருக்கிறீர்கள்.

இப்போது எனது மகனுக்கும், மகளுக்கும் தந்தை இல்லாது போகும் சூழலில் அரசு நிர்வாகத்தை செம்மையாக நடத்துவது யார் என்பது அனைவருக்கும் தெரியவருகிறது. எனக்கு மரணம் ஏற்படும்போது, நீங்கள் வழக்கமான சடங்குச் சொற்களை கூறுவதோடு, முழுமையான விசாரணை செய்யுமாறு காவல்துறைக்கு உத்தரவிடுவீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் இதே போன்ற மற்ற சம்பவங்களில் நடந்ததைப்போல இந்த விசாரணையிலும் எந்த உண்மையும் வெளிவராது என்பதும் எனக்குத் தெரியும். ஆனால் உண்மையைச் சொன்னால், எனது மரணத்திற்குப் பின்னால் யார் இருப்பார்கள் என்பது நாம் இருவருக்கும் தெரியும், அந்த பெயரைச் சொல்லும் துணிவு உங்களுக்கு இல்லாவிட்டாலும்கூட. ஏனெனில் என் வாழ்க்கையோடு, உங்கள் வாழ்க்கையும் அந்த உண்மையில் சிக்கியிருக்கிறது. இலங்கை தேசம் குறித்து நீங்கள் இளமையில் கண்ட கனவுகள், நீங்கள் அதிபராகப் பதவியேற்ற இந்த மூன்று ஆண்டுகளில் உடைந்த செங்கற்களைப்போல தூள்தூளாகி விட்டது. தேசபக்தி என்ற பெயரில் மனித உரிமைகளைப் பறிப்பதிலும், ஊழல் சாம்ராஜ்யத்தை உருவாக்கியதிலும், பொதுமக்களின் வரிப்பணத்தை சூறையாடியதிலும் மற்றெந்த அதிபரையும்விட நீங்களே மிஞ்சி இருக்கிறீர்கள். உண்மையைச் சொல்லப்போனால், பொம்மை கடையில் இறக்கிவிடப்பட்ட குழந்தையைப்போல நீங்கள் இருக்கிறீர்கள். ஆனால் அந்த உதாரணம்கூட உங்களுக்குப் பொருந்தாது. ஏனெனில் நீங்கள் இந்த மண்ணில் ஏற்படுத்திய ரத்தக்கறையையும், குடிமக்களின் மனித உரிமைகளைப் பறித்ததையும்போல எந்தக் குழந்தையாலும் செய்ய முடியாது.

நீங்கள் பதவி போதையில் மூழ்கி இருப்பதை உங்களால் உணரமுடியாது: இந்த போதை தலைக்கேறிய நிலையில் உங்கள் மகன்கள் இருப்பதைப் பார்த்து நீங்கள் வருந்தும் நிலை ஏற்படலாம். அது துயரத்தையை கொண்டுவரும். என்னைப் பொறுத்தவரை, தெளிவான மனநிலையில் என்னைப் படைத்தவனிடம் நான் செல்கிறேன். உங்களுக்கான நேரம் இறுதியாக வரும்போது, நீங்களும் அதையே செய்வீர்கள் என்று நம்புகிறேன். அதை விரும்புகிறேன். என்னைப் பொறுத்தவரை, நான் எந்த தனிமனிதனுக்கும் பணியாமல், தலை நிமிர்ந்து வாழ்ந்த நிறைவு இருக்கிறது. நான் இந்தப் பாதையில் தனியே

பயணம் செய்யவில்லை. சக பத்திரிகையாளர்களும் என்னோடு பயணம் செய்துள்ளனர். அவர்களில் பலர் கொல்லப்பட்டுள்ளனர்; விசாரணையின்றி சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்; தூர தேசங்களுக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர். அதிபரான நீங்கள் முன்னொரு காலத்தில் எந்த பத்திரிகை சுதந்திற்காக பாடுபட்டீர்களோ, அதே பத்திரிகை சுதந்திரத்திற்காக தற்போது பாடுபடும் மேலும் சில பத்திரிகையாளர்கள் மரணத்தின் நிழலில் உள்ளனர். எனது மரணம் தங்கள் கண்காணிப்பின் கீழ் நிகழ்வதை நீங்கள் மறக்கவே முடியாது. எனது கொலையாளிகளை நீங்கள் பாதுகாப்பதைத்தவிர வேறு வாய்ப்பில்லாத நிலையில் நீங்கள் இருப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும். அவர்கள் எப்போதும் தண்டிக்கப்படாத வகையில் நீங்கள் பார்த்துக்கொள்வீர்கள் என்பதும் எனக்குத் தெரியும். உங்களுக்கு வேறு வழியே இல்லை. உங்களுக்காக நான் வருந்துகிறேன். உங்களைப் பதவியில் அமர்த்தியுள்ள உங்கள் குடும்பத்தினர், உங்கள் பாவங்களுக்காகவும் கடவுளிடம் நீண்ட நேரம் முழந்தாளிட்டு பாவமன்னிப்பு கேட்பார்கள். சண்டே லீடர் பத்திரிகையின் வாசகர்களுக்கு சொல்ல விரும்புவது என்னவென்றால், எங்கள் பணியில் துணை நின்றதற்காக உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறுபான்மையினரின் நலன்களுக்காக, குரல் எழுப்பக்கூட நாதியற்றவர்களுக்காக குரல் கொடுத்திருக்கிறோம். வேர்களை மறந்துவிட்டு தலை கொழுத்துத் திரிபவர்களின் ஊழல்களை வெளிப்படுத்தி உங்கள் வரிப்பணம் விரயமாக்கப்படுவதை அம்பலப்படுத்தி இருக்கிறோம். அரசுத்தரப்பில் கூறப்படும் பிரச்சாரங்களுக்கு மாற்றாக உண்மை நிலையை உணர்த்தி இருக்கிறோம். இதற்கான விலையை ஒரு நாள் கொடுக்க வேண்டும் என்று எனக்கு எப்போதும் தெரியும். அதனை நானும் – என் குடும்பத்தினரும் தற்போது கொடுக்கிறோம். நான் அதற்கு எப்போதும் தயாராகவே இருக்கிறேன். இதனைத் தடுக்க நான் எதையும் செய்யவில்லை; முன்னெச்சரிக்கையோ, பாதுகாப்போ இல்லை. ஆயிரக்கணக்கான படுகொலைகளைக் கண்டிக்கும்போது மனித கேடயங்களின் பின் பதுங்கிக்கொள்ளும், எனது கொலையாளியைப்போல நான் கோழை இல்லை என்பதை அவன் உணர வேண்டும் என்று விரும்புகிறேன். எனது உயிர் யாரால் எப்படி கவரப்படும் என்பது முன்னரே தீர்மானிக்கப்பட்டுவிட்டது. அது எப்போது நடைபெறும் என்பதுதான் மீதமுள்ள கேள்வி.

சண்டே லீடர் பத்திரிகை தனது அறம் சார்ந்த யுத்தத்தை தொடர்ந்து நடத்தும் என்பதும் ஏற்கனவே எழுதப்பட்டுவிட்டது. நான் இந்தப்பணியில் தனித்து செயல்படவில்லை. இந்த பத்திரிகை வீழ்த்தப்படுவதற்கு முன்னர் எங்களில் பலர் கொல்லப்படவேண்டும் – கொல்லப்படுவார்கள். அதுவரை சண்டே லீடர் பத்திரிகை மக்களுக்காகப் போராடும். எனது கொலை பத்திரிகை சுதந்திரத்தின் மீதான தாக்குதலாக கருதப்படாமல், கருத்துரிமைக்காக தொடர்ந்து பணியாற்றும் பத்திரிகையாளர்களுக்கான தூண்டுதலாக செயல்படும் என்று நம்புகிறேன். இன்னும் சொல்லப்போனால் எனது கொலை, இலங்கையில் மனித விடுதலைக்கான புதிய யுகத்தை படைப்பதற்காக போராடும் சக்திகளை இணைக்க உதவி செய்யும் என்றும் நம்புகிறேன். தேசபக்தியின் பெயரால் பல படுகொலைகள் நடந்தாலும், மனிதநேயம் மேலும் செழித்து வளரும் என்றும் அது அதிபரின் கண்களைத் திறக்கும் என்றும் நம்புகிறேன். எத்தனை ராஜபக்சேக்கள் சேர்ந்தாலும் மனிதநேயத்தை அழித்துவிட முடியாது. நான் இத்தகைய ஆபத்தான முயற்சிகளில் இறங்க வேண்டுமா என்று பொதுமக்கள் பலரும் என்னிடம் கேட்டுள்ளனர். காலம் மாறும்போது இந்த அநீதிகளும் மாறிவிடும் என்றும் அவர்கள் கூறுகின்றனர். எனக்கும் அது தெரியும்: அது தவிர்க்கமுடியாததும்கூட. ஆனால் இப்போது நாம் பேசாவிட்டால், பின்னர் பேசுவதற்கு யாரும் மிஞ்சாமலே போய்விடக்கூடும். அவர்கள் சிறுபான்மையினராக, ஒடுக்கப்பட்டவர்களாக, வாய்ப்பு மறுக்கப்பட்டவர்களாக இருக்கலாம். ஜெர்மானிய மதத் தத்துவாதியாகிய மார்ட்டீன் நீய் மொல்லர் என்பவரின் வாழ்க்கை அனுபவமே எனது பத்திரிகை வாழ்க்கை முழுக்க எனது உந்து சக்தியாக செயல்பட்டு வந்தது. யூதர்களுக்கு எதிரான கருத்து கொண்ட இவர், இளமைக்காலத்தில் ஹிட்லரின் ஆதரவாளராக இருந்தார். ஹிட்லர் தலைமையிலான நாஜிக்கள் ஜெர்மனியை கைப்பற்றியவுடன், ஹிட்லரின் கொள்கை யூதர்களை மட்டுமே அழிப்பதல்ல என்பதையும், ஹிட்லருக்கு எதிரான கருத்து கொண்ட அனைவரையும் அழிப்பதே ஹிட்லரின் நோக்கம் என்பதையும் புரிந்து கொண்டார். ஹிட்லருக்கு எதிரான கருத்துகளைக் கூறிய மார்ட்டீன் நீய் மொல்லரும் நாஜிப்படையால் பிடிக்கப்பட்டு1937 முதல் 1945 வரை சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

அவர் படுகொலை செய்யப்படுவதற்குமுன் எழுதிய கவிதையை நான் என் இளம்பருவத்தில் படித்தேன். என் நெஞ்சில் நிலைத்த அந்த கவிதை இதோ: முதலில் அவர்கள் யூதர்களைப் பிடிக்க வந்தனர். நான்பேசவில்லை: ஏனெனில் நான் யூதன் அல்ல. பின்னர் அவர்கள் கம்யூனிஸ்டுகளைப் பிடிக்க வந்தனர். நான் பேசவில்லை: ஏனெனில் நான் கம்யூனிஸ்ட் அல்ல. பின்னர் அவர்கள் தொழிற்சங்கவாதிகளைப் பிடிக்க வந்தனர். அப்போதும் நான் பேசவில்லை: ஏனெனில் நான் தொழிற்சங்கவாதியும் அல்ல. பின்னர் அவர்கள் என்னைப் பிடிக்க வந்தனர். அப்போது எனக்காக பேச யாருமே இல்லை. நீங்கள் எதை மறந்தாலும் இதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். சண்டே லீடர் பத்திரிகை உங்களுக்காக உள்ளது. நீங்கள் சிங்களராக, தமிழராக, இஸ்லாமியராக, தாழ்த்தப்பட்ட சாதியினராக, ஓரினப்புணர்ச்சியாளராக, எதிர்கருத்து கொண்டவராக அல்லது ஊனமுற்றவராக இருக்கலாம். உங்களுக்காக போராடுவதற்கு, அதிகாரத்திற்கு அடிபணியாமல் – அச்சமில்லாமல், தைரியமாக செயல்படுவதற்கு சண்டே லீடரின் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இது வெறும் வார்த்தையல்ல. பத்திரிகையாளரான எங்கள் தியாகங்கள் எங்கள் பெயருக்கும், புகழுக்கும் செய்யப்பட்டதல்ல; அது உங்களுக்காக செய்யப்பட்டது. அந்த தியாகத்திற்கான தார்மீகத்தகுதி உங்களுக்கு இருக்கிறதா என்பது வேறு விவகாரம். என்னைப் பொறுத்தவரை நான் அதற்கு முயற்சி செய்தேன் என்பது கடவுளுக்குத் தெரியும்.

*பதிவு: சி. விஜயலட்சுமி*
*தமிழில்: வழக்கறிஞர் சுந்தர்ராஜன்*
*நன்றி: தமிழ் இந்தியா.காம்*

கோடுகளின் நடுவில்

டிராட்ஸ்கி மருது
trotskymarudu@gmail.com

கங்குபாய்:

# சினிமாக்காரர்களுக்குப் பாடம் நடத்தும் படம்

ரொம்பநாள் கழித்து 'கங்குபாய்' என்கிற திரைப்படத்திலிருந்து ஒரு பாடல் காட்சியைப் பார்த்தேன். பின் எல்லாப் பாடல்காட்சிகளையும் பார்த்தேன். ஆனால் *Shikayat*' என்கிற அந்தப் பாட்டு மட்டும் எனக்குள் நீங்காத பதிவாய் நிலைத்துக்கிடக்கிறது.

சினிமா உலகின் மிகப்பெரிய கலைஞர்களின் எத்தனையோ படக்காட்சிகளை பாடல்காட்சிகளை நான் விரும்பிப் பார்த்ததுண்டு. அந்தக் காட்சிகள் பிடித்துவிட்டால் நான்குமுறை, ஐந்துமுறைகூட பார்த்திருக்கிறேன். ஆனால் இந்தப் பாடல் காட்சியை மட்டும் இதுவரை ஒரு 40 முறை பார்த்திருப்பேன். நண்பர்கள் வரும்போது அவர்களுக்கும் போட்டுக்காட்டுகிறேன். இப்படிப் பலமுறை பார்ப்பதும், கற்பதும் எனக்கு அருகி வெகுகாலம் ஆகிவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

இதில் சிறப்பு என்னவென்றால் அந்தப் படத்தின் இயக்குநரே அந்தப் பாட்டுக்கு இசையும் அமைத்திருக்கிறார். அந்தப் படத்தில் வந்த மற்ற பாடல்களைவிட இந்த ஒருபாடல் மட்டும் என்னை அவ்வளவு ஈர்த்ததற்குக் காரணம், அந்த ஒரு பாட்டுக்குள்ளேயே படத்தின் மொத்தக் கதையும் சொல்லப்பட்டிருக்கிறது; காட்சிப் படிமமாக ஒவ்வொரு அசைவும் என்னோடு பேசுவதுபோலவே இருப்பதாக நான் உணர்கிறேன். பாடல் எனக்குப் புரியவில்லை. அந்தமொழி எனக்குத் தெரியாது. என்றாலும் அந்தப் பாட்டு என்னோடு பேசுகிறது.

அந்தப்பாடல், காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் முறையின் மூலமாக அந்தப் பாடலின் இசைக்கூறுகளை உள்வாங்கி அந்த இசைக் கூறுகளுக்கேற்ப காட்சிப்படுத்தப்பட்டிருக்கிற முறைமை என்னைக் கவர்ந்திருக்கிறது. அந்த *Short duration*-க்குள் அது என்ன சொல்ல வருகிறதோ அதை இம்மியும் பிசகாமல் ஒரு காட்சியின் அசைவையும் அடுத்துவரக்கூடிய காட்சியின் அளவையும் அடுக்கடுக்காய் வெளிப்படுத்தி நம்மை இருக்கையிலேயே கட்டிப்போட்டுவிடுகிறது.

வியாபார நோக்கிலிருந்து கிஞ்சித்தும் விலகாமல் திரைப்படம் எடுக்கிற இந்தி சினிமாவில் இப்படி ஒரு படமும் பாடலும் அமைந்திருப்பது உண்மையில் என்னை மெய்சிலிர்க்க வைத்துவிட்டது. பொதுவாகப் படங்களைத் தேர்ந்தெடுத்துப் பார்க்கிற பழக்கம் எனக்கு உண்டு. அந்தப் படம் பிடித்துவிட்டால் அவரின் எல்லாப் படங்களையும் பார்த்துவிடுவேன். ஓவியக் கல்லூரி படிக்கிற காலத்தில் வெளியான திரைப்படங்களை முதல்நாளின் முதல்காட்சியிலேயே பார்த்துவிடுகிற பழக்கம் உண்டு. சத்யஜித்ரே படத்திலிருந்து ஸ்யாம் பெனகலின் ஆங்கூர் வரை முதல் காட்சியிலேயே படத்தைப் பார்த்துவிடுகிற தேடுதல் எனக்கு அப்போதே இருந்தது. அடுத்து நிஷாந்த் அதேபோல வாசுதேவன் நாயர் முதல் பரதன்வரை முதல் நாளிலேயே முதல் காட்சியிலேயே சினிமாவைப் பார்த்துவிடுகிற தாக்கமும் வேட்கையும் அப்போது இருந்தது.

அந்தக் காலத்தில் பிலிம் சொசைட்டியில் நிறையப் படங்கள் பார்ப்பேன். சினிமாவில் தேர்ந்த பயிற்சிபெற்ற கலைஞன் எடுக்கிற ஒரு படம் என்பது, தேர்ந்த ஓவியன் ஒருவன் செய்த சிலையில் உள்ள அவ்வளவு நுணுக்கங்களும் பதிந்திருப்பதைப்போல இருக்கும். அப்படி ஒரு உன்னதத்தை இந்தப்பாடல் காட்சியில் நான் பார்த்தேன்.

இந்தியாவில் சினிமா வரலாறு என்பது முதலில் மராட்டிய சினிமாவாகத்தான் பரிணமித்தது. பிறகு தென்னிந்திய சினிமாவாக மாறி மொழிவாரி மாநிலங்கள்

பிரிந்தபிறகு மாநில மொழிப்படங்களாக வளர்ந்தது. அப்போது தமிழ்த் திரையுலகில் கோலோச்சிக் கொண்டிருந்த எம்.ஜி.ஆர். சிவாஜி ஆகிய மக்கள் செல்வாக்குப் பெற்றிருந்த கலைஞர்களால் திரைப்படத்தின் இறுக்கம் கொஞ்சம் கொஞ்சமாக நெகிழ்வுத் தன்மையை அடைந்தது.

ஒலிக்கும் காட்சி ரூபத்துக்கும் சம்பந்தம் இருக்கிற காட்சிப் படிமங்கள் தற்போது திரைக்குள் வந்துவிட்டன. 3மணி நேரம் 4 மணிநேரம் திரைச் சீலைகளின் முன் உட்கார்ந்து பார்த்த ரசிகன் இரண்டு மணி நேரம் ஒருமணி நேரத்தில் முடிந்துவிடுகிற சினிமாவைத் தேடத்தொடங்கிவிட்டான். ஒரு சினிமாத் தியேட்டருக்குள் போய்விட்டால் படம் பிடிக்கிறதோ இல்லையோ இரண்டரை மணி நேரம் நிலையாய் உட்கார்ந்து அதே படத்தைத்தான் பார்த்தாக வேண்டும். வேறு வழி இல்லை என்ற காலம் ஒன்று இருந்தது. ஆனால் தற்காலப் போக்கு அப்படியானதாக இல்லை. பார்க்கும் ஒரு படத்தைத் தொடர்ந்து பார்ப்பதா? அல்லது அடுத்தப் படத்தைத் தேடிப் பார்ப்பதா என்கிற முடிவு பார்வையாளன் கைக்குள் வந்துவிட்டது. வெவ்வேறு காட்சியைப் பார்க்கிற வசதியை இயக்கும் விசை தன்கைக்குள் வந்துவிட்ட பிறகு பார்வையாளனின் தேடல் அதிகமாகிவிட்டது. ஒவ்வொன்றாய் மாற்றி மாற்றிப் பார்க்கத் தொடங்கிவிட்டான். அப்படியானால் அந்தப் பார்வையாளனை உட்கார்ந்து பார்க்க வைக்க வேண்டிய உத்தி கைவரப்பெற்றால் ஒழிய சினிமாவில் இனிமேல் வெற்றிபெற முடியாது. வெற்றிகரமான கதையம்சம் கொண்ட படங்களையேகூட மூன்றுமணிநேரம் நீட்டுவதற்காக பின்னாளில் பாடல்காட்சிகளையும் நகைச்சுவைக் காட்சிகளையும் இடையிடையே சேர்க்கப்பட்டது. ஆனால், பார்வையாளரின் மனநிலை, படம் இன்னும் சுருக்கமாக இருக்கக்கூடாதா? என்று கேட்கிறது. இந்தமாதிரியான நிலையில் 3 மணிநேரம் ஓட்டிக்கொண்டிருந்த படங்களையெல்லாம் ஒருமணி நேரத்துக்குள் சுருக்கிக் காட்டக்கூடாதா? என்று உலகச் சினிமாக்களைப்போல தமிழ்சினிமாவையும் கேட்கிற அவசியத்துக்குத் தள்ளிவிட்டது காலம்.







*"Short Film has to be Short"* என்று உலகத்தின் பார்வை மாறிக்கொண்டே வருகிறது. குடும்பத்தோடு போய் தியேட்டர்களில் படம்பார்க்கிற திட்டமிடலை காலம் கொஞ்சம் கொஞ்சமாகத் தவிர்த்துவருகிறது. அடித்துப் பிடித்து வேர்க்க விறுவிறுக்க தியேட்டருக்குள் போய் உட்கார்ந்து பெரியதிரையில் காட்சிகளை ரசிக்கும் போக்கு எல்லாம் குறைந்துவிட்டது. 42" இஞ்ச் டிவி இப்பொழுது 15 ஆயிரம் ரூபாய்க்கு கிடைக்கிறபோது நடுத்தரக் குடும்பங்களில் அதற்கு முதலீடு செய்வதை பெரும் பொருட்செலவாகக் கருதுவதில்லை. அதிலும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் அது மிக இயல்பாகிவிட்டது. எனவே

பார்வையாளனுக்கேற்றபடி சினிமாவை எடுக்கவேண்டிய நிர்பந்தம் சினிமாக்காரர்களுக்கு வந்துவிட்டது.

முன்புபோல நீண்ட வசனங்களையும் காதுவலிக்கும் இரைச்சல்களையும் பார்க்க ரசிகன் தயாராய் இல்லை. எல்லாவற்றையும் காட்சிப்படிமமாகப் பார்க்கும் பழக்கம் பார்வையாளனுக்கு வந்து வெகுகாலமாகிவிட்டது. உலகப் படங்களைத் தேடித்தேடிப் பார்க்கிற வாய்ப்பு அவன் கைகளுக்குள் வந்துவிட்டபிறகு தமிழ்ச் சினிமாவையும் அவ்வாறு பார்க்கவே பார்வையாளன் விரும்புகிறான்.

சினிமாவை வெறும் ஒலியாகப் பார்த்த காலம் ஒன்றிருந்தது. பிறகு ஒலிஒளியாகப் பார்த்த காலமும் இருந்தது. ஆனால் சினிமா இப்போது அப்படி இல்லை. தற்போது சினிமா காண்பியலை நோக்கி வந்துவிட்டது. காண்பிக்கப்படுகிற திரைப்படத்தின் சட்டகத்துக்குள் புதிய அனுபவமும் அதை கட்டமைக்கிற காட்சியமைப்புகளும் மிகமிக அவசியம்

கங்குபாய்க்கு முன்பு வரலாற்றுக் கதைகளை முன்னிலைப்படுத்தி எடுக்கப்பட்ட பாசிராவ் மஸ்தானி, பத்மாவதி ஆகிய இரண்டும் இயக்குநரின் திரைப்படமாகவே வெளிப்பட்டது. அந்தப் படங்கள்மீது இருந்த ஈடுபாடு கங்குபாய் பார்க்கத் தூண்டியது. இந்த மூன்று படங்களிலுமே வியாபாரக் கூறுகளே இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால், அதையெல்லாம் தாண்டி படக்காட்சிகள் ஒவ்வொன்றும் மிகச்சிறந்த காண்பியல் சித்திரங்களாக வெளிப்பட்டுள்ளன என்பதையும் சொல்ல வேண்டும்.

சினிமாவில் ஒவ்வொரு துறைசார்ந்த கலைஞரும் எவ்வாறு இயங்கவேண்டும்; அவரவர் துறையில் அவரவர் தனித்துவத்தை வெளிப்படுத்தினால் கூட்டுப்பங்களிப்பில் உருவாகிற ஒரு சினிமா எந்த அளவுக்கு உலகத் தரத்துக்கு தன்னை தகவமைத்துக்கொள்ளும் என்பதை சினிமாக்காரர்களுக்கு பாடம் நடத்தும் படமாகவும் இந்தத் திரைப்படம் அமைந்துள்ளது என்பதையும் சொல்ல வேண்டும்.

இயக்குநரே கதாசிரியராகவும் இசையமைப்பாளராகவும் இருந்து இந்தப் படத்தைத் தந்திருப்பதாலும் ஒவ்வொரு துறையிலும் தனது தனித்துவத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். ஒரு இயக்குநருடன், உடை வடிவமைப்பு, கம்ப்யூட்டர் கிராபிக்ஸ் என் ஒவ்வொருவரும் இணைந்து செயல்பட்டுள்ளனர்

வியாபாரத் தன்மையோடு கூடிய சமரசங்கள் படத்தில் இருந்தாலும் பார்வையாளர்களைக் கட்டிப்போட்டுவிட்ட தொழில்நுட்பம் இந்தப் படத்தை உயரத்தின் உச்சிக்குக்கொண்டு சென்றிருக்கிறது. சமகாலத்தில் இப்படியான திரைப்படங்களே இனி திரைக்கு வரமுடியும் என்பதையும் இந்தத் திரைப்படம் உறுதிப்படுத்துகிறது. மிகைப்படுத்தப்பட்ட காட்சிகள், அசைவுகள் அங்கங்கே தென்பட்டாலும் தான் சொல்ல வருகிற வார்த்தைகளை, வசனங்களை, செய்திகளை காண்பியல் ரீதியாகக் கடத்துவதில் மிகச்சிறந்த இடத்தை இயக்குநர் தொட்டுவிட்டார் என்றே சொல்லவேண்டும்.

இருபதாயிரம் பக்கமெல்லாம் எழுதி இலக்கிய மேதமையைக் காட்டவேண்டிய தேவை திரைக்கு இனி தேவைப்படாது. இனி காண்பியல் வடிவத்தின் வழியாகத்தான் ஒரு கதையை முழுமைப்படுத்த முடியும் என்பதற்கு முன்னுதாரணமான படம் கங்குபாய். ஒரு கதையை எப்படிக் காட்சிப்படுத்தப் போகிறோம் என்ற தெளிவில் எழுதுவதுதான் திரைக்கதை. எழுதியவற்றை எல்லாமும் வாயால் பேசிப்பேசி எடுக்கும் வடிவம் திரைக்கதை அல்ல என்பதை உறுதிப்படுத்துகிறது இந்த சினிமா.

1997இல் 'தேவதை' செய்தோம் கதையின் உள்ளடக்கத்தைத் தாண்டி வரலாற்றுப் பின்னணி கொண்ட காட்சிப்படிமங்களைக் காட்டுவதற்கு மிகுந்த முயற்சி எடுத்துக்கொண்டோம். திரையில் இன்று வெற்றிகண்டிருக்கிற அந்தக் காட்சிபூர்வ காண்பியல் முயற்சியை 26 ஆண்டுகளுக்கு முன்பே பரிசோதித்துப் பார்த்திருக்கிறோம் என்பதை நினைத்துப் பார்க்கையில் மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது. அதுமட்டுமின்றி அவ்வாறான பார்வைத் தெளிவும் ஈடுபாடும் அர்ப்பணிப்பும் கொண்ட கலைஞர்களுக்கு அதற்கான இடம் இப்போது கிடைத்திருக்கிறது என்பது இன்னும் கூடுதல் மகிழ்ச்சியாயிருக்கிறது.

இந்தியாவில் ஆரம்பத்தில் செவ்வியல் பேசிய சினிமா என்றால் பீமல்ராய், குருதத் போன்ற ஆளுமைகளைச் சொல்லலாம். வார்த்தை / ஒலி / காட்சி மூன்றும் ஒன்றோடொன்று இணைந்து வெளிப்பட்ட திரைவடிவங்களை அவர்கள் சினிமாவுக்குத் தந்தார்கள். அதன் தொடர்ச்சியாக நீண்ட இடைவெளிக்குப் பிறகு அதையே ஒரு அளவுகோலாகக் கொண்டு இந்த இயக்குநர் வெற்றியும் பெற்றிருக்கிறார் என்றுதான் சொல்லவேண்டும்.

இந்தப் படத்தைப் பொருத்தவரை இந்தப்படம் பேசும் உள்ளடக்கம், கதை குறித்தெல்லாம் நான் சொல்லவில்லை. அதையெல்லாம் விட்டு, கதைகளைத்தாண்டி வெளிவருகிறகாட்சிப்படிமங்கள் சினிமாவை எந்த வகையில் அடுத்த இடத்துக்கு நகர்த்திவிடுகிறது என்பதற்கு முன்மாதிரிப் படமாக இதைக் கொண்டாட வேண்டும் என்கிறேன்.

●

Printed by H. Dhanasekaran and Owned, published by V. Muthiah and Printed at Sekar Offset Printers, New No. 50 (Old No. 168/1) Big Street, Chepauk, Chennai - 600 005 and Published at 17/14, Diwan Rama Road, Purasaivakkam, Chennai - 600 084. Editor: V. Muthiah



## மதம் மாறியவர்களின் வாக்குமூலம்

ரொட்டித்துண்டுக்கு மாறினார்கள், டீ, பன்னுக்கு மாறினார்கள்என
மதமாற்றம் சமீபகாலமாக நகைப்புக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறது..
நீங்கள்ஏன் மதம்மாறினீர்கள் என
என்தந்தையிடம் நான்கேட்டதற்கு அவர்அளித்த பதிலுரைகள்..

உண்மையில் நாங்கள்ஏன் மதம்மாறினோம் தெரியுமா?

எல்லோரையும்போல காலில் முள்குத்தாமல்
செருப்புப்போட்டு நடக்க மதம்மாறினோம்..

கக்கத்தில்மட்டுமே வைச்சிருந்த துண்டை
கழுத்துலபோட மதம்மாறினோம்..

சைக்கிள்வாங்க காசுஇருந்தும் புதுசைக்கிள் வாங்கி
தெருவில்ஓட்டமுடியாததால் மதம்மாறினோம்..

ஒருஇத்துப்போன டீகடையில் எல்லோரையும்போல
எச்சிகிளாசில் டீகுடிக்கமுடியாததால் மதம்மாறினோம்..

காரைவீடுகட்ட காசுஇருந்தும் வெளிலஒரு திண்ணகட்டி
கால்மேல கால்போட்டு ஒக்காரமுடியாததால் மதம்மாறினோம்..

எட்டுமுழம் வேஷ்டிஇருந்தும் முட்டிக்குமேல
மடிச்சுகட்ட முடியாததால் மதம்மாறினோம்..

அஞ்சுவயசு சின்னப்பையனயும் கைகட்டி ஐயானு
கூப்பிட வேண்டியிருக்கேனு மதம்மாறினோம்..

செத்துப்போன ஒத்தைஆம்பள புள்ளையையும்
பாடை கட்டி தெருவுல தூக்கிட்டுபோக முடியாம மதம்மாறினோம்..

இம்புட்டுபெரிய ஒலகம்இருந்தும் என்வீட்டு பொணத்தப்பொதைக்க
ஆறடிநிலம் இல்லாததால் மதம்மாறினோம்...

நாய்கூட உள்ளபோக நான்மட்டும் எட்டநின்னு
என்சாமிய வேடிக்கைபார்க்க மனசில்லாம மதம்மாறினோம்...

பள்ளிக்கூடத்துல ஒருஓரத்துல ஒதுங்கிநின்னு
பாடம்படிக்க முடியாம மதம்மாறினோம்..

நீங்கவர்ற பாதையில நாங்கவரக்கூடாதுன்னா?
போறதுக்கு வேறுபாதை இல்லாம மதம்மாறினோம்..

திருவிழாவுல ஊர்கூடி தேர்இழுக்க
முடியாம மதம்மாறினோம்..

கடவுளின்பெயரால் திணிச்சசாதிய கடவுளின்கருவறையைப் பார்த்து
சாதிஉண்மைதானான்னு கேட்கமுடியாததால் மதம்மாறினோம்..

பஸ்லநான் உட்கார்ந்தசீட்டுல என்பக்கத்துல
யாரும்உட்காரல அதுனால மதம்மாறினோம்..

இந்த மனிதவாழ்வு எப்படியிருக்கும்..
அதை வாழ்ந்துபார்க்கவே மதம்மாறினோம்..

**இந்த மனிதவாழ்வு
எப்படியிருக்கும்...
அதை வாழ்ந்து பார்க்கவே
மதம்மாறினோம்...**

முகநூலில்: **அண்ணாதுரை மாரிமுத்து**
பகிர்ந்தவர்: **சாளை பஷீர்**

Kaakkai Cirakinile (Monthly) Register of Newspapers for India No. TNTAM / 2012 / 43921
Postal Registration No. TN / CCN / 588 / 2019-2021 WPP No. TN/PMG (CCR) / WPP-354/2019-2021.
ISSN 2348 - 4160 Date of Publication, 25th of Every Month Posted at patrika channel,Egmore. between 29th-4th of every month

